ஆன்மீக சஞ்சிகை

# சிவ ஒளி

வள்ளுவர் ஆண்டு 2051 - வீறியெழல் ஆண்டு
துலைத்திங்கள் புரட்டாசி - ஐப்பசி 2020

மாதாந்த மின்னிதழ்



சிவஒளி
வாசகர்களுக்கு
இனிய தீபத் திருநாள்
நல்வாழ்த்துக்கள்

தர்மாசிரியர் பரீட்சை வழிகாட்டி பக்கம் 51

இல்லங்கள் தோறும் சைவசமயம் பக்கம் 109

ஈழம் வந்த கண்ணகி பக்கம் 100

அருளாளர் அறுபத்திமூவர் பக்கம் 83

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பக்கம் 95

# தமிழே முருகன்

# சிவ ஒளி

மாதாந்த மின்னிதழ்

புரட்டாசி– ஐப்பசி 2020
ஆன்மீக மின்னிதழ்– ஒளி– 7

சிவஒளி ஆலோசனை தென்கயிலை
ஆதீனம் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார்

**தலைமை ஆசிரியர்**

அனைதுலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதினம்
தென்கயிலை சிவா (பிரான்ஸ்)

**உதவி ஆசிரியர்**

நாட்டியக் கலைமணி
திருமதி.பவானி குகப்பிரியா (கொழும்பு)

**படைப்புரிமை**



**சிவஒளியில் வெளிவரும் கட்டுரைகள் யாவும் படைப்பாளிகளுக்கே உரித்துடையதாகும்.**



**வடிவமைப்பு**

மோகன ஷாந்தி



தென்கயிலை ஆதீனம்
இல–36 சிவன் மலை பீலியடி
கன்னியா, திருகோணமலை.
இலங்கை.

**குரு மகா சந்நிதானம்:**

தவத்திரு அகத்தியர் அடிகளார்
00 94 77 509 8157.

**இளைய பட்டம்:**

திருமூலர் தம்பிரான் அடிகளார்.
00 94 77 173 1728

**தொடர்புகளுக்கு:**

தென்கயிலை சிவா
00 33 6 13 15 93 49
thenkailaisiva@gmail.com


# ஒளியில் ஒளியாகி... உயிரில் உயிராகி

**சிவஒளியில் பிரகாசித்து சிவப்பரம் பொருள் அருளாசியுடன் இணைந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்.**

**ஓம் நமசிவாய...**

**கொ**ரோனா என்னும் கொடிய பெருந்தொற்று உலகெங்கும் கொடிகட்டிப்பறக்கிறது. ஒன்று, இரண்டு, மூன்று என ஒவ்வொரு அலையாக ஊரெங்கும் வலம் வரத்தொடங்கிவிட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் தன் வீரியத்தை மாற்றியமைத்துக்கொண்டே நகர்கிறது. சாவுகளும் சத்தமின்றியே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரின் எதிர்கால நம்பிக்கைகளும் சரியத் தொடங்கிவிட்டது.

இந்நிலையில், கொரோனாவை எதிர் கொண்டு அதற்கேற்றாற்போல் வாழும்படி அரசுகளும் சுகாதாரம் சார்ந்த அமைப்புக்களும், அறைகூவல் விடுக்கின்றனர். முன்னர் ஒரு காலத்தில் முகத்தை மூடி (முக மூடி) அணிந்து ஒருவர் தெருவில் சென்றால் காவல்துறையினரால் வழி மறிக்கப்பட்டு விசாரணைக்கு உற்படுத்தப்படுவர். இன்று, முக மூடி அணியாவிட்டால் அதே காவல்துறையினரால் வழி மறிக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படுகிறது.

இந்த நேரத்திலும் மானிடவாழ்வு எதுவித மாற்றங்களும் இன்றி சுயநலப் போக்கில் நகர்ந்து கொண்டே செல்கிறது. கொண்டாட்டங்களைக் கூட கூடி நின்று கொண்டாட முடியாத நிலை. கொரோனா என்கின்ற பெருந்தொற்றைவிட ஆசை என்னும் பெருந்தொற்று ஒவ்வொருவரையும் ஆட்டிப்படைக்கிறது. இதனால் அவமானச் செயல்களையும், அடாத்தான செயல்களையும் இரக்கமின்றிச் செய்யும் மன நிலை மாற்றம் அடையவில்லை. நீயா நானா என்று நிண்டு செல்கிறது ...கோரமான மனித மனங்கள்.

தமிழனிடம் இருந்த இரக்க குணங்கள் எங்கே போய்விட்டது ? எங்கே மறைந்து விட்டது ? ஆன்மீக வாழ்வில் அவதரித்து அண்டமெல்லாம் பெயர் பொறித்த எங்கள் வாழ்வு எங்கே ?

இந்தக் கேள்விகள் பொதுவாக உங்கள் அநேகர் மத்தியிலும் எழத்தான் செய்கிறது.

**படைப்பாளிகள்:**

- தமிழ் நிதி அருணா செல்லத்துரை - (வவுனியா)
- கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி - (கனடா)
- கலாநிதி பால சிவகடாட்சம் - (கனடா)
- வரலாற்று ஆய்வாளர் என்.கே.எஸ். திருச்செல்வம் (இலங்கை)
- கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் - (கிளிநொச்சி)
- சித்தமருத்துவர் தியாகராஜா சுதர்மன்- (மானிப்பாய்)
- திருமதி பவானி சற்குணசெல்வம் - (நெதர்லாந்து)
- சித்தமருத்துவர் எம்.ஏ உசைன் - (சென்னை)
- தென்கயிலை ஞானக்கவி தேசபாரதி இராஜலிங்கம் - (கனடா)
- வைத்தியக் கலாநிதி. சிவஸ்ரீ சன பிரதாபன் தேசிகர் - (இலங்கை)
- சைவத்தமிழ் வித்தகர் சந்திரலிங்கம் ரமேஸ் - (மன்னார்)
- வித்தியா கலாபமணி. கிருத்திஸ்ரீ எஸ்.ரமேஸ் (குருனாகல்)
- இளங்கலைமணி சுரேந்திரா நரேந்திரா (கிழக்கு பல்கலைக்கழகம்)
- சைவப்புலவர் சித்தாந்தரத்தினம் கந்தையா பத்மானந்தன் (இலங்கை)
- சைவப்புலவர் சு. துஷ்யந்த் முன்னாள் ஆசிரியர்
- சைவப்புலவர் திருமதி சிவானந்த ஜோதி ஞானசூரியம்
- கலாபூணம் திருமதி .இராஜேஸ்வரி ஜெகானந்த குரு
- சிவத்திரு .சற்குணலிங்கம் ஹோபிநாத் (ஆசிரியர்)
- கலாநிதி. பொன் ஜெயரூபன் (தேசியக் கல்வி நிறுவகம்)

கொரோனாப் பெருந்தொற்றானது இறைவனின் பொறுக்க முடியாத கோபம் என்றும், இயற்கையின் அதியுச்ச சீற்றம் என்றும் பலவாறாக கதைகள் அரங்கேறுகின்றன. ஆனாலும் போட்டி பொறாமை, பேராசை , அண்டிக்கெடுத்தல், நம்பிக்கைத் துரோகங்கள் என்றெல்லாம் தொடர்ந்து கொண்டே செல்கிறது.

நிரந்தரமற்ற உடலை வைத்துக்கொண்டு நிரந்தரமான மரணத்தை நினைவின்றியே காலம் கடத்தப்படுகிறது. எல்லாமே வாடகைதான் என்பதை மறந்தே போகிறது.

மேலும் கீழும் இழுத்து விடும் வாடகைக் காற்றை வைத்துக்கொண்டு நான்தான், என்னால் தான் எனக்குத்தான் என்று , எகிறிக் குதிப்பதைப்பதைப் பார்க்கின்றோம். தன்னிடம் இருப்பதை இன்னொருவருக்குக் கொடையளிக்க மனமில்லா மனங்களும், எப்படியாவது அடுத்தவன் வரவை அள்ளியெடுக்கும் மனங்களும் இருக்கத்தான் செய்கிறது. ஆசையும் , அடாத்தும் ,களவும் , குரூர எண்ணங்களும் எத்தனையோ குடும்பங்களை நடுத்தெருவில் விடுகிறது. கொலை செய்யும் கொடுஞ்செயலைக் கூட அரங்கேறச் செய்கிறது.....

இனியும் மனிதனாக வாழப் பழகுவோமா? போரின் தாக்கங்களும்,இயற்கையின் சீற்றங்களும், கொரோனா பெருந் தொற்றுப் பெரு நோயும்.... நம்மை எல்லாம் ஒரு மனிதனாக வாழ்வதற்கும் அடுத்தவனையும் சக மனிதனாக மதிப்பதற்கும், ஆன்மீக வாழ்வில் கலந்து அறநெறி வாழ்வை அரவணைக்க நிச்சயம் எமக்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

இந்த அருமையான சந்தர்ப்பத்தை நாம் கடைப்பிடித்தேயாக வேண்டும்.

சொத்துக்களைவிட சொந்தங்களை நேசிப்போம். பேராசையைக் கலைத்து பேரின்பத்தை போற்றுவோம், இருப்பதை இல்லாதவனுக்கும் கொடுத்து இரக்கத்தை வாழவைப்போம். அன்பு, பாசம், இரக்கம், உண்மை , நேர்மை, அமைதி, இறைசக்தி என்னும் வழிகளிலே பயணித்து இப்பிரபஞ்சத்தில் வந்துதித்த பெருங்கடனை நிறைவேற்றி பிறவிப் பெரும் பயனை அடைவோம்.

அன்பே சிவமாகி அனைவரையும் நேசிப்போம்.

ஒளியில் ஒளியாகி உயிரில் உயிராகி மனித உறவுகளைப் போற்றுவோம்.

**தென்கயிலை சிவா**

# அன்பே சிவமாய்



## கிராம தரிசனம் ஐயன்கேணி

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே சுமார் 15 கிலோ மீற்றருக்கு அப்பால் ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தின் 39 கிராம சேவக பிரிவில் எழில் மிகு கிராமமாக ஐயங்கேணி கிராமம் திகழ்கின்றது. சுமார் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்களுக்கு முன்னர், தோற்றம் பெற்ற இக் கிராமம் ஆரம்பத்தில் தளவாய் கிராம சேவகர் பிரிவுடன் , இணைந்திருந்தது. காலப் போக்கில் குடும்பங்களின் பரம்பல் அதிகரிக்க ஐயங்கேணி தமிழ் கிராம சேவகர் பிரிவாக மாற்றம் பெற்றது.



ஐயங்கேணி எனும் பெயரானது , இங்கு கேணி காணப்படுவதாலும் ஐயர் பரம்பரை வாழ்ந்து வந்தனர் என்பதாலும், ஐயங்கேணி என அழைக்கப்படுகின்றது.வரலாற்று அடிப்படையில் நோக்குமிடத்து ஐயங்கேணியில் கூலித்தொழில் புரிந்து முன்னோக்கிச் செல்பவர்களே அதிகமாகவுள்ளனர்.தான் படிக்கா விட்டாலும் தமது பிள்ளைகளைப் படிக்கவைப்பதில் பெற்றோர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

இப்பேற்றப்பட்ட அற்புதமான கிராமமான ஐயங்கேணி கிராமத்திற்கான தரிசனம்....

19102020 திங்கட்கிழமை, தென்கயிலை ஆதீனம் முதற் குருமகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் தலைமையில், ஆன்மீகக் குழுவொன்று மட்டக்கள்ப்பு செங்கலடி, பாரதிபுரத்தில் அமைந்துள்ள ஐயன்கேணி கிராமத்தை நோக்கி பயணம் மேற்கொண்டு மக்களினதும் மாணவர்களினதும் அன்றாடம் எதிர்நோக்கும் குறைகளையும், தேவைகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

ஐயன்கேணி ஸ்ரீ ஆதி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் கிராம மக்களைச் சந்தித்த ஆன்மீகக் குழுவில் இளையபட்டம் தவத்திரு திருமூலர் தம்பிரான், ஆதீனத்தின் நிர்வாக உறுப்பினர் இளைப்பாறிய பாடசாலை அதிபர் திருமதி உமா ரதீஸ்வரன், திரு. ரதீஸ்வரன் ஆகியோர் இணைந்திருந்தனர். ஆலயமுன்றலில் பெரியோர்களும்,



**தென்கயிலை சிவா**
அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதீனம்







அறநெறிப்பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் கூடி நின்று தமிழர் பண்பாட்டிற்கமைய மாலைகள் அணிவித்து அனைவரையும் மகிழ்வுடன் வரவேற்றனர்.

நிகழ்வின்போது, முதலில் மங்கல விளக்கேற்றப்பட்டது. தொடர்ந்து அறநெறிப்பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து அறநெறிப்பள்ளிக்கான கட்டட வசதி இல்லையென்றும் தாம் மரநிழலில் இருந்தே கல்வி கற்று வருவதாகவும் கூறி தமக்கு ஒரு கட்டடத்தை ஏற்பாடு செய்து தரும்படி தவத்திரு அகத்தியர் அடிகளாருக்கு அன்பான வேண்டுகோள் விடுத்திருந்தனர். அத்துடன், தமது அறநெறிப்பள்ளி மாணவர்களுக்கான போசாக்கு உணவையும் ஏற்பாடு செய்து தரும்படியும் கேட்டுக்கொண்



டனர். மேற்படி வேண்டுகோளையடுத்து அறநெறிப்பள்ளிக்குரிய கட்டடம் ஒன்றை அமைத்துக்கொடுத்து Thenkailai Education Centre TEC என்னும் நிறுவனத்தின் மூலம் , நவீனமுறையிலான நூலகம்,கணனி வகுப்பு,மற்றும் கலை தொடர்பான வகுப்புக்களும் ஏற்படுத்திக் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

முதற்கட்டமாக அறிநெறிப்பள்ளி மாணவர்களுக்கு, போசாக்கு உணவு வழங்குவதாகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட , கற்பிணித் தாய்மார்களுக்கும்,பாலூட்டும் தாய்மார்களுக்கும் 3 மாதத்திற்கான போசாக்கு உணவு வழங்குவதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

மேலும் பாரதிபுரம் ஐயன்கேணி கிராமத்தில் மட்பாண்டம் தொழில் செய்யும் தொழிலாளர்களை அணுகி அவர்களின் தொழிலுக்கான ஊக்கத்தையும் உதவியையும் பெற்றுக்கொடுத்து மட்பாண்டத் தொழிலை மேம்படுத்த ஆதரவு கொடுப்பதாகவும் உறுதி கொள்ளப்பட்டது.



# அனுராதபுர மாவட்டத்தின்
# பண்டைய தமிழ்க் கிராமங்கள்
## பற்றிய ஓர் ஆய்வு



**பகுதி:- 01**

சில வருடங்களுக்கு முன்பு அனுராதபுர மாவட்டத்தில் சிவ பூமியின் சுவடுகளைத் தேடி பெரிய ஆய்வொன்றை மேற்கொண்டேன். அப்போது அம்மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களின் திரிபு போன்று இருந்தன. இப்பெயர்களை முழுமையாக ஆராய வேண்டும் எனும் ஆர்வம் ஏற்படவே அவை பற்றிய விபரங்களைத் தேடினேன். அதன் பலனாக பல ஆச்சரியமான தகவல்கள் கிடைத்தன.

அனுராதபுர மாவட்டத்தில் பண்டைய காலத்தில் ஏராளமான தமிழ்க் கிராமங்கள் இருந்தன. இக்கிராமங்கள் எல்லாவற்றிலும் கோயில்களும் அமைக்கப்பட்டிருந்தன. காலப் போக்கில் இங்கிருந்த தமிழ் சைவமக்கள் இக்கிராமங்களை விட்டு வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்தனர். எஞ்சியிருந்த தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் திருமண பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு இரண்டறக் கலந்தனர். இன்று அவர்களின் சந்ததியினர் சிங்களவர்களாகக் காணப்படுகின்றனர். இந்நிலையில் இங்கிருந்த கோயில்களும் பராமரிப்பின்றி சிதைந்து அழிந்து போயுள்ளன.

தமிழர்கள் வாழ்ந்த சில இடங்களில் சிங்கள பௌத்த மக்கள் குடியேறியதுடன் கோயில்கள் இருந்த இடங்களுக்கு அருகில் பௌத்த விகாரைகளை அமைத்து, இந்துக் கோயில்களில் இருக்கும் தெய்வங்களையும் பயபக்தியுடன் வழிபட்டு வந்தனர். இக்கோயில்கள் தேவாலய என அழைக்




என்.கே.எஸ்.
திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthiru@gmail.com



கப்படுகின்றன. சிங்கள பௌத்த மக்கள் இங்குள்ள இந்து தெய்வங்களை கண தெவியா, கத்தரகம தெவியா, ஈஸ்வர தெவியா, விஷ்ணு தெவியா, காளி மேனியன், பத்தினி மேனியன் என அழைத்து பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர்.

இவ்வாறு தமிழ்க் கிராமங்கள் அனைத்தும் சி ங்களக் கிராமங்களாயின. அதே சமயம் பல கோயில்கள் மண்ணுள் புதையுண்டு போயின. இன்றும் சிங்களப் பெயர் கொண்டு அழைக்கப்படும் தமிழ்க் கிராமங்கள் பல இம்மாவட்டத்தில் இருக்கின் றன.

பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டு முதல் இங்கு வந்த போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆகியோர் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்குடன் இலங்கையிலி ருந்த நூற்றுக்கணக்கான இந்துக் கோயில்களையும், சில பௌத்த விகாரைகளையும் அழித்தனர்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 500 கோயில்களை போர்த்துக்கேயர் அழித்ததாக பாதிரியார் குவை றோஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பா ணத்திற்கு வெளியே வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடமத்தி ஆகிய பகுதிகளில் மேலும் 300 கோயில் கள் வரை அழிக்கப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகி றது. இவற்றில் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கோயில்களும் அடங்குகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஐரோப்பிய ரால் அழிக்கப்பட்ட கோயில்களில் ஓரிரு கோயில்க ளைத் தவிர ஏனைய எல்லாக் கோயில்களும் அடை யாளம் காணப்பட்டு, ஆங்கிலேயர் காலத்திலும், அதன் பின்பும் மீண்டும் அமைக்கப்பட்டன. அதே சமயம் வடக்கு, கிழக்கிற்கு வெளியே அழிக்கப்பட்ட ஆலயங்கள் மீண்டும் கட்டப்படவில்லை. இதற்குக் காரணம் அங்கு தமிழ் சைவ மக்கள் இல்லாமையே.

அனுராதபுரம் பகுதியில் 1670 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்தது பற்றி ரொபேர்ட் நொக்ஸ் An Historical Relation of Ceylon எனும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்த இப்படியான பல தமிழ்க் கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இக் கிராமங்களில் தற்போது சிங்கள மக்களே வாழ்கின்றனர். இக்கிராமங்களின் பெயர்களின் முடிவில் குளம் எனும் சொல் காணப் படுகின்றது. தற்போது இப்பெயர்கள் சற்று சிங்கள மயமாகி விட்டன. நொச்சிக் குளம்நொச்சிக்குளம எனவும், காயன் கொல்லைகாயங் கொல்லேவ எனவும், புளியங்கடவைபுளியங்கடவல எனவும், மருதங்கல்லுமரதன்கல எனவும் உருமாறியுள்ளது. எனவே இவற்றை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதேசமயம் முற்றிலும் சிங்களப் பெயர்களாக மாற்றமடைந்த தமிழ்க் கிராமங்களை இன்று அடை யாளம் காண முடியாமல் உள்ளது. உதாரணத் திற்கு புளியங்குளம் எனும் தமிழ்ப்பெயர் சியம்பலா கஸ்வெவ எனவும், விளாங்குளம் எனும் தமிழ்ப் பெயர் திவுள் கஸ்வெவ எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இன்றும் தமிழ்க்




கிராமங்கள் என அடையாளம் காணக்கூடிய பல கிராமங்கள் அனுராதபுரம் மாவட்டத்தில் காணப் படுகின்றன.

இம்மாவட்டத்தில் மொத்தமாக 21 உதவி அர சாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் 694 கிராம சேவகர் பிரிவுகளும், 3085 கிராமங்களும் அடங்குகின்றன. இக்கிராமங்களில் 446 தமிழ்க் கிராமங்கள் அடையாளம் கண்டேன். பல நாட் கள் ஆராய்ந்து, மிகுந்த முயற்சி எடுத்து இவற்றின் தமிழ்ப் பெயர்களைக் கண்டறிந்தேன். இது மிகக் குறைந்த தொகையே. ஏனெனில் அடையாளம் காண முடியாத வகையில் பல தமிழ்க் கிராமங்கள் உள்ளன.

அடையாளம் காணப்பட்ட 446 தமிழ்க் கிராமங்க ளின் பெயர்களை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் படி வரிசைப் படுத்தினேன். அவையாவன.

## மிகுந்தலை உதவி அரசாங்க அதிபர் பிரிவு 53 கிராமங்கள்

வேலன்குளம், கட்டமான்குளம், கல்மடு, சின்ன சிப்பிக்குளம், பனிச்சகல்லு, புதுக்குளம், சுருக் குளம், பெரியகேம் பிக்குளம், வெறுப்பன்குளம், மாங்குளம், முந்திரிப்பூக்குளம், நொச்சிக் குளம், கம்மல் குளம், கன்னாதிட்டி, பிராமண கோட்டை, இட்டிக்கட்டு, காசிமடு, கட்டம்புகாமம், கைப்பிட்டி, வேம்புக்குளம், குஞ்சிக்குளம், குருந்தன்குளம், மன் னயம் குளம், சிறுக்குளம், கூளன்குளம், முதலிப்பன் குளம், சங்கிலிக்குளம், அளப்பன்குளம், கல்குளம், கரடிக்குளம், மருதன்குளம், மருதன்கல்லு, சின்னக் குளம், சாய்ப்புக்கல்லு, சின்னமருதங்குளம், மரதன் குளம், பூவரசங்குளம், புதுக்குளம், நல்லபாம்புக் குளம், குருந்தன்குளம் (மிகுந்தலை), மேல் கரம் பன்குளம், கீழ் கரம்பன்குளம், காயங்குளம், கொட் டமான் குளம், குறிஞ்சான் குளம், பொத்தானை, இலுப்பைக் கன்னியா, சீப்புக்குளம், சங்கிலிக்குளம் (மிகுந்தலை), உக்குலன் குளம், காட்டுக்குளி, வெள்ளமொறானை, வேள்ளாளர் காமம்

## நுவரகம் பலாத்த மத்தி உதவி அரசாங்க அதிபர் பிரிவு 60 கிராமங்கள்

பசவக்குளம், சின்னப்பன்குழி, கட்டைக்காடு, ஆலங்கட்டு, பெரியசேனை, ஒட்டுப்பள்ளம், கல்பாலம், சமுளங்குளம், ஆலங்குளம், எட்டிக்

குளம், புளியங்குளம்(ஆசிரிகம), சம்புக்குளம், பண்டார புளியங்குளம், புளியங்குளம், கொக்குச்சி, பிஞ்சுக்குளம், வீரன்குழி, கருக்கன்குளம், அத்திக் குளம் (கம்பிரிகஸ்வெவ), கல்குளம், இத்திக்குளம், படருக்குளம், கல்குளம் (ஹெலம்பகஸ்வெவ), குளுமாட்டுக்கடை, நொச்சிக்குளம், பாண்டிக்குளம், புதுக்குளம், வேம்புக்குளம், அத்திக்குளம், ஆலங் குளம், கரம்பை, கரம்பைக்குளம், மகா புலங்குளம், மேல்ஓயாமடு, மேல்அத்திக்குளம், மேல் புளியங் குளம், நீராவி, ஈச்சங்குளம், பெரியபங்குழி, பெரு மியன் குளம், இலுப்புக்குளம், நெல்லிக்குளம், புசியன்குளம், கோப்பாகுளம், தனயன்குளம், ஆண் டியாகுளம், தெப்பன் குளம், இலுப்பன் கடவை, உலுக்குளம், புலங்குளம், கள்ளஞ்சி, திரப்பனை, மேல்புலங்குளம், நெலுங்குளம், பாண்டித்தன் குளம், பண்டத்தான்குளம், புஞ்சிக்குளம், தட்டான் குளம், சமுளங்குளம், மதுவாச்சி.

## கல்னேவ உதவி அரசாங்க அதிபர் பிரிவு 9 கிராமங்கள்

கள்ளன்குடி, கள்ளஞ்சி, கட்டருகாமம், கருவே லமரக் குளம், சின்ன ஒத்தப்பாகம், பெரிய ஒத்தப் பாகம், நாககாமம், பத்தினிகாமம், வெறுங்குளம்.

## ஹொரவபொத்தான உதவி அரசாங்க அதிபர் பிரிவு 14 கிராமங்கள்

ஆனைவிழுந்தான், தமிழர்குளம், உறவுப்பொத் தானை, சின்னப் புளியங்குளம், அங்குநொச்சி, முக்குவர்குளம், காயன் கொல்லை, பறங்கியர் வாடி, புளியங்கடவை, ரத்தமலை, முக்களன் சேனை, வீரச்சோலை, மதுவாச்சி, வேலன்கல்லு.

(மிகுதி தொடரும்...)





# கோபுரம் அமைத்தல் கோடி புண்ணியம்

## கோபுரம் ஓர் அறிமுகம் :

**கோ**புரம் என்பதுதூய தமிழ் சொல்லென்று தேவநேயப் பாவாணர் போன்ற தமிழ் அறிஞர்கள் கூறும்போது வேறு சில அறிஞர்கள் இல்லையில்லைஇச் சொல் சமஸ்கிருதம் அல்லது வேறு பிராகிருத மொழியிலிருந்து தமிழுக்கு வந்ததிருக்க வேண்டும் என்கின்றனர். இதற்கு ஆதாரமாக அவர்கள் மகாபாரதம் போன்ற சமஸ்கிருத நூல்களில் கோபுரம் என்ற சொல் காணப்படும் அதேவேளை சங்க கால அல்லது சங்க மருவிய காலத் தமிழ் நூல்களில் அச் சொல் காணப்படவில்லை என்கிறார்கள் . மேலும்வேதகாலத்தில் பசுக்களை அடைத்து வைக்கும் பட்டிகளுக்கு மூங்கிலால் வேலியிடப்பட்டு அதன் வாயிலில் மூங்கிலாலேயே ஒரு வாயில் அமைப்பு அமைக்கப்பட்டிருந்ததாகவும் கோ என்றால் பசு, புரம் என்றால் காத்தல் என்னும் பொருளுடையது ஆகவே பசுக்களைக் காக்கும் இடத்தின் வாயில் கோபுரம் எனப்பட்டதாகவும் இவர்கள் கூறுகிறார்கள். காலப்போக்கில்அரண்மனை, நகரங்கள் முதலியவற்றின் வாயில் அமைப்புக்களையும் கோபுரம் என்று அழைக்கத்தொடங்கி ஈற்றில் கோயில்களின் வாயில் கட்டிட அமைப்புக்களையே கோபுரம் என்னும் சொல் குறிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறுகிறார்கள் .



சைவப்புலவர்
சித்தாந்தரத்தினம்
கந்தையா பத்மானந்தன்

ஆயினும் சுற்றுமதில்களையும் உயர்ந்த வாயில்களையும் கொண்டிருந்த அரசர்களின் அரண்மனைகளும் கோவில்களும் அவ் வாயில்கள் மீது உயர்ந்த மண்ணீடுகளைக் (கோபுரங்கள்) கொண்டிருந்தன என்றும் அம் மண்ணீடுகளில் வண்ணம் தீட்டப்பெற்ற வடிவங்கள் அமைந்திருந்தன என்றும் மணிமேகலையில் சக்கரவாளக்கோட்டம் பகுதியின் 4248, 5859 ம் வரிகளும் மலர்வனம் புக்க காதை பகுதியின் 113127 ம் வரிகளும் மதுரைக்காஞ்சியின் 352355 வரிகளும் சொல்லும் செய்திகளாகும். இவ்வாறு அமைந்திருந்த உயர்ந்த கோபுரங்களையுடைய வாயில்களுக்கு துருப்பிடியாதபடி செந்நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன என்பது நெடுநல்வாடையில் 7688 வரிகள் சொல்லும் செய்தியாகும் . எனவே கோபுரம் என்பது தமிழ் சொல் என்பது ஏற்கத்தக்க ஒன்றாகும் .

## கோபுரங்கள் உருவானதன் பின்னணி :

கோபுரங்கள் உருவானதன் பின்னணியில்அறிவியல்,அரசியல்,ஆன்மீக, சமூக ,பொருளாதரா,கலை,கல்வி மற்றும் வரலாறு சார் காரணிகள் உள்ளன .

## அறிவியல் காரணங்கள் :

கோயில்களில் உள்ள கோபுரங்களின் மேல்உள்ள தங்கத்தால், செம்பினால்அல்லது பஞ்சலோகங்களால்

செய்யப்பட்ட கலசங்களில் உள்ள கூரிய முனைகள் வழியாக வான்வெளியில் உள்ள உயிர் சக்தி என்று அழைக்கப்படும் பிராண சக்திஉறிஞ்சி வெளிவிடப்ப டுகிறது. அந்த சக்தியை நம் உடல் பெறுவதால் புத்து ணர்ச்சி, புது உணர்வு, உள்ளத் தூய்மை, ஆன்மீக ஈர்ப்பு, ஆன்மீக உணர்வு என்பன ஏற்படுகின்றன . இதனால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைப்பதனால்எமது உடல் நோய்களைப் போக்குவதனால் எமது கவலை கள், பிரச்சனைகள் நீங்கிமகிழ்ச்சி ஏற்படுகிறது. என வேதான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று நம் முன்னோர்கள் கூறினர்.

மேலும்எமது முன்னோர்கள் கோபுரங்களை உய ரமாக அமைத்ததில் வேறு பல அறிவியல் ரீதியான நன்மைகளும் உண்டு. முற்காலங்களில் ஊரில் உள்ள மற்ற கட்டடங்களை விட கோயில் கோபுரங்கள் தான் உயரமாக அமைந்திருக்கும் ஏனைய கட்டடங் களை கோயில் கோபுரத்தை விட உயரமாகக் கட்டக் கூடாது என்பது இன்றைக்கும் எம்மிடையே இருக்கும் ஐதீகமாகும். இடி மின்னல் தாக்கும் பொது முதலில்உ யரமான கட்டடங்களே தாக்குப்படும் என்பதனால் கோபுரங்களில் உள்ள உலோகங்களால் ஆன கலச



ங்கள் இடி, மின்னல் ஏற்படும் போது மக்களைக் காக்கும் இடிதாங்கிகளாகச் செயற்படுகின்றன.கும்பா பிசேகத்தின்போதுஇக்கலசங்களுக்குள்ளே நெல், கம் பு, கேழ்வரகு, தினை, வரகு, சோளம், மக்காசோளம், சாமை ஆகிய தானியங்களை வைத்தனர் .அதிலும் குறிப்பாக குறிப்பாக வரகினைஅதிகமாக வைத்தனர். வரகிற்கு மின்னலைத் தாங்கும் ஆற்றல் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

வெள்ளப்பெருக்குஏற்படும் நாட்களில் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுபோது விவசாயிகளால்பாது காத்து வைக்கப்பட்டிருக்கும் விதைதானியங்களும் அடித்துச் செல்லப்படும். அந்த நேரங்களில் விவசா யத்திற்கு தேவையான விதைதானியங்கள் கோபுரத் தின் கலசங்களில் இருந்து எடுக்கப்படும். சேமித்து வைக்கப்படும் தானியங்களின் முளைதிறன் பன்னி ரண்டு வருடங்கள் மட்டுமே இருக்கும் என்பதனாலும் மின்னலைத் தாங்கும் சக்தியும் பன்னிரண்டுவருடங்க ளுக்குத்தான் இருக்கும் என்ற காரணத்தினாலும் ஆன் றோர்கள்பன்னிரண்டு ஆண்டுகளிற்கு ஒருமுறை கும் பாபிசேகம் நடத்துவதைக் கட்டாயமாக்கினார்கள் . இதன்போது கலசங்களில் காணப்படும் பழைய தானி யங்கள் புதுத் தானியங்களினால் பிரதியீடு செய்யப் படும் .

## ஆன்மீக காரணங்கள்:

ஆலய நுழை வாயிலில் நம்மை வரவேற்கும் இராஜ கோபுரத்தைதூல லிங்கம் என்றும்கூறுவார் கள்.கோவிலின் கருவறையில் இருப்பது சூட்சும லிங்கம் எனவும், ஆலயத்தின் நடுவிலிருப்பது பத்தி ரலிங்கம் அதாவது பலிபீடம் எனவும், ஆலயத்தின் முகப்பு வாசல் இருப்பது தூலலிங்கம் எனப்படும் ராஜகோபுரம் எனவும் அழைக்கப்படும்.லிங்கம் என் றால் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமான இடம் எனப் பெரியவர்களினால் கூறப்படுகிறது . எமது ஐம்புலன்களின் ஒடுக்கத்திற்கும் இறையுணர் வின் தோற்றத்திற்கும் காரணமாக தூலலிங்கம் முதல் அனைத்து லிங்கங்களும் காரணமாக இருக்கின்றன .அடியில் அகலமாக இருந்து படிப்படியாக ஒடுங்கிக் கொண்டு போவது கோபுர அமைப்பில் காணப்படும் பொதுவான அம்சமாகும். மெய் மொழி மனத்தினால் இறைவனை வணங்கும் போதுஎமது எண்ணம் செ ால் செயல் யாவுமே இறைவனை நோக்கி உயர்ந்து ஒடுங்கிச் செல்ல வேண்டும் என்ற அரும்பெரும் தத்து வத்தைக் இக்கோபுர அமைப்பு எடுத்துக் காட்டுகிறது.

கோபுரம் என்பது வெறும் கற்களாலான கோபுரம் அன்று. அதுவே கடவுளின் சொரூபம் . கோபுரம் என்

பதற்கு இறைவனை நோக்கி ஆன்மாக்கள் செல்லும் வழி எனவும் பொருள் கூறுவார். மனிதன், மன வாசலின் வழியே இறைவனை நாடி, உள் முகமாகப் போக வேண்டும் என்பதை உணர்த்துவதே கோபுர வாயில். கருவறையின் மேல் உள்ள விமானம் சிரசாகவும், கோபுரம் இறைவனின் திருப்பாதமாகவும் உள்ளன என்பதைக் கீழ்வரும் பாடலில் கூறுகிறார் திருமூலர்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்**
**வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தாரக்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே**

இறைவனுடைய ஆலயத்திற்குச் செல்வதற்குச் கோபுரம் எவ்வாறு வாசலாக இருக்கின்றதோஅதே போல் எமது தூய்மையான மனத்திற்குள் இறைவன் வருவதற்கான கோபுர வாசலாக இருக்கும் எமது வாய் இறைவனது நாமங்களை மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும் என்கிறார் திருமூலர். எனவேஎமது சக்திக்கு மேற்பட்டவன் இறைவன் என்பதையும், அவனை அடைவதற்கு எமக்கு புலன் ஒடுக்கம் அவசியம் என்பதையும் எடுத்துக் காட்டுவது கோபுரமாகும்.



ஆலயத்தின் கோபுரங்கள் எல்லாம் உயர்ந்து இருப்பதால், நெடுந்தூரத்திற்கு அப்பால் இருந்தும் கோபுரத்தை காணலாம். ஊர் மக்கள் பார்வையில் அது படும் போதெல்லாம் கோபுரத்தையே தெய்வ சொரூபமாக எண்ணி வணங்குவார்கள். அதாவதுதூரத்தில் இருப்பவர்களுக்கும் இறைவனின்நினைவினை எந்நேரமும் உண்டாக்கவேண்டும் என்பதற்காகவும் தெய்வீக உணர்வை ஊட்ட வேண்டும் என்பதற்காகவுமேகோபுரங்கள்உயரமாகஅமைக்கப்பட்டன. நோய் நொடி மற்றும் இன்ன பல பிற காரணங்களினால் கோவில்களுக்கு செல்ல முடியாத நேரங்களில் எமக்கு கோபுரங்களே இறைவனின் வடிவமாக காட்சி தருகின்றன. ஆலயத்தின் உள்ளே இருக்கும் இறைவனின் பிம்பம்தான் கோபுரங்கள். கோயிலுக்குச் செல்ல முடியாதவர்கள், பிணியுற்றோர், உடல் ஊனமுற்றோர் போன்றோர் கோபுரத்தைத் தரிசித்தாலே போதும், ஆலயத்தினுள் வீற்றிருக்கும் இறைவனைத் தரிசித்த அருள் கிட்டும்.

சிவன், முருகன், அம்மன், பிள்ளையார் , இப்படி ஒவ்வொரு இறைவன் வீற்றிருக்கும் ஆலயங்களின் கோபுரங்களை காணும் போது எமக்கு அந்த இறைவனையே தரிசித்த உணர்வு ஏற்படுவது இயற்கையானது.ஆகவேகோபுரத்தைத் தரிசனம் செய்வதன் மூலம் இறைவனைத் தரிசித்த புண்ணியத்தைப் பெறுவார்கள். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் கோபுர தரிசனம் பாப விமோசனம் போன்ற ஆன்றோர் வாக்குகள் கோபுர தரிசனத்தால் எமது ஆன்மா பெறும் புனிதத் தன்மையைப் புலப்படுத்துகின்றன . கோபுரத்தைக் கண்டவுடன் நிலத்தில் வீழ்ந்து வணங்க வேண்டும் என்ற செய்தியைநின்று கோபுரத்தை நிலமுறப் பணிந்து நெடுந் திருவீதியை வணங்கி..என்ற பெரிய புராணப் பாடல் வரி குறிப்பிடுகிறது. ஒரு ஆலயத்தின் கோபுரமும், விமானமும் எவ்வளவு தூரத்திற்கு தெரிகிறதோ அவ்வளவு தூரமும் கைலாசப்பிரதேசம் எனப் போற்றப்படும் என்கிறார்கள் பெரியவர்கள் . இதனால்தான்மன்னர்கள் கோயில்களில் மிக உயர்ந்த கோபுரங்களைக் கட்டினார்கள்.

உமாபதி சிவாச்சாரியார் கொடிக்கவி என்னும் பாடலில் கோபுர வாசற் சிறப்பினைப் பற்றிபொருளாம் பொருளேது போதேது கண்ணே(து) இருளாம் வெளியே திரவே(து) - அருளாளா நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன் கோபுர வாசற் கொடி என்று கூறுகிறார் .அனைத்தையும் ஆளும் ராஜாவாகிய இறைவனே நீ பாதுகாக்காத உலகம் எங்குள்ளது. எல்லாமாக இருந்து எல்லாவற்றிற்குஞ் சாட்சியாக இருக்கும் உன் அருள் இல்லாமல் நாம் எதையும் அறிய முடியாது இருப்பதால் நீ காண




உன் கோபுர வாசலில் கொடி கட்டினேன் என உமாபதி சிவாச்சாரியார் கூறுவதைக் காணலாம். எனவே, கோபுரமானது இறைவனே அனைத்தையும் ஆளுகின்ற தன்மை உடைய ராஜாவாக உள்ளான் என்பதைக் குறிப்பதாக உணரலாம். இதனாலேயேவாயிலில் அமைந்திருக்கும் கோபுரத்தை ராஜ கோபுரம் எனக் கூறுகிறார்கள்.மேலும் கோலக் கோபுரக் கோகரணஞ் சூழா கால்களாற் பயனென்என அப்பரும் .மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய். என சம்பந்தரும் கோபுரச் சிறப்பைப் பற்றிக் கூறுகிறார்கள்

இராஜ கோபுரத்தின்வாயில்கள்பொதுவாகஒற்றைப் படைஎண்ணில்மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பதுஎன்றவகையில் அமைக்கப்படுவதற்கு பெரியவர்கள் விளக்கம் கொடுத்துள்ளார்கள் .மூன்றுவாயில்கள் ஜாக்கிரத, சொப்பன, சுசுப்தி என்னும்மூன்றுஅவத்தைகளையும்,ஐந்துவாயில்கள் ஐம்பொறிகளையும்,ஏழுவாயில்கள் ஐம்பொறிகளோடுமனம், புத்தி எனும்இரண்டு தத்துவங்களையும்,ஒன்பதுவாயில்கள்இவற்றோடு சித்தம் அகங்காரம் எனும் இன்னும் இரண்டு தத்துவங்களையும்குறிக்கின்றன என்கின்றனர் பெரியவர்கள் .நாம் கோபுரத்தினை தரிசிக்கும் காலத்தை பொறுத்து நமக்கு ஒவ்வொருவிதமான நன்மைகளைத் தருகின்றன என்கிறார்கள் பெரியவர்கள் .காலையில் கோபுர தரிசனம் நோயை நீக்கும், மதியம் கோபுரதரிசனம் செல்வ வளத்தினைப் பெருக்கும் ,மாலையில் கோபுர தரிசனம் பாவம் போக்கும், இரவு கோபுர தரிசனத்தின் மூலம் வீடு பேறு கிடைக்கும் என்கிறார்கள் பெரியவர்கள்.

## அரசியல் காரணங்கள் :

அரசர்கள் தங்கள் கடவுள்மீதான பக்தியையும் செல்வச்செழிப்பையும்காட்டுவதற்கும்தங்கள் நாட்டு எல்லைகளை ஏனையவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டும் எதிரிகளின் படையெடுப்பின்போது அவர்களின் படைநடமாட்டங்களை உயரத்தில் இருந்து அவதானிப்பதற்கும் ஆயுதங்களையும்தமது செல்வங்களையும் பதுக்குவதற்கும் முக்கிய அரசகுடும்ப உறுப்பினர்களையும் ஏனையவர்களையும் ஒளித்துவைத்து பாதுகாக்கும் நோக்கத்திற்காகவும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர் காலத்தில் மக்களைத் தங்க வைத்துப் பாதுகாக்கும் நோக்கத்திகாகவும் கோபுரங்களை அமைத்திருக்கக் கூடும் .

## சமூகபொருளாதாரக் காரணங்கள்:

கோயில் மற்றும் கோபுரக் கட்டுமானங்களின் போது தச்சர்,கொல்லர், சிற்பிகள், ஓவியர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், தானியங்கள் மற்றும் பண்டங்கள் விநியோகிப்போர், சமையல்காரர்,காவலர்கள் என்றுபல ஊர்களையும் சேர்ந்த பலவகுப்பினரும் இறைபணி என்ற ஒரு நோக்கத்திற்காக ஒன்றாக வேலை செய்வார்கள்.இதன் காரணமாக அவர்களிடம்

காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் வேறுபாடுகள் எல்லாம் மறைந்து ஒன்றே குலம் ஒருவனே தேவன் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சிந்தனை எழும் . இதன் காரணமாக அமைதி சாந்தி சமாதனம் சகவாழ்வு என்ற மனித வாழ்வின் உயரிய நோக்கம் எட்டப்படும். இததகைய தொழில் வகுப்பினர்களுக்காக மன்னர்கள் நில மானியம் உட்படப் பல மானியங்களையும் வழங்கி அவர்களை ஆலயச் சூழலிலேயேவாழச் செய்வதனால் அங்கே ஆலயம் சார்ந்த ஒரு புதிய சமூகம் உருவாகுவதற்கான ஏதுக்கள் உருவாக்கப்படும் . வேலை



செய்பவர்களுக்கு மன்னர்கள் மானியங்களுடன் வேதனங்களையும் வழங்கியதால் அவர்களின் பொருளாதாரம் வாழ்வாதாரம் என்பனஉயர்ந்தன. அவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு உடை உறையுள் என்பன கிடைத்தன .இதன் காரணமாக பசி பஞ்சம் பட்டினி அற்ற மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை அவர்கள் வாழத் தலைப்பட்டார்கள்.

கோபுரத்தில்சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கினம், தாவர இனங்கள் ,மனிதஇனம், தேவர்,முனிவர் கூட்டம் ஆகிய எல்லாவற்றினதும் எல்லோரினதும் சிற்பங்கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம் . இது எல்லா உயிர்களும் சமம் என்ற பல்லுயிரையும் ஒன்றாக ஓம்பும் உன்னத மனிதப்பண்பை சமூக அபிவிருத்திக் கோட்பாட்டை வலியுறுத்துவதாகவும் எல்லா உயிர்களும் வாழும் உரிமையைக் கொண்டிருக்கின்றன என்ற அடிப்படை மனித உரிமைக் கோட்பாட்டை வலியுறுத்துவதாகவும் அமையும் .அதுமட்டுமல்லாமல் தாவரங்கள் விலங்குகள் என்ற எல்லா உயிர்களும் இப்பிரபஞ்சத்தின் அங்கங்களே இவ் அண்டத்தின் தோற்றத்தில் அதன் இருப்பில் அவைகளும் பங்காளர்களே என்பதை உணர்த்தி அவற்றின் மீதும் அன்பு செலுத்துகின்ற சீவகாருண்யம் வளரவும் சக மனிதர்களை நேசிக்கின்ற,மதிக்கின்ற அவர்களின் தேவைகளுக்கு உதவுகின்ற மனிதநேயம் என்னும் அதி உன்னதமான மானுடப் பண்பு வளர்வதற்கும் கோபுரங்கள்காரணங்களாக அமைகின்றனஅல்லதுகோபுரங்கள் இவற்றைஉருவகப்படுத்தி நிற்கின்றன .அதாவது இயற்கையை அதன் இருப்பை மதிக்க வேண்டும் அதனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற உண்மையை உணர்த்தி நிற்கின்றன.

## கலை கல்விக் காரணங்கள் :

மூலஸ்த்தானத்தில் உள்ள திருவுருவம் முதல் கோபுரம் வரையுள்ள கோவிலின் அனைத்திடங்களும் கலை வடிவமாக அதாவது இறைவனும் கோவிலும் கலைவடிவமாக இருப்பது தான் இந்துசமயத்தின் தனிச் சிறப்பாகும். இந்து சமயம் சார்ந்த கலைவடிவ மரபுகள் கோவில்களை அடிப்படையாகக் கொண்டு பெருமளவு வளர்ச்சியைக் கண்டுள்ளன. கட்டிடம்,சிற்பம், ஓவியம்,இசை,நடனம்,நாடகம்,இலக்கியம் எனப் பல்வேறு வடிவங்களில் கலையின் அம்சங்களைக்கோயில்களில் காண்கிறோம்.முத்தமிழின் இருப்பிடமாகக் கோவில்கள் விளங்குகின்றன .கோயில்கள் வழிபாட்டிற்குரிய இடங்களாக மட்டுமன்றி கலைகள் வளரும் இடங்களாக கலைகளைக் கற்பிக்கும் இடங்களாக அவற்றைக் கற்கும் இடங்களாக அவற்றை அரங்கேற்றும் இடங்களாக விளங்கி வருகின்றன. கோவில்களால் கலைகள் வளர்ந்ததாகவும், கலைகளால் கோவில்கள் வளர்ந்ததாகவும் பெரியவர்கள் கூறுவார்கள் .

கோவில்களில் உருவ வழிபாட்டிற்கு தேவையான இறைவனின் திருவுருவங்களை அமைக்கும் கலை விக்கிரகக்கலை எனவும் இத்திருவுருவங்களை நிறுவுவதற்குத் தேவைப்படும் ஆலயத்தை அமைக்கும் கலை கட்டிடக்கலை எனவும் கூறப்படும் .இக்கட்டிடக் கலையில் அதிகமான உயரத்தைப் பிடித்திருப்பது கோபுரம் கட்டும் கலையாகும். எங்கும் நிறைந்து பரவியுள்ள இறைவனின் திருவருளை ஆலயத்திற்குள் வரவழைக்கின்ற மிக உயர்ந்த கோபுரங்களின் கட்டுமானத்தில் ஓவியக்கலை சிற்பக்கலை கட்டடக்கலை என்பன ஒருங்கிணைந்து செயற்படுகின்றன .கோபுரச் சிறப்பைப் பற்றிக் கூறும் அப்பர் சுவாமிகள் கோலக் கோபுரம் என்று குறிப்பிடுவதில்

இருந்து கோபுரங்களின் கலைச் சிறப்பினை காண லாம் .

## வரலாற்றுக் காரணங்கள் :

கோபுரங்கள் வெறும் உயர்ந்தகட்டிடங்களாக மாத் திரம் காட்சியளிக்கவில்லை மாறாக அவைதமிழரின் வரலாறு,இந்து சமய வரலாறு , புராண வரலாறு , அறிவியல் வரலாறு , தத்துவ வரலாறு , மெய்ப் பொருள் வரலாறு , சமூக பொருளாதார வரலாறு ,பண்பாட்டியல் வரலாறு , அவ்வவ்காலத்திற்குரிய மக்களின் அகப்புற ஒழுக்க வரலாறு,கலைவளர்ந்த வரலாறு , தமிழ்இலக்கிய வரலாறு,போரியல் வர லாறு, ஆலய வரலாறு என்று பல செய்திகளையும் சான்றுகளையும் உருவங்களாக ,ஓவியங்களாக, கல்வெட்டுக்களாக,செப்பேடுகளாக தாங்கிமிகப்பெ ரியவரலாற்று ஆவணங்களாக நிற்கின்றன .ஆகவே வரலாற்றை எதிர்காலச் சந்ததிகளுக்கு எடுத்துச் சொல்லும் காரணத்திற்காகவும் எமது மன்னர்கள் மிகப் பெரும் பொருட் செலவில் இக்கொபுரங்களை அமைத்தார்கள் .

ஆயிரக்கணக்கான ஆண்டுகளிற்கு முன், நூற்றுக் கணக்கான ஆண்டுகளிற்கு முன் சேர சோழ பாண்டிய பல்லவ நாயக்க மன்னர்களால் அமைக்கப்பட்டதஞ் சைப்பெருங் கோவில், கங்கைகொண்ட சோழபுரம் ,மதுரை மீனாட்சி கோவில், மாமல்லபுர கோவில் போன்ற கோவில் கோபுரங்கள் இன்றும் நிமிர்ந்து நின்று சைவர்களின்,தமிழர்களின்ஆயிரம் ஆண்டு கால வரலாறுகளை சொல்லுவதைக் காணலாம் . அதேபோன்றுஈழத்திலும்நிமிர்ந்து நிற்கின்ற பஞ்ச ஈஸ் வரங்களின் கோபுரங்கள் எல்லாம் குறிப்பாக நாயன் மார்களினால் பாடப்பெற்ற திருதலங்களானதிருக்கே தீசுவரம் , திருக்கோணேசுவரம்போன்றகோவில்களின் கோபுரங்கள் எல்லாம் தேவார காலத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இந்நாட்டில் சைவத்தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்று ஆதாரங்களை வழங் குவதைக் காணலாம் .

## முடிவுரை:

திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும் திருவெண் ணீறு அணியாத திருவில் ஊரும்

பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும் பாங்கி னொடு பல தளிகள் இல்லா ஊரும்

விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரும் விதானமும் வெண் கொடியும் இல்லா ஊரும்

அருப்போடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரும்



அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே என்று அப்பர் பெருமான் பாடுகின்றார் .

எந்த உயிரினங்களுக்கும் உதவாத காடு அடவி என்று குறிக்கப்படும் . இங்கு அப்பர் சுவாமிகள் கோவில் இல்லாத ஊரை அடவி காடென்கிறார். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆல யம் தொழுவது சாலவும் நன்று என்பன ஆன்றோர் வாக்குகள். ஆகவேஊர் தோறும் கோவில்களில் இருக்க வேண்டும் . ஆகம விளக்கத்தின்படி கோபுரம் பூதாத் மாவைக் குறிக்கின்றது .எனவே இறைவனும் ஆன் மாவும் இணையும் இடமாக கோபுரங்கள் விளங்குகின் றன.யாக குண்டங்களில் இருந்து கொழுந்துவிட்டு எரிகிற தீப்பிழம்பின் உருவமே கோபுரங்கள் என்று பெரியவர்கள் கூறுவார்கள் . அக்னியைத் தாண்டி எந் தத் தீய சக்தியும் ஆலயத்துக்குள் அடியெடுத்து வைக்க முடியாது என்ற நம்பிக்கையின்,தத்துவத்தின் அடிப்ப டையிலேயே கோபுரங்கள் உருவாகின.

திருத்தணிகைத் திருப்புகழில், ''தூரத் தொழுவார் வினை சிந்திடு தாது உற்று எழு கோபுரம்'' என்று அருணகிரிநாதரும்அதேபோன்று ஐந்தாம் திருமுறை யில், ''ஆரூரரைத் தூரத்தே தொழுவார் வினை தூளி யே'' என்று அப்பர் பெருமானும் பாடி உள்ளார்கள். அதாவது கோபுர தரிசனம் காரணமாக வினைகள் அழிந்து பாவ விமோசனம் ஏற்படும் என்பது இவ் அருளாளர்களின் கருத்து.ஆகவேமுன்னர் குறிப்பிட் டது போல முழுமையான ஆலய வழிபாட்டுக்குச் சமமாககோபுர வழிபாடு இருக்கின்ற காரணத்தினால் கோவில்களில் கோபுரம் இருந்தால் மட்டுமே அக்கோ வில் அமைப்பு முற்றுப்பெறும் என்ற உண்மையை உணர்ந்து கோபுரம் அமைத்துக் கோடி புண்ணியம் பெறுவோம்..



# இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதை நிரூபிக்கும் ஐந்து பிராமிக் கல்வெட்டுக்கள்

சிவ பூமியின் சுவடுகளைத் தேடி ஆராயத் தொடங்கிய கால கட்டத்தில் நான் அதிகப்படியாக ஆராய்ந்த ஓர் நூல் என்றால் அது பேராசிரியர் பரணவிதான பதிவு செய்த பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றிய முதலாவது நூலாகும்.

இந்நூலில் இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட சுமார் 1500 பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றிய விபரங்களை பரணவிதான பதிவு செய்துள்ளார். இவற்றில் 5 கல்வெட்டுக்களில் தமிழர் மற்றும் தமிழரின் சமூகப் பிரிவுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2300 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தமிழ் ஒரு பேச்சு மொழியாக வழங்கியமைக்கு இக்கல்வெட்டுக்கள் ஆதாரமாய் அமைகின்றன.

தமிழ் தமெத எனப் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற பிராமிக் கல்வெட்டுக்களில் 5 கல் வெட்டுக்களில் தமெத எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. தமேத என்பது தமிழ் என்பதன் பிராமி வடிவமாகும். இக்கல்வெட்டுக்களின் காலம் பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டு வரையாகும்.

இவற்றில் வட மாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டத்தில் 2 கல்வெட்டுக்களும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் 1 கல்வெட்டும், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 1 கல்வெட்டும், வடமத்திய மாகாணத்தில் உள்ள அனுராதபுரத்தில் 1 கல்வெட்டும் காணப்படு



என்.கே.எஸ். திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthirugmail.com

கின்றன. இக்கல்வெட்டு சான்றுகள் மூலம் 2000 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு, வடமத்திய பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது உறுதியாகிறது.

தமிழர் எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ள ஐந்து கல்வெட்டுக்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## பெரிய புளியங்குளம் கல்வெட்டு-1




வவுனியா நகரின் வடகிழக்கில் 13 கி.மீ தொலைவில் உள்ள பெரிய புளியங்குளம் எனும் இடத்தில் உள்ள குளத்தின் அருகில் உள்ள மலைக்குகைகளில் மொத்தமாக 38 பிராமிக் கல்வெட்டு க்கள் காணப்படுகின்றன.

இவற்றில் 2 கல்வெட்டுக்களில் தமிழர் எனும் சொல் பொறிக்கப் பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் தமெத வனிஜ கபதி விசகஹ லேன என பொறிக்கப்பட்டுள்ளது. இதை பேராசிரியர் பரணவிதான The cave of the householder Visakha, the Tamil Merchant என மொழி பெயர்த்துள்ளார். இது தமிழ் வணிகனான குடும்பத் தலைவன் விசாகனின் குகை எனப் பொருள்படும். இக்கல்வெட்டு Inscriptions of Ceylon&Volum 1 எனும் நூலில் 356 வது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பெரிய புளியங்குளம் கல்வெட்டு-2




பெரிய புளியங்குளத்தில் காணப்படும் இரண்டாவது கல்வெட்டில் தமெத வனிஜ கபதி விசகஹ செனிகெமே எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதை The work of the flight of steps is of the householder Visakha, the Tamil Merchant என பேராசிரியர் பரணவிதான மொழி பெயர்த்துள்ளார்.

இது தமிழ் வணிகனான குடும்பத் தலைவன் விசாகனால் படிகளில் செய்யப்பட்ட வேலைஎனப் பொருள் படுகிறது. இக்கல் வெட்டு Inscriptions of Ceylon&Volum 1 எனும் நூலில் 357 வது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## சேருவில கல்வெட்டு

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் நகரின் தெற்கில் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சேருவில என்னுமிடத்தில் ஓர் கல்வெட்டு காணப்படுகிறது. இதில் பத மகாதிசஹ கபதி தமெத சுடஹக லேன என பொறிக்கப்பட்டுள்ளது. இதை The cave of Lord Mahatisa and the Tamil house holder Cuda என கல்வெட்டாய்வாளர் மாலினி டயஸ் மொழி பெயர்த்துள்ளார். இது சுவாமி மஹதிசவினதும் தமிழ் குடும்பத் தலைவன் சுட்டவினதும் குகை எனப் பொருள்படுகிறது. இக்கல்வெட்டு Epigraphical Notes 1&18. எனும் நூலில் 2886 வது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இக்கல்வெட்டின் படி எடுக்கப்பட்ட படம் நூலில் காணப்படவில்லை.

## குடிவில் கல்வெட்டு




அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை நகரின் தெற்கில் 13 கி.மீ. தொலைவில் உள்ள இறக்காமம் குளத்தின் அருகில் அமைந்துள்ள குடிவில் என்னுமிடத்தில் ஓர் இக்கல்வெட்டு காணப்படுகிறது.

இக்கல்வெட்டில் திகவாபி பொரண வனிஜஹ .....ய புதஹ பரியய தமெத திசய லேன எனப் பொறிக்கப்பட்டுள்ளது.இதை பேராசிரியர் பரணவிதான The cave of the Merchants who are the citizens of Dighavapi, of the sons of .. .. .. and of the Wife Tissa, the Tamil என மொழி பெயர்த்துள்ளார்.

இது தீகவாபியின் குடிமகனான தமிழ் வணிகன் .... திசவின் குகை எனப் பொருள்படுகிறது. இக்கல்வெட்டு Inscriptions of Ceylon&Volum&1 எனும் நூலில் 480 வது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## அனுராதபுரம் கல்வெட்டு



94

அனுராதபுரம் புராதன நகரில் உள்ள அபயகிரி விஹாரைப் பகுதியில் தமிழ் குடும்பத் தலைவன் பற்றிய ஓர் பிராமிக் கல்வெட்டு காணப்படுகிறது.

இக்கல்வெட்டில் இல்லுப் பரதஹி தமெத சமனே கரிடே தமெத கஹபதிக்கன பசதெ சகச அசன நசடச அசன க.. .. .. திசஹ அசன .. .. அசன குபிர சுஜதஹ நவிக கரவஹ அசன எனப் பொறிக்கப் பட்டுள்ளது. இதை பேராசிரியர் பரணவிதான The Terrace of the Tamil house holders caused to be made by the Tamil Samana of Ilubarata The seat of Saga The seat of Nasata The seat of KaTissa The seat of Kubira Sujata The seat of Karava the mariner என மொழி பெயர்த்துள்ளார். இது இல்லு பரதனான தமிழன் சமன மூலம் அமைக்கப்பட்ட தமிழ் குடும்பத் தலைவனின் மடம். சகவின் ஆசனம், நசடவின் ஆசனம், க...திசனின் ஆசனம், .. .. ..ஆசனம், குபிர சுஜாதாவின் ஆசனம், கப்பலோட்டி கரவனின் ஆசனம் எனப் பொருள்படுகிறது. இக்கல்வெட்டு Inscriptions of Ceylon&Volum&1 எனும் நூலில் 94 வது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் 2500 க்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்ற பொழுதிலும் அவற்றிலே சிங்களவர் பற்றிய குறிப்பெதுவும் காணப் படவில்லை. சிங்களர் என்ற இனம் பிராமிச் சாசனங்கள் எழுதப்பட்ட காலத்தில் உருவாகியிருக்கவில்லை என்று கருத வேண்டியுள்ளது என பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தனது இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் இலங்கையில் தமிழருக்கு மிக நீண்ட வரலாறு உண்டு என்பதற்கு வலுவான ஆதாரங்களாய் இக்கல்வெட்டுக்கள் ஐந்தும் அமைகின்றன.





# நாட்டுப்புறக் கலைகளில் ஈழத்துக் கூத்து நடனங்களின் தனித்துவமும் இதிகாச புராணங்களின் தாக்கமும்

ஆடலும் பாடலும் மனிதகுலத்தின் முதற் கலைவடிவங்களாகும். அக்கலை வடிவங்கள் மனிதரது தேவைகளுக்கும்,அவர்கள் வாழ்ந்த சூழல்களுக்கும், அவர்களது நம்பிக்கைகளுக்கும் ஏற்ப,அக்கலைகளின் உட்பொருளும் வடிவங்களும் மாற்றம் பெற்றுவரலாயின.குறிப்பிட்டபிரதேசமக்களின் மரபுகள்,வழக்காறுகள்,பண்பாட்டுப் பாரம்பரியங்கள், நாட் டார் கலை இலக்கியங்கள் என்பன இன்றையகலை இலக்கியப் பண்பாட்டின் ஆணிவேரை அறிந்து கொள்ளவும்,அவர்களின் வரலாற்றை மீளாய்வு செய்து எழுதுவதற்கும், சமூகநடைமுறைகள்,மரபுகள் முதவலானவற்றை அறிந்துகொள்வதற்கும்கல்வெட்டுக்கள்,புதைபொருட் சான்றுகள், பண்டைய இலக்கியங்கள், நாடடுப்புறஇலக்கியங்கள், நாட்டுப்புறக் கலைகள், பிறநாட்டார் குறிப்புக்கள் முதலானவை முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக நாட்டுக்கூத்து, நடனங்கள் பற்றியஆய்வுகள் மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியம்,அரசியற் பின்புலம்,சமுதாயப் பின்னணிஎன்பனபற்றிஅறியவும் துணையாகஅமைகின்றன. இக்கட்டுரைநாடடுப்புறக் கலைவடிவங்களில் ஈழத்துக் கூத்துக்கலையின் தனித்




பேராசிரியர்

**பாலசுந்தரம் இளையதம்பி**

**தமிழ்த்துறைத் தலைவர்**
**அண்ணாமலை கனடா வளாகம்.**
**றொறன்ரோ.**






துவம் பற்றியும்,அதன்மீதான இதிகாசபுராணங்களின் தாக்கம் பற்றியும் ஆராய்கிறது.

## பண்டைத் தமிழரின் கூத்துக்கலை:

மனிதகுலத்தின் முதற்கலைவடிவங்களாகியஆடலும் பாடலும் மக்களின் வாழ்வியல் தேவைகளுக்கும் சூழலுக்கும் ஏற்பஅவற்றின் வடிவங்களும் உள்ள டக்கங்களும் மாற்றம் பெற்றுவந்துள்ளன. கூத்து. நாடகம் என்ற இரு சொற்களும் தொல்காப்பியம்,ச ங்க இலக்கியம் முதலாகப் பேசப்பட்டுவரும் சொற் களாகும். கதைநழுவிய கூத்தைநாடகம் எனஅடியாக் குநல்லார் குறிப்பிடுவர். சங்ககாலக் கூத்தர்களாகக் கூத்தர்,விறலியர்,வயிரியர்,பாடினி. கோடியர்,கண் ணுளார், கூத்துள்படுவோர்,நாடகமகளிர்,நாடக மடந்தைமுதலானபெயர்கள் கூத்துக்கலையுடன் தொன்றுதொட்டுவழங்கிவந்துள்ளன. சங்ககாலத் தில் வேலன் வெறியாட்டும் துணங்கைக் கூத்தும் பெரிதும் ஆடப்பட்டுள்ளன. ஆயினும் தமிழகத்தில் இப்பழந்தமிழ்க் கூத்துக்கலையின் எஞ்சியகலையா கதெருக்கூத்து இடம்பெற்றுவருகிறதுஎனலாம். தமிழகத்தில் தெருக்கூத்து,வடக்கத்தி,தெற்கத்தி,மேற் கத்திஎன்றபாணிகளில் ஆடப்படுவருவதாகஅறியப்படு கிறது. தொடக்கத்தில் பிரகலாதன்கதை,பாரதக்கதை, இராமாணக்கதை,புராணக்கதைகள் என்பனதழுவி இக்கூத்துக்கள் ஆடப்பட்டுவந்துள்ளதாகவும்,சாதிய அடிப்படையில் இக்கூத்துபேணப்பட்டுவந்து,சமகா லத்தில் மேல்தட்டுமக்களும் தெருக்கூத்துக் கலையில் ஆர்வங்காட்டிவருவதாகவும் சு.இராசரத்தினம்,தெருக் கூத்துஎன்ற நூலிற் குறிப்பிடுவர் (1).

### கூத்து:

ஈழத்துநாட்டுப்புறஅரங்கக் கலைகளில் முதலில் பேசப்படுவது கூத்துஆகும். மட்டக்களப்பு,யாழ்ப் பாணம்,மன்னார்,வன்னி,மலையகம் ஆகியபிரதேச ங்களில் கூத்துக்கலை இன்றுவரையும் பேணப்பட்டு வருகின்றமையைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். இதன் வடிவங்களையும் ஆடல் பாடல் நுட்பங்களை யும்,அவற்றின் சமூகபண்பாட்டுப் பின்னணிகளையும் கூர்ந்துஆராயும்போது இக்கலைவடிவமேஈழத்தமிழ ரின் தேசியக் கலைவடிவம் என்பதும் புலப்படும்.

கூத்தின் ஆடல்,பாடல்,கதைமுடிபு,உடைஅலங் காரம்,தாளக்ககட்டு,கூத்தர்கள் மேடையிற் பயன்ப டுத்தும் வில்,கதாயுதம்,வாள் முதலானஆயுதங்கள், கூத்தர் ஒப்பனைகள்ஆகியவற்றின் அடிப்படையில் கூத்தைவடமோடி-தென்மோடிஎனஇரு பிரிவுகளாக வகுத்துள்ளனர். வடமோடிக் கூத்துக்;களில் போர்த் தன்மைமிகுந்தும்,தென்மோடிக்கூத்துக்களில் காதல் திருமணம் கொண்டகதைப்போக்கும் காணப்படும்.

தமிழகத்தில் 1950 களிலிருந்துநாட்டுப்புறகலை - இலக்கியங்களைச் சேகரித்தல்,பதிப்பித்தல்,ஆய்வு செய்தல் முதலானமுயற்சிகள் இடம்பெற்றதுபோன் றே,ஈழத்தில் இம்முயற்சிகள் 1940களில் தொடங் கி,அதன் இரண்டாவதுகட்டமாக1970 முதலாகஇ. பாலசுந்தரம்,சி. மௌனகுரு,காரைசுந்தரம்பிள்ளைஈ கி. விசாகரூபன், ஜெயசங்கர் சிவஞானம்ஆகியோர் பல்கலைக்கழகங்களில் அவைபற்றியஆய்வுகளை நடத்தியுள்ளனர்.ஈழத்துநாட்டுப்புறக் கலைமரபில் கூத்து,வசந்தன்,விலாசம்,சிந்துநடைக்கூத்துமுதலிய கூத்துக்கலைகள் சமூக-சமயப் பின்னணியில் இயங்கு நிலைஉடையனவாகவழங்கிவந்துள்ளன.

## வடமோடி- தென்மோடிக் கூத்துக்கள்:



தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களானயாழ்ப் பாணம்,மன்னார்,வன்னி,மட்டக்களப்புஆகியபகுதி களிலும் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர் மத்தியி லும்கூத்துக்கலைபெரிதும் பேணப்பட்டுவந்துள்ளது. கூத்தின் ஆடல்முறைகள்,பாடல்; வகைகள்என்பவற்



றின் நுட்பங்களைஆராயும்போதுகூத்துக்கலையின் பழைமயும் அவற்றிலுள்ளசிறப்பம்சங்களும்,அவைமக் கள் வாழ்க்கையுடன் பிணைந்திருப்பதும் அறியப்படு கின்றன.

ஈழத்துக் கூத்துக்கலைதனித்துவமானநாட கமரபுகளைக் கொண்டதாகும். கூத்துக்களின் ஆடல்,பாடல்,கதையமைப்பு,தாளக்கட்டு,உடைஅ லங்காரம்;,கூத்தர் பயன்படுத்தும்வில்,வாள்,கதாயுதம் முதலானஆயுதங்கள் என்பனகருத்திற் கொள்ளத் தக்கவை. அவற்றின் அடிப்படையில் கூத்துக்களை இருவகையாகவகைப்படுத்துவர். இவற்றைமட்டக் களப்பில் வடமோடி-தென்மோடிஎன்றும்,யாழ்ப்பா ணத்தில் வடபாங்கு-தென்பாங்குஎன்றும்வன்னியில் வன்னிப்பாங்கு - மன்னார்ப்பாங்குஎன்றும் வழங் குவர். வடமோடிக் கூத்துக்களின் கதையமைப்பலே போர்த்தன்மைமிகுந்தும்,தென்மோடிக் கூத்துக்களிற் அகச்சுவைமேம்பட்டும் காணப்படும். உதாரணமாககர் ணன்போர் (போர்த்தன்மை)வடமோடியிலும்,அலங் காரரூபன் நாடகம் (அகம் சார்ந்தவை) தென் மோடியிலும் அமைந்தகதைப்போக்கினைக் கொண்டனவாகும். உலகநாடகங்கள் துன்பியல்;, இன்பியல் என்றவகைமையில் அமைவனபோன் றே,ஈழத்துக் கூத்துக்களும் துன்பியல் - இன்பியல் கதைப்போக்குகளைக்; கொண்டமைந்துஉலகநாடகப் பொதுத்தன்மையையும் பெற்றவையாகும்.

கூத்துப் பயிற்றுவிக்கும் கலைஞர் (ஆசிரியர்) 'அண் ணாவியார்' எனப் பெயர் பெறுவார்.அண்ணாவியார் கூத்துஆடுவோருக்குரியதாளக்கட்டுக்களைதாளலயத் தோடு;சல்லரி,மத்தளம் முதலானபக்க இசைக்கருவிக ளின் ஒத்திசையோடுபாடிக்காட்டி, கூத்தையும் பழக் குவார்.பாடல்-தாளம் என்பனவற்றக்குஏற்ப கூத்தர் பல்வகையானஆடல்களைநிகழ்த்துவர். ஆவர்கள் முதலில் தாளத்தோடுதத்தம் பாடல்களைமனனம் செய்துகொள்வர். தத்தமக்குரியஆடல்முறைகபைக் பழகுவர். இவ்வாடல் முறைகள் வருமாறுபெயர் பெறும்: வரவுஆட்டம்,தாளம் தீர்த்தல்,அடந்தை,அரை வீசாணம்,எதிர்வீசாணம்,உலா,நாலடி,எட்ட டி,ஒய்யாரம்,சுழன்றாடல்,பாய்ந்தாடல்,குந்திச் சுழல்தல்,குந்துநிலை,குத்துமிதி,தட்டிநிலைமாறல், இரண்டாம் - மூன்றாம் - நாலாம் வாட்டிஆட்டம்,பாம் பெனவளைந்தாட்டம்,பின்னல் ஆட்டம் எனப் பல்வே றுஆடல்கள் கூத்தில் இடம்பெற்று, கூத்துக்குமெருகூட் டுவனவாகஅமைந்திருக்கும்.

வடமோடிக்கூத்து-தென்மோடிக்கூத்துஎன்றவ கைமைக்குஏற்ப,ஆடல்,பாடல் என்பவற்றிடை யேவேறுபாடுகளும் காணப்படும். வடமோடிக் கூத்திலும்விடதென்மோடிக் கூத்தில்நுணுக்கம்,வேகம், கடினம்,நளினம் என்றபண்புகளைக் கொண்டஆட்டங் கள் இடம்பெறும். தேன்மோடியில் வரவுத்தாளமாகப் பின்வரும் தாளக்கட்டுசபையோரால் பாடப்படும்.;

> (1)ததித்தளாதக தெய்யதிமிதகதா திமிதத்தித்தெய்யே
> ததித்தளாதக தெய்யதிமிதகதா திமிதத்தித்தெய்யே
>
> தச்சோந்திமிதொந்தரிகிடதிமிதக
> தாதெய்யதாதளங்குததிங்கிண
>
> தொங்கதீந்தாதொங்கதீந்தகதீந்தாந்தா
> தாதெய்யதாதளங்குததிங்கிண
>
> தாதத்தோதீந்தத் தீந்தத்தாம்
> தளங்குததிங்கிண
>
> (2) தாதத்தோதீந்தத் தீந்தத் தாம்
> தாதத்தோதீந்தத் தோதக
> தாதீந்ததோதீந்தத் தோதக
> தச்சோந்திமிதளங்குததிங்கிண
> தொங்கதீந்தாதீந்தாந்த
> தொங்கதீந்தாதீந்தாந்த..

எனப்பாடப்படும் பல்வேறுபட்டதாளக்கட்டுக்களுக் குஏற்பத்,துரிதமும். ஆடல் நுணுக்கங்களும் கொண்ட விதம் விதமானஆட்டங்களைமேற்கொண:டஆடுவது காட்சிக்குமிக அற்புதமாகஅமைந்திருக்கம்.

> வடமோடிக்கூத்தில் கதாபாத்திரம் முதலில் தோன்றும் போது அவரது வரவு ஆட்டம்,
> தகதிதாதெய்யத் தெய்தெய் -
> தாத்தெய்யத்தோம் தகதிகதா

என்றவாறுவேறும் பலவரவுத் தாளத்துக்குஅடிவாகப் பாடிஆடுவர். முதலில் அண்ணாவியார் வரவுத்தாளத்தைத் தொடங்கிப் பாடுவார். அதனைத் தொடர்ந்து பிற்பாட்டுக்காரர் அதனைமீண்டும் மீண்டும் பாடுவர். வரவுத்தாளம் போன்றே இவ்விருவகைப்பட்ட கூத்துப்பாடல்களைப் பாடும் முறையின் இராகங்களிலும் வேறுபாடுகள் அமைந்திருக்கும். தென் மோடிடியில் அதனைஓசைநயத்துடன் நீட்டி இசைத்துப் பாடுவர். ஆனால் வடமோடியில் வரவுவிருத்தங்களைஅதிகம் நீட்டி இசைத்துப் பாடுவதில்லை. கூத்தருக்;குப் பக்கத்துணையாகச் 'சபையோர்' எனப்படும் அணியிசைக்கலைஞர்கள் பின்னணியிசைவழங்குவர்.

இங்குவழங்கும் கூத்துக்களின் பாடுபொருளாகஅமையும் கதைகள் பாரதம், இராமாயணம்,புராணம்,வரலாறுசார்ந்தனவாகஅமைந்திருக்கும். கத்தோலிக்ககக் கூத்துக்கள் பைபில் தழுவியகதைகளைக் கொண்டனவாகும். மட்டக்களப்பிற்பெருவழக்காகஆடப்படும் கூத்துக்கள் பாரதக் கதைகளைத் தழுவியனவாகதருமபுத்திரநாடகம்,பப்பிவாகன் நாடகம், 14ஆம்போர்,பாண்டவர் வனவாசம்,கர்ணன்போர்,கிருஷ்ணன்துர்து,சுபத்திரைகலியாணம்,பவளக்கொடிநாடகம்,வாளபீமன் கூத்துஇப்பட்டியல் நீண்டதாகும். இராமாணம் கதைகள் தழுவியகூத்துக்களாகஇராமநாடகம்,குசலவநாடகம்,சீதாகலியாணம் ஆடப்பட்டுவருகின்றன. தென்மோடியில் பிரபலம் பெற்றவையாகஅலங்காரரூபன் நாடகம்,பவளவல்லிநாடகம்,வாளபிமன் நாடகம்,அநிருத்தநாடகம் என வரிசை நீண்டுசெல்லும்.

இவற்றுக்குஅடுத்தபடியாக,ஈழத்தில் புராணக்கதைதழுவியனவாகவள்ளிதிருமணம்,மார்க்கண்டன் நாடகம்,அரிச்சந்திரன் நாடகம்,காத்தவராயன் நாடகம் முதலிய கூத்துக்கள் வழக்கிலுள்ளன என்பதையும் குறிப்பிடவேண்டும். ஈழ வரலாற்றுடன் தொடர்புடையனவாகசங்கிலியன் கூத்து. கண்டிஅரசன் கூத்து,பண்டாரவன்னியன் கூத்துஎன்பனவும் ஈழத்தில் ஆடப்பட்டுவருகின்றன.தமிழகத்துத் தோட்டத்தொழிலாளர் வாழும் இலங்கையின் மத்தியமலையகப் பகுதிகளில் காமன் கூத்து,அருச்சுனன் தபசு. பொன்னர் சங்கர் கதை முதலாக கூத்துகள் மிகச்சிறப்பான முறையில் பேணப்படுகின்றன.



போர்த்துக்கேயரதுவருகையுடன் ஈழத்துக் கூத்துக்கலைமேலும் வளம்பெறுவதாயிற்று. சைவமக்கள்;,கோயில் திருவிழாக்காலங்களிற்பாரதம், இராமாயணம் தழுவிய கூத்துக்களைநடத்தியதையும்,அவற்றைக் கிராமக்கள் கூடியிருந்து இரவு முழு நேரமும் இருந்து பார்த்து இரசிப்பதையும்அவதானித்தகத்தோலிக்க மதகுருமார், தமது மதப்பிரச்சாரத் தேவைக்குநாட்டுக்கூத்துக் கலையைப் பெரிதும் பயன்படுத்தி,பைபிள் கதைகளைஅண்ணாவிமாரைக் கொண்டுகத்தோலிக்கக் கூத்துக்களைஎழுதுவித்தனர். அக்கூத்துக்களைப் பழக்கி,தேவாலயத்திருவிழாக் காலங்களில்; இடம்பெறச் செய்தனர் அவ்வடிகையில்ஞானசவுந்தரி,மூவிராசாக்கள்,எண்றீக்குஎம்பரதோர்,கிறிஸ்தோப்பர் முதலானபல்வேறுகத்தோலிக்கக் கூத்துக்;கள்மன்னார்,யாழ்ப்பாணம்ஆகியபகுதிகளில் பெரிதும்ஆடப்பட்டு வந்துள்ளன. அக்கூத்துக் கலையுடன்; தொடர்படையவர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் ஐரோப்பியநாடுகளிலும் கனடாவிலும் கத்தோலிக்கக் கூத்துக்களைஆண்டுதோறும் மேடையேற்றி, கூத்துமரபைப் பேணிருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்தில் நாட்டுக்கூத்துக்குமிகவும் பெயர்பெற்றதுமட்டக்களப்புத் தமிழகமாகும். அப்பிரதேசமக்களது வாழ்க்கைமுறையில் நாட்டுப்புறக் கலைகள்,வழிபாட்டுமுறைகள்,சடங்குகள்,நம்பிக்கைகள்,நாடடுப்புறப்இலக்கியங்;கள்,கதைகள்,பழமொழிகள்,விடுகதைகள்,நாட்டுவைத்தியம்,மந்திரக்கலைமுதலானபல்வேறுநாட்டுப்புறவழக்கியல் கூறுகள்உயிர்ப்புடன்; இன்றுவரையும் வழங்கிவருகின்றன.

இவ்வாறாக, பாரதம், இராமாயணம்,மற்றும்,கந்தபுராணம், பைபிள்,வரலாறுஆகியவற்றைத் தழுவியகதைகளேகூத்துக்களாகஆடப்பட்டன. ஒப்பீட்டளவிற்

பாரதக்கதைகள் சார்ந்தபெருந் தொகையான கூத்துக்கள் மட்டக் களப்புப் பகுதியில் ஆடப்பட் டுள்ளனஎன்பதைச்சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.பாரதக்கதை யில் வரும் கிருஷ்ணன் மக்களாற்



பெரிதும் விரும்பப்படும் கதாபாத்தி ரமாகும். அத்துடன் வீமனும் அருச் சுனனும் மக்களுடன் இயங்கும் கதாபாத்திரங்களாகச் செயற்ப டுவதும். தர்மம், நீதி,மானுடம் என்பன மகாபாரதத்திற் பெரிதும் காணப்படுவதும் பாரதக்கதைகி ழக்கிலங்கைமக்களின் மனதைக் கவர்ந்துகொண்டமைக்குக் கார ணம்எனலாம். இதனாற்,பாரதக்க தையின் ஈடுபாட்டினால் மட்டக் களப்புப் பிரதேசத்தில் கிருஷ்ணன் கோயில்களும் ஊர்கள் தோறும் இடம்பெறலாயின. இதனால் இப்பிரதேசத்திற் பாரதக் கலா சாரம் நிலவுவதாகபண்டிதமணிசி. கணபதிப்பிள்ளைகுறிப்பிட்டதை மட்டக்களப்புத் தமிழகம் என்ற நூல் நூல் பதிவுசெய்துள்ளது (2).மட்டக்களப்பு மாநிலத்தில் வடமோடியிலும்,தென்மோடியி லும்அமைந்தபல நூறு கூத்துக்கள் ஊர்கள்; தோறும் ஆடப்பட்டுவந் துள்ளன.

இவற்றுடன்,இலங்கையில் புராணக்கதைதழுவிய கூத்துக் களாகவள்ளிதிருமணம்,மார்க் கண்டன் நாடகம் அரிச்சந்திரன் நாடகம்,காத்தவராயன் நாடகம், காமன்கூத்துமுதலிய கூத்துக்களவ ழக்கிலுள்ளனஎன்பதையும் குறிப் பிடவேண்டும்.

யாழ்ப்பாணம்,வன்னி. மன்னார்ப் பகுதிகளில் வரலாற்று கதைதழுவியசங்கிலியன் கூத்து. பூதத்தம்பி கூத்து. பண்டாரவன் னியன் கூத்துஎன்பனவும் கத்தோ லிக்கக் கூத்துக்களும் பெரிதும் ஆண்டபட்டுவந்துள்ளன் அவர்கள் இக்கூத்துக்களைவடபாங்கு,தென் பாங்குஎன்றுவழங்குவர். தமிழகத் துத் தோட்டத்தொழிலாளர் வாழும் இலங்கையின் மத்தியமலையகப் பகுதிகளில் காமன் கூத்துமிகச்சிறப் பானமுறையில் பேணப்பட்டுவந் துள்ளது.

## விலாசக் கூத்து:

இசையையேமுதன்மையாகக் கொண்டுஆடப்படும் விலாசம் என்ற கூத்துவடஇலங்கையிற் குறிப்டபிடத்தக்கவகையில் வளர்ச் சிபெற்றிருந்தது. விலாசக் கூத்தில் கர்நாடக இசையின் செல்வாக்குப் பெரிதும் அமைந்துகாணப்படும். இதனால் கற்றோர் மத்தியிலும் விலாசக் கூத்துபெருவரவேற்பைப் பெற்றது.'இசைக் கூத்துக்குஎவ் வாறுவிலாசம் என்றபெயர் வழங்கிற்றுஎனத் தெளிவாகத்தெ ரியவில்லை'என்றுடி.கே. சண்மு கம்(3)தனதுநாடகக்கலைஎன்ற நூலிற்குறிப்பிடுகிறார். ஆனால் வடமொழியில் வழங்கியவிலாசம் என்றநாடகவகையிலிருந்து இப் பெயர் வந்திருக்கவாய்ப்புண்டு.

பல்லவர் காலத்தில் மகேந்திரபல் லவன் (கி.பி. 616 - 630) 'மத்த விலாசபிரகசனம்என்றவிலாத்தை (கூத்தை) வடமொழியில் எழுதி யுள்ளான். இந்நாடகத்தில் கபா லிகசமயத்தைச் சேர்ந்தஒழுக்கச் சீர்கேடன் ஒருவனின் கதை கூறப் பட்டுளதாகவும்,அவன் பௌத்தத் துறவியுடன் பிரச்சினைப்படுத லும்,அதனைப் பாசுபதசமயத்தான் ஒருவன் தீர்த்துவைத்தலும் புனை யப்பட்டுள்ளதாகவும்,அந்நாட கத்தில் மகேந்திரவர்மனின் ஆட்சி ச் சிறப்பு,அவனதுவிருதுப்பெ யர்களானசத்ருமல்லன்,குணப ரன்,மத்தவிலாசன்,அவனிபாஜகன் முதலானவிடயங்களும் இடம்பெற் றிருப்தாகவும் மா. இராசமாணிக்க னார் கூறுவர் (4).

யாழ்ப்பாணத்தில் கர்நாடக இசைபயில்நெறியும்,அதில் ஈடுபாடும்மக்கள் மத்தியில்; பெரிதும் காணப்பட்டமையால், இசைப்பாங்கானவிலாலசக் கூத் தும் யாழப்பாணத்தில் ஏற்றம் பெறுவதாயிற்று. இவற்றுக்கு உதாரணமாகபூதத்தம்பிவிலா சம்,மயானகாண்டம்,சத்தியவான் சாவித்திரிமுதலான இசைநாடகங் களைக் குறிப்பிடலாம். நடிகமணி வி. வைரமுத்துவிலாசக் கூத்துவடி வத்தைப் பெரிதும் பயன்படுத்திய தோடு,அதனைமக்கள் மயப்படுத் திப் பெரும் புகழீட்டியவருமாவர். ஈழத்தில் ஆடப்பட்டவிலாசக் கூத் துக்களாக இராமவிலாசம்,வாளபீ மன்விலாசம்,மதனவல்லிவிலாசம், இரத்தினவல்லிவிலாசம்,தமயந்தி விலாசம்,விஜயதர்மவிலாசம் என

ஐம்பதுக்கும் மேற்பட்டவிலாசக் கூத்துக்கள் ஆடப்பட்டுவந்துள்ளன.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலேதமிழகத்திற் பார்ஸி நாடகக் குழுக்களும் மராட்டியநாடகக் குழுக்களும் விலாசக் கூத்துக்களைநடத்தியுள்ளனர். அவர்களதுசெல்வாக்காலேதமிழகத்தில் விலாசக் கூத்துக்கள்எழுதப்பட்டு,அவைமேடையேற்றப்பட்டடிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஏற்கனவே தமிழகத்திற் செல்வாக்குப் பெற்றிருந்த இராமாயணம்,பாரதம் தழுவியகதைப் பாடல்களைவிலாசக் கூத்துக்களாகஎழுதிவிலாசக் கூத்தைநிகழ்த்தியிருக்கலாம்எனத் தெ. பொ.மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுவர்(5).விலாசக் கூத்துக்கள்சங்கீதத்துடன் தொடர்பு பெற்றிருந்தமையால் அக்கூத்துமுறைஈழத்தித்திலும் பரவியிருக்கவேண்டும். இவ்விலாசக் கூத்துமரபில் யாழ்ப்பாதணத்துவரலாற்றுடன் தொடர்புடையபூதத்தம்பிகதைஏற்கனவேதென்மேடாடிமரபில் ஆடப்பட்டுவந்துள்ளது. அக்கூத்து இலக்கியத்தைத் தழுவிபூதத்தம்பிவிலாசம் எழுதப்பட்டுயாழ்ப்பணத்திற் பெரிதும் ஆடப்பட்டுவந்துள்ளது. 1970களில் பூதத்தம்பிவிலாசக் கூத்தைநான் அங்குபார்த்திருக்கின்றேன். அதில் ஈழத் தமிழரின் கூத்துக்கலையில் இடம்பெறும் ஆடல்,பாடல் முறைகளைஉள்வாங்கியும்,கர்நாடக





இசைமரபினைச்; சேர்த்தும்விலாசக் கூத்துஆக்கம் பெற்றுள்ளமையைஉணரக்கூடியதாக இருந்தது.

வடமோடி,தென்மோடி கூத்துக்களுக்கும் விலாசக் கூத்துக்களுக்கும் இடையேயுள்ளவேறுபாடுகளை நோக்கும்போதுஅவற்றிடையேயுள்ளபாடல் யாப்புக்களிற் பெரிதும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. கூத்துக்களில் ஆட்டத்திற்குரியதாளக்கட்டுக்கள் ஃதுதருப்பாடல்கள்,கூத்தில் இடம்பெறும் விருத்தம்,சிந்து,கொச்சகம்,அகவல்,முதலானயாப்புவடிவங்கள்,சிந்து,கண்ணி,முதலிய இன்னிசைவடிவங்கள் விலாசக் கூத்திற் காணமுடியாது. விலாசத்திற் கர்நாடக சாஸ்திரியசங்கீதமெட்டிலானபாடல் வடிவங்களேபெரிதும் இடம்பெற்றிருக்கக் காணலாம்.

## சிந்து நடைக் கூத்து

சிந்துநடைக் கூத்துஎன்ற கூத்துமரபும் இலங்கையின் வடக்கு,கிழக்குப் பகுதிகளில் வழக்குப் பெற்றுவந்துள்ளது. இவ்வகையிற் காத்தவராயன் சிந்துநடைக் கூத்துகுறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம்,வன்னி,மன்னார்,மட்டக்களப்புஆகியபிரதேசங்களிலும் சிந்துநடைக் கூத்துக்கள் இற்றைவரைநிகழ்த்தப்பட்டுவருகின்றன. காத்தவராயன் கூத்து,பின்னர் குறிப்பிடப்படும் இசைநாடகப் பண்புகளிலிருந்துசற்றுவேறுபட்டதாகும். ஆடல் முறையிலும் பாடல் முறையிலும் பயன்பாட்டுஅடிப்படையிலும் சிந்துநடைக் கூத்துத் தனிப் பண்புடையது. இசைநாடகத்திற் கர்நாடக இசைப்பாணியில் அமைந்தபாடல்களேபெரிதும் பாடப்படுவதைஅவதானிக்கலாம். இசைநாடககாரருக்குகர்நாடகசங்கீதஅறிவுதேவைப்படுவதாகும். ஆனால் சிந்துநடைக் கூத்தில் நாட்டுப்புற இசைமெட்டிலேயேஎல்லாப்பாடல்களும் அமைந்திருக்கும். நாட்டுப்புற இசைமெட்டில் காத்தவராயன் கூத்துப்பாடல்கள் அமைவதால் மக்களைமிகவும் கவர்ந்திழுக்கும் வகை

யில் நடிகர்கள் அப்பாடல்களைப் பாடுவர். இச்சிந்துநடைக் கூத்தையாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே 23 பட்டதாரிமாணவமாணவிகளைப் பங்குபெறச் செய்து,நவீனமுறையிலேதயாரித்துஈழத்தின் பலபாகங்களிலும்; அதனைஅளிக்கைசெய்தஅனுபவத்திலும்,பல ஊர்களுக்குச் சென்றுகாத்தான் சிந்துநடைக் கூத்தைப் பார்த்தஅனுபவத்திலும் இக்கூத்துமுறையின் நுட்பங்கள் அறியப்படலாயின(6).

காத்தவராயன் சிந்துநடைக் கூத்துகிராமியமக்களிடையேமிகவும் பிரபல்யம் பெறுவதற்குமுதற் காரணமாகஅமைவதுஅவர்கள் பின்பற்றும் மாரியம்மன் வழிபாடாகும். கிராமியத் தேவதைகளிற்; பெரும்பாலானகிராமங்களில் மாரியம்மன் கோயில்களும்,சடங்குமுறையிலானவழிபாடுகளும் இடம்பெற்றுவருகின்றன. இக்கூத்துக் கதையில் காத்தவராயன் மாரியம்மனின் மகன் ஆவார். மாரியம்மன் கோயிலிற் சடங்குநடைபெறும்போதுகாத்தவராயசுவாமியாகஒருவர் உருக்கொண்டுஆடுவதுவழக்கமாகும். அவ்வாறுஒருவர் உருப்பெற்றுஆடும்போதுகாத்தவராயசுவாமிபாடல்களைப் பக்தியுடனும்,பொருத்தமான இசையோடும் உடுக்கடித்துப் பாடிஉருக்கொண்டுஆடுகின்றவரைத் தொடர்ந்துஆடச்செய்யும் வழக்கமுமுண்டு. மாரியம்மன் கோயிற் சடங்குகாலங்களிற் காத்தவராயன் கதைப்பாடல்களைநாட்டுப்புற இசைப்பாணியில் நன்கு இசைத்துப்; பாடுவதும்,கதாபாத்திரங்களுக்கு அமைவாகஅபிநயம் செய்வதும்,அதனைப் பார்வையாளர்கள் பக்திபூர்வமாகக் கேட்டுக்கொண்டிருப்பதும் வழக்கமாகும்.

காத்தவராயன் சிந்துநடைக் கூத்தைநேர்த்திஅடிப்படையில் மாரிஅம்மன் சடங்குகாலங்களில் மேடையேற்றி இராப்பொழுதுமுழுவதும் ஆடி அம்மனைவழிபடும் மரபும் உள்ளது. காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் ஆண் கதாபாத்திரங்களாகசிவன்,கிருஷ்ணர்,காத்தவராயன்,தொட்டியத்துச் சின்னான்,நாரதர்,வைசூரராசன் முதலானோர்; இடம்பெறுவர். பெண் கதாபாத்திரங்களாகமுத்துமாரிஅம்மன்,பார்வதிஅம்மன்,பூமாதேவிஅம்மன்,வல்லத்துமாங்காளி,ஆரியப்பூமாலை, ஏழு கன்னியர் முதலாகப் பலர் இடம்பெறுவர். இவ்வாறுபலர் பங்குபற்றும் இக்கூத்தில் ஒவ்வொருபாத்திரமும் வெவ்வேறு இசைகளிற் பாடுவதும்,பாடலுக்கேற்பஆடுவதும் அற்புதமான காட்சிகளாகும். இக்கூத்தின் இறுதிக் கட்டத்தில் வல்லத்துமாங்காளிஅம்மனின் வரவு இடம்பெறும்போதுமேடைஅதிரும் வகையிலானஆடலும் பாடலும் இடம்பெற்றுச் சபையோரைப் பரவசப்படுத்துவனவாகஅமையும். அப்பாடலின் ஒருபகுதியை இங்குநோக்கலாம்:



சிங்கவாகனத்தில் ஏறிவல்லத்துமாங்காளி- அவ
சீக்கிரமாய் வாறாவாம் வல்லத்துமாங்காளி.
நெறுநெறென்னப் பல்கடித்து வல்லத்து மாங்காளி-அவ
நேர்மையுடன் வாறாவாம் வல்லத்துமாங்காளி.
ஏனோ எனை அழைத்தாய் என்மகனே-நீயும்
எனக்கறியச் சொல்லேனடாஎன்மகனேபாலா. (7)

சிந்துநடைக் கூத்திலேமுக்கியமாககதாபாத்திரங்களின் ஒப்பனைமிகவும் நேர்த்தியாகவும் கவர்ச்சியாகவும் அமைந்திருக்கும். பொதுவாகச் சிந்துநடைக் காத்தவராயன் கூத்துகோயில் முன்றலில் அமைக்கப்படும் மேடைஇல்தான் இடம்பெறுவதுவழக்கம். ஆனால் நவீனஅரங்குகளில் இக்கூத்து இடம்பெறும் போதுஉள்அரங்கின் பின்பக்கமாகஇக்கதையின்நிகழிடங்களைக்; (அரண்மனை, கடல்,காடு,நகரம் முதலியன) குறிக்கும் திரைச்சீலைகள் தொங்கவிடப்படுவதும் உண்டு. இந்நாடகநிகழ்வில் உடுக்கு,மிருதங்கம்,பறை,சல்லரி,ஆர்மோனியம் ஆகிய இசைக் கருவிகள் பல்லியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஈழத்தமிழர் புலம்பெயர்ந்;து வாழும் நாடுகளிலும் காத்தவராயன் சிந்துநடைக் கூத்து இடம்பெற்றுவருதல் இதன்; மகிமையையும் மக்களின் ஈடுபாட்டையும்

புலப்படுத்துவதாகும். காத்தவராயன் சிந்துநடைக் கூத்தின் கதைஅமைப்பினைநோக்கும்போது,கதை தோன்றியகாலத்துச் சமூகச் சிக்கல்களைத் தீர்க்கும் வகையிற் சமயம் சார்ந்தகாத்தவராயன் கதைபயன் படுத்தப் பட்டுள்ளமையைஅறிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்லாதுசங்ககாலத்தில் நிலவியபரத்தமைஒ முக்கத்தைச் சாடுவதற்குச் சங்ககாலப் புலவர்கள் அகத் திணையில் மருதத்திணைச் செய்யுட்களைப் பெரிதும் கையாண்டிருத்தல் போன்று, இந்நாடகக் கதைப் போக்கிலும் அப்பின்னணிஅமைந்துள்ளது. இக்கதை தோன்றியகாலத்துச் சமூக,பொருளாதார,அரசியல் பின்னணிகளும் இக்கதையில் அமைந்துகாணப்படுதல் இக்கூத்தின் சிறப்பாகும். இச்சிந்துநடைக் கூத்தின்மீது மிக்கவிருப்பமும்,சிறுவயதுமுதலாகக் காத்தவராயன் நாடகத்தைப் பார்த்துப் பார்த்து இரசித்துவந்தவருமா ன,யாழ்ப்பாணப்; பல்கலைக்கழகஓய்வுநிலைப் பேரா சிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள்,; சிந்துநடைக் கூத்துப்பற்றிவருமாறுகுறிப்பிடுவர்:

தமிழ் நாட்டுஅரசியல் சூழலிலே பல்வேறுபிரச்சினை கள்,குழப்பங்கள் ஏற்பட்டகாலகட்டத்திலேதான் காத் தவராயன் கதை (கூத்து) உருவாகியிருக்கவேண்டும் எனஊகிக்கலாம். அக்காலத்தில் ஆட்சியைக் (சிறுநிலப் பரப்பை) கைப்பற்றிமேலாதிக்கம் செலுத்தியஒருஆளு மையின் வரலாற்றை,அந்தஆளுமைஎதிர்நோக்கிய சூழல்களை இக்கூத்தினூடு கண்டுகொள்ளமுடிகிறது. காத்தவராயன் கூத்தினைமக்கள் இரசித்துக்கொண்டே இருக்கின்றனர். துள்ளல்நடை,துள்ளல் இசை,உடுக்கு ஓசை,ஒப்பனைமுதலானவைமக்களைஈர்த்துள்ளன. இன்றும் காத்தவராயன் கூத்துக்குப் பெரும் செல் வாக்கு உண்டு( 8)

இக்கலைவடிவம் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் மத்தியில் குறிப்பாக ஜேர்மனி,பிரான் சு,ரொறன்ரோஆகிய இடங்களிலும் பேணப்பட்டுவரு தல் குறிப்பிடத்;தக்கது. புலம்பெயர்ந்துவாழும் தமிழர் மத்தியிலே இளையதலைமுறையினரால் கூத்துக்க லைமுன்னெடுக்கப்பட்டுவருதல் நல்லதோர்எதிர்கா லத்தைக் குறிக்கின்றது.ஈழ விடுதலைப் போராட்டத் தின்போது, 1990 - 2000 க்கும் இடைப்பட்டகாலத்தில் யாழ்ப்பாணத்தில்,சமகாலஅரசியல் - சமூகம் தழுவிய சூழல்களைக் கதைகளாகஎழுதி; அரசியல் பரப்புரை செய்வதற்கும் கூத்துவடிவம் பெரிதும் பயன்படுத்தப் பட்டதுஎன்பதும் குறிப்பிடத்தக்கது.

## இசை நாடகங்கள்:

ஈழத்துக் கூத்துமரபில் இசைநாடகங்களும் இடம்பெ றுகின்றன. விலாசம் போன்றே இசைநாடகங்களும் கர்நாடக இசையின் செல்வாக்குக் கொண்டதாகும். தமிழகத்தில் 19ஆம் நூற்றாண்டில் இசைநாடகங்கள் பெரிதும் வரவேற்புப் பெற்றிருந்தன. தமிழ் நாட்டில் நிதிபடைத்தோர் தொழில் முறையிலான இசைநாடகக் குழுக்களைஅமைத்து இசைநாடகங்களைமேடைஏற் றிவந்தனர். இந்நாடகக் குழுக்கள் 'இசைநாடகசபா' எனஅழைக்கப்பட்டன. பலர் தொழில் முறையில் இசைநாடகங்களைஎழுதியுள்ளனர். சங்கரதாஸ் சுவாமிகள் 40 இசைநாடகங்கள் எழுதியுள்ளார். என் றதகவலும் கிடைக்கிறது. அக்காலத்திலேதமிழகத்திற் செயற்பட்டுவந்த இசைநாடகசபாக்களிற் சுகுணவி லாசசபா, சூரியகான சபா,பரிபாலனசண்முகானந்த சபா,பாலமனோகரசபா,மீனலோஜினிபாலசற்குண நாடகசபாமுதலானவற்றைக் குறிப்பிடலாம். தொழில்



நோக்குடன் இந்நாடகசபாக்கள் இயங்கியதால் அவை வெற்றிகரமாகச் செயற்பட்டனஎனஅறியப்படுகிறது.

விலாசக் கூத்துஎவ்வாறுதமிழகத்திலிருந்துஈழத்திற் குஅறிமுகமானதோ,அதேபோன்று இசைநாடகமரபும் தமிழகத்திலிருந்தேஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டது எனலாம். தமிழகத்து இசைநாடகசபாக்கள் யாழ்ப்பா ணத்திற்குவருகைதந்து இசைநாடகங்களைநடத்திவந் துள்ளன. நாடகசபாக்கள் தமிழகக் கலைஞர்களையும் ஈழத்துக் கூத்துக் கலைஞர்களையும் இணைத்து,யாழ்ப் பாணத்திலும் தமதுநாடகசபாக்களைஅமைத்துப்,பல் வேறுபகுதிகளில் இசைநாடகங்களைத் தொழில் அடிப் படையில் மேடையேற்றலாயினர். அதனால் ஈழத் தமிழ்த் தேசியக் கலையுர்னு கூத்துக்கலையின் செல் வாக்குஅக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சற்றுக் குறைவ டைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

இசைநாடகங்கள் இடம்பெற்றமேடைகள் 'ம டுவம்' எனவழங்கப்பட்டன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தநாடகஆர்வம் மிக்கதனவந்தர் சிலரும் இசை நாடகசபாக்களைஅமைத்து இசைநாடகங்களை



மேடையேற்றியுள்ளனர். அவர்களிற் கொட்டடிக் கறுத்தார்,புத்துவாட்டிசின்னத்தம்பிஎன்போர் மடுவங்களைஅமைத்து இசைநாடகங்களைத் தயாரித்துமேடையேற்றிப் பணம் சம்பாதித்துள்ளனர். இவர்கள்கொழும்பிலும் இசைநாடகங்களைமேடையேற்றியுள்ளனர். அதேகாலகட்டத்திற்; மட்டக்களப்பிலும் 'சுகிர்தவிலாசசபா' அமைக்கப்பட்டு இசைநாடகமேடையேற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையிற் புகழ்பெற்ற இசைநாடகக் கலைஞர்களாகஉடுவில் ஏரம்புஅண்ணாவியார்,புத்துவாட்டி இரத்தினம்,பபூன் செல்லையா,கிருஷ்ணாழ்வார்,நடிகமணி வி. வி. வைரமுத்துமுதலியோர் இடம்பெறுகின்றனர். இவர்களில் நடிகமணிவைரமுத்துஅவர்கள் இலங்கையில் இசைநாடகவரலாற்றிற் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்படவேண்டியவராவார். அவர்,அரிச்சந்திரமயானகாண்டம்இ பக்தநந்தனார்,சத்தியவான் சாவித்திரி,கோவலன் கண்ணகி,ஞானசவுந்தரி,பூதத்தம்பி,சாரங்கதாரா,திருநீலகண்டர்முதலானபல இசைநாடங்களைமேடையேற்றியவர். நடிகமணிவைரமுத்து இசைநாடகங்களை இலங்கை,தமிழ்நாடு,ஐரோப்பியநாடுகள் எனப் பலநாடுகளிலும் மேடையேற்றி, இசைநாடகங்களின் மகிமையைஉலகறியச் செய்தவர் எனதமிழ்மணி வி. என். மதிஅழகன் குறிப்பிடுவர் (9).

யாழ்ப்பாணம்,மன்னார்,முல்லைத்தீவு,மலையகம் ஆகியபிரதேசங்களில் வழக்கிலிருந்துவந்துள்ள கூத்து மரபுகளையும், கூத்து இலக்கியங்களையும் சேகரித்துப் பேணும் முயற்சிகளும் கூத்துக் கலைவடிவங்கள், கூத்துஆகியஆகிய இலக்கியம்,சமூகம் ஆகியவிடயங்கள் சார்ந்தஆய்வுகள் உடனடியாகமேற்கொள்ளப்படவேண்டும். காலஓட்டத்தில் பழையனகழிதலும் புதியனபுகுதலும் இயல்பானதே. பழையனவாகிய கூத்துக் கலைகள் ஒதுக்கப்பட்டுநவீனநாடகம்,திரைப்படம் என்பனகலையுலகைஆக்கிரமித்துள்ளமைகாலத்தின் நியதியாகிறது. இந்நிலையில் இவற்றைப் பேணிப்பாதுகாக்கவேண்டியபொறுப்புமக்களுக்கும் பல்கலைக்கழககலைப்பீடங்களுக்கும் உரியதாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1989 இல் ஆரம்பிக்கப்பட்ட'நாட்டார் வழக்கில் கழகம்' பலமுயற்சிகளில் செயற்பட்டுவருகின்றது. இக்கலைகளைப் பேணுவதோடுபல்கலைக்கழகஆய்வுத்துறையாகவும் இதனைஅமைத்தால் ஈழத்துக் கூத்துமரபுபேணப்படும் நிலைமைஏற்படும் என்பதுஎனதுநம்பிக்கை.

## கூத்துக்கலையின் எழுச்சிக்காலம்:

கூத்துக் கலைக்குப் பல்கலைக்கழகநிலையில் மகிமைசேர்த்தோர் வரிசையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன்,பேராசிரியர் சி. மௌனகுரு,பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பிஆகியோர் குறிப்பிடப்படுவர். 1960களில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மட்டக்களப்புவடமோடியில் அமைந்த கூத்துக்களைத் தேர்ந்தெடுத்து,அவற்றைமெருகூட்டி,நவீனஅரங்குகளில் மேடையேற்றத்தக்கவகையில் அரங்கக் கலையாகச் செப்பனிட்டார். முழு இரவும் ஆடப்பட்டுவந்தஒருநாட்டுக்கூத்தை ஒன்றரைஅல்லது இரண்டுமணித்தியாலஅளவுடையதாகச் சுருக்கினார். கிராமங்களில் வட்டக்களரியில் ஆடப்பட்டுவந்த கூத்துமரபை,,நவீனஉள்ளரங்கங்களுக்குஅமைவாகஒழுங்குபடுத்தினார். கூத்துஆடுவோருக்குக் கலையுணர்ச்சி,பாவம்,நடிப்பு,குரல்வளம் என்பனஒழுங்குபெறமிகுந்தபயிற்சியும் அளிக்கப்பட்டது. பின்னணியிசைவழங்கும் பிற்பாட்டுக்காரருக்குச் செப்பமுறப்பாடும் இசைப்பயிற்சியும் அளிக்கப்பட்டது. ஆடல்,பாடல்,நடிப்பு,ஒப்பனை,நவீனஒளி,ஒலிஅமைப்புஎன்பனவற்றிலும் கவனம் செலுத்தப்;பட்டது. இத்தகையபரிசோதனைமுயற்சிகளுக்குஉட்படுத்தப்பட்டு,கர்ணன் போர் (1962),நொண்டிநாடகம் (1963), இராவணேசன் (1964),வாலிவதை (1967) என்பனபேராசிணீரியரின் தயாரிப்பில் பலதடவைகளில் மேடையேற்றம் பெற்றன. இவை பேரதனை,கண்டி,மட்டக்களப்பு. திருகோணமலை,மன்னார்,யாழப்பாணம் எனப் பலவிடங்களிலும்; மேடைஏற்றம்; பெற்று,பல்லோரதுபாராட்டுதல்களையும் அக்கூத்துகள் பெற்றுக்கொண்டன.

பேராசிரியர் வித்தியானந்தனுக்குப் பின்னர் அவரதுமாணவர்களாகியகலாநிதிபாலசுந்தரம் இளையதம்பி,கலாநிதிசி. மௌனகுருஆகிய இருவரும் கூத்துக்கலையைப் பல்கலைக்கழகங்களில் வளர்க்கும் முயற்சியைமேற்கொண்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாட்டார் வழக்கியல் கழகத்தின் ஊடாககலாநிதி. பாலசுந்தரம் பல்கலைக்கழகமாணவர்களைக் கொண்டு; காத்தவராயன் நாடகம்,சத்தியவான் சாவித்திரிநாடகம் என்பவற்றைநவீனஅரங்கிற்கேற்பத் தயாரித்து (1989-1990) மேடைஏற்றி,, இளைய சமுதாயத்தினரிடையே கூத்துக்கலைக்குநல்லவரவேற்

பைஏற்படுத்தினார். இவற்றில் காத்தவராயன் நாடகம் யாழ்ப்பாணம்,திருகோணமலை. மன்னார்,முல்லைத் தீவு,கொழும்புஆகிய இடங்களில் 49 தடவைகள் மேடையேற்றப்பட்டதோடு. இலங்கைரூபவாகினி தொலைக்காட்சிகலையகத்தில்ஒளிப்பதிவுசெய்யப் பட்டுத்;,தொடர்ச்சியாகப் பலஆண்டுகள் ரூபவாகி னிதொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுவந்தமையும் சாதனையாகும்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியர்சி. மௌனகுரு,முனைவர் சி. ஜெயசங்கர் ஆகியோர்;கூத் துக்கலையில் பல்வேறுபரீட்சாத்தமுறைகளைக் கையாண்டுபல்வேறு கூத்துக்களைத் தயாரித்துமே டையேற்றினர். அத்தோதோடு, கூத்துக்கலைக்குப் புதியபரிமாணங்களைப் பெற்றுக்கொடுத்தவர் என்ற பெருமைக்கும் உரியவர்களாவர். இவ்விருவரதுமாண வர்கள் தொடர்ந்தும் கூத்துக் கலைக்குஉயிரூட்டிவரு கின்றனர் என்பதையும் பதிவுசெய்தல் பொருத்தமாகும்.

ஈழத்துக் கூத்துக் கலைபுலம்பெயர்ந்து ஜேர்ம னி,பிரான்சு,ரொறன்ரோஆகிய இடங்களிலும் பேணப்பட்டுவருதல் குறிப்பிடத்;தக்கது. புலம்பெயர்ந் துவாழும் தமிழர் மத்தியிலே இளையதலைமுறையின ரால் கூத்துக்கலைமுன்னெடுக்கப்பட்டுவருதல் அதன் நல்லதோர் எதிர்காலத்தைக் குறிக்கின்றது.ஈழவிடு தலைப் போராட்டத்தின்போது, 1990 - 2000 க்கும் இடைப்பட்டகாலத்தில் யாழ்ப்பாணத்தில்,சமகாலஅ ரசியல் - சமூகம் தழுவிய சூழல்களைக் கதைகளாகஎ டுதி; அரசியல் பரப்புரைசெய்வதற்கும் கூத்துவடிவம் பெரிதும் பயன்படுத்தப்பட்டதுஎன்பதும் குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணம்,மன்னார்,முல்லைத்தீவு,மலையகம் ஆகியபிரதேசங்களில் வழக்கிலிருந்துவந்துள்ள கூத்துமரபுகளையும், கூத்து இலக்கியங்களையும் சேகரித்துப் பேணும் முயற்சிகளும் கூத்துக் கலை, கூத்து இலக்கியம்,அவற்றின் சமூக இயங்குநிலை ஆகியபொருண்மைசார்ந்தஆய்வுகள் உடனடியா கமேற்கொள்ளப்படவேண்டும். காலவோட்டத்தில் பழையனகழிதலும் புதியனபுகுதலும் இயல்பானதே. பழையனவாகிய கூத்துக் கலைஒதுக்கப்பட்டுநவீன நாடகம்,திரைப்படம் என்பனகலையுலகைஆக்கிரமித் துள்ளமைகாலத்தின் நியதியாகிறது. இந்நிலையில் இவற்றைப் பேணிப்பாதுகாக்கவேண்டியபொறுப்பு மக்களுக்கும் பல்கலைக்கழககலைப்பீடங்களுக்கும் உரியதாகும். யாழ்ப்பாணணப் பல்கலைக்கழகத்தில் 1989இல் ஆரம்பிக்கப்பட்டநாட்டார் வழக்கில் கழகம் ʾபலமுயற்சிகளிற் செயற்பட்டுவருகின்றது. இலங் கைத் தாமிழரின் தேசியக் கலைவடிவமாகிய கூத்துக்க லையைப் பேணும் முயற்சிகளைமேற்கொள்வதோடு, இதற்கெனப் பல்கலைக்கழககற்கைத்துறையம் அமைக்கப்பட்டால் ஈழத்துக் கூத்துமரபுபேணப்படும் நிலைமைஉருவாதகும் எனஎதிர்பார்ப்போபம்.

**துணை நூல்கள்:**

1. சு.இராசரத்தினம்,சு.,தெருக்கூத்து,காவ்யாபதிப்ப கம்,கிருஷ்ணகிரி,சென்னை.

2.கந்தையா,வி. சீ.,மட்டக்களப்புத் தமிழகம்,ஈழகேச ரிபொன்னையாநினைவு

வெளியீட்டு மன்றம்,குரும்பசிட்டி,யாழ்ப் பாணம்,1964.

3.சண்முகம்,டி. கே.,நாடகக் கலை,சென்னை, 1967.

4. இராசமாணிக்கனார்,மா.,பல்லவர் வரலாறு,சேக் கிழார் அச்சகம். சென்னை, 1944.

5. மீனாட்சிசுந்தரனார்,தெ.பொ.,பத்தாம் நூற்றாண் டுத் தமிழ் நாடகங்கள்இபுதுவைக்

கல்விக்கழகத்தின் வெள்ளிவிழாமலர்க்கட்டு ரை,புதுச்சேரி,1951.

6.இளையதம்பி,பாலசுந்தரம்.,தமிழர் நாட்டுற இயல் களஞ்சியம்,மணிமேகலைப் பிரசுரம்,சென்னை, 2019.

7.இளையதம்பி,பாலசுந்தரம்;.,(பதிப்பாசியர்), காத் தவராயன் நாடகம்;,யாழ்ப்பாண

மாவட்டம்,கலாசாரப்பேரவைவெளியீடு, யாழ்ப் பாணம்.1986.

8.சண்முகநாதன்,கஜேந்திரன.;,காத்தவராயன் நாட கம்,யாழ்ப்பாணம்,2017

9. வி. என். மதியழகன்,நந்தாப் புகழ்பெற்றநாயகன் நடிகமணி வி. வி. வைரமுத்துஇ

காந்தளகம், நென்னை. 2014.





# இலங்கையில் சித்த மருத்துவம்

பகுதி: 05



சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்
BSMS, Dip. in Counseling PG. Dip. in Food Nutrition
மானிப்பாய்.

## பாரம்பரிய தமிழ் மருத்துவர்கள்

பரராசசேகர மன்னனின் மகனான பரநிருபசிங்கன் என்பவர் சிறந்த மருத்துவராக திகழ்ந்தார். இது யாழ்ப்பாண அரசபரம்பரையினருக்கு சித்தமருத்துவத்தில் இருந்த ஈடுபாட்டைக் காட்டுவதுடன் சித்தமருத்துவம் சிங்களமக்களுக்கும் அரசகுடும்பத்துக்கும் பயன்பட்டிருப்பதற்குசான்றுகள் உள்ளன.

தற்போதுகூட சிங்கள பாரம்பரிய மருத்துவர்களிடம் தமிழ் ஏட்டுச் சுவடிகள் பல இருப்பதாக கூறப்படுவதும் கவனத்திற்கொள்ளத்தக்கது. இதற்குச் சான்றே 1928 ஆம் ஆண்டுகம்பகாவில் ஆயுர்வேதசக்கரவர்த்திபண்டிதர் ஜி.பி .விக்கிரமாராய்ச்சிஅவர்கள் பரம்பரைமருத்துவர்கள் மருத்துவத்தை



கற்பதற்காக கம்பகாசித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை உருவாக்கியதுடன், மருந்து உற்பத்தி நிலையங்களையும், வைத்தியசாலைகளையும் உருவாக்கினார். 1982 ஆம் ஆண்டு கம்பகா விக்கிரமாராய்ச்சி சித்த ஆயுர் வேத வைத்தியக்கல்லூரி ஆனது கம்பகா ஆயுர்வேதவைத்திய நிறுவனமாக சுதேசவைத்திய அமைச்சின் கீழ் பல்கலைகழக தரமுள்ள நிறுவனமாக தரமுயர்த்தப்பட்டது. எனினும் கம்பகாசித்த ஆயுர்வேத மருந்துற்பத்தி நிறுவனம் இன்றும் அதே பெயருடன் இயங்குகின்றது.

பிற்காலத்தில் தமிழ் மருத்துவமானது வடக்கு கிழக்கு பகுதிகளிலேயே கையாளப்பட்டுவந்துள்ளது. இலங்கையில் சித்தமருத்துவத்தின் தாயகமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது.

வடக்கு கிழக்கில் சித்தமருத்துவம் மட்டுப் படுத்தப்பட்ட போதிலும் இப்பிரதேசங்களில் அதன் சேவையை நன்கு வழங்கி வந்தது. அதன் பலபிரிவுகளும் தனித்தனியாக விருத்தியடைந்து அவ்வவ் துறைகளில்

நிபுணத்துவம் பெற்ற பல வைத்தியர்கள் வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்றினார்கள்.

ஆனால் பிறநாட்டு அன்னியர் வருகையினால் எமது அரும் பெரும் வைத்தியச் செல்வம் கவனிப்பாரற்று போனதுடன் இலைமறை காயாக இவ் வைத்தியத்துறையில் சிறந்து விளங்கியவர்களும் தாம் அறிந்தவற்றை தக்கவர்களுக்கு கற்றுக்கொடுக்காது விட்டமையால் பல மருத்துவ உண்மைகள் ஒருவருக்கும் தெரியாமல், பயன்படாமல் மறைந்து போய்விட்டன.

இருப்பினும் பலபரம் பரைகள் மருத்துவத்தை சிறப்புடன் செய்து வந்தனர். உதாரணமாக,'எல்லாரும் கைவிட்டால் சில்லாலை வைத்தியம்' என ஒரு சொல்லடை உண்டு. பத்துத் தலைமுறைகளிற்கு மேலாக மக்களின் நோய்களை குணமளித்து மருத்துவம் செய்த வைத்தியர்கள் வாழ்ந்த ஊர். எடுத்துக்காட்டாக இன்னா சித்தம்பியவர்களையும் அத்தனாசியார் அவர்களையும் குறிப்பிடலாம். இவர்களைத் தவிர பல சிறிய வைத்தியர்களும் இலைமறை காய்களாக வாழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் இருவரினதும் பெயர்களை, யாழ்குடா நாடே அறியும். இவர்கள் பலரிடத்தில் பழைய ஓலைச் சுவடிகள் இருந்தன. ஆனால் கடந்தகால கொடூரப்போர் இவர்களின் பரம்பரையையே புலம்பெயரச் செய்துவிட்டது. இது மிகவும் கவலைக்குரிய விடயமே. இவர்கள் மீண்டும் ஊரிற்கு வரவேண்டும் என்பது,பலரதும் வேணவா, இவர்களின் வைத்தியசித்திக்கு ஆசீர் அளித்த கதிரச் செல்வித்தாயை மருந்து மாதா என்று போற்றினார்கள்.

சுதுமலை, நாயன்மார்க்கட்டு,கள்வியங்காடு,பரிகாரி கண்டல் போன்ற பல்வேறு இடங்களில் பெயர் பெற்ற மருத்துவர்கள் இருந்துள்ளனர்.



## பிற நாட்டு மருத்துவ வருகை...

1820 இல் அமெரிக்கன் மிஸன் வருகையுடன் தொடங்கியது. 20.04.1847 இல் மருத்துவர் கிறீன் இன் இலங்கை வருகையுடன் ,அலோபதி மருத்துவத்தை மக்களிடம் நோக்குடன் ஆங்கில மருத்துவம் சுதேச வைத்தியர்களுக்கு கற்பிக்கப்பட்டது. படிப்படியாக தமிழர் மருத்துவத்தினை அதன் மகத்துவத்தினை கைவிட்டு ஆங்கில வைத்தியம் பால் தமிழ் மருத்துவர்களும் மக்களும் சென்றனர். இதனால் தமிழ் மருத்துவத்தில் உள்ள பல அரியவிடயங்கள் மறைந்தும் அழிந்தும் போகத்தொடங்கின.

இருந்தும் சில பரம்பரை மருத்துவர்களால் சித்த மருத்துவமானது பொது மருத்துவம் சிறப்பு மருத்துவம் என இரு பிரிவுகளாக வளர்ச்சியடைந்திருந்தது. இதில் பொதுமருத்துவமானது சாதாரணமாக ஏற்படக்கூடிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் துறையாக காணப்படுகின்றது.

சிறப்பு மருத்துவமானது சில விசேட காரணங்களின் அடிப்படையில் பல்வேறு துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சொக்கநாதர் தன் வந்திரியம் என்னும் யாழ்ப்பாண சித்தமருத்துவ நூலில் சாதாரண சிகிச்சை முறைகளை மானிட சிகிச்சை என்றும், பற்ப செந்தூர சிகிச்சை முறை தேவசிகிச்சை என்றும், அறுத்தல்,சுடுதல் முதலிய அறுவை சிகிச்சை முறைகளை அரக்கர் வைத்தியம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்துச்சித்தமருத்துவத்தில் பின்வரும் சிறப்புமருத்துவதுறைகள் வழக்கில் உள்ளன.

**01. குழந்தைப்பிணி மருத்துவம்**
**02. மகளீர் மருத்துவம்**
**03. கெர்ப்பரோக மருத்துவம்**
**04. வாத மருத்துவம்**
**05. விசக்கடி மருத்துவம்**
**06. மனநோய் மருத்துவம்**
**07. கட்டு மருத்துவம்**
**08. முறிவுநெரிவு மருத்துவம்**
**09. கண் மருத்துவம்**

இவற்றை விட சன்னி, தோல்வியாதி, செங்கண்மாரி போன்ற தனியொரு வியாதிக்கு மட்டும் சிகிச்சையளித்த வைத்தியர்களும் உண்டு.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஈழத்துச் சித்தமருத்துவ வளர்ச்சியில் பரம்பரை மருத்துவர்களுக்கு முக்கிய பங்கு இருந்து வந்தது. பின்னர் படிப்படியா பரம்பரை மருத்துவர்கள் குறைந்து போயினர்.



இருப்பினும் இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அதாவது கடந்த முப்பது வருட உள்நாட்டு யுத்தகாலப் பகுதியில் மக்களின் நோய் தீர்க்கும் பணியில் சித்த மருத்துவர்களது பங்கு முக்கியமானது. இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் சித்தமருத்து வவளர்ச்சியின் பின்னடைவுக்கான சிலகாரணங்கள்:

வைத்தியக் கல்லூரிகளில் கற்றவர்களுக்கு சித்தர் தத்துவங்களை விளங்கிக் கொள்வதற்குரிய பக்குவம் போதாது என்று பரம்பரை மருத்துவர்கள் கருதி அவர்களுக்கு தமது வைத்திய நுட்பங்களை வழங்காதது.

1. தமக்குத் தெரிந்த வைத்திய இரகசியங்களை பிறருக்குச் சொன்னால் தமது வைத்தியம் பலிக்காது,குருவின் சாபத்துக்கு ஆளாகிவிடுவோம் என்ற அச்சம்.

2. தமக்கு தெரிந்தவற்றை சொல்லிக் கொடுத்தால் அதன்மூலம் மற்ற வைத்தியர்கள் பயன் பெறும் வாய்ப்பு அதிகரிக்கும் அதனால் தமது வருமானம் பாதிக்கப்படும் என்ற தொழில் ரீதியிலான அச்சம்.

3. தமது மருத்துவ அறிவினை தமது பரம்பரையினருக்கு மட்டுமே வழங்கிவந்தமை, அவ்வாறு வழங்கி வரும் போது ஏற்பட்ட குறைபாடுகள்.

4. முப்பது வருட உள்நாட்டு யுத்தம், சித்தமருத்துவர்கள் ஆங்கிலமருந்துகளை பயன் படுத்துகின்றமை.

5. தமிழ் மருத்துவ நூல்களில் உள்ள இலக்கியங்களை விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில் சித்தமருத்துவ கல்விப் பாடத்திட்டத்தில் இருந்து உயர்தமிழ் கற்கை இல்லாமை.

இருந்தும் ........ சிவபெருமானை குருவாகக் கொண்டு அகத்தியன் தந்த தமிழர்களின் சித்தமருத்துவம் வளர்ச்சி பெற்று மீண்டும் மக்களின் ஆரோக்கியத்தில் பாரிய பங்காற்றும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

**தொடரும்....**



# இறையும் இசையும்

## போர்க்கள ஆடல் பற்றி குறிப்பிடும் இலக்கியங்கள்

### அறிமுகம்

**போ**ர்க்கள ஆடல்கள் பற்றி சங்ககாலம் தொடக்கம் சோழர் காலம் வரையிலான இலக்கியங்களில் புறத்திணை சார்ந்து பேசும் இலக்கியங்கள் கூறுகின்றன. அந்த வகையில் சங்ககால இலக்கியங்களான தொல்காப்பியம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படைஃமலைபடுகடாம் போன்ற ஆற்றுப்படை நூல்களும் பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி என்பனவும் கூறுகின்றன. சங்கமருவிய காலத்தில் களவழி நாற்பதும், பல்லவர் காலத்தில் முத்தொள்ளாயிரம், பாண்டிக்கோவை போன்றனவும், சோழர் காலத்தில் கலிங்கத்துப்பரணி, தக்கையாகப்பரணி போன்றனவும் அவ்வவ் காலத்து போர் மரபையும், அப்போர்களில் இடம் பெற்ற ஆடல் மரபினையும் விளக்கி நிற்கின்றன. அந்த வகையில் மேற்கூறிய இலக்கியங்களின் வாயிலாக போர்க்கள ஆடல்கள் வெளிப்படும் விதத்தை நோக்குவோம்.

போர்க்கள ஆடல்கள் பற்றிக் கூறும் சங்க இலக்கியங்கள்

சிறுபாணாற்றுப்படை

பாணர்களில் சீறியாழை கையிலேந்தி இசை மீட்டும் வகுப்பினரை சிறுபாணர் என்று அழைப்பர். சிறுபாணருள் ஒருவன் அரசனிடமிருந்து தான் பெற்ற செல்வங்களை தன் குலத்தவன் பெறும்படி வழிப்படுத்துவதாக அமைகின்றது. இச்சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவனாக விளங்கும் மன்னன் வள்ளல் பெருமானாகிய ஓய்மா நாட்டு நல்லியக் கோடன் என்பவனாவான். இவ்வள்ளல் திண்டிவனத்தைச் சார்ந்த பண்டுஓய்மா நாடென வழங்கப்பட்ட நாட்டில் அரசாட்சி புரிந்தவன். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் அறிந்த புலவர்களைப் போற்றியவன். போரில் பிறமுதுகு காட்டாத வீரன். இம்மன்னனிடம் பரிசில் பெற்று மீண்டு வந்த சிறுபாணன் வறுமையில் வாடுகின்ற தன்னுடைய சக சிறுபாணனை மன்னனிடத்திலே வழிப்படுத்தி விடுவதாக அமைந்த பாடல்களே இந்நூலில் காணப்படுகிறது. இம்மன்னர் பெருமகனாரின் சிறப்புக்களை சிறுபாணாற்றுப்படையாக தந்தவர் இடைக்கழி நாட்டு நல்லூர் எனும் இடத்தைச் சேர்ந்த நத்தத்தனார் ஆவார்.

இவ்வாற்றுப்படையின் கதைக்கருவானது நல்லிக் கோடனிடம் பரிசு பெற்ற பாணன் ஒருவன் பாலை நிலத்தின் வழியே வந்துகொண்டிருந்தான். வரும் வழியே மற்றொரு பாணனைப் பார்த்தான். அவன் பரிசு தரும் வள்ளலைத் தேடி வழி நடந்து வந்தான். அவனுடன் அவன் மனைவியரும் மக்களும் வந்தனர். அவர்கள் வழிநடை வருத்தம் தீர ஒரு மரநிழலிலே தங்கி இருந்தனர். பரிசு பெற்றுவந்த பாணன் பரிசு தேடி வந்த பாணனை நெருங்கினான். அவனும் தன்னைப் போல வறுமையின்றி வாழ வேண்டும் என்று எண்ணினான். அவனுக்கு நல்லியக் கோடனுடைய நற்பண்புகளை எல்லாம் நவின்றான். இக்கருவினை மையமாகக் கொண்டே இவ்வாற்றுப்படை நூல்கள் அமைக்கப்பட்டுள்ளது.

சிறிய வகை யாழைக் கொண்ட பாணனை ஆற்றுப்படுத்தியமையால் இந்நூல் சிறுபாணாற்றுப்படை என பெயர் பெற்றது.11தமிழ் நாட்டில் வள்ளல்களும், கொடையாளிகளும் வளர்ந்திருந்தாலும் பல குடும்பங்களின் வறுமைச் செய்தியினையும், மக்களால் பின்பற்றப்பட்ட உணவு


"இளங்கலைமணி" சுரேந்திரா– நரேந்திரா
போதனாசிரியர் (வாய்ப்பாட்டு)
நடன, நாடகத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்:– msnarendra1288@gmail.com
Contact No: 0094764624990 / 0094754340220




வகைகளையும், வழிபாடுகளில் சிவ வழிபாடு முக்கியப்ப டுத்தப்பட்டிருந்ததனையும்,12 அந்தணர், அரசர், வணிகர் போன்ற நால்வகைப் பாகுபாடு இருந்ததையும், தமிழ் நாட்டிலே பல சிறந்த தொழில்களும், கலைகளும் வளர்ந்திருந்தமை பற்றியும் இந்நூல் கூறுகிறது. மேலும் இந்நூலின் ஊடாக மன்னனின் போர்க்களத்தில் இடம் பெற்ற ஆடல்கள் பற்றியும் அறிய முடிகிறது. அவை பற்றி நோக்குவோம்.

சிறுபாணாற்றுப்படையில் போர்க்கள ஆடலிலே முதன்மையான ஒன்றாக விளங்கும் களவேள்வி பற்றிய குறிப்புக்களை காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் நல்லியக்கோடனுடைய வெற்றிச் சிறப்பினை பாடுவதாக அமைந்துள்ள பாடலில் களவேள்வி செய்த விதம் பின்வருமாறு கூறப்படுகின்றது.

எரிமறந் தன்னநாவின் இலங்கு எயிற்று
கருமறிக் காதின் அவை அடிப் பேய்மகள்
நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல
பிணன் உசைத்துச் சிவந்த போர் உகிர் பணைத்தாள்
அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப
சேய்த்தும் அன்றி சிறிது நணியதுவே13
( சி.பா பாடல்வரி 196-202 )

அதாவது நீயிர் ஆமுரை செய்த பின்னர் தீப்பிழம்பு சாய்ந்தாற் போல நாக்கு விளங்கும் பற்கள், வெள்ளாட்டுக் குட்டிகளை அணிகளனாக அணிந்துள்ள செவி,பிளவுபட்ட அடி ஆகியவற்றை உடைய பெண் பேய் சிரித்தது போன்று தோன்றும் மதயானை, போர்க்களத்திலே தான் கொன்ற பிணங்களை இடருதலால் குருதி தோய்ந்து பெரிய நகங்களையும் கால்களையும் தலைமை சான்றனவும் ஆகிய யானையின் மதம் அருவி போல சொரிதலால் புழுதி அடங்கியதும், விழா நிகழ்வதும் ஆகிய தெருவினை உடையது அவ்வள்ளலின் பழைய ஊர் என்று இங்கு பேய்கள் பிணங்களை உண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியில் ஆடியதாகக் கூறப்படுகிறது.

## திருமுருகாற்றுப்படை

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு நூல்களுக்குள் அடங்கியுள்ள ஆற்றுப்படை நூல்களில் முதன்மையானது திருமுருகாற்றுப்படையாகும். ஆற்றுப்படை என்பது யாவரும் அறிந்ததே. கந்தளி என்பது ஒரு பற்றுமற்று அருவாகித்தானே நிற்கும் சத்துவம் கடந்த பொருளாகும்.14 இயல்புற விளங்கிக் கொள்வோமானால் வீடுபேற்றை பெற விளைந்த ஒருவன் முருகக் கடவுளின் திருவருள் செல்வத்தைப் பெற்றான். அதனைப்பெற இன்னொருவனை அம் முருகனிடத்தே சென்று பெறுக என்று வழிப்படுத்தியதாக பாடிய செய்யுள்களே திருமுருகாற்றுப்படை செய்யுட்களாகும். ஏனைய ஆற்றப்படை நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற உறுதிப் பொருளினைப் பெறுவதற்கு வழிப்படுத்த இத்திருமுருகாற்றுப்படை பெறுவதற்கு அரிய வீடு பேறினை அடைவதற்கு வழிகாட்டுகின்றது. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவின்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகிய ஆறுபடை வீடுகளிலும் வசிக்கின்ற குமரக்கடவுளை, அவருடைய சிறப்புக்களை கூறிப் பாடுவதாக அமைந்தள்ளது. கடைச்சங்கப் புலவர்களுக்கு தலைவராக விளங்கிய நக்கீரதேவரால் பாடப்பட்ட இப்படையானது முந்நூற்றுபதினேழு வரிகளை உடையது.15 நச்சினார்க்கினியார், பரிமேலழகர் போன்ற உயரிய உரையாசிரியர்கள் இதற்கு உரை செய்துள்ளனர்.

அந்த வகையில் புலவன் ஒருவன் முருகப்பெருமானின் அருளைப்பெற விரும்பிக் கொண்டிருக்கும் மற்றுமொரு புலவனை அதற்கான வழிமுறைகளைக் காட்டி வழிப்படுத்துவதாக கூறப்படிருக்கின்றது. இவ்விலக்கியத்தின் பெயரமைப்பில் எடுத்து நோக்கும் போது திருமுருகாற்றுப்படை என்று அழைக்கப்படுகின்றது. அதன்படி திரு என்பது அழகிய என்றும், முருகு என்பது முருகனிடத்து என்றும், ஆற்றுப்படை என்பது வழிப்படுத்துவது என்றும் பொருள்படுகிறது.16



ஏனைய ஆற்றுப்படை நூல்கள் மன்னன் மற்றும் மக்களைச் சார்ந்திருக்க திருமுருகாற்றுப்படை மாத்திரம் இறைவன் மேல் பாடப்பட்டதாக அமைந்துள்ளது.

சங்ககாலத்தில் தமிழ் நாட்டில் வழங்கப்பட்டு வந்த தெய்வங்கள் பற்றியும், அந்தணர் வகுப்பினரின் நிலை பற்றியும், வேதங்கள் ஓதப்பட்டதையும், வேள்விகள் மேற்கொள்ளப்பட்டதையும், வழிபாடுகள் அருவஉருவ முறைகளில் மேற்கொள்ளப்பட்டதையும், தெய்வங்களுக்கான வழிபாடுகள் மூலமாக சமூக ஒற்றுமை மேலோங்கிய விதம் பற்றியும் இத்திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.17 குறிப்பாக ஆறு முகம், பன்னிரெண்டு கைகளையும் கொண்ட முருகனுடைய உருவம் வைத்து வழிபாட்டியற்றியதாகவும் கூறப்படுகிறது.

பத்துப்பாட்டு நூற்பகுப்பினுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படும் இந்நூலினை புலவராற்றுப்படை என்றும் கூறுவர். பாடல்கள் அனைத்துமே ஆசிரியப் பாவினால் அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.18 சோழ மன்னனின் உதவியுடன் நம்பியாண்டார் நம்பியினால் தொகுக்கப்பட்டு பன்னிரெண்டு திருமுறைகளில் பதினொராம் திருமுறையில் வைத்து போற்றப்படுகின்ற பெருமைக்குரியது. தெய்வ வழிபாடுகளும், அவற்றில் பலியிடலும், திருவிழாக்கள் மேற்கொண்ட விதங்கள் பற்றிய குறிப்புக்கள், பல்வேறு

தெய்வ வழிபாடுகளை வழிபடுகின்ற மக்கள் தொகுதியினர், போர் சம்பவங்கள் மற்றும் போர்க்கள ஆடல் போன்ற பல்வேறு விடயங்களை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது. அந்த வகையில் இந்நூலில் போர்க்கள ஆடல் பற்றி கூறும் விதத்தை நோக்குவோம்.

போர்க்கள ஆடலில் ஒன்றாக குரவைக்கூத்து காணப்படுகின்றது. அந்த வகையில் முருகன் எழுந்தருளி இருக்கின்ற குன்றுகள் தோறும் இக்குரவைக்கூத்து நிகழ்த்தப்பட்டதை திருமுருகாற்றுப்படையில் குன்றுதோறாடல் எனும் பகுதியில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

பைங்கொடி, நறைக்காய் இடை இடுபு, வேலன்,
அம்பொதிப் புட்டில் விரை, குளவியோடு
வெண்கூ தாளம் கொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலை இய கானவர்
நீடு அமை விளைந்த தேக்கண் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து,
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர19
**( தி.மு.ஆ பாடல்வரி 190-197 )**



என்று கூறப்படுகின்றது. இங்கு குறவர்கள் இக்கூத்து ஆடிய விதம் பற்றி கூறப்படுகிறது.

அதாவது முருகன் பூஜை செய்யும் வேலன், பச்சிலைக் கொடியால் மணமுடைய சாதிக்காயை இடையிடையே சேர்த்து அதனுடன் தக்கோலக் காயையும் கலந்து, காட்டு மல்லிகையுடன் வெண்டாழிப்பூவையும் சேர்த்துக் கட்டி தலை மாலையை உடையவனாய் நிற்க, வாசனை பொருந்திய சந்தனத்தைப் பூசிய நிறமுடைய மார்பினை உடையவரும், கொடிய தொழிலைச் செய்பவருமான குறவர்கள், நீண்ட மூங்கில் குழாய்களில் ஊற்றி நீண்ட நாள் வைத்து முற்றி விளைந்த தேனாலான கள்ளின் தெளிவை மலையிடத்துள்ள சிற்றூரில் வாழும் தம் சுற்றத்தாருடன் உண்டு மகிழ்ந்து, தங்கள் குறிஞ்சி நிலத்திற்குரிய தொண்டகம் எனும் பெயருடைய சிறிய வாத்தியத்தை அடித்து அதனது தாளத்திற்கேற்ப குரவைக்கூத்து ஆடி, முருகக் கடவுள் அதனைக் கண்டு களிக்க எழுந்தருளுகின்றான் என்றவாறாக அமைந்துள்ளது.

குறும்பொறிக் கொண்ட நறுத்தன் சாயல்
மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்
முழவு உறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென் தோள் பல்பிணை தழீ, தலைத்தந்து
குன்று தொறு ஆடலும் நின்றதன் பண்பே20
**( தி.மு.ஆ பாடல்வரி 213-217 )**

என்ற இப்பாடலில் வருகின்ற தல்பிணை, தழீஇ மற்றும் தலைத்தந்து ஆகிய சொற்கள் முறையே தழுவி ஆடுவதையும், கை கொடுத்து ஆடுவதையும் குறிப்பிடுகின்றது. இது ஒருவரை ஒருவர் ஆட்ட முறைகளால் பிணைந்த தன்மையை வெளிப்படுத்துவதுடன் குரவைக்கூத்தானது குழு நடனம் என்பதையும் வெளிப்படுத்துகிறது. தலைதந்து என்பது மகளீருக்கு ஆண் மகன் முதலில் கொடுக்கும் கை என்று பொருள்படும். எனவே இங்கு குறவர் குடிமக்களுக்கு முருகன் முதற்கை தந்து இக்கூத்தை ஆடியதாகக் கூறப்படுகின்றது.

மேலும் போர்க்கள ஆடலில் மற்றுமொரு வகையான துணங்கைக் கூத்து பற்றியும் திருமுருகாற்றுப்படையில் கூறப்படுகின்றது. அதிலும் முக்கியமாக பேய்த்துணங்கை தொடர்பான செய்திகளைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது முருகப் பெருமான், சூரன் முதலிய அசுரர்களை அழித்து பிணம் நிறைந்த போர்க்களத்திலே பேய்கள் மகிழ்ச்சி பொங்க துணங்கைக் கூத்து ஆடியது பற்றி கூறப்பட்டிருக்கின்றது.

உலறிய கதுப்பின், பிறழ்பல் பேழ்வாய்
சுழல் விழிப் பசுங்கண், சூர்த்த நோக்கின்
கழல்கட் கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின், பிணர் போட்டு
உருகெழு செலவின், அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர் உகிர்க் கொடுவிரல்
கண் தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்று அடு விறற்களம் பாடி, தோள் பெயரா
நிணம்தின் வாயன் துணங்கை தூங்க21
**( தி.முஆ பாடல்வரி 46-55 )**

என்ற பாடல் வரிகள் பேய்கள், மகளீர் ஆடிய துணங்கைக் கூத்து பற்றி கூறப்படுகின்றது. அதாவது எண்ணெய் பசையின்றி காய்ந்த தலைமயிரையும், வரிசை ஒத்திராமல் மாறுபட்ட பற்களையும், பெரிய வாயினையும்,கோபத்தால் சுழலுகின்ற பசிய கண்ணையும், கொடிய பார்வையினையும், பிதுங்கி விழிவது போன்ற கண்களை உடைய கோட்டானோடு கொடிய பாம்பும் அணியாகத் தொங்கி அசைவதால் பெரிய முலைகளை மோதி வருகின்ற காதுகளையும், சொரசொரப்பான பெரிய வயிற்றையும், இருள் பொருந்திய வடிவையும், காண்போர் அஞ்சும் நடையையும் கொண்ட பேய்மகள் கூரிய நகங்களைக் கொண்ட தன் வளைந்த விரல்களால் கண்களைத் தோண்டி உண்ட மிகுந்த தீய நாற்றம் வீசும் பைந்தலையை வளையணிந்த பெரிய கையில் ஏந்திக் கொண்டு அசுரர்களுக்கும் அச்சம் தோன்றும்படி வெற்றி மிக்க போர்க்களத்தைப் பாடிய வண்ணம் தோன்ற அசைத்து பிணம் தின்னும் வாயினை உடையவளாய் துணங்கைக் கூத்து



ஆடினாள் என்று பேய்களின் துணங்கைக் கூத்து தொடர்பான செய்தி கூறப்படுகிறது. இங்கு துணங்கைக்கூத்து ஆட்டத்தின் வேகத்தினையும் அதன் பயங்கரத் தன்மையினையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. மேலும் தோள் பெயர என்ற வரிகள் மூலமாக பேய்கள் தங்களுடைய ஆட்டத்தில் தோள்களை அசைத்தாடிய விதம் வெளிப்படுத்தப்படுகிறது.

## மதுரைக்காஞ்சி

காஞ்சி என்பது வீடு பேற்றின் நிமித்தமாக பல்வேறு நிலையாமைக் கருத்துக்களை சான்றோர் கூறுகின்ற தன்மையைக் குறிக்கும்.22 அதன்படி மதுரைக்காஞ்சி எனும் சொற்றொடரானது மதுரையை ஆளும் அரசனுக்குக் கூறிய காஞ்சி என்பதாக பொருள் கொள்ளப்படுகிறது. தலையாலங்காலத்து செருவென்ற நெடுஞ்செழியன் என்ற மதுரை மன்னனுக்கு வாழ்க்கை நிலையாமைக் கருத்துக்கள் பலவற்றை மாங்குடி மருதனார் எனும் புலவர் எடுத்துக்கூறுவதாக அமைந்த எழுநூற்று ஐம்பத்து இரண்டு பாடலடிகளை உடையது. வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப் பாவினால் அமைந்த இப்பாட்டுக்கள் பத்துப் பாட்டில் அதிகமான அடிகளைக் கொண்ட அமைப்பு என்ற சிறப்பிற்குரியது. மதுரை மாநகரின் அமைப்பும் அங்கு வாழுகின்ற மக்களின் வாழ்க்கை நிலை சிறப்புக்களும் மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் எனும் ஐந்நில இயல்புகளும் அழகுற சித்தரிக்கப்பட்டுள்ளன. இப்பாடலடிகளில் தலையாலங்காலத்து செருவென்ற நெடுஞ்செழியன் மேற்கொண்ட பல போர்களையும், அவற்றில் அவன் பெற்ற வெற்றிச் சிறப்புக்களையும் பாடியிருக்கிறார். இதனூடாக போர்க்கள ஆடல் பற்றிய குறிப்புக்களை அறிய முடிகின்றது. அவை பற்றி பின்வருமாறு நோக்குவோம்.

போர்க்கள ஆடல்களில் ஒன்றான குரவைக்கூத்துப் பற்றி மதுரைக்காஞ்சி பின்வருமாறு கூறுகிறது.

அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூடு இன்னியம் கறங்கநேர் நிறுத்துக்
கார் மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ
மன்று தொறு நின் குரவை சேரி தொறும்23

**( ம.கா 611-615 )**

என்று அரிய அச்சத்தைச் செய்யும் வேலன் இத்தீங்கு நமக்கு முருகனால் வந்ததென்றும் கூறும்தன் சொல்லால் வளைத்துக் கொண்டு இனிய இசைக்கருவிகள் முழங்க முருகனை முன்னிலையாக்கி குறிஞ்சிப்பூவை கடப்ப மரத்தில் சூடி ஆண்டுப்புகழ் மிக்க முருகனைப் பரவி வழிபடுதலால் மகளீர் தழுவிக் கை கோர்த்து மன்றங்கள் தோறும் நின்று ஆடும் குரவைக் கூத்து எனக் கூறுகின்றது.

மேலும் பேய்த்துணங்கை பற்றிய செய்திகளையும் இதில் காண முடிகின்றது. குறிப்பாக(139-163 ) வரையான மதுரைக்காஞ்சிப் பாடல்களில் பேய்மகளீர் பற்றிய வர்ணனையில் பேய்களாடும் துணங்கைக் கூத்து பற்றிய செய்திகள் நிறைந்திருப்பதைக் காண முடிகிறது.

வெண்ணொரு வியற்களம் பாடித்தோள் பெயராக
நிணத்தின் வாயாள் துணங்கை

மேலும் மதுரை மாநகரின் சிறப்பைக் கூறும் போது அங்கு துணங்கைக் கூத்தும், அழகிய குரவைக்கூத்தும் ஆடப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. இதனைப் பின்வரும் மதுரைக் காஞ்சிப் பாடல் வெளிப்படுத்துகிறது.

துணங்கை, அம்தழுவின், மணம் கமழ் சேரி
இன் கலியாணர்.................24

**( ம.கா 329-330 )**

மேலும் மதுரைக்காஞ்சியில் பின்வரும் பாடலடியும் குரவைக்கூத்தைப் பற்றி கூறுகிறது.

இரும்புள் ஓப்பும் - இசையே என்றும்
மணிப்பூ முகண்டகத்து மணல் மலி கானல்
பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப25

**( ம.கா 95 - 97 )**

அதாவது நீலமணி போன்ற பூக்களைக் கொண்ட கழிமுள்ளிகளை உடைய மணற்குன்றுகள் மிகுந்த கடற்கரைப் பகுதியில் வாழும் பரதவருடைய மகளீர் எந்நாளும் ஆடும் குரவைக்கூத்தின் ஓசையும் சேர்த்து பேரொலியாக எங்கும் எழும் எனக் கூறப்படுகிறது. இதனூடாக குரவைக்கூத்து ஆடப்பட்டமையை காணமுடிகிறது.

பேய்த்துணங்கை பற்றி குறிப்பிடும் போது துணங்கையின் செவ்வியான கொற்றவை தலைமை ஏற்று ஆட பிற பேய்கள் கூடி ஆடின என்று குறிப்புக்களால் விளங்குகின்றன. கொற்றவைக்கு அணங்குகளாகிய பேய்கள் ஆடுவது இக்கூத்



தின் இயல்பாகும். இவ்வாறு சங்ககாலத்தின் முதன்மைக் கூத்தாகிய துணங்கை பல்வேறு விதமாக இடம் பெறுவதை அவதானிக்க முடிகிறது.

இலங்கு வளை மடமங்கையர்
துணங்கை அம் சீர்த் தழூஉ மறப்ப
அவையிருந்த பெரும் பொதியில்
கவை அடிக்கடு நோக்கத்துக்குப்
பேய் மகளீர் பெயர்பாட26
**( ம.கா 159 - 163 )**

என்ற மதுரைக்காஞ்சிப்பாடல் பேய்த்துணங்கை பற்றி விபரிக்கின்றது.

மேலும் பேய்மகளீர் ஆடிய துணங்கைக் கூத்து பற்றி இந்நூல் பின்வருமாறு கூறுகின்றது. அந்த வகையில் எண்ணெய் பசையின்றி காய்ந்த தலைமயிரையும், வரிசை ஒத்திராமல் மாறுபட்ட பற்களையும், பெரிய வாயினையும், கோபத்தால் சுழலுகின்ற பசிய கண்ணையும், கொடிய பார்வையினையும், பிதுங்கி விழிவது போன்ற கண்களை உடைய கோட்டானோடு கொடிய பாம்பும் அணியாகத் தொங்கி அசைவதால் பெரிய முலைகளை மோதி வருகின்ற காதுகளையும், சொரசொரப்பான பெரிய வயிற்றையும், இருள் பொருந்திய வடிவையும், காண்போர் அஞ்சும் நடையையும் கொண்ட பேய்மகள் கூரிய நகங்களைக் கொண்ட தன் வளைந்த விரல்களால் கண்களைத் தோண்டி உண்ட மிகுந்த தீய நாற்றம் வீசும் பைந்தலையை வளையணிந்த பெரிய கையில் ஏந்திக் கொண்டு அசுரர்களுக்கும் அச்சம் தோன்றும்படி வெற்றி மிக்க போர்க்களத்தைப் பாடிய வண்ணம் தோன்ற அசைத்து பிணம் தின்னும் வாயினை உடையவளாய் துணங்கைக் கூத்து ஆடியது தொடர்பான விபரணம் அமைந்துள்ளது.

இதனை நோக்கும் போது துணங்கைக் கூத்தின் வேகத்தையும் அதன் பயங்கரத் தன்மையினையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. இதனை,

நிணம் வாய் பெய்த பேய்மகளீர்
இணை யொழியிமிழ் துணங்கை சீர்27
**( ம.கா 25, 26 )**

என்ற பாடலடி கூறிநிற்கின்றது.

**தொடரும்....**

# மானிடகுல இராவணனாரின் சமாதியை, மனிதகுல சித்தர் காலாங்கிநாதர் தரிசித்துள்ளார் 04



புராதன காலம் தொடக்கம் ஆட்சியாளர்கள் செய்யும் தவறுகளை பொதுமக்கள் சுட்டிக் காட்டி நீதி கேட்கும் பாரம்பரியம் மிகக் குறைவாகவே இருந்துள்ளது. ஆனால் பொது மக்கள் கூட்டமாகச் சேர்ந்து செய்த புரட்சிகளின் விளைவாகவே ஜனநாயகம் பிறந்தது என்பது வரலாறு.

ஆனால் சாதாரண குடும்பத்தில் பிறந்த கண்ணகி, தனது கணவனை கள்வனென்று கூறி தண்டனை வழங்கிய பாண்டிய மன்னனுக்கு எதிராக துணிந்து வாதாடியதை அடிப்படையாகக் கொண்டது தமிழ்க் காவியமான சிலப்பதிகாரம். 'அரசன் பிழை விட்டுவிட்டான். அதனால் நீதி முறைமையிலிருந்து தவறிவிட்டான்' என்று சொல்லிய வண்ணம் ஒரு பெண் வாசலுக்கு வந்திருப்பதை அறிந்த பாண்டிய மன்னன் அவளை அழைத்து, அவள் சுமத்தும் குற்றச்சாட்டை அரசவையின் முன் வைக்கும்படி கூறியது அவரின் நேர்மையான ஆட்சியை எடுத்துக் காட்டுகிறது. அத்தோடு அவளது குற்றச்சாட்டு உண்மை என்று அறிந்ததும் அதற்காக உயிரை விட்ட அரசன் ஆட்சியாளர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றார்.

அதேநேரம் புராண காலத்திலிருந்து சித்தர்களுக்கு எதிராக துணிந்து தமது கருத்துக்களை சாதாரண பொதுமக்கள் வெளிப்படுத்த பயந்திருந்ததற்குக் காரணம் எங்கே அவர்கள் சாபம் கொடுத்து விடுவார்கள் என்ற காரணத்தினாலாகும். ஆனால் அக்காலத்திலும் சித்தர்களுக்கு சமமாக பெண்ணொருவர் வாழ்ந்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

தனது கடமைகளை சரிவரச் செய்த குடும்பப் பெண், முனிவர் ஒருவருக்கு சவால் விட்ட விடயம் பாடலாக பாடப்பட்டுள்ளது. 'கிராமத்திலிருந்த ஒருவர் காட்டுக்குச் சென்று கடுந்தவம் புரிந்து இறைவனைத் தியானம் செய்து தனக்குத் தேடியான வரத்தைப் பெற்றுக்கொண்டார். இதன் மூலம் தான் எல்லா சக்தியும் படைத்த முனிவர் என்ற ஆணவம் அவருக்குள்ளே ஏற்பட்டிருந்தது. கிராமத்திற்கு திரும்பி வரும் வழியில் தனது வரத்தின் சக்தியை பரிசீலிக்க விரும்பினார். குளக்கரையில் நின்ற கொக்கை கோபத்துடன் பார்த்தார். கொக்கு எரிந்து சாம்பலாகிவிட்டது கிராமத்திற்குள் வந்த முனிவர், ஒரு வீட்டின் வாசலில் நின்று யாசகம் கேட்டார். கூப்பிட்ட குரலுக்கு வீட்டிலிருந்து ஒருவரும் குரல் கொடுக்கவுமில்லை, வரவுமில்லை. வீட்டின் உள்ளே இருந்த பெண்மணி தனது கணவனுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்த காரணத்தால் வெளியே வருவதற்கு தாமதமாகிவிட்டது.

முனிவருக்கு கோபம் வந்துவிட்டது. அந்தப் பெண்ணை எரித்து விடுவதற்கென கண்களால் உற்றுப் பார்த்தார். அப்போது அந்தப் பெண் அவரைப் பார்த்து 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா' என்று கூறினாள் என பாடல் கூறுகிறது. முனிவர் அதிர்ந்து விட்டார். நீண்ட காலமாக கடுந்தவமிருந்து தான் பெற்ற சக்தியைக் கொண்டு கொக்கை எரித்து சாம்பலாக்கியதை, இந்தப் பெண் தெரிந்து கொண்டாளே என்று வெட்கித் தலை குனிந்தார்'.

இவ்வுலகத்தில் தனது கடமைகளை சரியாகச் செய்யும் ஒருவர், சித்தர்களுக்கு சமமானவர்கள் என்பதை வெளிப்ப




இலிங்க பூமியிலிருந்து தமிழ்நிதி அருணா செல்லத்துரை



டுத்தும் இது போன்ற பல கதைகள் எம்மத்தியிலே இருக்கின்றன. இராமாயணம் , மகாபாரதம் போன்ற வடஇந்திய காவியங்களில் மற்றும் சைவசமய விளக்கங்களில் முனிவர்கள் ரிஷிகள் சித்தர்கள் என்ற கதாபாத்திரங்கள் வருகின்றன. அவர்கள் சாதாரண மனிதர்களுக்கு சாபமிடுபவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர்.

முனிவர்களின் அதீத சிறப்புகளைக் கூறுகையில், அவரால் சாபமிடப்பட்டு, சாதாரண மனிதர்கள் க;டப்பட்டதையும், அதற்கான பாவவிமோசனத்தைப் பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருந்ததையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் முனிவர்கள் மீது பயம்கலந்த பக்தி ஏற்பட்டதினால், மனிதர்கள் அவர்களை விட்டு விலகியே இருந்துள்ளார்கள்.

## போகர் சித்தர்

ஆனால் சாதாரண மனிதர்களை நல்வழிப்படுத்;தி நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ்வதற்குத் தேவையானவற்றையே காலாங்கி நாதரும், சித்தர் போகர் அவர்களும் செய்ததாக வெளிப்படையாக போகரின் பாடல்களில் கூறப்பட்டுள்ளன. முன்பிருந்த சித்தர்கள் நல்வழிப்படுத்தும் பொறுப்பிலிருந்து தவறியிருப்பதை சீனர்கள் தனக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்கள் என்று போகர் நினைவு கூர்ந்துள்ளார்.

2431.

உலகான சீனபதி மாந்தரப்பா
உளவுமுதல் கருக்களெல்லாம் கொண்டாரங்கே
நிலவு போல் சொல்லிவிட்டேன் மாந்தர்க்கப்பா
நிட்சயங்கள் எல்லாந்தான் கண்டுகொண்டார்
கல்வியுடன் நானுமல்லோ உறவுகொண்டு
காணாத காட்சியெல்லாம் அங்கே கண்டேன்
தலமதிகமானதொரு சீனதேசம்
தரணியிலே எவராலும் சொல்லப்போமோ

**தெளிவுரை:** சீனத்திலிருந்த மாந்தரெல்லாம் தெளிவான அறிவுடையவர்கள். நான் கூறியவற்றை ஏற்றுள்ளார்கள். நிலவுவெளிச்சம் போல சொன்னேன், நல்லவிடயங்களை ஏற்றுக் கொண்டனர். அவர்களுடைய கல்விச் சிறப்புடன் நானும் உறவு கொண்டேன். மற்றவர்கள் காணாத காட்சிகளையும் அங்கே கண்டேன். சீன தேசத்தில் அதிகமான வழிபாட்டுத் தலங்கள் இருக்கின்றன. இதுபோல தரணியில் வேறு நாடு உண்டென்று எவராலும் சொல்ல முடியுமோ.

2432.

போகாது ஆதிசேடனாலும் ஆகாப்
பொங்கமுடன் சித்தராலும் ஆகாதப்பா
வேகாத பிணம்போல உழல்வாரப்பா
விருதாவாய் நூல்சொல்லி மறைத்தாரங்கே
சாகாத கற்பமது உறுதிசொன்னார்
சாங்கமுடன் கற்பத்துக்கு
உயிர்தானில்லை ஆகாத சாஸ்
திரங்கள் அனைத்தும் சொல்லி
அப்பனே சாபமது சொன்னார்காணே

**தெளிவுரை:** ஆதிமீசனாலும் முடியாது. சித்தர்களாலும் முடியாது. வேகாத பிணம்போல உழல்பவர்கள் எகத்தாளமாய் நூல்களை எழுதி உண்மையான விடயங்களைக் கூறாமல் மறைத்துள்ளார்கள். கற்பம் சாகாது என்று உறுதியாகக்; கூறினார்கள். ஆனால் கற்பத்திற்கு உயிரில்லை. நடைமுறைக் கொவ்வாத பல சாஸ்திரங்களைச் சொன்னார்கள். இறுதியிலே சாபமும் இட்டுள்ளார்கள்.

2433.

காணவே சாபமது சொன்னாரங்கே
கருவாக எனைப்போலச் சொன்னாரில்லை
தோணவே தோணாத பொருள்களெல்லாம்
முறையுடனே சொன்னேன் யானே
மாணவே எந்நூலை பார்த்தபேர்க்கு
மறைப்புமுதல் திறைப்புமுதல் யாவுமில்லை
நாணவே சாத்திரங்கள் முறைதப்பாமல்
நலமுடனே பாடிவைத்தேன் நன்மைபாரே

**தெளிவுரை:** நாம் பார்க்கும் விதத்திலே சாபமிட்டுள்ளார்கள். மற்றவர்கள் எண்ணிப் பார்;க முடியாத விடயங்களையெல்லாம் நான் முறையாக தெளிவாகச் சொல்லியுள்ளேன். என்னுடைய நூலைப் படிப்பவர்கள் அதிலே மறைப்பதற்கும், விரித்துக் கூறுவதற்கும் ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்து கொள்வர்கள். முன்னோர்கள் நாணும் வண்ணம் சாத்திரங்களை முறை தப்பாமல் பாடி வைத்துள்ளேன் அதனால் நன்மையே ஏற்படும் பாருங்கள்.

**நவபாடணம் :** பின்னர் போகர் சித்தர் சீனாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ளார். எதிர்காலத்தில் மக்கள்;; பல்லாயிரக் கணக்கான நோய்;களால் பாதிக்கப்படப் போகிறார்கள் என்ற சிந்தனை போகருக்கு உதித்தது. மூலிகை வைத்தியத்தில் சிறந்தவரான போகர், இந்தப் பிணிகள் எல்லாவற்றிற்கும் தனித்தனியாக தயாரிக்கப்படும் மருந்துகளின் தொகைகளை குறைக்க வேண்டும் என்று எண்ணினார். மருந்துகளின் தொகையைக் குறைப்பதற்கு 4448 அரியவகை மூலிகைகளைக் கொண்டு 9 வகையான பாடணங்களை மட்டும்; தயாரித்தார். அது நவபாடணம் என்று அழைக்கப்பட்டது. நவபாடணத்தில் இருந்த மருந்துக் கலவைகள் ஒவ்வொன்றும் பல வகையான நோய்களைக் குணப்படுத்தக் கூடியதாக இருந்தது.

**சகல ரோக நிவாரணி:** ஒன்பதாக இருந்த பாடணங்களின் தொகையை மேலும் குறைத்து அவற்றிலிருந்து ஒரு மருந்தைத் தயாரிப்பது பற்றிச் சிந்தித்தார். அந்தச் சிந்தனையின் வெளிப் பாடுதான், எல்லாவிதமான பிணிகளையும் தீர்க்கக்கூடியதான நவபாடணங்களைக்; கலந்து சகலரோக நிவாரணியாக மூலம ருந்து ஒன்றை தயாரித்தார்.

★ மூலமருந்து பற்றி மூலிகை வைத்தியத்தில் சிறந்தவரான திருமூலரும், திருமந்திரம் பகுதியில் கூறியிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.



★ ஆயுர்வேத மூலிகை வைத்தியத்தில் சிறந்தவரான அகத்தி யருடனும் மற்றும் பல நிபுணர்களுடனும் இதுபற்றிக் கலந் துரையாடியிருந்தார் என்றும் ஆய்வுக் கட்டுரைகள் தெரி விக்கின்றன.

★ திருமூலர், அகத்தியர் போன்ற பெரிய ஞானிகள் வாழ்ந்த காலம்பற்றிய விபரங்கள்பற்றி ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**நவபாடண அபிஷேகம் :** சகலரோக நிவாரணியின் பயனை எல்லோரும் இலகுவாக பெற்றுக் கொள்ள ஆவன செய்தார். இதற்கென நவபாடணத்தில் தயாரிக்கப்பட்ட சகல ரோக நிவா ரணியை உபயோகித்து கடவுள் (முருகப் பெருமானுடைய) உருவத்தை உருவாக்கினார்.

## பழனி முருகன்

பழனி மலையில் தனசியப்பன் என்ற பெயரில் ஆலயம் இருக்கின்றது. இந்த ஆலயத்தில் வைத்து நவபாடணமான சகல ரோக நிவாரணிக் கலவையை உபயோகித்து முருகன் சிலை அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சிலை பழனி முருகன்; ஆலயத்தில் பிரதி;டை செய்யப்பட்டது.

போகரும் ஏனையவர்களும் கலந்துரையாடி முருகன் சிலைக்கு அபிமீ'கம் செய்யும் முறைகளை அறிமுகம் செய்த தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நவபாடணத்தில் உருவாக் கப்பட்ட முருகன் சிலைமீது பாலினாலும், பழங்களைக் கொண்டும் தயாரிக்கப்பட்ட பஞ்சாமிர்தத்தாலும் அபிமீ'கம் செய்யும் முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

★ நவபாடண சேர்க்கையால் செய்யப்பட்ட முருகன் சிலையில் பஞ்சாமிர்தத்தாலும், பாலினாலும் அபிமீ'கம் செய்யும்போது, அதற்கென வடிவமைக்கப்பட்ட வழியால் தீர்த்தம் வெளியே வரும். அதனைப் பக்தர்கள் தொட்டு வாயில் விட்டும் தலையில் தெளித்தும் வந்தால், சகல நோய்களில் இருந்தும் நிவாரணம் பெறமுடியும் என எண்ணி அதற்கான வழி சமைத்தார்.

★ நவபாடணம் என்ற சகல ரோக நிவாரணியின் பலனை மக்கள் எல்லோரும் பெற்றுக்கொண்டு சுகதேகி களாக வாழவேண்டும் என்ற நல்லெண்ணமே அவருக்கிருந் தது.

★ ஆலயங்களில் இலிங்கத்தை பிரதி;டை செய்வதற்கு ஆவுடையார் உருவாக்கப் பட்டபோது, அபிமீ'க தீர்த் தத்தை மூலஸ்தானத்திற்கு வெளியே இருக்கும் பக்தர்கள் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக கோமுகை அமைக்கப்பட் டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ பாடணம் என்ற பதம் ஆங்கில மொழியில் நஞ்சு ( poison) என்ற அர்த்தத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதை இணையத்தளங்களில் காணலாம்.

## போகர் சமாதி

மலை உச்சியில் இருக்கும் நவபாடண பழனி முருகன் சிலைக்கு நேர்கீழே இருக்கும் மலைப் பகுதியில் போகர் அவர் களினாலேயே சமாதிக்கான இடம் அமைக்கப்பட்டது. போகர் தனக்கென அமைத்த சமாதிக் குகையின் வாசல் வழியாக உள்ளே சென்றபோது, சி;யர்கள் அவரைக் கடைசி முறையா கக் கண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதியிருத்தலில் பல வகையுண்டு அவற்றில் சித்தர் போகர் அவர்கள் இருந்த சமாதி 'நிர் விகல்ப சமாதி' என்று அழைக் கப்படுகிறது.

★ சமாதி நிலையில் இமய மலையில் இருக்கும் முழுமுதற் கடவுளாகிய எம்பெருமானை, தென்திசையில் இருப்பவர் கள் வடக்கு நோக்கி அமர்ந்து தியானம் செய்து, இறைவ னின் பாதத்தை அடைந்ததை 'வடக்கிருத்தல்' எனவும் அழைக்கப்பட்டது என்ற கருத்தும் முன் வைக்கப்படுகின் றது.

★ பழனி முருகன் ஆலயத்தின் அமைப்பு முறைகளிலும், பெயரிலும் பல மாற்றங்கள் அண்மைக்காலமாக இடம் பெற்றுள்ளன என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இணையத்தள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**(தொடரும்.....)**



# ஆய்வு நோக்கில் திருக்குறள்

### மாந்த வாழ்வியற் சீர்கேடுகளை எதிர்த்த முதல் புரட்சி நூல் திருக்குறள்

## திருக்குறளின் பெண்ணியப் பார்வை

**தொ**ன்று தொட்டு தமிழரினம் தாய்வழிக் குமுகாயமாக, பழையோள், கொற்றவை, அம்மன், காளி போன்ற பெண்தெய்வ வழிபாட்டினராகவே உள்ளனரென்பது கண்கூடு. இதை பலதமிழ் அறிஞர்களின் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. ஆனால் இடையிலே (கி.மு.1800களின் பின் ) நாவலம் தேயத்துள் காலத்திற்குக் காலம் புகுந்த வைதீக வேதவாரியர், அராபியர், ஐரோப்பியர் போன்ற விலங்காண்டி(காட்டுமிராண்டி)களாலும் தொல்குடியினர் இன்னல் இடருற்றனர். இவ்வேற்றினத்தார் இந்திய மண்ணில் கண்டதெல்லாம் அவர்களுக்கு வியப்பை ஊட்டியது. இவர்கள் அறிவில் மழலையராகவும், கொலை, கொள்ளையை மூலதனமாக வைத்தே தொல்குடியினரை ஆட்டிப்படைத்து அடக்கி ஒடுக்கி ஆண்மேலாண்மையை நிலைப்படுத்தினர். இவர்கள் தம்பெண்டு, பிள்ளைகளுடன் வந்தவர்களல்ல. இலங்கை வந்த விசயனும் நண்பர்களும், விசயன் தமிழச்சி குவேனியையும் (இலங்கை அரசுரிமை பெறவும்), பின் அவளைக் கொன்றுவிட்டு பாண்டிய நாட்டு தமிழச்சிகளையும் அவனும் அவன் நண்பர்களும் மணந்துகொண்டனர். அராபியரும் இதே நடைமுறைதான்(பெண்கள் வீட்டுள் முடக்கப்பட்டனர்). இந்நாடுகளின் தொல்குடிப் பெண்களை வன்புணர்வுக்கு உட்படுத்தி பிள்ளைகளைப் பெற்றதோடு பெண்தலைமையை உடைத்து அவர்களை இழிவுப்பிறவியராக்கியதோடு நின்றுவிடாது வேதமரபு என்றும், மநுநெறிச் சட்டக்கோவை என்றும், பகவத்கீதை என்றும், ச்மிருதி என்றும் கூறி அவளுக்குரிய எல்ல உரிமைகளையும் பறித்தெடுத்தனர்.

அத்தோடு தொழிலடிப்படையில் பிரிந்திருந்த தொல்குடி மக்கள் சாதிக்கூறுகளாக்கப் பெற்றனர். அதாவது பிறப்பால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் (பிராமணரர், சத்திரியர், வைசிகர், சூத்திரர்) என இறங்குவரிசைப் படுத்தினர். இது தமிழர் குமுகாயத்தை கூறுபோட்டு அவனைப் பெலவீனப்படுத்தவே ஏற்படுத்தப் பட்ட ஒன்றாகும்.ஆனாலும் தொல்குடி மக்



கலைவல்லார் (கலாபூசணம்)
**நா. வை. குமரிவேந்தன் (மகேந்திரராசா)**
நிறுவநர் இலங்கைக் குமரித் தமிழ்ப் பணிமன்றம்
மின்பொறியியல் கண்காணிப்பாளர் (ஓய்வு)
கிளிநொச்சி.

கள் வாழா இருந்துவிடவில்லை. இச்சாதிய, பெண்ணிழிவிற் கெதிராக வட, தென் இந்திய நிலப்பரப்பில் பல மெய்யியல்கள் உருவாக்கம் பெற்றன. குறிப்பாக சாங்கியம், யோகம், உலகாய்தம், சமணம், பௌத்தம், ஆசிவகம் போன்றவை குறிப்பிடத் தக்கவையாகும்.கி.மு.5-கி.மு.2 ஆம் நூ.ஆண்டு காலப்குதியில், இச் சுழலிலேயே திருவள்ளுவர், சங்ககால ஔவையார் போன்றோர் வாழ்ந்திருக்க வேண்டும். ஔவையாரின் புறநாநூற்றுப் பாடல் 187 பின்வருமாறு செப்புகின்றது.

நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ
அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

அதாவது பெண்களின் தவறுகளுக்கெல்லாம் ஆண்களே காரணமென்பதை தெட்டத் தெளிவுற வெளிப்படுத்தும் இப்பாடல்., மநுநெறி, பகவத்கீதை போன்ற வேதமரபுக் கோட்பாடுகளை பின்பற்றிய வைதீக வேத மதத்தவரின் பல்தரப்பட் கொடுமைகளாலும் ஆண் மேலாண்மையின் சீர்கெட்ட நடவடிக்கைகளாலுமே இந்நிலை ஏற்பட்டது என்பதைப் புரிய வைக்கவுமே திருக்குறள், ஐம்பெரும் காப்பியங்கள், ஔவை நூர்ல்கள், சமணர்களின் நாலடியார் போன்ற நீதி நூல்கள் யாக்கப்பெற்றன எனலாம். ;

குறிப்பாகத் திருக்குறள் பெண்ணியத்தைப் போற்றுகின்ற பெண்ணிழிவைப் போக்கி அவள் ஆணுக்குச் சமனானவள், இல்லை இல்லை ஆணுக்கும் மேலானவள் என்பதை வெளிப்படுததவுமே வள்ளுவர் யாத்தார் எனலாம். இங்கு சாதியம், பெண்ணிழிவு பற்றிப் பகவத் கீதை என்ன கூறுகின்றது, கீதை எப்போது தமிழர் நடுவில் புகுந்தது என்பதையும் அறிந்து கொள்வது சிறப்புடையதே. கீதை கி.பி.8ஆம் நூற்றாண்டளவில் இராமாநுசரின் விசிட்டாத்வைதத்தில் முதன்முதல் வெளிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும், தமிழர் இலக்கியத்தில் கீதையின் வெளிப்பாடு மதுரைக் காஞ்சியிலுள்ள ஒருபாடலுக்கு எந்தப் பொருத்தப்பாடும் இல்லாமல் விளக்கம் தரும்போது நச்சினார்க்கினியரால் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் சுட்டப்பெற்றதாக ஆய்வறிஞர் இராசாராம் மோகன்ராய் கூறுகின்றார். இனி கீதைசாதிய (வர்ணாச்சிரமம்) மேலாண்மை பற்றி என்ன கூறுகிறது?

சாதுவர்ணயம் மயாஸ்ருஷ்டம் குணகர்மவிபாக
தஸய கர்த்தாரமபியாம் வித்திய கர்த்தா மவ்யமாம் (கீதை 4.13)

அதாவது குணத்திற்கும் செய்கைக்கும் தக்கபடி நானே நான்கு சாதிகளை(வர்ணங்களையும்)

சமைத்தேன். செய்கையற்றவனும் அழிவற்றவனுமான யானே அவற்றைச் செய்தேன் என்றுணர்.

கீதை தரும் நான்கு சாதியர் கடமை(தமிழாக்கம்)

பிராமணர்:- அகப்புறக் கரணத்தை அடக்கல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், கல்வி, ஆத்திகம், இயல்பில் தோன்றும் செயல்கள்.

(கீதை.18.42)

சத்திரியர்(அரசர்):- சூரத்தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை,ஈகை, இறைமை, இயல்பாய்த் தோன்றும் செயல்கள்.

(கீதை.18.43)



வணிகர்:- உழவு(இழிதொழில் -- வேதமரபு), ஆநிரை காத்தல், வாணிகம், இயல்பாய்த் தோன்றும் செயல்கள்.

சூத்திரர்:- மேற்குறிப்பிட்டவர்களுக்கு தொண்டு, இயல்பாய்த் தொன்றும் செயல்கள்.

இதில் மேல் வகுப்பார் வழுவினாலும் சூத்திரன் வழுவக்கூடாது. வழுவினால் அழிவுண்டாகும்(ச்சிருதி)

பற்று நீக்கித் தொழில்செய்
(கீதை 3ஆம் அதிகாரம்)
மூன்று சாதியினருக்கும் தொண்டுசெய்

(18ஆம் )

குலக்கடமை மீறுவோர்க்கு மறுமை இல்லை ( 23ஆம் )

மாம் பார்த்தா இவ்யாபாஸ்ரித்ய
யே பிஸ்யூ பாபயோயை ஸ்திரியோ
வைஸ்யா ய்ததா சூத்திர.. ஸ்தேவி
யாந்தி பராம் சுதிம். (கீதை.9.32)




**இதன் தமிழாக்கம்:--**

பெண்களோ (எச்சாதியினளாயினும்), வைசிகரோ, சூத்திரரோ, நீசகுலத்தில் பிறந்தோரோ, யாராயினும் என்னை வணங்கினால் மறுமை(மோட்சம்) பெறுவர் என்கிறார். மநு இன்னுமொன்றை கூறுகின்றதாம். அதாவது இவை எதிலும் பகுத்தறிவைப் பயன்படுத்துவது கண்டனத்திற்குரியதும் நாத்திகத்தைப்போல் பாவமானதுமாம். பெண்ணடிமைத்தனத்தின் வித்து, முளை, வேர், மரம், கிளை எது என்பதை பெண்ணியவாதிகள் சிந்திப்பார்களா? இதிலிருந்து மீளவழி சமைப்பார்களா? இந்துத் திருமணங்களில் நினைவூட்டப்படும் பெணணிழிவு, ஒழுக்கமுரண் கரணங்களை (அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல், தீவலம் வருதல் போன்றன) நீக்க முயற்சிப்பார்களா? தமிழன்னையின் இவ்விலங்குடைத்து விடுதலை செய்வார்களா? காலங்காலமாய் அடிமைத்தனமும், தழ்வுணர்ச்சியும் கொண்டு மரபணு மாற்றம்பெற்ற தமிழ் குமுகம் திருந்துமா?

இம்மாற்றத்தைப் பெறவேண்டியே 2000ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவப் பெருந்தகை திருக்குறளை யாத்துத் தந்திருக்கின்றார். திருக்குறளின் அறத்துப்பாலில் 5ஆம் அதிகாரமாகிய இல்வாழ்க்கையில் தொடங்கி 24ஆம் அதிகாரம் புகழ் வரையுள்ள 20அதிகாரங்களில் பெண்ணின் பெருமைகளை வியந்து போற்றுகின்றார்.இங்கு இல், மனை என்பதும் கூட இல்லத் தலைவியையே குறிப்பதாகும்.வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில்

புகழ்புரிந்த இல்லிலோர்க் இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை (கு.59) என்றும்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (கு.60) என்றும் செப்புவது

இல்லத் துணைவியின் பெருமையே ஒருவனின் உயர்ச்சிக்கும், புகழ்ச்சிக்கும் காரணம் என்பதை ஐயத்தற்கிடமின்றி வெளிப்படுத்துகின்றார். இங்கு இல்லிலோர் என்றதும், மனைமாட்சி என்றதும் இல்லத் தலைவியையே ஆகும். அதுமாத்திரமா?பெண்டிரை (இல்லவளை) ஐயப்பட்டு அடக்கி ஒடுக்கி வீட்டுள் பூட்டி வைப்பதன் மூலம் அவளது மனநிலையை மாற்றிவிடவோ தடைசெய்யவோ முடியாதென்பதை

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை (கு.57)

என்று கூறுவதன் மூலம் கற்பென்னும் திண்மையை அவளே அதை அடக்கிக் காப்பதிலேயே தங்கியுள்ளதென்பார் வள்ளுவனார். அதுமாத்திரமல்ல ஒருத்திக்கு கிடைக்கின்ற கணவன் எல்லா வகையிலும் குணநல ஒழுக்கம் உட்பட ஒத்தவனாய் இருந்தால் அவ்விணையர் என்றும் இன்பம் ததும்ப இன்ப உலகில் வாழ்வது போன்ற நிலையை அவள் அடைகின்றாள் என்பதை

பெற்றாள் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு கு,58) மூலம் வெளிப்படுத்துவார்.

பண்டைய நாட்களில் திருமணமாகாத பெண்கள் பிறை தொழுவது வழக்கமாம். ஆனால் அவளுக்கு ஒருவர் மீது காதல் ஏற்பட்டுவிட்டால் பிறை தொழும் பழக்கத்தை விட்டுவிடுவாரகளாம. ஆனாலும் அதை வெளிக்காட்ட மாட்டார்களாம் என்பதை

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில் (கு.1137)

ஒரு இளைஞன் தனது காதல் நிறைவேறாதபோது அதை வெளிப்படுத்த பனம் வடலி மட்டைகளால்(ம

டல்) உருவாக்கப்பெற்ற சிறு கன்றுக்குட்டி போன்ற உருவத்தில் ஏறி அவ்வூர் மக்கள் பார்க்கும்படியாக அரத்தம் சொட்ட வெட்கமின்றி ஊர்வலம் வருவானாம். இதைக்காணும் ஊர்ப்பெரியவர்கள் கூடிபோய் அப்பெண்ணின் தந்தையுடன்பேசி திருமணம் செய்து வைப்பார்களாம். ஆனால் கடல் பெருக்குப்போல் காம நோய் வருத்தினாலும் வெட்கம், நாணமின்றி அதை வெளிப்படுத்தாது அடக்கிக் கட்டுப்படுத்தும் பெண் பிறப்புப்போல் உலகில் வேறொன்றில்லை என்ற அவளின் திண்மையை இக்குறள் மூலம் சுட்டி இது தான் பெண்ணின் வரைவிலக்கணம் என்பதை தெளிவுபடுத்துகின்றார்.அத்தோடு புரிந்துணர்வுடன் கூடிய தலைவன் தலைவிக்கு இடைப்பட்ட காதல் வாழ்வை மெருகூட்டும் விதத்தில் புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில்

வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்
(கு.1105) என்றும்

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு
(கு.1103) என்றும் கூறுவது,

என்னவளுடைய தோள்கள் விரும்பிய பொழுதில் விரும்பிய பொருட்களைத் தருவது போன்ற இன்பத்தைத் தருகின்றதே,இவளின் தோளில் துயிலும் இன்பத்தைவிட தெரியாத வழியிலிருக்கும் இல்லாத ஊராகிய தாமரைக் கண்ணான் உலகிலா இவ்வின்பம் கிடைக்கப் போகின்றது, கிடைக்காது என்றவாறாக தலைவன் சொல்வதை இக்குறள்கள் விரித்துரைக்கின்றன. விண்ணில் அல்ல மண்ணில் தான் இன்பம், மகிழ்ச்சி உண்டென்பதை புட்டுவைக்கின்றார் பெருநாவலர் வள்ளுவனார்..

தலைவன் அல்லது காதலன் தனது நிறைத்தன்மையை அல்லது கற்பை எப்படி இழக்கின்றான் என்பதை புலவி நுணுக்கத்தில் சிறப்புற எடுத்தியம்புகின்றார் செந்நாப்போதர் வள்ளுவனார்.

பெண்ணியலார் எல்லாரும்
கண்ணின் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. (கு.1311)

அதாவது பெண்ணியல்பு அற்றவர்கள் உன்னைத் தம் கண்களால் பார்த்து தம்முட் கொள்வதால் உன் நிறைத்தன்மை(ஒருத்திக்கு ஒருவன்) மாசுபடுவதால் உன்னைச் சேரமாட்டேன் என்று ஊடல்கொண்டு கூறுவதாக இக்கூற்று அமைந்துள்ளதைக் காணலாம். இக்கருத்துப் புரட்சி பற்றி முனைவர் மு.வரதராசனார் பின்வருமாறு விளம்புகின்றார். குறளில் வரும் ஊடலில் பரத்தை என்றொருத்தி இல்லை. தலைவன் பரத்தையிடம் செல்வதுமில்லை. பொருட்பாலில் பொருள் காரணமாய் பெண்கள் பரத்தைத் தன்மையாவதும், அப்பெண்டிரை ஆடவர் நாடுவதும் தவறென்று வள்ளுவர் வன்மையாகக் கண்டிக்கின்றார். வரைவில் மகளிர் அதிகாரம் அவரின் சீர்திருத்தக் கருத்தை எடுத்தியம்புவதாகும். வள்ளுவர் ஊடல் பற்றிக் கூறவந்தபோது காமத்துப் பாலில் பரத்தமைக்கு இடமில்லை. அதற்கு முன்னோர் வகுத்த இலக்கணத்தையும் புறக்கணித்து புலநெறி வழக்கம் என்ற நூலோர் மரபையும் கடந்து புதுவழி சமைத்துள்ளார் என்பார்.




தமிழ்ப் பண்பாட்டிற்கும், ஒழுக்கவியலுக்கும் மாறுபடாது ஒருத்திக்கு ஒருவன், ஒருவனுக்கு ஒருத்தி என்றவாறு தமிழர் மானிடவியலுக்கு ஏற்ப பெருமை என்ற அதிகாரத்தில்

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு
(கு.974)

கண்ணகியார், மாதவியார், கோப்பெரும் தேவியார், பூதப்பாண்டியனின் தேவி பெரும்கோப் பெண்டு, திலகவதியார் போன்ற பல பெருமைக்குரிய தமிழ் அன்னையரிருந்தும் இன்றுவரை தமிழர் இன்பியல் நிகழ்வுகளில் தொன்ம(புராண) இழிவுகளையே சுட்டுகின்றனர்.

ஒருமை மகளிர்போல ஆண்களும் செயற்படுவார்களாயின் பெருமை பெறுவர் என்பார் வள்ளுவனார். தமிழனை அடையாளப்படுத்துகின்ற மொழியில்,அவன் பண்பாட்டில் தெய்வப் புலவராம் திருவள்ளுவரின் நெறிவழி நின்று தமிழன் வீட்டு



# திருக்குறள்

பண்பாட்டு நிகழ்வுகளை நெறிப்படுத்த வேண்டும். ஆனாலும் திருக்குறளின் பெண்வழிச் சேரல்,வரைவில் மகளிர் என்ற அதிகாரங்களிலும், சில தனித்த குறள்களிலும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்றவற்றிலும் பெண்ணிழிவு, பெண்ணடிமைத்தனம் வெளிப்பட்டு நிற்பதாகச் சில கட்டுரையாளர்கள் முரண்பட்டு நிற்கின்றனர். இது அவர்கள் தவறென்றும் கூறமுடியாது. ஏனெனில் தருமர், மணக்குடவர், கல்லாடர், பரிமேலழகர் போன்ற 50பதிற்கும் மேற்பட்ட உரையாசிரியர்கள் உரைகண்ட முறையே இதற்குக் காரணமாகும்.

ஒவ்வொருவரும் தம் மதம் சார்ந்து, கொள்கை சார்ந்து,அவர்கள் தாம் வாழ்ந்த சூழல் சார்ந்து, நடுநிலை பேணப்படாமல், தம்மனம் போனபோக்கிலே உரை கண்டனர் எனலாம். திருக்குறளுக்குச் சிறந்த உரை திருக்குறளேயாகும். 1330குறளுள்ளும் புகுந்து வெளிவந்தாற்றான் அதன் ஒருகுறளுக்கு பொருள் காண முடியும். பொருளென்பது அது யாக்கப்பெற்ற காலம், புறச்சூழல், பின்;பற்றப்பட்ட மரபுகள், அன்றைய மதக்;கோட்பாடுகள், மெய்யியற் கோட்பாடுகள் போன்ற அனைத்துக் காரணிகளும் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். மதப்போற்றலுக்கோ, தொனம (புராண) விளம்பலுக்கோ திருக்குறளில் எந்தச் சான்றுமில்லை. அன்று வன்முறையில்; திணிக்கப்பட்டு, மூடநம்பிக்கையில் ஆழ்த்தி மூளைச்சலவை செய்யப்பட்டிருந்த மக்களை தெளிவூட்டி கரைசேர்க்க யாக்கப்பெற்ற நூலே திருக்குறள்.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கண, இலக்கிய நூல்களும் ஆரிய மொழி, அவர்மரபு, வைதீகவேத மதம், பிராமணியம் போன்றவை பற்றிய அதிக விளம்பல்களையே அவற்றில் காணக்கூடியதாய் உள்ளது. இந்நூல்கள் தப்பிப் பிழைத்ததற்கு இப்போற்றுதல்களும் காரணமாய் இருக்கமுடியும். இல்லையேல் தில்லையம்பலத்தில் பூட்டி வைக்கப்பட்ட நால்வர் பாடிய தேவாரங்கள், சமணர்களின் 8000 பனுவல்கள்(எஞ்சியிருப்பது இன்று காணப்படும் நாலடியார்) அழிக்கப்பட்டது போல் இவையும் அழிக்கப்பட்டிருக்கலாம். அவை தப்பிப் பிழைத்ததால் தமிழன் சற்றுத் தலைநிமிர்ந்தான் என்றே கூறவேண்டும்.

திருக்குறளுள் பெண்ணிழிவுக் காரணிகள் புகுந்துள்ளனவா என இங்கு நோக்குவது ஏற்புடையதாய் இருக்கும்.

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்;
அமையார்தோள் அஞ்சுபவர். (கு.906)

இது பெண் வழிச்சேறல்என்ற அதிகாரத்தில் வரும் குறளாகும் பெரும்புகழாளர்போல் புகழ்வாழ்வு வாழ்ந்தாலும் மனையாளைத் தழுவும் இன்பத்திற்காக அஞ்சித் தாழ்பவர் எப்புகழும் இல்லாதவரே என்பது இதன் பொருளாகும்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாண்டியமன்னன், மாவீரன். இவனது நாட்டில் பாம்புகள் தீண்டா, கொடியகாட்டு விலங்குகளும் நட்புடன் வாழும் நாடு. அவ்வளவிற்கு செங்கோண்மை மிக்க நாடு. அவனவையிலே ஆடல்பாடல் நிகழ்வொன்று நடைபெறுகின்றது. மன்னன் தன்னை மறந்த நிலையில் ஒன்றித்து இருக்கின்றான். இது அரசிக்கு எரிச்சலை ஊட்டுகின்றது. அவள் இருக்கையை விட்டெழுந்து அவ்விடம் நீங்க முனைகின்றாள்.மன்னனும் அவள் நிலையறிந்து அவளது ஊடலைத் தணிக்க அவளைப் பின்தொடர்கின்றான், அங்கே பொற்கொல்லன் சிலம்பு திருடிய கள்வன் இங்குதான் உளான் என்கின்றான். மன்னன் சற்றும் சிந்திக்கவில்லை சீற்றம்கொண்டு. கொன்று கொணர்க சிலம்பு என்கின்றான். பாண்டியன் பெரும் புகழ் என்னவாயிற்று? மண்ணோடு மண்ணாச்சே. இக்குறள் தவறா? பெண்ணிழிவு படுத்தலா?.

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். (கு.902)

செய்யும் செயலில் அக்கறையில்லாது பெண்வழி நிற்பவன் உயர்வு மிகப்பெரிய வெட்கத்திற்கு இடமான தலைகுனிவைத் தருமென்பதே இதன்பொருள்.

கோவலன் மாதவி சேர்க்கையால் ஏற்பட்ட விளை



வுகள் சிலப்பதிகாரம் தோன்றக் காரணமாகியது, முதல் எடுகோளாகும். யூலியச்சீசர் மாபெரும் வீரன். உரோமப் பேரரசை தன் காலடிக்குக் கொண்டு வந்தவன். காதலி கிளியோபற்ரா. உலகப்பேரழகி. சீசர் அவளிடம் மண்டியிட்டுக் கிடந்தான். நண்பர்கள் தீட்டினர் திட்டம் கொலை செய்தனர் சீசரை. வள்ளுவன் குறளில் தவறுண்டா? இது பெண் இழிவுபடுத்தலா?

வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தில்

ஆயும் அறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு (கு.918)

வஞ்சனையில் வல்ல மகளிரின் தழுவுதல் ஆராயும் அறிவில்லாதவர்களுக்கு உயிர்க் கொல்லியாகும் என்று அறிவுடையோர் கூறுவர் என்பதே இதன் பொருளாகும். இலங்கையை துட்ட கைமுனுவின் பின் வட்டகமுனு என்பவன் ஆட்சி செய்தான். கி.மு.29 இல் ஏழுவீரர்களைக் கொண்ட சோழர் படை இலங்கை ஆட்சியை கைப்பற்றியது. இவர்களின் ஆட்சி பதின் மூன்று ஆண்டுகள் தொடர்ந்தது. சதாசீசன் என்பவன் இவர்களுடன் இணைந்திருந்தான். இவன் மனைவி அனுல்ட அழகி. இவ்வெழுவருடனும் நட்பானாள் இவர்கள் ஒருவர்பின் ஒருவராய்க் கொல்லப்பட்டனர். அதன்பின் சதாசீசனை அரசுக் கட்டில் ஏற்றினாள். சிறிது காலத்தின்பின் அவனையும் கொன்று தான் அரசுக் கட்டில் ஏறினாள் அனுலா. அவளே இலங்கையின் முதல் பெண்ணரசி. இது வரலாறு வள்ளுவன் வகுப்பில் தவறுண்டோ?.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஒருபெண்ணிற்கு எப்படியோ அப்படியேஆணுக்கும் பொருந்தும் என்பதை வள்ளுவனார்தகையணங்குறுத்தல் என்னும் அதிகாரத்தில் மணப்பருவமெய்திய கன்னியைக் கண்டகாளை எப்படி எல்லாம அவள்முன் குறித்த நான்கு ஒழுக்கங்களையும் பெற்றவனாக தடுமாறுவதைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. (1088)

பகைவரும் கண்டஞ்சும் என்பெருமிதம் அவளுடைய ஒளிபொருந்திய நெற்றிக்கு ஆற்றாமல் தோற்றுவிட்டதே(இங்கு அவனுடைய வீரம் தோற்றுவிட்டது).

பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு (கு.1083)

முன்பெல்லாம் கூற்று என்பதை யான் அறிந்திலேன் இப்பொழுதறிந்தேன் அது பெண்தன்மையுடன் பெரும் போர் செய்யும் கண்களையுடையது என்று. (இங்கு அச்சமுடையவன் ஆகின்றான்).

நாணுத்துறவு உரைத்தல் என்ற அதிகாரத்தில் நாணம் நீங்கியதை வெளிப்படுத்தும்.

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல் (கு.1133)

அன்று நாணமும், பகைவர் பாராட்டும், நல்லாண்மையும் உடையேன். ஆனால் இன்றோ நாணமின்றி என் காதலை வெளிப்படுத்த மடலுடையவனானேன். இங்கு நாணத்தை இழந்து நிற்கின்றான். வீரமுடையவனாக, நாணமுடையவனாக, அச்சமில்லாதவனாக இருந்த அவன் இன்று அவள்முன் வீரமில்லாத, நாணமில்லாத, அச்சமுடையவனாக காட்சி அளிக்கின்றான். இதன்மூலம் இருபாலாருக்கும் மேற்குறித்த ஒழுக்கங்கள் உண்டென்பதை வலியுறுத்தவே ஆகும். வள்ளுவன் கூறுவதெல்லாம் காதல்மணம் பற்றியதே. இதன்மூலம் சாதிய ஏற்றத்தாழ்விற்கு சாவு மணி அடித்து சமத்துவப் புரட்சி செய்வதற்கே ஆகும். தமிழனுக்கு உகந்தது வள்ளுவநெறியே.அதுவே மதத்தால், சாதியத்தால், ஆண்பெண் ஏற்றத்தாழ்வால், பொருள்வள ஏற்றத்தாழ்வால், பண்பாட்டு, ஒழுக்கவியல், மொழிச் சிதைப்புக்களால் சிதைக்கப்பட்டு, சின்னாபின்னப்பட்டு போயுள்ள இத்தமிழினம் ஒன்றுபடுவதற்கான ஒரேயொரு திறவுகோல் எம்மீட்பர் செய் திருக்குறளே. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதை மனதில் நிறுத்தி வினைசெய்போம். வாழ்க வள்ளுவம்!.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!




# பெண்ணியம் பற்றி ஆண்களும் பேசவேண்டும்...



திருமதி.
பவானி சற்குணசெல்வம்
(நெதர்லாந்து)

**பெ**ண்ணியம் என்பது பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள் கட்டமைப்புக்கள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் கவனப்படுத்தும் சமூக, கலாசார, அரசியல் இயக்கங்கள் செயற்பாடுகள், கோட்பாடுகளின் தொகுப்பாகும். ஆண் பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப்படுவதுண்டு. பெண்ணியத்தை வரையறுப்பதென்பதே கூட சிக்கலானதாக இருப்பதுண்டு.

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றைக் களைய முற்படும் இயக்கமாகும்.அதன்மூலம் உலகளவில் அரசியல் பண்பாடு பொருளாதாரம் ஆன்மீகம் ஆகியவற்றில் நல்ல மாற்றத்தை உருவாக்கிட முடியும். பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்

தெற்காசிய நாடுகள்இ பெண்கள் சமூகம், அலுவலகம், குடும்பம் போன்றவற்றில் ஒடுக்கப்படுவது பற்றிய விழிப்புணர்ச்சியையும் அத்தகைய இழிவுபடுத்தும் போக்கினை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயல்படும் தன்மையைப் பெண்ணியம் கொண்டுள்ளது.

சில நண்பர்கள் 'பெண்ணியம்' குறித்து அது ஏதோ பெண்கள், ஆண்களுக்கு எதிராக தேவையின்றி புகழுக்காக, பரபரப்புக்காக பண்ணும் அரசியலாக நினைக்கிறார்கள்.ஆணாதிக்க சமூகம் என்ற ஒன்றில்லை, பெண்களுக்கு ஆண்களை போல அத்தனை உரிமைகளும்... தேவைகளும் கிடைப்பதாகவும்இ தேவையின்றி 'பெண்ணியம்' பேசுவதாகவும்





பதிவுகளில் எழுதி வருகிறார்கள். அவர்களுக்கான ஒரு நீண்ட விளக்கம் இது.

பெண்ணியமானது பல்வேறு குறிக்கோள்களை உள்ளடக்கியதாக உள்ளது:

- பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்க போராடுதல்.
- ஆண், பெண் இருபாலரும் சமத்துவ உரிமைகளை ஒருங்கிணைந்து நிலைநாட்டுதல்.
- பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை முறைகளுக்கும்பணிகளுக்கும் உரிமையுடைவர்களாக இருத்தல்.
- பெண்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்துவனவற்றையும் அவர்களின் முன்னேற்றத்திற்கு கேடுவிளைவிப்பனவற்றையும் நீக்குதல்.
- பெண்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை ஒருங்கிணைத்துஇ இயக்கமாக்கி உரிமைகளுக்காகப் போராடச் செய்தல்.
- பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தை நிலைநாட்டுதல்.
- ஆணாதிக்கத்தை அடையாளம்கண்டு அதனை அறவே களைதல்.
- பெண்களின் மீதான அனைத்துவகை ஒடுக்குமுறைகளையும் ஆராய்ந்து அவற்றைப் போக்குவதற்கான தீர்வுகள் மற்றும் விடுதலைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல்.
- பெண்களின் நலனைப் போற்றுதலும் அதனை அடைதலும் அடைந்தவற்றைக் காத்தலும்.ஐஊஸ

இயற்கை செய்த அற்புதம் பெண்மை என்பது வேறு ஆண்மை என்பது வேறு.

ஆண் பெண் சமத்துவம் என்பது பெண்களும் ஆண்களும் தத்தமது வலிமைகளையும் பலவீனங்களையும் நன்கு புரிந்துகொண்டு அவற்றைப் பற்றி நம்பிக்கையுடன் மற்றவர்களுடன் பகிர்ந்து ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒருவரையொருவர் தட்டிக்கொடுத்து தத்தமது திறன்களை வளர்த்து செம்மையான முறையில் அந்தத் திறமைகளைப் பயன்படுத்துதலாகும். தற்காலப் பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை இன, சமூக, கலாசார, மத எல்லைகளைக் கடக்கும் அடிப்படை இயக்கமாகக் கருதுகின்றனர். ஒரு வினைத்திறன்மிக்க பெண்ணிய இயக்கமானது வன்புணர்ச்சிஇ தகாப்புணர்ச்சி, பாலியற் தொழில் போன்ற பொதுப்பிரச்சினைகளையும் குறித்த சமூகங்களுக்குரிய சிறப்புப் பிரச்சினைகளையும் கவனத்திலெடுக்க வேண்டும் என்றும் இவர்கள் வாதிடுகின்றனர்.

பெண்ணியவாதி ஆணும் பெண்ணும் இணையாக ஒருவருக்கு ஒருவர் ஈடுகொடுத்து, விட்டுகொடுத்து வாழும் இணையான வாழ்கை என்பது ஒரு குடும்பம் மற்றும் ஒரு சமூகத்தின் தேவை என்பதை நன்கு உணர்ந்தவள். ஆனால் அப்படிப்பட்ட வாழ்கைஇ நம் சமூகத்தில் எத்தனை பெண்களுக்கு வாய்க்கிறது ? ஏன் அப்படி அமைவதில்லை ? இங்கு தான் 'ஆணாதிக்க சமூகம்' என்ற சிந்தனை வருகிறது.

பெண் ஆரம்ப கால நடைமுறைகளிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டுஇ தடைகளைத் தாண்டி அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி எப்போதும் முன்னேறியே வந்திருக்கிறாள். ஆனால், சில ஆண்கள் எவ்வளவு படித்தபோதும்இ அறிவியல் ரீதியான முன்னேற்றங்களை அடைந்தபோதும்இ மனதளவில் ஆரம்பப் புள்ளியில் நின்றுகொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. ஆதிக்க மனோபாவத்திலிருந்து முற்றிலும் விடுபடத் தயாராக இல்லை. அதனாலேயே, தன்னைவிட மேலானவளாகப் பெண் மாறும்போது அவளைக் கீழே தள்ளச் சற்றும் தயங்குவதில்லை.

மனிதர்கள், ஒழுக்கநெறிகளுக்கு உட்பட்டு வாழ்வது தான் கூட்டு வாழ்க்கைக்கு இ சமூகத்திற்கு உகந்ததது. ஆனால் அத்தகைய வரையறைகள் ஆணுக்கு ஒன்றாகவும் பெண்ணுக்கு வேறாகவும் அமையும் போது தான், இந்த சமூகம் ஆண் பெண் இருவரையும் சமமாக பார்க்கவில்லை என்ற நிலை எழுகிறது.

இன்னொன்று, பாலியல் வன்முறைகள் அரசியல் காரணமாக நடந்தாலும் சமூக சீர்கேட்டினால் நடந்

அடிமையாகிறவர்கள் இபோதைக்கு அடிமையானவர்கள்இ மோசமாக உடை உடுத்துபவர்கள்இ அநாகரிகமாக நடப்பவர்கள் ... எத்தனையோ பேர் இருக்கிறார்கள்இ ஒரு கொலைக்குப் பின்னோ, வன்முறைக்கு பின்னோ பலியான ஆண்களின் நடத்தை குறித்த விவாதம் காரணமாக வைக்கப்பட்டு, அத்தகைய ஆண்கள் குற்றம் நடக்க தூண்டியதாக சொல்லப்பட்டிருக்கிறதா ? இரவில் தனியே நடந்து வந்தது ஒழுக்கக்கேடுஇ ஊர் சுற்றியது அதை விட கேடு...அதனால் தான் திருடன்இகொள்ளைக்காரன் தூண்டப்பட்டு, அவனை அடித்து கொன்றுவிட்டான் என்று சொல்லலாம் இல்லையா ? ஆண்களின் ஒழுக்கம் என்றுமே விவாதிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஏன் ?

தனிமனித ஒழுக்கம் என்பது இருபாலருக்கும் பொதுவானது. கற்பு நிலை எனில் அது இருவருக்கும் பொதுவில் வைக்க இந்த சமூகம் என்று முன்வருமோ அன்று சமமான நிலை என்று ஒத்துக்கொள்ள இயலும்.

பாலியல் வன்முறைகளை மேற்கொள்ளும் மனிதன் மனநிலையில் பிறழ்வு கொண்டவன், அத்தகைய மனிதனின் நடவடிக்கைகளை உங்கள் ஆணாதிக்க சிந்தனைகள் மூலம் நியாயப்படுத்தாதீர்கள். அத்தகைய மனிதன் பெண்கள் எத்தனை ஆடைகளை கொண்டு உடலை மறைத்தாலும் பெண்கள் மீதும் ஏன்இ பெண்குழந்தைகள் மீதும் கூட பாலியல் வன்முறைகளை நிகழ்த்துகிறான். அவ்வாறான நிகழ்வுகளில் குற்றம் அந்த ஆணினுடையது.அத்தகைய பிறழ்வுகள் சமுதாயத்தில் பரவலாக நடந்தால் அந்த சமூகத்தின் அடிப்படையில் ஏதோ பிறழ்வு இருக்கிறது என்று பொருள். அந்த பிறழ்வுகளை நியாயப்படுத்தும் நிலையை தான் 'ஆணாதிக்க நிலை' என்கிறோம்.

ஆணாதிக்க நிலையை பல நிலைகளில் காணமுடியும். நமது சமூகம் தந்தைவழி சமுதாயமாக, நிலஉடமை சமுதாயமாக மாறிய பிறகு பெண்கள், ஆண்களின் உடமைகளாக பார்க்க நேர்ந்ததால், நம் சமூகத்தில் ஆழமாய் ஆணாதிக்க நிலை பன்முகம் காட்டுகிறது. ஆண்களுக்கு, அவர்கள் விரும்பிய படிப்பு இதொழில் ,கலை வாழ்க்கை அன்றாட தேவைகள் ஆகியவற்றை அடைய பல தடைகள் இருக்கலாம் ஆனால் அவை அவனது பாலினத்தால் சாத்தப்படும் தடையாக ஒரு போதும் இருப்பதில்லை. ஆனால் ஒரு பெண் அவளது ஒவ்வொரு இயக்கத்திலும் இப்படி தான் இயங்க வேண்டும் என சமூகம் அவளை நிர்பந்தப்படுத்துவது கண்கூடு.அந்த தடைகள் அவளது ஆசைகளை கனவுகளை, இலட்சியங்களை, வாழ்கையை ஒரு கூட்டிற்குள் முடக்குவதை தான் 'ஆணாதிக்க நிலை' என்கிறோம். இந்த ஆணாதிக்க மனநிலை ஆண், பெண் இருவரின் மனநிலையிலும் அழுத்தமாய் வளர்க்கப்



தாலும் அத்தகைய குற்றங்கள் நிகழ காரணம் ஆணாதிக்க சூழல் என்பதை மறைக்கின்றனர்.

ஒரு பெண் மீதான, அவளது உடல் மீது நிகழ்த்தும் வன்முறையில் வகை தொகை ஏன் பிரிக்கவேண்டும்? ஒரு பாலியல் பெண்மீதான வன்முறைக்கு நியாயம் வேண்டி அந்தப்பெண் குரல் கொடுக்கிறாள். பாலியல் தொழில் செய்வது அவளது நிர்பந்தமாகவோ, இல்லை விருப்பமாகவோ இருந்துவிட்டு போகட்டும், அத்தகைய பெண்களின் மீது பாலியல் வன்முறைகள் நடத்துவது நியாயமா என்ன? ஒழுங்கான உடை உடுத்தும் பெண்களுக்கு மட்டும் தான் தன் மீது நிகழ்த்தும் பாலியல் கொடுமைகளுக்கு நியாயம் கேட்க முடியுமா ? ( இன்னொரு கேள்வியும் எழுகிறது அவள் தான் கவர்ச்சி காட்டவில்லையே அந்த பெண் மீதும் ஏன் இந்த கொடுஞ்செயல் நிகழ்த்தப்படுகிறது ?) சட்டங்கள்இ பாதுகாப்பு, உரிமை எல்லோருக்கும் பொதுவானது தானே?

எத்தனை ஆண்கள் பாலியல்ரீதியான வன்கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள் ? ஒழுக்ககேடான ஆண்கள் எத்தனையோ பேரை பார்க்கிறோம். மதுவுக்கு

படுகிறது. குடும்பத்தில் ஆரம்பித்து,பெண்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில்இ எண்ணங்களில் விருப்பங்களில்எனஒவ்வொருநிலையிலும் மறுக்கப்படும் உரிமைகளும் சிதைக்கப்படும் நியாயமான உணர்வுகளும் எத்தனையோ உள்ளது. எடுத்துகாட்டாக திருமணமின்றி தனித்து வாழும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடங்கள் ஒரே மாதிரியானவை அல்ல. அதே போல் திருமண முறிவு ஏற்படுத்தும் விளைவுகள் ( சமூகத்தின் எதிர்வினை ) இருபாலாருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பெண்கள் இப்படிப்பட்ட



சூழல்களில் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் ஆணாதிக்க மனநிலை கொண்ட சமூகத்தால் நிகழ்பவை.

ஆண் ஆதிக்கம் என்பது சில சமூகங்களில் இரத்தத்திலேயே ஊறியிருப்பதும்இ தமக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் என்ற சமூகப் பொறுப்பில்லாத தன்மைகளும்இ சில பெண்களும் சுயநலன் கருதி இதை மூடி மறைப்பதும் அச்சம் காரணமாக வெளிப்படையாகத் தமது பிரச்சனைகளைக் கூறாது இருப்பதும் ஆணாதிக்கத்தைக் களைந்தெறிவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

ஒருவருக்கு ஒருவர் விட்டுகொடுப்பது என்பது குடும்பத்திலும், சமூகத்திலும் இணக்கமான சூழலை ஏற்படுத்தும் என்பதில் மாற்று கருத்தில்ல. ஆனால் அத்தகைய இணக்கமான சூழல் பெண்களின் கனவுகளை மிதித்துத்தான் நிகழவேண்டுமா ? ஒரு கவிஞராக, ஓவியராக, கதை ஆசிரியராக, அறிவியலாளராக பரிணமிக்க, ஆண்கள் எதிர்கொள்ளும் விதம் போலல்ல பெண்கள் அவ்வாறான நிலைகளை அடைவது.

அவள் பெண் என்பதால் ஒவ்வொரு நிலையிலும் கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஒருசில பெண்கள்தான் கவிஞராக அரசியல்வாதியாகஇ முகாமையாளராக மலர முடிகிறது. அவர்கள் எவ்வளவு எதிர்நீச்சல் போட்டு ஒருநிலையை அடைய வேண்டி உள்ளது என்பதும் அனைவரும் அறிந்ததே. சில பெண்கள் அதற்கும் அவர்கள் வீடு தாண்டி வெளிவரவேண்டி இருக்கிறது. ஒருசில பெண்கள் தான் வெளியில் தெரிய முடிகிறது. எண்ணற்ற பெண்கள் ஆணாதிக்க சமூகத்தில் புதைக்கப்படுகிறார்கள்! பெண்கள் குடும்பத்திற்கு தோதான வேலைகளின்றி, வேறு விருப்பமிருந்தால் ஒழுக்கம் தவறியவளாகவும் பார்க்கும், இந்த சமூகத்தின் நிலையை 'ஆணாதிக்கம்' என்று செல்லாமல் எப்படி சொல்வது?

ஒரு பெண்ணை விழுத்த முடியாத போது கோழைகள் எடுக்கும் பயங்கர ஆயுதம் அவளின் நடத்தையை விமர்சிப்பதுதான். பெண்ணென்பவள் மனச்சுமையுடன் அதையும் சிரித்துக் கடக்கவேண்டியவளாகிறாள். யாருக்காக அவள் பாடுபடுகிறாளோ அவர்களே அவளை விளங்கிக் கொள்ளாமல் எதிர்க்கும் போதும் அவள் தன் குறிக்கோளுக்காக தனித்து நின்று போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறாள்.

ஆணாதிக்கநிலை என்றால் ஆண்களை குறை சொல்வதாக கொடிபிடிக்கிறார்கள். ஆண் என்ற பாலினம் என்பதால் உங்களுக்கு வாழ்க்கை மறுக்கப்படுவதில்லை, ஆனால் பெண் என்ற பாலினத்தில் எங்கள் வாழ்கை சிக்கிக் கொள்கிறது. எனது குடும்பம் எனக்கு எல்லாவித உரிமைகளையும் தரலாம்இ ஆனால் இந்த ஆணாதிக்க சமூக கட்டமைப்பில் எனது கனவுகளைஇ வாழ்கையை வாழ போராடுகிறேன். அதற்கு இந்த சமூகத்தின் ஆணாதிக்க மனநிலையே காரணம்.

பெண்ணியம் என்பது ஆண்களின் கொள்கைகளை எதிர்ப்பது அல்ல. அவர்கள் செய்யும் தவறுகளை எதிர்த்து, எடுத்துரைப்பது. பெண்ணியம் என்பது, ஆண்கள் செய்யும் தவறுகளில் பங்கெடுத்துக் கொள்வதல்ல. அதை தட்டிக்கேட்பது.

பெண்ணியம் என்பது ஆண்களை வெறுப்பது அல்ல. பெண்மையை கொச்சைப்படுத்துபவர்களை வெறுப்பது.

பெண்ணியம் என்பது பெண்கள் மட்டுமே பேச வேண்டும், போராட வேண்டும் என்றில்லை. ஆண்களும் பெண்ணியத்தை ஆதரிப்பவர்களாக இருக்கலாம். ஏனெனில் அந்த ஆணின் சகோதரியும் பெண்தான் மகளும் பெண்தான். அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அந்த ஆண்மகனும் போராடித்தான் ஆகவேண்டும்.



பெண்ணியம் என்பது ஆண்கள் செய்யும் தவறுகளை மட்டும் சுட்டிக்காட்டுவதல்ல, சமூகத்தில் பெண்கள் செய்யும் தவறுகளையும் சுட்டிக்காட்டுவது.

பெண்ணியம் என்பது குடும்பத்தின் மீது அக்கறை இல்லாமல் தனித்து இருப்பதல்ல. குடும்பத்தில் அனைவரும் சமம் என்ற எண்ணம் கொண்டுஇ அனைவரையும் ஒரே மாதிரி நேசிப்பது.

பெண்ணியம் என்பது ஆண்களைவிட அதிக அதிகாரம்இ ஆதிக்கம் செலுத்துவது அல்ல. ஆண்களுக்கு நிகராக வாழ வேண்டும் என்ற கொள்கை கொண்டிருத்தல்.

பெண்ணியம் என்பது ஆண் போன்று நடந்து கொள்வதல்ல. ஆணும், பெண்ணும், பெண்ணை பெண்ணாக, சமூகத்தில் சமமாக மதிக்கவும்இ நடக்கவும் வழிவகுப்பது.

பெண்ணியவாதிகள் ஏதோ ஒரு மாயமான எண்ண ஓட்டத்தில் சிக்கிக்கொண்டு இருப்பதாக கருதுபவர்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறேன். பெண்கள் தங்கள் வாழ்கைக்காக, கனவுகளுக்காக இவிருப்பத்திற்காக, திறனுக்காக, உரிமைக்காக, உழைப்பிற்காக ஆணாதிக்கம் என்ற தடையை ஒவ்வொரு நிலையிலும் எதிர்கொண்டு போராடுவதில் ஒரு பெண் இழப்பதை அளவிடமுடியாது.

ஆண்கள் எல்லோரும் ஒரே ரகமாக இருப்பார்கள் என்று சொல்லிவிட முடியாது. பெண்கள் எதிர்பார்ப்பது போல நடந்து கொள்வார்கள் என்றும் நினைக்கக் கூடாது. ஒரு ஆணிடம் பெண் எப்படி பழகுகிறோளோ அதை பொறுத்துத் தான் ஆண்கள் தங்களை எப்படி மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். இருந்தாலும்இ இன்றைய ஆண்கள் பெண்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். பெண் தானே என்று சாதாரணமாக நினைத்து அவர்களை உதாசினம் செய்யக் கூடாது. ஒரு சில ஆண்கள் பெண்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்; அவர்களால் தான் பெண்களின் மனநிலையை முழுமையாக உணர முடிகிறது. சினிமாவில் கூட பெண்கள் இன்று ஆணுக்கு நிகராக சவாலான கேரக்டர்களில் நடித்து தன் திறமையை, உழைப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆணும், பெண்ணும் வேறில்லை இருவரும் ஒருவரை ஒருவர் உள்வாங்கி கொண்டு வாழ்ந்தால் இந்த சமூகம் சிறப்பாக இருக்கும்.

'போகும் இடமெல்லாம் எடை போட்டுப் பார்க்க பொருளல்ல பெண்' ஆம், முதலில் பெண்களின் வலியை ஆண்கள் உணர வேண்டும். தானும் ஒரு பெண்ணாக இருந்தால் இப்படித் தானே இருக்கும் என்று பெண்கள் இடத்தில் இருந்து ஆண்கள் யோசிக்க வேண்டும். ஒரு பெண் சிரிப்பதை கூட வித்தியாசமாக பார்த்து அதற்கு தவறான அர்த்தம் கண்டு பிடிக்கும் ஆண்கள் கொஞ்சம் திருந்த வேண்டும். நாகரீகம் இத்தனை பெரியளவில் மாறிய போதும் இன்னும் ஒரு சில ஆண்களின் மன நிலை மாறவில்லை. ஒரு பெண் ஏதாவது ஒரு சாதனை செய்தால் கூட அதை பாராட்ட தயங்கும் ஆண்கள் தான் அதிகம் இருக்கிறார்கள். இதே சமூகத்தில் ஒரு விதவைப் பெண் பூவும், பொட்டும் வைத்துக் கொண்டால் அதை மோசமாக விமர்சிக்கும் பெண்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். ஆனால், இந்த விஷயத்தை ஒரு சில ஆண்கள் முற்போக்கு சிந்தனையுடன் பார்ப்பது ஆறுதலான விஷயம். இனி உங்கள் சகோதரிகளுக்காக உங்கள் பெண் குழந்தைகளுக்காக உங்களின் வருங்கால சந்ததியினருக்காக ஆண்களும் பெண்ணியம் பற்றிப் பேசவேண்டும். அப்பொழுதுதான் இந்தச்சமூகம் அதை ஏற்றுக்கொள்ளும்.



# இலங்கை இந்து தர்மாசிரியர் பரீட்சை வழிகாட்டி

இலங்கை பரீட்சைத் திணைக்களம் வருடம்தோறும் நடத்தப்பட்டுவரும் பரீட்சை களில் இந்து தர்மாசிரியர் பரீட்சையும் ஒன்று. இது முற்றிலும் இந்து சமயம் சார்பான ஒரு பரிட்சை ஆகும் .இதேபோல் புத்த, இஸ்லாம் சமயங்களுக்கும் அவர்களின் சமய பரப்புடன் இப்பரீட்சை நடைபெற்று வருகின்றன இப் பரீட்சை சான்றிதழ் டிப்ளோமா சான்றிதலுக்கு சமனானது. இதனால்தான் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னால் இந்து தர்மாசிரியர் பரீட்சை சித்தி பெற்றவர்களுக்கு சைவசமய ஆசிரியர் நியமனம் வழங்குதல் தொடர்பாக அரசு கவனம் செலுத்தி வழங்கிவருகின்றது .

இலங்கை இந்து சமய கலாசார அமைச்சு இப் பரீட்சைக்குரிய பாடத்திட்டங்களையும் ,பாட நூல்களையும் இலவசமாக வினியோகித்து வருவதோடு நாடளாவிய ரீதியில் இலவசக் கருத்தரங்குகளையும் முன்னெடுத்து வருகின்றது ஆனால் இலங்கையில் உள்ள சைவ மாணவர்களுக்கும் சைவ அபிமானிகள் இப் பரீட்சையின் முக்கியத்துவம் புரியாமல் கவனயீனமாக இருப்பது கவலையளிக்கின்றது ஏனைய இனத்தவர்கள் இப்பயிற்சியில் கவனம் செலுத்தும் அளவிற்கு இலங்கையில் உள்ள இந்து சமயத்தவர்கள் ஏன் இப்படி புறக்கணிக்கிறார்கள் என்பது ஆராயப்பட வேண்டியது. இதற்கு பல தரப்புகளில் இருந்து பல நியாயங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றுள் இப் பரீட்சையின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு இன்மை, பரீட்சையில் சித்தி அடைவதால் என்ன பயன் என்ற எதிர்பார்ப்பு, பரீட்சைக்கு தயார் ஆக்குவதற்குதேவையான வளவாளர்கள் பற்றாக்குறை ,தர்மாசிரியர்



**சைவப்புலவர் சு . துஷ்யந்த்**
**BA (Hons) PGDE, MA**
**முன்னாள் ஆசிரியர்.**
**பாரீஸ் நகர் – பிரான்சு**

கருத்தரங்குகளில் கருத்துக்களை வழங்குபவர்கள் பரிட்சைக்கு ஏற்ற விதத்தில் தங்கள் பணிகளை புரியாமை, போன்ற காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவற்றைக்கருத்தில் கொண்டு சிவ ஒளி மாதாந்த மின்னிதழ் தலைமை ஆசிரியர் தென்கயிலை சிவா அவர்கள் சஞ்சிகையில் இதற்குரிய வழிகாட்டலை முன்னெடுக்க ஆர்வம் கொண்டுள்ளார் அவரின் இம்முயற்சிக்கு பாராட்டுகளும் இறை ஆசியும் உரித்தாகட்டும்.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இந்து தர்மாசிரியர் பரீட்சை ஐந்து வினாப் பத்திரங்களை கொண்டமைந்துள்ளது.அவை வேதங்களும் ஆகமங்களும் ,சைவ சமய வரலாறு ,பன்னிரு திருமுறைகள் ,சமய ஞானிகளும் பெரியார்களும், கோயில்களும் கலைகளும் என்பனவாகும்.



**பாட அலகு :1**

## கோயில்களும் கலைகளும்

### இந்துக் கலைகள் சம்பந்தமான இலக்கியங்கள்

### (அ) சிற்ப சாஸ்திரங்கள்

இந்துக்கட்டட, சிற்பவிக்கிரகம் போன்ற நுண்கலைகளுக்கு வழி காட்டியாகத் திகழ்பவை சிற்பசாஸ்திரம் எனும் நூல்வகை ஆகும். மயமதம், மானசாரம், சகளாதிகாரம், காசியபம், இந்திரமதம், சில்பரத்தினம், மானசோல்லாச, சரஸ்வதியம், சிற்பசிந்தாமணி, வாஸ்துவித்யா, விசுவகர்மீயம், நாராயணீயம் முதலியவை முக்கியம் வாய்ந்த சிற்ப சாஸ்திரங்களாகும். ஆகம மரபுக்குட்பட்ட கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெற்ற நிலையில் சிற்பக்கலை நூல்களின் உருவாக்கத்திற்கு ஆகமங்கள்,புராணங்கள், ஸ்மிருதி நூல்களும் உதவியுள்ளது. காரணம் , காமியம்,சுப்பிரபேதம் முதலிய ஆகமங்களிலும் அக்கினி புராணம், மத்சயபுராணம், கருடபுராணம், விஷ்ணுதர்மோத்திரபுராணம் முதலிய புராண நூல்களிலும் சிற்பக்கலை, கலை மரபுபற்றிப் பேசும் நூல்களாக விளங்குகின்றன.

ஸ்தபதியும்,சிற்பியும் தெய்வீக மரபுடையோர் என்பதை சிற்ப நூல்களும், புராண நூல்களும் தெரிவிக்கின்றன. மானசாரம் என்ற சிற்பநூலின் இரண்டாம் அத்தியாயமாகிய சில்பிலணம்என்னும் பகுதியில் சிற்பியின் தெய்வீக மரபு முறையொன்றும், அதிலே பல்துறை சார்ந்த கலைஞர்களும்,அவர்களது கடமைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. இவர்களில் ஸ்தபதி முதன்மையானவர். அவர் கோயிற் கட்டடக் கலையில் தேர்ச்சி பெற்றவன். கட்டடநிபுணர், இதேபோல் சூத்திரகிராதி, கட்டடபடவரைஞர், வர்த்தகி என்பவர் அளவுப்பிரமாண விதிகளை உணர்ந்தவரும் ஓவியக்கலையில் கைதேர்ந்தவருமாவார். இறுதியானவர் சிற்பி. இவர்கள் சிற்பங்களையும், படிமங்களையும், ஆகமங்களையும், சிற்பநூல்களையும், செய்முறைகளையும் பழுதறப்பயின்று செய்முறைகளையும் பயின்று விதிகளுக்கு இம்மியளவும் மாற்றமின்றி சிற்பங்களை அமைக்கவேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

சிற்பங்களையோ படிமங்களையோ வடிக்கும் போது பின்வரும் அம்சங்களைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றுசிற்ப சாஸ்திரங்கள் கூறுகின்றன.

1. கல், உலோகம், மண், இரத்தினம், கருங்கல், சுதை, தாதுக்கள், போன்ற மூலப்பொருட்களை உபயோகிக்க வேண்டும். கருங்கல்லில் சிற்பம் வடிக்கும் போது அக்கல்லைத் தெரிவு செய்யும் முறையை சிலாபரீட்சயணம் என்று குறிப்பிடுகின்றது. கல்லில் மணியோசை கேட்டால் அது ஆண்கல் அதில் ஆண் உருவம் சமைக்கப் பட வேண்டும். சலங்கை ஒலிகேட்டால் அது பெண் கல். அதில் பெண் உருவம் சமைக்கப்பட வேண்டும். எவ்வித ஒலியும் கேட்காத கல்லில் அலங்கார வேலைப்பாடுகள் செய்யவேண்டும் என்பது விதியாம்.
2. தியானஸ்சுலோகம் ஜெபிக்க வேண்டும். ஒவ்வொரு தெய்வங்களுக்கும், அடியவர்களுக்கும் இருக்கவேண்டிய




அங்க இலட்சணங்களை விளக்கும் சுலோகங்களை சிற்ப படிமங்களை செய்யமுன் அவர்கள் மனதில் பதித்து ஓதவேண்டும்.

3. அளவுப்பிரமாணம்

விக்கிரகங்களை உருவாக்கும போது ஆகம வழி நிற்கவேண்டும்என்று சுக்கிர நீதிகுறிப்பிடுகின்றது. ஒரு சிற்பவடிவத்தில் அதன் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் அமைய வேண்டிய கலைநியமங்கள் அளவுப் பிரமாணம் ஆகும்.

தெய்வ வடிவங்களை உருவாக்கும் அளவையை தாலம் அல்லது அங்குலம் என்று சிற்ப நூல்கள் கணித்துள்ளன. அவை

அ. உத்தம தஸதாலம் - மகேசுவர 25 வடிவங்கள், நாராயணன், நரசிங்கன், இந்திரன், மகாபலி முதலிய உருவங்கள்

ஆ. மத்தியம தஸதாலம் - உமை, துர்க்கை, திருமகள், காளி, கார்த்திகேயன் முதலிய உருவங்கள்

இ. உத்தமநவதாலம் - சிவனின் அட்டமூர்த்த வடிவங்கள் துவாரபாலகர்கள்

ஈ. மத்தியம நவதாலம் - சிவனடியார்கள்,சித்தர்கள்,கந்தவர்கள

உ. பஞ்சதாலம் - விநாயகரின் திருவுருவங்கள்

4. இலட்சணவிதி

பார்ப்போரது உள்ளத்தில் இரசபாவங்கள் தோன்றும் வகையில் உருவங்களை அமைத்தல் ஆகும். திருவுருவங்களின் அன்பு, அருள்,சாந்தம்,வீரம் முதலிய குணங்களைக் காட்டுவதற்கு சமபங்கம்,அபங்கம்,திரிபங்கம் ஆகிய நிலைகளில் வடிக்கப்படும். படிமகோலங்களை மூர்த்தி தோன்றும் நிலையினைக் கண்டு ஆசனம்,சயனம், ஸ்தானகம் என சிற்பநூல்கள் மூன்றாகக் குறிப்பிடுகின்றது. கை அபிநயங்கள்,முத்திரைகள்,அணிகலன்கள்,ஆபரணங்கள்,ஆடைகள்,ஆயுதங்கள் கொண்டதாகவும் அலங்கரிக்கப்படும்.

இவ்வாறு சிற்ப உருவாக்கத்திற்கு வேண்டிய சிற்பக் கலை நியமங்கள் பொருந்திய விதிமுறைகள் பின்பற்றப்பட்ட சிற்பவடிவங்களே வழிபாட்டிற்குகந்தவை, வழிபடுவோரின் உள்ளத்தில் தூய்மையையும், பக்தி உணர்வையும், ஞானத்தையும் ஊட்டவல்லன. இந்த வகையில் சுக்கிரநீதி நூல் தரும் விளக்கம் முக்கியத்துவம் வாய்ந்தது.

ரம்மியமான சிற்பவடிவங்கள் விதிக்கப்பட்ட பிரமாணத்திற்கும் கூடியோ ,குறைந்தோ அமையக்கூடாது. அவற்றுக்குரிய லணவிதியும் முறையாகப் பின்பற்றப் படல் வேண்டும். அவ்வாறு கூறப்பட்ட நியமங்களைப் பின்பற்றிச் செய்யும் வடிவங்கள் நன்மை பயப்பனவாகவும், சுவர்க்கத்திற்கு வழிகாட்டுவதாகவும் அமைகின்றன. அன்றேல் அவை துன்பத்தையும், அழிவையுமே கொடுக்கும்

இவ்வாறு சிற்பசாஸ்திரம் கூறும் பிரமாணத்திற்கு உட்பட்ட வடிவங்களே வழிபாட்டிற்குரியவை. ஆவை மங்கல வடிவமானவை. வீட்டின் பத்தை ஊட்டும் தன்மையானவை.

## (ஆ) நாட்டிய சாஸ்திரம்

கலாதத்துவம் பற்றிய இந்திய நூல்களில் முதன்மையானது நாட்டியசாஸ்திரம். அதனைப் பரதமுனி ஆக்கினார் என்பது ஐதிகம். அது நாடகம்,நாட்டியம்,நடனம்,கவிதை, இசை என்பன பற்றிய இலக்கண நூலாகும். இதற்கு இணையான நூலொன்று வேறெந்த மொழியிலும் தோன்றவில்லை. இந்நூல் கி.பி முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் தோன்றியிருக்கக் கூடும்.

பாரததேசத்துப் புராதனகலைக் கோட்பாடுகளின் களஞ்சியமானநாட்டிய சாஸ்திரம் 37 அத்தியாயங்களைக் கொண்டது. 1 முதல் 26 அத்தியாயங்களில் நாடகம்,நடனம் அவற்றில் நாடக அரங்கம், ரங்கதேவதாபூஜா, தாண்டவலக்கணம், பூர்வாங்கப் பகுதிகள், ரசங்கள்,பாவங்கள், உபாங்கவிதிகள். ஹஸ்தாபிந

யங்கள், சரீராபிநயம் என்பன விளக்கப்பட்டுள்ளது. 27 அத்தியாயம் முதல் 32 அத்தியாயம் வரை இசை, வாத்தியங்கள்,தாளம் என்பன விளக்கப்பட்டுள்ளது. இந்நூலில் ஏறக்குறைய 6000 சுலோகங்களும் இடையிடையே வசனப்பகுதிகளும் காணப்படுகின்றன.

பரதரின் பெயரால் வழங்கும் நாட்டிய சாஸ்திரம் இன்றுவரை நிலைபெறும் மரபு வழியான இந்திய அரங்கேற்று கலைகளுக்கெல்லாம் மூலமான பொது நூலாகக் கொள்ளப்படுவதோடு, சமஸ்கிருதத்திலும் வேறு இந்திய மொழிகளிலும் எழுதப்பட்ட நூல்கள் பலவும் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் உள்ளவற்றை மூலமாகக் கொண்டு எழுதப்பட்டவைகளாகும். அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை மதங்கர்-பிருகத்தேசீ, தனஞ்ஜயன்-தசரூபம், நந்திகேஸ்வரர்-பரதார்ணவம், அபிநயதர்ப்பணம் என்பனவாகும்;. கி.பி 11ம் நூற்றாண்டிலே காமீரில் வாழ்ந்த பெரிய சைவாச்சாரியரும் தலைசிறந்த கலைஞருமான அபிநவகுப்தர் 'அபிநவபாரதீ' என்ற பெயரில் பரதரின் நாட்டிய சாஸ்திரத்திற்கு விரிவான உரை எழுதினார்.

ஆயகலைகள் 64கினுள் இசையும் நடனமும் ஒன்று. இன்று பரதரின் நாட்டியக் கலையை இந்தியதேசம் மட்டுமன்றி உலகதேசமும் அக்கறையும் அபிமானமும் கொண்டு பயிலப்பட்டு வருவதைகண்கூடு. ஒடிசி,கதகளி,குச்சுப்புடி,மணிப்பூரி,முதலிய நாட்டிய வடிவங்களும் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தை மூலமாகக் கொண்டவைதான். உண்மை விளக்கம் எனும் சைவசித்தாந்த சாஸ்திரநூலில் சிவபிரானின் திருநடனத்தைப் 'பரதம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நாட்டிய சாஸ்திரம் கலை மட்டுமன்றி அது சமயம்,ஆன்மீகம்,சைவசித்தாந்தம்,வழிபாடுஆகியவற்றுடன் சங்கமமானதாகும்.

## (இ) இசைநூல்கள்

இசைக்கலைக்கு சாமவேத நூலே முன்னோடியாகும். சிலப்பதிகார உரைக்காரரான அடியார்க்குநல்லார், பரதம், அகத்தியம், முறுவல், செயிற்றியம், இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, கூத்தநூல் முதலியனநடன, இசை சம்பந்தமான நூல்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவற்றுள் பல காலத்தால் இறந்துவிட்டன. அவற்றுள் பஞ்சமரபு, கூத்தநூல் என்பன அச்சில் பதிவாகி இசை பற்றிய விபரங்களைக் குறிப்பிடுகின்றன.

யாதவகுலஅரசரின் ஆட்சியில் உயர் பதவி பெற்றிருந்த சாரங்கதேவர் எழுதியசங்கீதரத்நாகரம்சங்கீதம் பற்றிய பெருங்களஞ்சியமாகும். இந்நூல் தமிழகத்துப் பண்ணிசை பற்றியும் குறிப்பிடுகின்றது. இந்நூல் ஏழு அத்தியாயங்களைக் கொண்டது. முதல் ஆறு







அத்தியாயங்களில் வாய்ப்பாட்டிசை,வாத்திய இசை ஆகியன பற்றியும் ஸ்வரம்,ராகம்,பிரதீர்ணம்,பிரபந்தம்,தாளம்,வாத்தியம் எனும் தலைப்புக்களில் இசை பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

இவரைத் தொடர்ந்து ஹரிபாலதேவர் எழுதிய சங்கீதசுதாகரம், பார்;வதேவர் எழுதிய சங்கீத சமயசாரம்,ஆந்திரகோமடி வேமமன்னர் எழுதிய சங்கீத சிந்தாமணி,விஜயநகர அரச ஆதரவில் லமிநாராயணர் எழுதிய சங்கீத சூர்யோதயம் முதலிய நூல்களும் இசை,நடனம் பற்றிய கலை விடயங்களை விளக்குகின்றன.

## (ஈ) ஓவிய நூல்கள்

ஆதிகாலத்திலிருந்தே இந்துக்களிடையே ஓவியக் கலை மரபு பண்பாட்டு விருத்தி பெற்ற கலையாக விளங்கி வந்திருப்பதினை தொல்பொருட்சின்னங்களிலும், இலக்கிய ஆதாரங்களிலும் இருந்து அறிந்து கொள்ளலாம்.

சங்ககாலத்தின் இலக்கியங்களை தொல்காப்பியம், மதுரைக்காஞ்சி,புறநானூறு,மற்றும் சிலப்பதிகாரம்,மணிமேகலை போன்ற இலக்கியங்களிலும் ஓவியக் கலை பற்றிய விபரங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஓவியச் செந்நூலுரை நூற்கிடக்கையும் என்ற சிலப்பதிகார வரியின்படி அக்காலத்தில் ஓவியம் சம்பந்தமான நூல் இருந்தமையை தெரிவிக்கின்றது. பாண்டியன் நன்மாறனின் அரண்மனையில் சித்திரமாடம்அமைக்கப்பட்டிருந்ததை புறநானூறு சொல்கின்றது. மணிமேகலையிலும் ஓவியநூல் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. கூத்தாடும் ஆடல் மகளிர் இதனை நன்கு கற்றுத் தேர்ந்திருந்தாக அந்நூல் குறிப்பிடுகின்றது.

சித்திரகாரப்புலிஎனும் பட்டம் படைத்த மகேந்திரவர



மன் எனும் பல்லவன் கி.பி 7ம் நூற்றாண்டில் வழக்கிலிருந்ததட்சிணசித்திரம்என்ற ஓவிய நூலிற்கு உரை எழுதினான் என்று மாமண்டூர் குகைக் கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

வடமொழியில் இயற்றப்பட்ட சிற்ப நூல்களிலிருந்தும் ஓவியம் பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது. விணுதர்மோத்திரம் எனும் புராணநூலில் உள்ளசித்திரசூத்திரம்எனும் பகுதியே பண்டைய ஓவியக்கலை நுட்பம் பற்றித் தெரிவிக்கும் தலைசிறந்த பகுதியாகும். அதில் ஓவியம் ரூபபேதம்,பிரமாணம்,பாவம்,லாவண்ய யோஜனம்,சாதுருச்சியம்,வர்ணிக்காபங்கம் முதலிய ஆறு அங்களைக் கொண்டது. சத்தியம்,வைணிகம்,மிச்ரம்,நாகரம் என்னும் ஓவிய வகைகள் நான்குஉண்டுஎன்றும் நிறம் மற்றும் வர்த்தனைகளாக பிந்துஜம்,பத்ரஜம்,ரைகீசம் மூன்று வகை உண்டு என்றும் குறிப்பிடுகின்றது.

மேலைச்சாளுக்கிய மன்னரால் எழுதப்பட்ட அபிலா;தார்த்த சிந்தாமணி எனும் நாட்டிய நூலில் ஓவியம் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ரசிகசித்திரம், தூளிசித்திரம்,பாவசித்திரம்,வியத்தசித்திரம்,அவியத்தசித்திரம் முதலிய ஓவியத்தின் பிரிவுகள் ,ஓவியகருவிகள்,வர்ணபூச்சுக்கள், தூரிகைகளின் வேறுபாடுகள் என்பவை பற்றி இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

கி.பி 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீகுமரர் எழுதிய சில்பரத்தினம் எனும் சிற்பநூலில் சித்திரலட்சணம் என்ற பகுதி சித்திரம், அர்த்தசித்திரம், சித்திரபாசம் என மூன்று வகையான சித்திரங்களைப் பற்றியும் ஐந்து வர்ணகுழம்புகள்,சித்திரம் தீட்டும் கருவிகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

## பாட அலகு: 2

### கட்டடக்கலை

திருக்கோயில் இல்லாத ஊர் திருவியலூர்என்பதற்கிணங்க திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் ஊருக்கு அழகியல் தன்மை வாய்ந்தது. கோயில் இல்லாதவூர் அடவிக்காடு. அதனால்தான் திருக்கோயில்கள் இறையிருப்பையும் இறை அருட்கடாச்சயத்தையும் அருளும் இருப்பிடமாகின. இதனால் கோயிலை தேவகிருஹம்,தேவாயதனம்,பிராசாதம் எனப்பல பெயர்களால் அழைப்பர். கோயிற்கட்டுமான முறைகளும்,அங்குள்ள சிற்பங்களும் ஆகமங்களிலும், சிற்பசாஸ்திர நூல்களிலும் சொல்லப்படும் விதி முறைகளுக்கமைவாக அமைக்கப்படும்.

### கோயிலின் வகைகள்

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பனையகொகுடிக் கோயில்
.. (6-71)

என்ற தாண்டகவேந்தரின் தேவாரத்தின் வழியாக சங்ககாலத்து இறுதியில் வாழ்ந்த அரசன் கோச்செங்கணான் சிவபெருமானுக்கு எழுப்பிய எழுபது கோயில்கள் பற்றியும், தேவார காலத்தில் இருந்த ஆலக்கோயில், இளங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்



கோயில், மணிக்கோயில், பெருங்கோயில் ஆகிய ஏழு கோயில்களைப் பற்றியும் அறியமுடிகின்றது. இவ் ஏழு வகைக் கோயில் வகைகள் பற்றிசிற்ப சாஸ்திரத்தில் விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிலாசம், ஸ்கந்தகாந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிரி;டம், கேசரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயில்களின் அளவுப் பிரமாணங்கள், கட்டட அமைப்பு, புறத்தோற்றம் முதலியவற்றின் அடிப்படையில் கோயில்களை வகைப்படுத்துவது ஒரு வழக்கமாகும்.

**i.** அளவுப்பிரமாண அடிப்படையில் சிறிய கோயில்களை அல்பபிராசாதம் என்றும்,பெரிய கோயில்களை மகாபிராசாதம் என்றும் வகைப்படுத்துவது வழக்கம்.

**ii.** தளங்களை அடிப்படையாகக் கொண்டு கோயில்களை ஏகதளம்,துவிதளம்,திரிதளம் முதலானவும் வர்ணிப்பர்.

**iii.** கட்டடத்தின் வடிவமைப்பு, புறத்தோற்றம் என்பவற்றின் அடிப்படையிலே கோயில்களை சதுரம்,வட்டம்,நீள்சதுரம், தூங்கானைமாடம், ட்கோணம்,எண்கோணம் என்றும் வகைப்பாடு செய்யப்படும்

**iv.** மத்தியகாலச் சாசனம் ஒன்றில் நாகர-கலிங்க-த்ராவிட-வேஸர-சதுர்ஜாதி பிரசாதவிநிர்மித சூத்ரதாரிவம்மோஜ என்னும் ஸ்தபதிஒருவன் நாகரம், கலிங்கம், திராவிடம், வேஸரம் என்னும் நான்கு வகையான ஆலயங்களை அமைத்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**v.** சிற்ப சாஸ்திரங்கள், நாகரம், வேஸரம்,திராவிடம் என்னும் மூவகைக் கோயில்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவை பிராந்தியமரபை (பிரதேசம்) மூலமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றவை என்பர்.

## மூவகைக் கோயில் பாணிகள்

பொதுவாகச் சிற்பசாஸ்திர நூல்கள் நாகரம்,வேஸரம்,திராவிடம் என்னும் மூவகைக் கோயில்பாணிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவை வெவ்வேறு பிரதேசங்களில் தோன்றி வளர்ச்சியுற்றதாகக் கூறப்படுகின்றது. இவற்றை மானசாரம், சுப்பிரபேதஆகமம் ஆகிய நூல்கள் அவற்றின் புறத்தோற்ற சிகரத்தின் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வருமாறு வர்ணித்து வகைப்படுத்தியுள்ளது.

**i.** அடியிலிருந்து நுனிவரை நாற்சதுரமாய் அமைந்த விமானம் நாகரம் எனப்படும்.

**ii.** கிரீவத்திற்கு மேலான சிகரம் வட்டமாக அமைந்திருக்குங்கோயில் வேஸரம் எனப்படும்.

**iii.** திராவிட விமாணங்களில் கிரீவத்திற்கு மேலான சிகரம் ட்கோணமாகவோ எண்கோணமாகவோ அமைந்திருக்கும் கோயில் திராவிடம் எனப்படும்.

## நாகரகலைப்பாணி

அடியிலிருந்து நுனிவரை நாற்சதுரமாய் அனமந்த விமானம் நாகரப்பாணியில் அமைந்த கோயில்கள் என்பர். இக் கோயில்கள் இமயம் முதல் விந்தியம் வரையான பரந்தநிலப் பிரதேசத்தில் அமைந்துள்ளன.

குறிப்பாக மத்திய பாரதத்தில் வளர்ச்சிபெற்ற இப் பாணிக் கோயில்கள் கஜீராஹோஎன்னும் ஊரில் அமைந்துள்ளன. இங்குசைவம்,வைணவம்,சமணம் ஆகிய மூன்று சமயங்களுக்குரிய கோயில்கள்

உள்ளன. சைவக்கோயில்களான விஸ்வநாதர்கோயில், கந்தர்யமகாதேவர்கோயில் என்பனவே கஜீராஹோவில் அமைந்துள்ள ஆலயங்களில் மிக முக்கியமானவை. நாகரகட்டடக்கலையின் உன்னத வளர்ச்சியை அதில் கண்டு கொள்ளலாம். கந்தர்யமகாதேவர் கோயில் 116.5 அடி உயரம் கொண்டது. கோயிலின் சிகரம் அலைஅலையாக உச்சிவரை வளர்ந்து 85 அங்கசிகரங்கள் கொண்டு ஒருமலைத் தொடரொன்று படிப்படியாக உயர்ந்து செல்வதைப்போல் காட்சி தருகின்றது. இதேபோல் ல;மணர் ஆலயம் என்று செ ால்லப்படும் வி;ணு கோயிலும் பஞ்சரத அமைப்பில் நாகரசிகரப்பாணியில் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இங்கு வளர்ச்சி பெற்ற நாகரப்பாணியின்




உன்னத வளர்ச்சி நிலையை பார்சுவநாதர் என்னும் சமணக்கோயிலில் கண்டுகொள்ளலாம்.

அடுத்து நாகரப்பாணியின் சிறப்புக்களை கலிங்கதேசத்துக் கோயில்களில் கண்டுகொள்ளலாம். புவனேஸ்வர்,பூரி,முகலிங்கம் முதலிய நகரங்களில் நூற்றுக்கணக்கான கோயில்கள் காணப்படுகின்றன. ஆவை அனைத்தும் கலிங்கதேசத்துக் கோயில்கள் என்றே கூறப்படும். இக்கோயில்கள் அனைத்தும் நாகரப்பாணியைச் சேர்ந்தவை. நாகரப்பாணியில் உள்ளபழங் கோயில்கள் வடஇந்தியாவில் துருக்கியரின் ஆட்சியில் அழிந்துவிட்டமையால் கலிங்கதேசத்துக் கோயில்கள் மூலமாகவேஅக்கலைப்பாணியின் வளர்ச்சியினை அறிந்து கொள்ள முடிகின்றது. கோயிலின் கட்டட அமைப்பினை விளக்குவதற்கு கலிங்கத்திலே தனித்துவமான சொற்கள் பயன்னடுத்தப்பட்டுள்ளன. அவை முறையே

- மூலஸ்தானமும் அதன்மேல் ஓங்கிஎழுந்தகட்டடமும் ரேகாதேயூல் எனப்படும்.
- முகமண்டகத்தின் இடத்தில் அமையும் பகுதியை பத்ரதேயூல் என்று கூறப்படும்.
- அதற்குமுன்னால் அமையும் நிருத்தமண்டபத்தினை நடமந்திர(ம்) என்பர்.
- கலியானமண்டம் போன்ற அமைப்பை போக மந்திர(ம்) என்பர்
- கட்டடத்தை கீழிருந்து மேலாக நோக்குமிடத்து அதிலேபி;டம், வாடம், பரண்டம்,கன்டி,ஆமலகசிலாஎன்றும் பகுதிகள் அமைந்திருக்கும் கலிங்கதேசத்துக் கோயில்களாக புவனேஸ்வரத்திலுள்ள பரசுராமேஸ்வரம், இலிங்கராஜர் கோயில், வைதல் தெயூல் கோயில், முக்தேஸ்வரம், பிரம்மேஸவரம், கேதாரேஸ்வரம், ராஜராணி ஆகியவற்றையும் பூரியில் அமைந்துள்ள ஜகந்நாதர் கோயில், கோனரகத்து சூரியனரார் கோயில் எனபன கலிங்கத்துக் கலைஞர்கள் நிர்மாணித்தவற்றுள் மகோன்னதமானவை. அவற்றின் அமைப்பு முறைகளும் தனிரகமானவை. நாகரப்பாணியின் சிறப்பிற்கு மகுடம் போன்றவை.

இதேபோல் வதாபிச்சாளுக்கியர் கலைப்பாணிக் கோயில்கள் சிலவற்றிலும் நாகரக் கலைப்பாணியின் செல்வாக்குகாணப்படுகின்றது. பாபநாதர் கோயில், காசிதேசுவரர் கோயில் காசிநாதர் கோயில், சம்புலிங்கேஸ்வரம் ஆகிய நான்கும் நாகரபாணியில் அமைந்தவை. இதேபோல் ஆலம்பூர் என்னும் இடத்தில் அமைந்துள்ள நவபிரமாகோயில்கள் நாகரபாணியில் அமைந்தவை.

வேஸர கலைப் பாணி

கிரீவத்திற்கு மேலான சிகரம் வட்டமாக அமைந்திருக்கும், கோயிலை வேஸர கலைப்பாணி என்று அழைப்பர். காமிகாகம கூற்றின்படி கிரு;ண நதிப் பள்ளத்தாக்கில் உள்ள கோயில்கள் வேஸரப்பாணிக் குரியது. ஆவை கதம்பநாகரகட்டடக் கலைமுறையினை மூலமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றவை. வேஸரம் என்ற வகைக்குரிய கோயில்களிலே நாகரம். திராவிடம் ஆகியவற்றின் சாயல்கள் படிந்துள்ளன.

தக்கணத்திலேகதம்பர் காலத்தில் உற்பத்தியாகி- வதாபிச் சாளுக்கியரதும் காலங்களிற் பெருவளர்ச்சியடைந்த வேஸரகலைப்பாணி 12ஆம் 13ஆம் நூற்றாண்டுகளிலே ஹொய்சளரதும்,காகதீயரதும் ஆட்சியில் உன்னத வளர்ச்சி அடைந்தது.

வேஸர கலைப்பாணியிலமைந்த கட்டடங்கள் விந்தியமலைக்கும் துங்கபத்திரை நதிக்கும் இடையிலமைந்த நிலப்பகுதியில் காணப்படும் என்று சிற்பசாஸ்திரங்களும்,ஆகமங்களும் கூறினாலும் அவற்றைக் கர்நாடகத்திலேயே பொதுவாகக் காணமுடியும். வேஸரக் கலைப்பாணி முற்காலத்து வாதாபிச்சாளுகியரின் கட்டடக்கலையை மூலமாகக் கொண்டது. ஐகோளே,



பட்டதகல், வாதாபி, ஆலம்பூர் ஆகிய நகரங்களில் 7ம் 8ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த கற்றளிகள் உள்ளன. ஆவை நாகர,திராவிட முறையிலும் கட்டப்பட்ட கட்டடங்கள் உள்ளன. அதனால் கல்யாணசாளுக்கியர் கலைப்பாணிக் கோயில்களில் வேஸரம் எனும் கலைப்பாணிஅழுத்தம் பெற்று வந்துள்ளதை காண முடிகின்றது. கல்யாணிச் சாளுக்கியர் காலம் முதலான ஆவணங்களில் வேஸரம் என்ற சொல் வழக்குகள் குறிக்கப்பட்டுள்ளன. திராவிடப்பாணியில் உள்ள வாறு வேஸர கலைப்பாணியிலும் கட்டட அமைப்பில் விமானம்,மண்டபம் ஆகியன இரண்டும் பிரதான பகுதிகளாக விளங்குகின்றன. விமானத்தின் மேற் புறத்திலே பலதள அமைப்பு இடம் பெற்றுள்ளது. அதன் உச்சியில் ஆமலகவளைவு (குடை போன்றஅமைப்பு) அண்டவடிவமாய் அமைந்திருக்கும். மண்டபங்கள் விமானத்தைக் காட்டிலும் கூடிய அகலத்துடன், தட்டையான கூரையுடன் தூண்கள் பொருந்தியதாக அமைந்திருக்கும்.

**வேஸரகலைப் பாணிக்குரிய சிறப்பியல்புகளை**

**1)குக்கனூரிலுள்ள கல்லேஸ்வரம்**
**2)லக்குண்டி சமணக்கோயில்**
**3)சௌத்தம்பூர் முக்தேஸ்வரம்**
**4)லக்குண்டிக் காசி விஸ்வேஸ்வரம்**
**5)இட்டகி மாகாதேவர் கோயில்**
**6)குருவட்டி மல்லிகார்ச்சுனர் கோயில்**

முதலிய கோயில்களில் கண்டு கொள்ளலாம் சாளுக்கியர் காலத்தில் மலர்ச்சி பெற்ற வேஸர கலைப்பாணி துவாரா சமுத்திரத்து ஹொய்சலமன்னர்களின் ஆட்சிக்காலத்திலே கர்நாடக தேசத்தில் முதிர்ச்சி நிலையை அடைந்தது. ஹொய்சலர் இராட்சியத்தின் பகுதிகளில் சுமார் 80 ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் சிலவேஸரக் கலைப்பாணியில் உருவானவை. விமானத்தோடு கூடிய கர்ப்பகிருகம்,அந்தராளம், நவரங்கம் எனப்படும் மண்டபம் ஆகிய மூன்று உறுப்புக்களைக் கொண்டுள்ளது. இங்குள்ள கோயில்கள் திரிகூடாசலம் என்று அழைக்கப்படும் தனித்தனி அந்தசாளத்துடன் கூடிய மூன்று விமானங்களைக் கொண்டிருக்கும். ஹொய்சலர் கலைப்பாணியின் உன்னதமான உதாரணங்களாக,

**1) சோமநாதர்புரத்துக் கேசவர் கோயில்**
**2) வேலூர் சென்னகேஸ்வரர் கோயில்**
**3) ஹளேவீட்டு ஹொய்சால ஈஸ்வரக்கோயில்**
**ஆகிய மூன்றையும் குறிப்பிடலாம்.**



# தமிழே முருகன்

**தொ**ன்மையும் நன்மையும் படைத்த மொழி தமிழ். இதனைப் பயின்று பேசுகின்ற உலகம் நல்லுலகம். வடவேங்கடம் தென்குமரி யாயிடை தமிழ்கூறு நல்லுலகம் என்பார் பனம்பாரனார். தமிழுக்கு அமிழ்தென்று பெயர். அமிழ்தம்போல் இனிமையுடையது. வேறு ஒரு மொழிக்கு இதுபோன்று அருமையுடையதாக அமையவில்லை. தமிழில் மூன்று ஓசைகள் - வல்லோசை, மெல்லோசை, இடையோசை என்பன. இந்த மூன்று ஓசைகளிலிருந்து மூன்று எழுத்துக்கள் இயைந்து, வல்லோசையில் த, மெல்லோசையில் மி, இடையோசையில் ழ் என மூன்று இடங்களில் மூன்று எழுத்துக்கள் கூடித் தமிழ் என வந்தது.




சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதர்,
சித்தாந்தரத்தினம்,
திருமதி.சிவானந்தஜோதி
ஞானசூரியம்– M.A


**சங்கத்தமிழ்:-** பற்பல அறிஞர்கள் கூடி சங்கம் அமைத்து ஆய்ந்து உவந்த மொழி தமிழ். அதனால் இது சங்கத் தமிழ் என வழங்குகின்றது. சங்க என்ற அடைமொழி பிற மொழிகளுக்கு இல்லை என்பதை நினைவு கூரலாம். இதை ஔவையார்,

''துங்கக்கரிமுகத்து தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா''

எனப் பாடியுள்ளார். இருப்பினும் சங்கம் என்பது வடமொழி என்றும் கூடல்; என்பதே தமிழ் மொழி என்றும் மனம்கொள்ளத்தக்கது.

**முத்தமிழ்:-** சங்கத் தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளாக இருப்பதனால் ததால் சத் - சித் - ஆனந்தம் என மூன்று தன்மைகள் உண்டு. சத்து - இயல், சித்து - இசை, ஆனந்தம் - நாடகம்.



இப்படி சச்சிதானந்தமாக விளங்குவது தண்டமிழ். அதுதான் வண்டமிழ் என்பதாம்..

**முந்து தமிழ்:-** கட, தப எனப் பிறமொழிகள் வன்மையாக ஒலிக்கும் இயல்புடையவை. கட, தப மென்மையாகவும், இயல்பாகவும் ஒலிப்பது தமிழ் மொழியில். கனமான மொழிகள் சொல்லும்போது பிந்தித்தான் ஒலிக்கும். மென்மையான மொழி இலகுவாக முந்தி ஒலிக்கும். அந்த மொழி இறைவனுடைய செவியில் முந்தும். ஆதலினால் முந்து தமிழ் எனப் புகழாய் நின்றது. இதை, முந்து தமிழ் மாலை கோடிக் கோடி என அருணகிரிநாதர் பாடுகிறார்.

**''முத்தமிழடை வினை முற்படு கிரிதனில்**
**முற்பட எழுதிய முதல்வோனே''** எனத் திருப்புகழிலும் காணப்படுகிறது.

வாழும் மொழியும், வாழவைக்கும் மொழியும் எமது எழிலுடன் இலங்குவது இன்றமிழ். இனிமையுடன் தனிமையாக இயங்குவது தமிழே. தமி என்ற பகுதியடியாகப் பிறந்தது தமிழ். தானே தனித்து இயங்கும் தகவுடையது.

என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்டான் என்கிறார் கம்பநாடார்.

ஒருகாலம் தமிழ் வடக்கே இமயம் தொடங்கி தெற்கே குமரி வரை பரவியிருந்தது என எம் பழைய இலக்கியங்கள் கூறுவதை அறியலாம்.;

**முருகனின் சிறப்பு**

தொல்காப்பியம் மலையும் மலை சார்ந்த பகுதியுமான குறிஞ்சி நிலக் கடவுள் முருகன் என்றும், அதை சேயோன் மேய மைவரை உலகமும் என்கிறது. முருகு என்ற சொல் இளமை, மணம், அழகு, தெய்வம், அறிவு என்று பொருள்படுகின்றது. அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருகன் என திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கூறுகிறார். இறைவன் இன்ப அன்பு வடிவானவன். முருகன் என்றாலே அழகன். தமிழ் என்றைக் குண்டோ அன்றே முருகன் உளன். எங்கெல்லாம் தமிழ் இருக்கிறதோ அங்கெல்லாம் முருகன் இருக்கிறான். அதனால் தமிழ் கடவுள் முருகன் என்ற சிறப்புடையது. அகத்தியருக்கு தமிழுரித்த பெருமையும், அருணகிரியாருக்கு சங்கத் தமிழிலே பாடவைத்த பெருமையும் செந்தமிழ் பரமாச்சாரியன் முருகன் தலைச்சங்கத்தில் இருந்து தமிழாராய்ந்த பெருமையும் செந்தமிழுக்கும் செவ்வேளுக்கும் மிகுந்த தொடர்புண்டு என விளக்கப்படுகின்றது. முருகன் கருத்துப் பொருளாக நம்முடன் என்றும் கலந்திருப்பதையும் வழிகாட்டுவதையும் நாம் உணரலாம். அந்த உணர்ச்சியே நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன் என்ற உபதேச வாக்கியமும் இதுவே.

**''சிந்தை நொந்தவனுக்குக் கந்தனே துணை**
**விழிக்குத் துணை திரு மென் மலர்ப்பாதம்''**

வழிக்குத் துணை வடிவேல். இன்னும் எத்தனையோ பெருமைகள் உள்ளன.

சங்க இலக்கியப் பரிபாடலில் 22 பாடல்களில் எட்டுப் பாடல்கள் முருகனைப் பற்றியது. முருகன் பிறப்பு, வரலாறு, வழிபாட்டு முறை, படைவீடு , பரங்குன்றச் சிறப்பு போன்றவை பேசப்படுகின்றது. முருகன் என்றைக்கும் உள்ளவன் என்று வேதம் சொல்லுகிறது.

சுப்பிரமணியோம் (ஓம்) என்று மூன்று முறை கூறினால் பிரணவம் உண்டாகும் என இருக்கு வேதம் கூறுகிறது. பிரம்மண்ய என்பதும் வேதத்தில் முருக வழிபாட்டையே குறிக்கின்றது.

**தமிழும் முருகனும்-**

தமிழ் என்றும் இளமை மாறாதது. முருகனும் என்றும் அகலாத இளமையானவன். அதற்காகத்தான் வால வடிவான வேலவா என்று நல்லந்துவனார் பெருமைப்படுத்துகிறார்.

முருகனுக்கு தோள்கள் 12.
தமிழில் உயிர் எழுத்துக்கள் 12.
முருகனுக்கு கண்கள் 18
தமிழில் மெய் எழுத்துக்கள் 18
முருகனுக்கு முகங்கள் 6
தமிழில் இன எழுத்துக்கள் -வல்லினம் 6,
மெல்லினம் 6, இடையினம் 6.
முருகனுக்கு வேல் 1
தமிழில் ஆயுத எழுத்து 01

கந்தர் அலங்காரத்தில் அருணகிரியாரின் 70 ஆவது பாடலில் தமிழ் எழுத்தின் ஒலிச் சிறப்பையும் தமிழையும் நோக்குகையில்,

''விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மரமுமே''

இப்பாடலில் எமது கண்களை படைத்தற்குப் பயன் கந்தப் பெருமானுடைய திருவடி மென்மையேயாம். என்றும், மொழிக்குத் துணை என்று கூறாமல் மெய்மை குன்றா மொழி என்றது சொல்லுக்குத் துணை மெய்மை என்று சாடுகின்றார். அடுத்து முருகாவென்னும் நாமங்கள் என்கிறார். முருகாவெனும் நாமம் என்று கூறாமல் நாமங்கள் என்று பன்மையில் கூறுவது சிந்திக்கத்தக்கது. இதற்கு பல காரணங்கள் உள. எல்லா நாமங்களிலும் சிறந்தது முருகா என்பது என்றும், அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும், ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும் என்று நக்கீரர் சொன்னதன் நோக்கம் ஆவி பிரியும்போது முருகா என்று மூன்று முறை கூறினால் முற்பிறப்பு தீ வினை நீங்குதற்கு உறுதுணை என்கிறார். அடுத்து முருகா என்பது குறுகி முருகு என்றால் ம் + உ ஸ்ரீ மு, ர் + உ ஸ்ரீரு, க் + உ ஸ்ரீ கு, என்று ஒரு சொல்லில் மூன்று உ உருபுகள் வந்து பன்மையாகி முருகா எனும் நாமங்கள் என்றார். வியப்புக்குரிய மொழி நடையாயுள்ளது. அதிலும் இடையினத்தில் மு வும் மெல்லினத்தில் ரு வும், வல்லினத்தில் கு வும் சேர்ந்து மூன்று இன இலக்கணத்தில் அமைந்து தமிழ் மொழியை உயர்த்தி தமிழே முருகன் என உய்த்துணர முடிகின்றது.

மேலும் தமிழின் சிறப்பைக் கூறுமிடத்து, முதலில் முருகனின் முகத்தை ஆறுமுகம் என்று சொல்லாமல் தோளை எடுத்துக் கூறியதன் காரணம், ஒருவரின் பெருமை தோளில்தான் அமைந்துள்ளது. ஒருவரைக் காணும்போது அவருடைய உடலைக் காண்பது மடமை. அவரின் செயலைக் காண்பது கடமை. இராமரைக் காணும்போது அவரது தீரச்செயல்கள் தாடகை வதம், அகலிகையின் சாப நீக்கம், வில்லை உடைத்தல். அந்த வகையில் கம்பர் தமிழில் அழகாக, தோள் கண்டான் தோளே கண்டான் என்றார்.

அதேமாதிரித்தான் முருகனுக்கு, அவருடைய வீர தீர செயல்களை முன்வைத்து, ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க என கச்சியப்பர் கூறினார. இதுதான் தமிழில் முருகன் சிறப்பு.

முருகனது திருக்கரத்தின் வேல் எந்தத்தெய்வத்திற்கும் இல்லாத சிறப்புடைய ஆயுதம். அதாவது மக்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிடும்பொது,



தங்கவேல், முத்துவேல், கதிர்வேல், வடிவேல், வெற்றிவேல், என்று பெயரிடுவது, மற்றைய தெய்வங்களின் ஆயுதத்தை இவ்வாறு பெயரிடுவதில்லை. இதுவும் ஒரு சிறப்பாகும். அதுபோல் வேறு எந்த மொழியிலும் இல்லாத ஆயுத எழுத்து தமிழுக்கு உண்டு. வெல் என்ற முதல் நிலை நீண்டு தொழிற் பெயராய் வேல் என எல்லாவற்றையும் வெல்வது ஞானம் ஒன்றேயாகும். அது தமிழில் அறிவு ஆகும். இதன் இலக்கணம் அடிப்பகுதி-ஆழம், இடைப்பகுதி-அகலம், நுனிப்பகுதி.-கூர்மை அதனால் ஆழ்ந்தகன்ற நுண்ணியனே என்றார் மணிவாசகப் பெருமான். இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்று தன்மையுடையது என்பதால் ஆயுத எழுத்தும் மூன்று புள்ளிகளுடையதாகும். அரும் பெரும் காவியமும் நுண்ணிய கருத்துக்களும், புண்ணியப் பாடல்களும் அமைந்த மொழி தமிழ் மொழிதான். இதனால்தான் இறைவனைப் பாடும் பெரும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்கிறார் அருணகிரியார், மேலும் இறைவன் சேக்கிழாருக்கு உலகெலாம் என்றும், சுந்தரருக்கு பித்தா என்றும், அருணகிரியாருக்கு முத்தைத்தரு என்றும் தமிழில் அடியெடுத்துக் கொடுத்த பெருமை வேறு எந்த மதத்திலும், மொழியிலும் காணப்படாத எமக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

அருணதள பாத பத்ம அனுதினமுமே துதிக்க அரிய



*தமிழ் தானளித்த மயில் வீரா என்றும், செந்தில் வாழ் செந்தமிழ் பெருமாளே என்றும்,*

**''முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பான் என்றும் பாடுகிறார்.**

**சிவபெருமான் சுந்தரரை தமிழால் பாடு என்றதும், சொற்றமிழ் பாடு என்றார் தூமறை பாடும் வாயார்''** *என்றார்.*

*திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்த்தல் எளிதாமே என்பது பட்டினத்துச் சுவாமிகள் வாக்கு.*

*முருகன் சிவபெருமானுக்கு ஓம் என்ற தனி மந்திரத்தை உபதேசித்தபோது தமிழ் தனி எழுத்தையும் அதன் உட்பொருளையுமே எடுத்துக் கூறினார். நமது காதுகளும் தமிழ் ஓங்காரம்போலவே அமைந்திருப் பதை நுணுகியறியலாம். வடமொழியிலுள்ள தர்மம் சர என்ற வேத வசனத்தை தமிழில் ஔவையார் அறம்செய விரும்பு என்ற கருத்தில் அழைக்கும் அருமை தனிப் பாராட்டுக்குரியதல்லவா?*

*எனவே திருவள்ளுவர் கூறிய தென்றமிழும் திருமூ லர் ஓதிய தீந்தமிழும் இளங்கோவடிகள் இயம்பிய இன்றமிழும் நால்வர் பாடிய நற்றமிழும், சேக்கிழார் ஓதிய தெய்வத் தமிழும் ஆண்டாள் அளித்த அமிழ் தத் தமிழும் நம்மாழ்வார் நவின்ற நற்றமிழும் கம்பர் களற்றிய கன்னித் தமிழும் அருணகிரிநாதர் அளித்த அருந்தமிழும் தாயுமானவர், பகழிக்கூத்தர், குமரகு ருபரர் முதலிய பெருமக்கள் முருகனுக்கு வழங்கிய தண்டமிழும் தமிழ் உலகை வாழ்வித்தவை. இவற்றை எல்லோரும் ஓதி உவட்டாத இன்பத் தேனைப் பருகி உய்வு பெறுவோமாக.*



# நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகள் தென்கயிலை வருகை

**2020** அக்டோபர் ஐந்தாம் திகதி தென்கயிலை ஆதீனம் மகிழ்ச்சியில் திளைத்தது. என்றுமில்லா தவாறு குருமார்களும் ஏனையவர்களும் நீண்ட காலப் பிரிந்த உறவை சந்திக்கும் நிலையில் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். உண்மை ... முதன் முறையாக நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகள் தென்கயிலை ஆதீனத்திற்கு வருகை தந்து கொஞ்ச நாள் சுவாமியுடன் தங்க வேண்டுமென்ற வேலன் சுவாமிகளின் ஆசை நிறைவேறும் தருணம் அது.

இன்றைய தினம் மேலும் ஒரு சிறப்பு நிகழ்வு இடம் பெற்றது. நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகள் அவர்கள் தென்கயிலை ஆதீனத்திற்கு முதற்தடவையாக வருகை தந்து பூசை நிகழ்விலும் கலந்து கொண்டார்.

அன்று ஏழு லிங்கங்கள் தென்கயிலை ஆதீனம் சிவன் மலையில் உயிர்ச்சக்தி கொடுக்கப்பட்டு அமர்தப்பட்டுள்ளன. கார்த்திகேசநாதர், குமாரலிங்கேச்சுரர், விபூதிநாதர், கதிர்காமநாதர், சச்சிதானந்தர், இராமேசுவரர், கஜமுகலிங்கேச்சுரர் ஆகிய லிங்கப் பெருமான்களுக்கு உயிர்ச்சக்தி கொடுக்கப்பட்டது.



அதேவேளை ... சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனத்தின் நிறுவனர் மதிப்புக்குரிய கலியுகவரதன் ஐயாவும் இப்பூசையில் கலந்து கொண்டமையும் சிறப்பு அம்சமாகும்.

துறவிகள் மூன்று நாட்கள் ஒன்று சேர்ந்து தங்கியிருந்து கதைப்பது என்பது அற்புதமான தருணங்களாகும். அத்தருணங்கள் யாவும் சிவப்பரம்பொருளின் சித்தமே.

முதற் குருமகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர்



அடிகளார், நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகள், இளையபட்டம் தவத்திரு திருமூலர் தம்பிரான் , ஆகியோர் கலந்து கொண்ட லிங்க பூசையை, செந்தமிழாகம தலைமை அருட்சுனைஞர் உயிரொளி சிவம் பிரதாபனார் , செந்தமிழாகம அருட்சுனைஞர் தயாளன் ஐயா, உதவி அருட்சுனைஞர்கள் மனோஜ் ஐயா, இளங்கோ ஐயா ஆகியோர் இயற்றி வைத்தனர்.







# மன்னும் கயிலைமலை தங்கமே தங்கம்

மன்னும் கயிலைமலை தங்கமே தங்கம்
வதனம் தோன்றுதடி தங்கமே தங்கம்
மின்னும் பரமனொடும் தங்கமே தங்கம்
வேதம் தெரியுதடி தங்கமே தங்கம்

எண்ணத் தலைப்படிலோ தங்கமே தங்கம்
இதயம் மலருதடி தங்கமே தங்கம்
கண்ணிற் சொலிக்குமருள் தங்கமே தங்கம்
கடவுட் இருப்பிடமே தங்கமே தங்கம்

சுற்றி வளைக்கினுமோர் தங்கமே தங்கம்
சொர்க்கம் தடைப்படுமோ தங்கமே தங்கம்
பற்றும் திருச்சதகம் தங்கமே தங்கம்
பாசம் பொலியுதடி தங்கமே தங்கம்

கற்கைக் கவிக்குளத்தே தங்கமே தங்கம்
கர்வம் கொள்ளுதடி தங்கமே தங்கம்
பொற்கைத் தாண்டமும் தங்கமே தங்கம்
புதுமை நடமிடுதே தங்கமே தங்கம்

அற்பம் கரையுதடி தங்கமே தங்கம்
அற்புதம் தெரியுதடி தங்கமே தங்கம்
சர்ப்பம் கழலடியே தங்கமே தங்கம்
சரசம் பயிலுதடி தங்கமே தங்கம்

வையம் காக்குதடி தங்கமே தங்கம்
மருவும் கயிலைமலை தங்கமே தங்கம்
மெய்யைப் பதந்புகலும் தங்கமே தங்கம்
மேதினி வதம்விலகும் தங்கமே தங்கம்

சிற்பம் தெரியுதடி தங்கமே தங்கம்
சிவர்க்குக் கலைவடிவே தங்கமே தங்கம்
கற்பம் மனக்குகையில் தங்கமே தங்கம்
கருவறை யாகுதடி தங்கமே தங்கம்

சூழும் நிலக்கொடுமை தங்கமே தங்கம்
சூலம் விலக்கிவிடும் தங்கமே தங்கம்
வாழும் மனுக்கதவம் தங்கமே தங்கம்
மன்பதை யாக்குமடி தங்கமே தங்கம்

சொர்க்கம் தெரியுமடி தங்கமே தங்கம்
சிவனும் கயிலையிலே தங்கமே தங்கம்
நிற்கும் நடம்புகலும் தங்கமே தங்கம்
நிசத்தை வசமுரைக்கும் தங்கமே தங்கம்

மன்னும் மனுக்குலமே தங்கமே தங்கம்
மாமறை புகலுமடி தங்கமே தங்கம்
கன்னல் மகிழ்ந்துவரும் தங்கமே தங்கம்
காதல் பிறந்திடுமே தங்கமே தங்கம்



ஞானக்கவி
தேசபாரதி தீவகம்
வே.இராசலிங்கம்
கனடா



# தேடலின் திரவியம்

## ஆசிரியருக்கும் மாணவருக்கும் விவாதம்

**கடவுள் இருக்கிறாரா?என்பது தொடர்பாக ஒரு ஆசிரியருக்கும், மாணவருக்கும் உண்மையாக நடந்த விவாதம்:**

நாத்திகவாதியான ஒரு தத்துவப் பேராசிரியர் கடவுளின் இருப்பைப் பற்றி வகுப்பறையில் விளக்கிக் கொண்டிருந்தார்.

கடவுளை அறிவியல் ஆணித்தரமாக மறுப்பதைப் பற்றிய பேசிய அவர். ஒரு மாணவரை எழுப்பி கேள்வி கேட்கலானார்.

நீ கடவுள் இருப்பதாக நம்புகிறாயா?

'நிச்சயமாக ஐயா' மாணவன் சொன்னான்.

'கடவுள் நல்லவரா?

'ஆம் ஐயா'

'கடவுள் அளப்பரிய சக்தி படைத்தவரா?'

'ஆம்'

'என்னுடைய சகோதரர் புற்றுநோய் காராணமாக இறந்துவிட்டார். தன்னைக்காப்பாற்ற கடவுளிடம் அவர் மனமுருகிப் பிரார்த்தனை செய்தபோதும் கடவுள் கைவிட்டு விட்டார்.

நாம் எல்லோருமே நோய் வாய்ப்பட்டோர்களுக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்கிறோம். ஆனால் கடவுள் அவர்களைக் காப்பாற்றுவதில்லை. பின் எப்படிச் கடவுள் இருக்கின்றார் எனச்சொல்கிறாய்?

(மாணவர் அமைதியாய் இருக்கிறார்)

'உன்னால் பதில் சொல்ல முடியவில்லை'. இல்லையா?

சரி.........நாம் மீண்டும் ஆரம்பிப்போம்,

'கடவுள் நல்லவரா'?

'ஆம் ஐயா'

'சாத்தான் நல்லவரா?'

'இல்லை'

'எல்லாரும் கடவுள் படைப்புதான் என்றால் சாத்தான் எங்கிருந்து வந்தார்'?

'கடவுளிடமிருந்து தான்'

'சரி இந்த உலகத்தில் கெட்டவை இருக்கின்றனவா'?

'ஆம்'

'அப்படியென்றால் அவற்றை உருவாக்கியது யார்'?



(மாணவர் பதில் சொல்லவில்லை)

'இவ்வுலகதில் பசி இருக்கிறது, பஞ்சம் இருக்கிறது, மூட நம்பிக்கைகள் இருக்கின்றன'. இவையெல்லாம் எங்கேயிருந்து வந்தன?

(மாணவர் மௌனமாய் நிற்கிறார்)

விஷயங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு நமக்கு ஐம்புலன்கள் இருக்கின்றன என்று அறிவியல் சொல்கிறது. இப்போது சொல், கடவுளை கண்ணால் கண்டிருக்கிறாயா? அவர் பேசுவதைக் காதால் கேட்டிருக்கிறாயா? அல்லது கடவுளின் வாசனையை நுகர்ந்திருக்கிறாயா? வேறு எப்படித்தான் அவரது இருப்பை உணர்ந்திருக்கிறாய்?'

..............................(மௌனம்)

'ஆனாலும் நீ கடவுளை நம்புகிறாய். அப்படித்தானே?'

'ஆம் ஐயா'

'நம் நடைமுறை வாழ்க்கையிலும் சரி. பரிசோதிக்கத்தக்க வகைகளிலும் சரி. ஆதாரங்களுடன் விளக்கக் கூடிய வழிமுறைகளிலும் சரி. எல்லாவற்றிலுமே அறிவியல் சொல்கிறது. கடவுள் இல்லை என்று இதற்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய்?'

'ஒன்றுமேயில்லை, எனக்கு நம்பிக்கை மட்டுமே உள்ளது'

'ஹம்ம்......நம்பிக்கை..........அதுதான் இப்போது பிரச்சனையே...'என்று ஆசிரியர் பெருமூச்செறிகிறார்.

(இப்போது மாணவர் தன் வாதத்தை ஆரம்பிக்கிறார்)

'ஐயா...........வெப்பம் அல்லது சூடு என்ற ஒன்று உள்ளதா?'

'நிச்சயமாக உள்ளது.'

'அதே போல் குளிர் என்ற ஒன்றும் உள்ளதா?'

'நிச்சயமாக.'

'இல்லை ஐயா, நிச்சயமாக குளிர் என்ற ஒன்று இல்லை.'

(வகுப்பறையில் நிசப்தத்தில் ஆழ்கிறது)

'ஐயா....வெப்பத்தில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு நிலை வெப்பத்திற்கும் ஒவ்வொரு பெயர் உள்ளது. மனித உடல் தாங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையும், தண்ணீர் ஆவியாவதற்கு ஒரு வெப்ப நிலையும், இரும்பு குழம்பாவதற்கு ஒரு வெப்பநிலையும் இருக்கின்றன.

வெப்பம் என்பது ஓர் ஆற்றல். குளிர் என்பது வெப்பத்திற்கு எதிர்பதம் அல்ல. வெப்பம் எனும் ஆற்றலின் இல்லாமையே குளிர் என்பது .

வெப்பம் இல்லை என்பதைத்தான் குளிர் என்று சொல்கிறோம்

(குண்டூசி விழும் சப்தம்கூட கேட்குமளவிற்கு அமைதியாயிருக்கிறது வகுப்பறை)

'சரி, இருட்டென்றால் என்னவென்று சொல்லுங்கள் ஐயா, அப்படி ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?'

'ஆமாம் தம்பி, இரவில் இருட்டாகத்தானே இருக்கிறது.'

'நீங்கள் மறுபடியும் தவறாகக் கூறுகிறீர்கள் ஐயா, இருட்டு என்பதே வெளிச்சத்தின் இல்லாமைதான்.

நீங்கள் வெளிச்சத்தை அளக்க முடியும். குறைந்த ஒளி, நிறைந்த ஒளி, கண்ணை கூச்ச செய்யும் ஒளி என பற்பல வகைகளில் வெளிச்சத்தைப் பிரிக்க முடியும். அளக்கவும் முடியும்.

ஆனால் 'ஒளி என்பதே இல்லாவிட்டால் அதற்குப் பெயர்தான் இருட்டு. அதை அளக்க முடியாது, இல்லையா?'

'சரி தம்பி, நீ என்னதான் கூற வருகிறாய்?'

'ஐயா........நான் கூறுகிறேன், கடவுளைப்பற்றிய உங்கள் கருத்து பிழையானது.'

'பிழையா? எப்படி என்று விளக்கிக் கூற முடியுமா?'

'ஐயா, நீங்கள் எதிலுமே இரட்டை நிலைப்பாடு கொண்டிருக்கிறீர்கள்.

ஒன்று இருந்தால் அதற்கு எதிரிடையான ஒன்றும் இருக்கிறது என்பது உங்கள் வாதம்.

உதாரணத்திற்கு நல்ல கடவுள் கெட்ட கடவுள், இருட்டு - வெளிச்சம், வெப்பம் குளிர். நீங்கள் கடவுள் என்பவருக்கு ஒரு முடிவு அல்லது எல்லை என்ற

ஒன்று உண்டு என்பதாகக் கருதுகிறீர்கள்.

அதை நம்மால் அளக்க முடியவேண்டும் எனவும் வாதிடுகிறீர்கள். அறிவியல் மூலம் எண்ணங்கள் எப் படி உருவாகின்றன என்பதை உங்களால் விளக்க முடியாது.

எண்ணங்கள் உருவாவதே உடலினுள் கலக்கும் மின் மற்றும் காந்தத் தூண்டல்களினால்தான்.

மின்சாரத்தை அளக்க முடிந்த உங்களால் காந்தத் தன்மையை விவரிக்க முடிந்த உங்களால் எண்ணங்க ளின் தோற்றத்தை அளக்க முடியவில்லை.

இறப்பு என்பதை வாழ்வதின் எதிர்பதமாகக் கருதுகி றீர்கள்.

உண்மையில் 'வாழ்வு இனி இல்லை' என்ற தன் மையே இறப்பு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வில்லை.

சரி, இப்பொழுது சொல்லுங்கள் ஐயா,

'குரங்கிலிருந்து மனிதன் உருவானான் என்கிறீர் களா?' - கேட்டான் மாணவன்

.இயற்கையான பரிணாம வளர்ச்சியைப் பற்றி நாம் பேசுவோமோனால், ஆம் அதுதான் உண்மை, குரங்கி லிருந்து மனிதன் உருவானான்' பேராசிரியர் பதிலு ரைத்தார்.

'உங்கள் கண்களால் மனிதப்பரிமான வளர்ச்சியை கண்டிருக்கிறீர்களா- மடக்கினான் மாணவன்.

(பேராசிரியர் தன் தலையை இல்லை தன் தலைமை இல்லை என அசைத்தவாறே, புன்முறுவல் பூக்கலா னார், விவாதம் செல்லும் போக்கை அறிந்தவராய்)

மாணவன் தொடர்ந்தான், 'அப்படியென்றால். யாருமே மனிதப் பரிமாண வளர்ச்சியை தத்தமது கண் களால் கண்டதில்லை. எல்லாமே ஒரு வகையான அனுமானம்தான்.

இன்னும் சரியாகச் சொல்லப்போனால் குரங்கி லிருந்து மனிதன் உருவானான் என்பது உங்கள் கருத்து. அதை நிரூபிப்பதற்கு உங்களிடம் ஆதாரம் ஏதுமில்லை என்பதே உண்மை.

உங்களுக்குச் சரியெனப்படும் ஒன்றை எங்களுக்கு போதிக்கிறீர்கள் இல்லையா? அப்படியானால், நீங்கள் ஒரு விஞ்ஞானியா அல்லது போதகரா?

(மாணவர்கள் சீட்டின் நுனிக்கே வந்து விடுகிறார் கள்)

'இங்கே யாராவது நம் பேராசிரியரின் மூளையைப் பார்த்திருக்கிறீர்களா?'

(வகுப்பறை கொல்லெனச் சிரிப்பொலியால் அதிர்கி றது)

'மாணவர்களே யாரவாது நமது பேராசிரியரின் மூளையைத் தொட்டுப் பார்த்திருக்கிறீர்களா? அது இருக்கிறதென உணர்ந்திருக்கிறீர்களா? அதன் வாச னையாவது நுகர்ந்திருக்கிறீர்களா?



உங்கள் ஐம்புலன்களும் நமது பேராசிரியரின் மூளையை தொட்டதோ, பார்த்ததோ, நுகர்ந்ததோ இல்லை அல்லவா, அப்படியென்றால் நம் நடை முறை வாழ்க்கையிலும் சரி, பரிசோதிக்கத்தக்க வகை களிலும் சரி, ஆதாரங்களுடன் விளக்கக்கூடிய வழி முறைகளிலும் சரி, எல்லாவற்றிலுமே அறிவியல் செ ால்கிறது, உங்களுக்கு மூளை இல்லை! என்று.

மூளையே இல்லாத நீங்கள் நடத்தும் பாடங்களை நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் ஐயா?

(மாணவரின் சரமாரிக் கேள்விகளால் வகுப்பறை யில் அமைதி நிலவுகிறது. ஆசிரியரின் முகமோ வெளி றிப்போகிறது)

'நீ எனக்கு மூளை இருக்கிறதென நம்பித்தான் ஆக வேண்டும் தம்பி' என்றார் பேராசிரியர்.

'அதுதான் ஐயா........ இவ்வளவு நேரம் நான் சொல்ல வந்தது. பார்க்க முடியவில்லை என்றாலும், தொடமுடியவில்லை என்றாலும் உணர முடிந்த கட வுளை நம்பித்தான் ஆகவேண்டும்.

மனிதனையும் கடவுளையும் இணைக்கும் ஊடகத் தின் பெயர்தான் நம்பிக்கை என்பது.

இதுதான் உலகத்தில் சகலமானவற்றையும் இயங் கிக்கொண்டிருப்பது.

'நம்பிக்கை இல்லையேல் வாழ்க்கை இல்லை'

இவ்வாறாக விவாதம் நிறைவுற்றது. இது ஒரு உண் மைச் சம்பவம்!

இறுதி வரை பின்வாங்காமல் விவாதித்த அந்த மாண வர், வேறு யாருமல்ல.

ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் - இந்திய முன்னாள் குடி யரசுத்தலைவர்



# பண்டைத் தமிழரின் இசைக்கருவிகள் பற்றிய சுவாமி விபுலானந்தரின் கருத்துக்கள்



பேராசிரியர்
பாலசுந்தரம் இளையதம்பி
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலை கனடா
வளாகம்.
ரொறன்ரோ.

இசைக்கருவிகள் உலகப் பண்பாடுகள் அனைத்திற்கும் பொதுவானவையாகவும் பொதுப்பண்புகளைக் கொண்டனவாகவும் அமைந்தவை. பூர்வீககாலம், இடைக்காலம், நவீனகாலம் ஆகியநாகரிககாலங்களின் படி முறைவளர்ச்சியின் அடிப்படையில் இசைக்கருவிகளின் தோற்றம், வளர்ச்சி என்பன விரிவாக இசைஆய்வாளர்களால் ஆராய்ந்து நிறுவப்பட்டுள்ளன. மனிதநாகரிகத்தின் தொடக்ககாலத்தில் நாடோடிவாழ்க்கை முறையிலும்,பின்னர் கிராமியவிவசாயப் பண்பாட்டுக் காலத்திலும் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சிக்கு அமைவானபூர்வீக இசையுடனும், நாட்டுப்புறப் பாடல் இசைமரபுகளுடனும் இணைந்தனவாகபல்வேறு இசைக்கருவிகள் தோற்றம் பெறலாயின. பாமரமக்களால் ஆக்கம் பெற்று,பரம்பரைபரம்பரையாகப் பல்லாண்டுகா





லமாகவழங்கிவந்த இசைக்கருவிகள் வாய்மொழிப் பாடல்களுடன் இணைந்து,மக்களின் இன்பம்,துன்பம்,தொழில் முறைகள்,சடங்குகள்,நம்பிக்கைகள்,வாழ்க்கைநிகழ்வுகள் என்பவற்றின் பின்னணியில் பயன்பாட்டுஅடிப்படையில் வழங்கிவந்துள்ளன. காலஓட்டத்தில் நாட்டுப்புற இசைக் கருவிகளும் சாஸ்திரிய இசைக்கருவிகளும் இணைந்து வளர்ந்துள்ளமையைஉலக இசைவரலாற்றிலும்,தமிழிசை வரலாற்றிலும் அறிந்துகொள்ளலாம்.(1)

சுவாமிவிபுலாநந்தர்,பண்டைத் தமிழர் வாழ்வில் இடம்பெற்றிருந்தஇசைக்கருவிகள்பற்றியும்,அவற்றின் வகைகள்,வடிவங்கள்,உறுப்புக்கள்,பயன்பாடுகள் என்பனபற்றியும், இசைக்கருவிகள் தமிழர் பண்பாட்டுக்குஎவ்வகையில் வளம் சேர்த்தனஎன்பனபற்றியும் ஆராய்ந்துள்ளார். மக்களின் படிமுறைநாகரிகவளர்ச்சிக்கு அமைவாகவும்;,அவர்கள் வாழ்ந்த இடங்களில் கிடைக்கக் கூடியபொருட்களுக்குஏற்பவும் மக்கள்இசைக்கருவிகளை அவ்வப்போதுஉருவாக்கிக்கொண்டவரலாறுபற்றிச் சுவாமிகள் தாம் எழுதிய இசைத்தமிழ் ஆய்வுக் கட்டுரைகளிலும் யாழ் நூலிலும் மிகவிரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.(2)

கால ஓட்டத்தில் தோற்றம் பெற்ற இசைக்கருவிகளைத்தோற்கருவிகள்,நரம்புக்கருவிகள்,துளைக்கருவி,கஞ்சக்கருவிகள் எனநான்குவகைப்படுத்துவர். இவற்றில் யாழ்,வீணைமுதலானநரம்புக்கருவிகள் மிகவும் நுட்பம் வாய்ந்தவை. பாணர்,பொருநர்,பாடினியர்,வயிரியர், கூத்தர்,கோடியர் முதலான இசைக் குலத்தார் இந்த இசைக்கருவிகளைத் தம் வாழ்வாதாரமாகப் பயன்படுத்தினர். இசைக்கலைஞர்;களைமன்னரும் வள்ளல்களும் விருந்தளித்துப் பரிசில்களும் வழங்கிஆதரித்துவரலாயினர். பழந்தமிழரது இசைக்கருவிகள்பற்றியும்,இசைக்கலைஞர்களது இசைத்துறைவாழ்வியல் பற்றியும்சங்க இலக்கியங்கள்,சிலப்பதிகாரம்,குடுமியாமலை இசைக் கல்வெட்டு,மற்றும் பழந்தமிழ் இசைத்தமிழ் நூல்கள்முதலானஆதாரங்களின் உதவியுடன் சுவாமிவிபுலாநந்தர்; ஆராய்ந்துயாழ் நூலைஎழுதினார். சிலப்பதிகாரத்தில்அரங்கேற்றுகாதை,கானல்வரி,வேட்டுவவரி,குன்றக்குரவை,ஆய்ச்சியர் குரவைஆகியபகுதிகளிற் கூறப்படும் பல்வேறுவகைப்பட்ட இசைக்கருவிகள்,அவற்றின்பயன்பாடு;என்பனபற்றியவிரிவானவிளக்கங்கள் பற்றியும் யாழ் நூல் விளக்கந் தருகின்றது. சங்ககாலத்தில்வழங்கிவந்தபல்வேறுபட்ட இசைக்கருவிகள்சிலப்பதிகாரகாலம்வரையும் (கி.பி.5ஆம் நூற்றாண்டு) வழக்கிலிருந்தமைபற்றியும் சுவாமிவிபுலாந்தர் சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.(3)

பண்டைத் தமிழர் இசைக்கலையில் மிகவும் வளர்ச்சிபெற்றிருந்தனர். பல்வேறுபட்டயாழ்க் கருவிகள்;,பறை,துடி முதலானதோற்கருவிகள் முதலியவற்றில் வல்லுநரான இசைவாணர்கள்இசைக்கலையைத் தம் தொழிலாகக் கொண்டுவாழ்ந்திருக்கின்றனர். பல்வேறுசமூகநிகழ்வுகளிலும் பொதுநிகழ்வுகளிலும்இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன.இசைப்பாணர்கள் இசைக்கருவிகளைஉருவாக்குவதிலும் அவற்றைக் கையாள்வதிலும்; மிகவும் தேர்ச்சிபெற்றிருந்தனர்.

தொன்மைக்காலம்முதலாகத் தோற்றம் பெற்றுவளர்ச்சியடைந்துவந்ததோலிசைக் கருவிகள் பற்றிநோக்கும்போது,அவைமக்களின் குடும்பவாழ்க்கையிலும்,வீரநிலைப்புறவாழ்க்கையிலும் (டுகைந ழக ர்நசழடிஉ யுபந )பல்வேறு சூழல்களில் பயன்பட்டுவந்துள்ளன. இசைவளர்ச்சியின் பயனாகவழங்கிவந்தபாடல்களுக்குப்; பல்லியங்களாகவும்,அவற்றோடுதொடர்புடையஆடல்களுக்குப்; பயன்படும் வகையிலும் பல்வேறுவடிவங்களில்இசைக் கருவிகள் தோன்றலாயின. அவற்றின் பண்டையபயன்பாடுபற்றியும், இசைப்பாணர்கள் அவற்றைஇசைத்து வாழ்ந்தமைபற்றியும் தொல்காப்பியம் புறத்திணையியல்குறிப்பிடுகிறது.

சங்கஇலக்கியங்கள்பறை,முழவு, முரசம்,பதலை,தொண்டகம்,ஆகுளி,தடாரிமுதலானதோலிசைக் கருவிகள்; பற்றியபல்வேறுதரவுகளைக்; கொண்டுள்ளன. பறையிசைக் கருவிகள் பெரும்பறை,சிறுபறைஎனவும்,பெரும்பறைமுரசு:முரசம் எனவும் வழங்கலாயின. போர்க் காலங்களிற் போர்முரசுபல்வேறுசெய்திகளைஅறிவிக்கும் கருவியாகப் பயன்பட்டது. போர்முரசுவைப்பதற்குமுரசுகட்டில் அமைக்கப்பட்டு,அரசமதிப்புடன் மூவேந்தர்களாலும் பேணப்பட்டுவந்துள்ளது. சிறுபறைகள்மக்களின் விழாக்களில் வாசிக்கப்பட்டன. வெறியாட்டுஅயரும்போது,வெறிக்கூத்து ஆடும் வேலன்,வள்ளிஆகியோருக்குஉருக்கொடுக்கவும்; பறைபயன்பட்டுள்ளது. முல்லைநிலத்தில் ஏறுகோட்பறையும்,குறிஞ்சியில் முருகியம்,தொண்டகப்பறைஎன இருவகைப் பறைகள் வழங்கின. மருதத்தில் மணமுழவு,நெல்லரிகிணைஎன்றபறைகள் பயன்பட்டன. நெய்தல் நிலமக்

கள் மீன்கோட் பறையைப் பயன்படுத்தினர். பாலைநிலத்தவர் சூறைகோட் பறையையும் நிரைகோட் பறையையும் தமதுதொழில் அடிப்படையிலும் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படுத்தினர் என்பதுபற்றியவிளக்கங்களும் யாழ் நூலில் இடம்பெற்றுள்ளன.

சங்ககாலமக்கள்விழாக் காலங்களில்முழவுஎன்னும்இசைக்கருவியைப் பெரிதும் பயன்படுத்தினர். தமிழகத்திற் பண்டைநாளில் வளர்ச்சிபெற்றிருந்தபல்வேறுவகைப்பட்டமுழவுஇசைக் கருவிகளின் பட்டியலைஅடியார்க் குநல்லார் சிலப்பதிகாரஉரையிலே (பக். 105)தந்துள்ளார்:

பேரிகை,படகம், இடக்கை,உடுக்கை,மத்ததளம், சல்லிகை,கரடிகை,திமிலை,குடமுழா,தக்கை,கணப்பறை,தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, மொந்தை, முரசு, சந்திரவளையம், கண்விடுதூம்பு, நிசாளம்,துடும்பை,சிறுபறை, அடக்கம, தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை,துடி, பெரும்பறை எனத் தோலாற் செய்யப்பட்டகருவிகள் என31 இசைக்கருவிகள் வழங்கின.(4)

இவற்றைஅகமுழவு,அகப்புறமுழவு,புறமுழவு,புறப்புறமுழவு,பண்ணமைமுழவு,நாண்முழவு,காலைமுழவு என ஏழு வகையாகவகுத்துள்ளனர். அக்காலத்தில் இசைக்கருவிகள் பல்கிப் பெருகிக் காணப்பட்டுள்ளமையும் அவற்றின் பயன்பாடுமக்கள் மத்தியிற் பெரிதும் இடம்பெற்றிருந்தனஎன்பதையும் மேலேயுள்ளமுழவு வகைகள் வெளிப்படுத்துகின்றன. மதுரைக் காஞ்சியிற்,குரல்புணர் நல்யாழ் முழவோடு ஒன்றி ˀ ˀ என வரும் தொடர் மூலம்,குரலிசையோடு யாழும் முழவும் பல்லியமாகவாசிக்கப்பட்டமைஅறியப்படுகின்றது. தவில்,மத்தளம்,பறைஎன்பனவிலங்குத் தோலிலாலானவாரினால் வரிந்து கட்டப்பட்டிருந்தமையை'மலைபடுகடாம்'ˀவிரிவாகக் கூறுகின்றது.

தினைப்புனத்தில் விலங்குகள் புகுந்துஅழிவுஏற்படுத்தாமல் தடுப்பதற்குப் பதலைஎன்றஇசைக்கருவி பயன்பட்டது. இதனைக் கிணைப்பறைஎன்றும் வழங்கினர்.அத்துடன் குறிஞ்சிநிலத்துப் பெண்களும் ஆட வரும் தமதுகளியாட்டங்களிற் பதலையை இசைத்துக்களிமகிழ்வெய்தினர் என்பதைக் குறுந்தொகை,நற்றிணைமுதலியனவிரிவாகக் கூறுகின்றன.பதலைஎன்றஇசைக்கருவியைமெல்லெனஒலிக்கவேண்டும் என்பதைப் பதலையொருகண் பையென இயக்;குமின்எனப் புறநானூறு (152:17)குறிப்பிடுகின்றது. குறிஞ்சிநிலமக்கள்தொண்டகப்பறையைப் பயன்படுத்தியுள்ளனர். ஆகுளிபெரும்பறையுடன் இசைவா



II வில் யாழ்

கவாசிக்கப்படுவதாகும். எல்லரிசல் சல்எனஒலிக்கும் தன்மைவாய்ந்தது. இவ்வாறாகப் பண்டைத் தமிழரின் இசைக்கருவிகள் வளர்ச்சியும்,மிக்க பயன்பாடும் பெற்றிருந்;தமையைச் சுவாமிவிபுலாநந்தர்யாழ் நூலிலும், இசைத்தமிழ் ஆய்வுக்கட்டுரைகளிலும் விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழர் மத்தியில் வழங்கியபல்வகைப் பறைகளின் பெயர்களைமுனைவர் இராசகலைவாணிதமிழ் இலக்கியங்களிலிருந்தும் நிகண்டுகள் வழியாகவும் ஆராய்ந்துஅகரவரிசையில் பட்டியலிட்டுத் தந்துள்ளமையைஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும்:

அடக்கம்,ஆகுளி,ஆறெறிப்பறை, இடைச்சுருங்குபறை, இழுகுபறை, இயமரம், இரணபேரி, உடுக்கை, எக்கம், எல்லரி,ஏறுகோட்பறை,கஞ்சிரா, கடுவாய்ப்பறை,கண்டிகை,கம்பலி, கரடிப்பறை,கல்லவரம்,களக்கொட்டு,கிடுகு, கிடுமுடி,கிணைப்பறை, குடப்பறை, கும்மட்டம், குரவைப்பறை, கோட்பறை, சல்லரி, சல்லிகை,சாக்கொட்டு, சாப்பறை, சிறுபறை, சூசிகம், தக்கை, தகுணிச்சம்,தட்டை, தண்ணுமை, தப்பட்டை,தப்பை,தம்பட்டம்,தமுக்கு, தலைப்பறை,தலைவிரிபறை, தவண்டை, திண்டிமம்,திமிக்கி,திமிலை, துடி, நாவாய்ப்பறை, நிசாளம், நிரைகோட்பறை, பகுவாய்ப்பறை, படகம், படலை, பதலை,பன்றிப்பறை,பாகம், பாடகம், பாண்டிகம்,புடுபுடுக்கை,பெருங்கோடனை, மகாதுந்துமி, மத்தரி, மரக்காற்பறை,மீன்கோட்பறை, முருகியம்,முறவம்,மொந்தைஎன்பனவாகும். (5)

தொழிற்களங்களிற் பணிபுரிவோர் தம் களைப்பைமறந்துதொழிற்படுவதற்குவாய்ப்பாகத் தொழிற் களநாட்டுப்புறப் பாடல்களைப் பயன்படுத்தினர்.தொழில் புரிவோர் தமதுவேலைக்களைப்பைப் போக்கிச் சுறுசுறுப்பாக இயங்குவதற்கும், ஊக்கம்அளிப்பதற்காகவும் பாடகர்களையும் மத்தளகாரரையும்தம் வேலைத் தளத்திற் சேர்த்துக்கொள்வதுமுண்டு. இதுபோன்றேபண்டைநாளிற் பொருநர் எனப்படும் இசைப் பாணர்களும்போர்க்களம்,ஏர்க்களம், கூத்தாட்டுஅவைக்களம் முதலானப

லதளங்களிற் பாட்டிசைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

வீரயுகமாகியசங்ககாலத்திற், பகைநாட்டின்மீதுபோர்தொடுக்கப் படையணியிர்செல்லும்போது ஆடலும் பாடலும் இணைந்த 'முன்தேர்க் குரவை','பின்தேர்க் குரவை' என்பன நிகழ்த்தப்பட்டன. அத்தகுஆடலும் பாடலும் போர் வீரவெறியூட்டுவனவாகஅமைந்தன. போரில் வெற்றிபெற்றுமீளும்போதுபடைவீரர்,போர்க்கள இசைக்கருவிகளுடன் வெற்றிச் சங்குமுழங்க,ஆடிப்பாடும் செய்திகளும் சங்கப் புறத்திணை இலக்கியங்களிற்பெரிதும் இடம்பெற்றுள்ளன.வீரமரணம் அடைந்தபோர் வீரர்களின் மனைவி;யர்துடியனின் உதவியுடன் விளரிப்பண் பாடி,போர்க்களத்தில் மடிந்துகிடக்கும்உடலங்களின் அருகேநரிகள் நெருங்காதவாறு அவற்றைவிலக்குவதைப் புறநானூறு (291:14) குறிப்பிடுகிறது.

அடுத்ததாக,நரம்பிசைக்கருவிகள் பற்றிநோக்கும்போது,யாழ் மிகத் தொன்மையான இசைக்கருவியாகக் காணப்படுகிறது. சிந்துவெளிப் புதைபொருட் சான்றுகளில் யாழும் குழலும் பொறிக்கப்பட்டமுத்திரைகள் கிடைத்துள்ளன.மெசப்பத்தேமியாநாகரிகத் தளத்தில் 'ஊர்' என்றதொன்மையானசுமேரியநகரில் நடைபெற்றஅகழாய்விற் கி.மு.3000ஆண்டுப் பழைமையுடையயாழ்க்கருவிகளின் அடையாளங்கள் கிடைத்துள்ளமையைச் சுவாமிவிபுலாநந்தர் சான்றுகாட்டி,யாழின் தொன்மைபற்றிஇசைத்தமிழ் ஆய்வுக் கட்டுரைகளில்; விளக்கிஎழுதியுள்ளார்.

தொல்காப்பியர் காலத்திற்குமுன் பாகத்தமிழர் வாழ்வில் யாழ்க்கருவிகள் மக்களின் வாழ்க்கையில் நன்குபயன்பட்டிருந்தன. அதனாலேயேஅகத்திணை இலக்கணத்திற்குரியகருப்பொருள்வரிசையில் யாழ்க்கருவியையும்சேர்த்துள்ளார். (தொல்.அகம்:18)ஐவகைநிலங்களுக்கும் முறையேதனித்தனியாகக்,குறிஞ்சியாழ்,முல்லையாழ்,மருதயாழ்,நெய்தல்யாழ், பாலையாழ் என்பனபெருவழக்குப் பெற்றிருந்



B1 சகோடயாழ்

தன. பண்டைக் காலத்துயாழிசை இலக்கண நூல்களை'நரம்பின் மறைய"எனவும்,யாழ் வாசிப்போரை யாழோர் எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. வழக்கொழிந்துபோனவில்யாழ்,சகோடயாழ்,செங்கோட்டுயாழ்,மகரயாழ்,பேரியாழ் எனப் பல்வகையாழ்களைச் சுவாமி விபுலாநந்தர் இனங்கண்டு,அவைபற்றிஆராய்ந்துயாழ் நூலில் அவற்றின் வடிவம்,உறுப்புகள்,இசைநரம்புகள்,அவைவாசிக்கப்படவேண்டியவிதிமுறைமை,பண்கள்என்பனபற்றிய விரிவானவிளக்கமுந் தந்துள்ளார். சீறியாழ் அளவிற் சிறிதாகையால் பாணர்கள் அதனைஎப்போதும் தம்முடன் வைத்திருந்தனர். அதனால் அது 'கைவழி'என்றபெயர் பெறுவதாயிற்று. (புறநானூறு:149:3) இசைக்கருவிகளில் யாழ் தலைமையானதாகவும்,தெய்வத்தன்மை கொண்டதாகவும் கருதப்பட்டது. மேற்குநாடுகளில்; **'Harp'** என்னும் இசைக்கருவிமிகவும் தொன்மையும்,தெய்வத்தன்மைகொண்டதாகவும் வழங்கிவந்துள்ளமைபற்றியும் சுவாமிகள் தம் ஆய்வில் விளக்கியுள்ளார்.(6)

சங்ககாலத்தின் தொடக்கத்தில் வில்யாழ்வழக்கில் இருந்தது. பண்பாட்டுவளர்ச்சியின் பயனாகச்சகோடயாழ்,செங்கோட்டியாழ்,மகரயாழ்எனவளர்ந்து,ஆயிரம் நரம்புகள் கொண்டபேரியாழ்எனப்பல்வகையாழ்களாகவளர்ச்சிஅடைந்து,மக்கள் வாழ்க்கையில் பல்வேறுசமூக,சமயச் சடங்குகளிற் பயன்பட்டுவந்தமை பற்றியவிளக்கங்களையாழ் நூல் கொண்டுள்ளது. யாழ் உறுப்புகளின் பெயர்களாக,யாப்பு,பச்சை,உந்தி,கோல்,புரிநரம்பு,நரம்புத்தொடையல், வணர் ஆகியனவற்றைச் சங்க இலக்கியஆய்விற் சுவாமிகள் அறிந்துகொண்டார். அவற்றைத் துணைக்கொண்டுபண்டைத் தமிழர் பயன்படுத்தியயாழிசைக் கருவிகளை மீளுருவாக்கம் செய்வதில் அவர் வெற்றிகண்டுள்ளமையையாழ் நூலல்அறிந்துகொள்ளலாம்.

தொன்மைத் தமிழரின் யாழ்க் கருவிகள் அவர்களின் இசைநுட்பத்தைவெளிப்படுத்தும்அரியசான்றுகளாகும். சுவாமிவிபுலாநந்தர் சங்ககாலத் தமிழர் பயன்படுத்திய ஆறு வகையானயாழ்க்கருவிகளையும் சங்க இலக்கியங்கள்,சிலப்பதிகாரம் முதலியவற்றினூடாகக் கண்டுபிடித்ததுமட்டுமல்லாமல்,தம் பௌதிகவியல்,கணிதவியல் அறிவினைப் பயன்படுத்தி,பத்துஆண்டுகள் தமிழிசைஆய்வினைநுட்பமாகமேற்கொண்டுஎழுதியதேயாழ் நூல்ஆகும். அடையாளமேதெரியாதுஅழிந்துபோனயாழ்க்கருவிகளுக்குச்சுவாமிவிபுலாநந்தர் உருவம் வரைந்து,அந்தயாழ்களையும் தானாகவேமுயன்றுஉருவாக்கினார். தான் அரிதின் முயன்றுஉருவமைத்தயாழ் இசைக்கருவிகளைதிருக்கொள்ளம்பூதூரில் நடைபெற்ற 'யாழ் நூல்' அரங்கேற்றத்தின்போது (05.06.1947) மக்களின் பார்வைக்கும் வைத்திருந்தார். யாழ் அரங்கேற்றத்தின் பின்னர்,தான் வடிவமைத்த, பத்தர் நாலுசாணும்,கோடு நாலுசாணும்,அதற்கேற்பநரம்புகளும் பெற்று, உருவமைந்த ஆயிர நரம்பு யாழ்ச் சாயலமைப்பு ஒன்றினை ஆக்குவித்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குநல்கியுள்ளோம்எனயாழ்

நூலில் (பக்.335) சுவாமிவிபுலாநந்தர் குறிப்பிட்டிருத்தல்நோக்கத்தக்கது,பண்டைத் தமிழரிடையேவழக்கிலிருந்தஇசைக் கலையின் உயர்நிலைவளர்ச்சி,அக் காலத்துயாழ் வகைகள்;,அவற்றின் பயன்பாடுகள் என்பனபற்றி; யாழ் நூலில் விரிவாகஅறிந்துகொள்ளலாம். அத்துடன் பல்லவர் காலப் பக்தி இலக்கியங்களிற் பயின்றுவந்துள்ளபண்டைத் தமிழரின் பண்ணிசைபற்றியநுண்ணியஆய்வுவிளக்கங்களும் யாழ் நூலிலேதரப்பட்டுள்ளன. பண்டைத் தமிழர் பண்பாட்டுமகிமை,தமிழிசை,பண்ணிசைநுட்பங்கள் என்பவற்றைஅறிந்துகொள்வதற்கு யாழ்நூல் ஓர் அரியவழிகாட்டியாகும்.

யாழ் நூலிற் கூறப்படும் யாழ்கள் பற்றிநோக்கும்போது, அவற்றின் வரலாற்றில் முதலில் 'ஆதியாழ்' எனப்படும் வில்யாழ்உருவாக்கம் பெற்றமைபற்றிவிளக்கப்படுகிறது. ஏழிசைப் பாணனும் இடையனும் குமிழங் கொம்பினாலும்,மரல் நாரினாலும் அமைத்தவில் யாழேஆதியாழ் எனப் போற்றுதற்குரியதுஎனச்சுவாமி விபுலாநந்தர் குறிப்பிடுவர்.மக்களின் வாழ்வியல்முறைகள்,பல்வேறுஉபகரணங்களின் கண்டுபிடிப்பு,பல்துறைக் கலைகளின் வளர்ச்சிஆகியனவற்றின் பயனாகச்செங்கோட்டியாழ்,பேரியாழ் ஆகியன இரண்டும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவிலேதோன்றின. செங்கோட்டுயாழ் சீறியாழ் என்றும் வழங்குவதாயிற்று. செங்கோட்டியாழில் 7 தந்திகளும்,சகோடயாழில் 14 தந்திகளும்,பேரியாழில் 21 தந்திகளும்அமைந்திருந்தமைபற்றிச் சுவாமிகள் இசைஆய்விற் கண்டறிந்தார். முன்னையயாழ்களின் வளர்ச்சியாகவேபேரியாழ்உருவாக்கம் பெறுவதாயிற்றுஎனவும்,பேரியாழ் எவ்வாறுஉருவாக்கம்பெற்றதுஎன்பதுபற்றியும்சுவாமிவிபுலாநந்தர் வருமாறுகுறிப்பிடுவர்:

"Now we come to consideration of the harp with a thousand strings. The ancients give us some idea of the shape and the diamensions of this instrument. They also tell us that the longest string was 48 angulies long and the shortest was 32 angulies long, that it was triangular in shape, that the sound box and the kodu were equal and were 112 angulies long each. Reconstruction of the instrument necessitated a clear idea of the tuning and the centvalue of the notes used".



V. பேரியாழ் (மலைபடு கடா அத்துட்கூறப்பெற்றது)

(7)

ஆற்றுப்படை நூல்கள்;,சிலப்பதிகாரம்,கல்லாடம் ஆகிய நூல்களி;ல்யாழ் வகைகள் பற்றியவருணனைகள் இடம்பெற்றுள்ளன. சுவாமிவிபுலாநந்தர்,யாழின் உறுப்புக்களாகப் பத்தர் (அகளம்),தோற்போர்வை,ஆணி,வறுவாய்,மருப்பு,திவவு,நரம்பு,கவைக்கடை,யாப்பு,உந்திமுதலானவற்றைஅடையாளங் கண்டுள்ளார். யாழ் உறுப்புக்கள் பற்றியவிளக்கங்களைச் பொருநராற்றுப்படை (வரி:4-22),சிறுபாணாற்றுப்படை (வரி: 221-229),பெரும்பாணாற்றுப்படை (வரி:4-16),மலைபடுகடாம் (வரி:21-37) என்பனவற்றினூடாகஆராய்ந்தறிந்து,அவற்றுக்குஉருவமும் வரைந்து,அந்தயாழ்களைத் தாமேஉருவாக்கினார். யாழ் புனிதமானதுஎன்பதும்,யாழுக்குரியதெய்வமாக'மாதங்கி'யைவழிபட்டுள்ளனர் என்றவிடயமும் யாழ் நூலிற் குறிப்பிடப்படுகின்றன. சுவாமிவிபுலாநந்தர்,பேரியாழ் வாசிக்கப்படுதல் பற்றிக் குறிப்பிடும்போது,பேரியாழ்க் கருவியிலே,மேலேகாட்டியமெலிவு,சமன்,வலிவுஎன்னும் மூன்றுதானத்திலுள்ள இருபத்தொருநரம்புகள் நின்றனவெனக் கொள்ளவேண்டும்எனநெறியமைத்துக் காட்டியுள்ளார்ஃ (யாழ் நூல்:பக்.79).

இசைவாசிப்போராகப்பாணன்,பறையன்,துடியன்,கடம்பன் முதலியோரைப் புறநானூறு 335ஆம் பாடல் குறிப்பிடுகிறது. பாணர் குடியிற் பெரும்பாணர்,சிறுபாணர்என்ற இரு பிரிவினர் இடம்பெற்றிருந்தனர். பெரும்பாணர் என்போர் திறமைமிக்க இசையைஉருவாக்குபவர்கள் என்றும்,அவர்கள் சொந்த இல்லங்களில் வாழ்ந்தனர்; எனவும்,சிறுபாணர் அரசமாளிகைகளிலும் பிரபுக்கள் இல்லங்களிலும் அவர்களின் தயவில் வாழ்ந்தனரென்றும்சிலப்பதிகாரத்தைச் சான்றுகாட்டிச் சுவாமிகள் விளக்கியுள்ளமையும் இசைப்பாணரின் வாழ்வியலைவெளிப்படுத்துகின்றன. (யாழ் நூல் பக். 306)

சங்ககாலத்திற் பாணர்,பாடினியர்,பொருநர்,வயிரியர், கூத்தர்,கோடியர் எனப் பல்வேறுகலைத்துறைவாணர்; தமிழிசையையாழ்க் கருவிகளுடன் வளர்த்துவந்தனர். பாணர் குடியில் இசைப்பாணர்,யாழ்ப்பாணர்,மண்டைப்பாணர் எனப் பல்வேறுபிரிவினர் இடம்பெற்றிருந்தனர். பாணர் பயன்படுத்தியயாழ் வகைகளின் அடிப்படையிற் சிறுபாணர்,பெரும்பாணர் என்றவகைப்பாடும் அவர்களிடையேவழங்கிற்றுஎன்பதையும் யாழ் நூல் கூறுகின்றது.பண்டைத் தமிழர் தம் பண்பாட்டுநிகழ்வுகளில் யாழிசைக் கருவிகளைப்பயன்படுத்தலாயினர் என்பதைச் சங்க இலக்கியங்கள் அறியத்தருகின்றன. பாணன் யாழ் வாசிக்கும்போது,பாடினி (பாணனின் மனைவி)ஆடினாள்.

ஐவகைநிலங்களுக்கும் தனித்தனியாக யாழ்க்கருவிகள் வழங்கின. அவ்வகையில்; குறிஞ்சியாழ்,முல்லையாழ்,மருதயாழ்,நெய்தல்யாழ்,பாலையாழ் என்பனபெருவழக்காக இருந்தன. யாழ் பல்வகைஆற்றல் கொண்ட இசைக்கருவியாகும். யாழ்ஒலிகேட்டுமதங்கொண்டயானைகள் அடங்கிநின்றனஎன்பதைஉதயணன் சரித்திரம்,சீவகசிந்தாமணிமுதலியனகுறிப்பிடுகின்றன.

சங்ககாலத்தில் இல்லறவாழ்க்கையைவளமுறச் செய்வதற்காகஆடவர் பொருளீட்டச் செலவும்போது, இடர் நிறைந்தகொடியபாலைநிலத்தைக் கடந்துசெல்லவேண்டியிருக்கும். அவ்வாறுதாம் சென்று,அரிதில் முயன்றுதிரட்டிய செல்வத்துடன் பாலையூடாகத் திரும்பிவரும்போது அங்குள்ளவழிப்பறிகள்வரானகொலைபுரிஎயினர் எதிர்ப்படுவர். அவர்களைக்கண்டதும்; அவர்களுக்குவிருப்பமானபாலைப் பண்ணில் அமைந்தபாடலையாழ் மீட்டிப் பாடுவர். அப்பாடலைக் கேட்டதும் எயினர்,வழிப்பறி,கொலை என்பவற்றைமறந்து,தம் மனத்தை இசையிற் பறிகொடுத்துமெய்ம்மறந்துநின்றகாட்சியைப் பொருநராற்றுப்படை (வரி:19-22) சித்திரிக்கின்றது.

தமிழ் நாட்டிற் பண்டைநாளில் இயற்றமிழும்,இசைத்தமிழும் நன்கு வளர்ந்திருந்ததுபோன்றே, இசைக் கருவிகளும் பெருகிக் காணப்பட்டன. மேலும் அடியார்க்குநல்லார் தமதுஉரையில் பெருநாரை,பெருங்குருகு,பஞ்சபாரதீயம் முதலிய இசை இலக்கண நூல்கள் பண்டைத் தமிழரிடையேவழக்கிலிருந்தமைபற்றியகுறிப்புக்களையும் தந்துள்ளார். இந்நூல்கள் யாவும் ஆழிப்பேரலைகளாலும்இகாலஓட்டத்தாலும் அழிந்துபோயின. இறையனார் களவிலுரையின் உரைப்பாயிரம் சிற்றிசை,பேரிசைஎன்பவற்றைக் குறிப்பிடுகிறது. நாரதர் பெயரால் 'பஞ்சபாரதீயம்'என்ற இசைக்கருவிவழங்கிற்று. சயந்தன் என்னும் பாண்டிய இளவரசனால் 'இசை நுணுக்கம்'என்ற இசையிலக்கண நூல்இயற்றப்பட்டதுஎனஅடியார்க்குநல்லார் குறிப்பிடுவர்.அறிவனார் இயற்றியபண்டையபஞ்சமரபு' என்றஇசைநூல் கிடைக்கப்பெற்று,பண்ணாராய்ச்சிவித்தகர் ப. சுந்தரேசனார் இதனைஉரையோடு1975இல் வெளியிட்டுள்ள நூலும் பண்டைத் தமிழரின் இசைநுட்பவளர்ச்சியை



VII மகர யாழ் வருணன் ஊர்தி

அறிவதற்குத் துணையாகவுள்ளது. தொல்காப்பியத்திலும் இசைநுட்பங்கள் பற்றியசெய்திகள் உள்ளன. யாழ்வாசிக்கும்போதுசிலஉயிரெழுத்துக்களும்,மெய்எழுத்துக்களும் தமக்குரியஒலிப்புஅளவிலும்விடநீண்டொலித்தல் பற்றித் தனக்குமுற்பட்ட இசைநூலார் குறிப்பிட்டுள்ளமையைத் தொல்காப்பியர் நூல் மரபியல் -33ஆம் நூற்பாவிற் குறிப்பிடுவர். இத்தகவல்கள் யாவும் இசைத்தமிழ்; இலக்கணம் சங்ககாலத்தில் நன்கு வளர்ச்சிபெற்றிருந்தமையைஅறியத் தருவனவாகும்.

யாழ் நூலிலேயாழ்களின் அமைப்பைப் பற்றிக் கூறும்போது,கி.பி. 10ஆம் நூற்றாண்டின் பின்னர் தமிழ் நாட்டில் 1000 தந்திகளையுடையநாரதப் பேரியாழ், 100 தந்திகளையுடையகீசகயாழ், 9 தந்திகளையுடையதும்புருயாழ்,ஒரே தந்திஉடையமருத்துவயாழ் என்பன தோற்றம் பெற்றன் இந்தயாழ்களின் அமைப்பும்விதியும்கல்லாடம்என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளன்பேரியாழ் கையில் தூக்கிச் செல்லத்தக்கது, இது மூன்று ஸ்தாயிகளிலும் ஏழு ஸ்வரங்களைஒலிக்கும் 21 தந்திகளைக் கொண்டிருந்ததுஎன்றும் சுவாமிகள் குறிப்பிடுவர். ஏழு ஸ்வரங்களுக்கும் சுவாமிகள் ஏழு தமிழ்ப் பெயர்கள் குறிப்பிடுவதோடு,அந்த ஏழு ஸ்வரங்களும் முறையேஒன்றிலிருந்துமற்றது பிறப்பதைவருமாறுதாரம்; ஞஉழை ஞகுரல் ஞஇளிஞதுத்தம் ஞவிளரி; ஞகைக்கிளைஎனஅடையாளம் காட்டியுள்ளார்.

சங்ககாலமக்களதுவாழ்க்கையில் இடம்பெற்றபல்வேறுசமூக,சமயச் சடங்குகளில் ஆடலும் பாடலும், இசைக்கருவிகளின் கூட்டொலியும் சேர்ந்திருந்தன. அக்காலமக்களின் குடும்பவாழ்க்கையில் 'வெறியாட்டு 'எனப்படும் சடங்குமுதன்மைபெற்றிருந்தது. வெறியாட்டுநடனத்தில் காதல் மயக்கம் கொண்டமகளிரும் அங்குபாடப்படும் இசைக்கமையத் தாமும் சேர்ந்துஆடினர். அப்போது குழல் இசைக்கப்பட்டது;யாழிசைக் கருவிகள் முரன்றன்முழவுகள் அதிர்ந்தன்முரசுகள் இயம்பினஎன,அந்நடனக்காட்சியைப்பட்டினப்பாலை (வரி:154-158)சித்திரித்துள்ளது.

அரங்கேற்றத்தில்; இசைக்கருவிகள் வாசிக்கப்படும் முறைமை பற்றியும் யாழ் நூல் விளக்கம் தருகின்றது: சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதையைத் (வரி:70-94)தழுவி, நடன அரங்கேற்றத்தில்முதலிற் புல்லாங்குழல் வாசிக்கப்பட்டு,அதனைத் தொடர்ந்து 14 நரம்புகளும் அந்தரக் கோலும் கொண்டமகரயாழ் வாசிக்கப்படுதல்முதலியஒழுங்குமுறைகள் பற்றிச் சுவாமிகள் சென்னைப் பல்கலைக்கழகஇசைமன்றத்தில் (22.02.1936) பண்டைத் தமிழிசைஆராய்ச்சிஎன்றதலைப்பில் ஆற்றியசொற்பொழிவிற் குறிப்பிட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

ஐவகைநிலங்களிலும் வாழ்ந்த மக்கள் தத்தம் தொழில்களுக்கும் வாழ்க்கைச் சூழல்களுக்கும் ஏற்பஇ

சைக்கருவிகளையும்,பண்களையும்
பயன்படுத்தினர். ஒவ்வொருநிலத்
திற்கும் விசேடபண்; வழங்கிற்று.
அப்பண்களையும், இசைக்கருவிக
ளையும் எப்போதுஇசைக்கவேண்டும்
என்றநியதியும் பின்பற்றப்பட்டிருந்
தது. அவ்வகையில் குறிஞ்சிநிலத்தி
னர் யாமப் பொழுதில் குறிஞ்சிப்பண்
பாடினர். முல்லைநிலத்தினர் மாலை
வேளையிற் சதாரிப்பண் பாடினர்.
மருதநிலத்தவர்வைகறையிலும்,விடி
யலிலும்மருதப்பண்பாடினர். பாலை
நிலத்திற் பகற்பொழுதிற் பாலைப்
பண் பாடப்பட்டது. சீறியாழில்
இசைப்பாணர் செவ்வழிப் பண்ணை
இசைத்துப் பாடுவதுவழக்கமாகும்.
வில்யாழிற் குறிஞ்;சிநிலமக்கள் குறிஞ்
சிப் பண்ணைப் பாடிமகிழ்ந்தனர்.

பண்டைநாளிற்இசைப்பாணராகி
யபொருநர்போர்க்களம்,ஏர்க்களம்,
கூத்தாட்டுஅவைக்களம் முதலானபல
இடங்களில்பாட்டிசைத்துப் பரிசில்;
பெற்றுவாழ்வதையேதம் தொழிலா
கக் கொண்டிருந்தனர். போர்க்களத்
தில் போர் முடிந்தமாலைவேளையில்
இறந்தோரதும்,குற்றுயிராகவிழுப்
புண்பட்டுக்கிடக்கும்போர் மறவரதும்;
தாய்,மனைவிமுதலியோர் போர்க்
களம் சென்று,புண்பட்டதம்உறவி
னரின் அருகேயிருந்துகாஞ்சிப்பண்
ணிற் பாட்டிசைத்துப்பாடியுள்ளனர்.
மறப்புண் பட்டகணவனின் வேத
னையைப்போக்குவதற்காகஅவன்
மனைவிகாஞ்சிப்பண்ணைத் தோழி
யருடன் சேர்ந்துபாடுவதுவழக்கம் (பு
றம்: 281). போர்க்களத்தில் விளரிப்
பண்ணில் இரங்கிப்பாடும் பாடல்கள்
பாடப்பட்டன. விளரிப்பண்ணிற்
பாட்டிசைத்துப் பேய்களிடமிருந்துவி
ழுப்புண்பட்டோரைக் காப்பாற்றுமாறு
வேண்டிப்பாடும் வழக்கமும் இருந்தது.

சங்கத் தமிழ்ப் பாடல்களும்,பல்ல
வர்காலப் பக்திப் பாடல்களும்பண்ண
மைதிஉடையவையாகும். கலித்தொ
கையிலும் பரிபாடலிலும்காணப்படும்
பண்ணிசைமரபையாழ் நூல்பெ
ரியஅளவில் ஆராய்ந்துள்ளது.
'பண்'என்பதுதமிழ் இசைவாய்ப்பா
டாகும். 'பண்படுத்தப்பட்ட இசைஒ
ழுங்கமைதிகொண்டதுபண்'எனப்
பிங்கலநிகண்டு கூறுகிறது. சங்ககா
லத்தில் தமிழிசைமரபில் 103 பண்
கள் வழங்கியுள்ளமையையாழ் நூல்
விரிவாகவிளக்குகிறது.சுவாமிகள்;
வடமொழியிலுள்ள இசைஇலக்
கண நூல்களானசங்கீதசந்திரிகா,ச
ங்கீத பரிஜாதம்,சங்கீதமகரந்தம்,ச
ங்கீதரத்னாகரம் முதலான நூல்க
ளைசு சுவாமிவிபுலாநந்தர்ஆ
ராய்ந்தபோது,அவற்றிலேதமிழ்ப்
பண்ணிசைக்கேயுரிய இலக்கணம்



IV சீறியாழ்

கூறப்பட்டிருப்பதுபற்றியாழ் நூலிற்
பதிவுசெய்துள்ளமைகுறிப்பிடத்தக்க
தாகும். வடமொழியாளர்,தமிழிசை
இலக்கணத்தையேவடமொழி இசை
யிலக்கணம் எனஎழுதினரோஎன
எண்ணத் தோன்றுகிறது. பண்டைத்
தமிழரின் வாழ்விற் பெரிதும்பயன்பா
டுடையதாகவிளங்கியபண்ணிசை,ச
ங்சமருவியகாலத்திற் சமணபௌத்
தமதங்களின் செல்வாக்காற்
பயன்பாடுஇழந்தது.எனினும் சங்கம
ருவியகாலத்தின் இறுதியில் வாழ்ந்த
காரைக்காலம்மையாராலேதொடக்கிவைக்
கப்பட்டபண் சுமந்தபக்திப் பாடல்கள்
யாழ்,வீணை,மணி,தாளம்,மற்றும்
முழவு ஆகியவற்றுடன்பண்ணி
சைவீறுநடைபயின்றது. 8ஆம்
நூற்றாண்டிலேதிருஞானசம்பந்தர்
பண்ணோடுபாடியபாடல்களைத்
திருநீலகண்டயாழ்ப்பாணரும் அவர்
மனைவியும் பண்ணிசையுடன் யாழ்
மீட்டிப் பாடினர். 9ஆம் நூற்றாண்
டிற் சீவகசிந்தாமணியும் பெருங்க
தையும் யாழிசைக்குப் பெரிதும் முதன்
மைஅளித்துள்ளன. 17ஆம்,18ஆம்
நூற்றாண்டுகளிலேதஞ்சை - மதுரை
நாயக்கமன்னர் கர்நாடக இசை
யைஆதரிக்கத் தொடங்கியதும்
பண்டைத் தமி;ழரதுயாழ் வகைகளும்
பண்ணிசையும் மறையத் தொடங்
கின.

சுவாமிவிபுலாநந்தர் தமதுஆராய்ச்
சியிற் பெற்றதொருமுதன்மையான
தகவல் பற்றிவருமாறுகுறிப்பிடுவர்:
சிலப்பதிகாரகாலத்துக் கல்லோவியம்
ஒன்றுஎழில் மிக்கநரம்புகளுள்ளயா
ழின் உருவத்தைக் கொண்டுள்ளது.
இவ்வோவியத்தின் நிழற்படத்தைக்
கண்ணுற்றஈழநாட்டுப் பேரறிஞர்
ஆனந்தக்குமாரசுவாமிஅவர்கள் பழை
மையான இந்தயாழ்,சிலப்பதிகாரகா
லத்திலும் அதற்குமுன்னும் பின்னும்
தமிழ் நாட்டில் வழங்கிவந்ததுஎன்ப
தையும்,மிகப் பழைமையான இசை
மரபொன்றுதமிழகத்திலேயிருந்து
இறந்ததென்பதையும் உலகிலுள்ள
பேரறிஞர்க்குவெளியிட்டார்என்றார்.
(2003:37)அத்தகுபேரியாழ்'என்ப
தன் பெயர் மட்டுமேகிடைக்கின்றது.
அதுஉருவத்தால் அழிந்துவிட்டது.

பண்டைத் தமிழரதுவாழ்க்கையிற்
பொதுமக்களதுபாவனையில் அவர்க
ளுக்கு இசைமகிழ்வூட்டியயாழிசைக்
கருவிகாலப்போக்கில் மேல்நிலைமக்
களிடம் போய்ச் சேர்ந்துவிட்டது.
மெசப்பத்தேமியா,பாபிலோனியாநா
கரிகங்களிலும் இத்தகையயாழ்க் கரு
விகள் வழங்கினஎன்பதும்,அவற்றுக்
குத் தமிழர் பண்பாட்டின் பங்களிப்பும்
இருந்ததுஎன்பதும் ஆய்வாளரின்

கருத்தாகும். உலக இசைவரலாறு தொடர்பாகச்சுவாமிவிபுலாநந்தர் யாழ் நூலிற்கூறும் செய்திசிந்தனைக் குரியதாகிறது:

''நமது நாட்டிற் போலவேவேறுபலநாடுகளிலும் யாழ்க்கருவி தெய்வமாகப் போற்றப்பட்டது. பண்டைநாளிலேசீரும்சிறப்பும்எய்தியிருந்தமிசிரம் என்னும் எகிப்து (**Egypt**) நாட்டிலும்,பாரசீகக் கடற்கரையிலிருந்து அழிந்து போன சுமேரு (**Sumeria**)நாட்டிலும்,சோழர் குடியேறினமையாலேசோழதேயம் என்னும் பெயரினைஎய்திப்,பிற்காலத்தில்மொழிச் சிதைவினாலேசல்தெயா (**Chaldea**)எனவழங்கப்பட்டதொல்பதியிலும்,சேரர் குலத்தார் கலத்திற் சென்றுவெற்றிபெற்றுத் தம்மாணை செலுத்தியகிரேத்த (**Crete** )தீவிலும்,அதற்கணித்தாகிய (**Greece**) யவனபுரத்திலும்,உரோமர் வருவதற்குமுன் பழைய இத்தாலி (**Italy**)தேசத்திலும்,ஐபீரியாஎனப்பட்டபழைய ஸ்பெயின் (**Spain**) தேசத்திலும்,பிறவிடங்களிலும்,தமிழ்க் குலத்தார் வாழ்ந்துநாகரீகம் பரப்பினார்களெனமேற்றிசை அறிஞர் ஆராய்ச்சியாற் கண்டுவெளியிட்டிருக்கின்றனர். இந்நாடுகளிலெல்லாம் யாழ்க் கருவியும் போற்றப்பட்டது. சிந்துநதிதீரத்திலே,மீனாடுமுன்னாளிலேபாண்டிய மன்னரது பெயரொடுஆளுகையிலே மீனாடு என்னு பெயரோடும் திகழ்ந்ததும்,பின்னாளிலேஇறந்தோர் மேடு' என்னும் கருத்துடைய பெயரெய்தியதுமாகியபழையநாட்டிலே முகிஞ்சதரை (**Mohen - jo – daro**)மிதுனராசியானதுயாழ் என்னும்பெயரினால் வழங்கப்பட்டதெனஅறிஞர் கூறுவர்(8)

மேலும்,யாழ் - வீணை இரண்டுக்கும் இடையேயுள்ளவேறுபாடுகள் பற்றியும் சுவாமிகள் யாழ் நூலிலேவிளக்கியுள்ளார். இக்காலத்தில் வழக்கிலுள்ள வீணை இசைக்கருவியைஎல்லோரும் பார்த்திருப்பர். யாழும் வீணையும் வேறுபட்ட இசைக் கருவிகளாகும். ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள **The Legacy of India** என்ற நூலிலேயாழ்க் கருவிக்கும் வீணைக்கும் இடையிலானவேறுபாடுகளைநன்குவிளக்கி,யாழ்க் கருவியே வீணையின் தோற்றத்திற்கும் அடிப்படையானதுஎனக் கூறப்பட்டுள்ளது. சுவாமிவிபுலாநந்தர் இவற்றுக்குஇடையேயுள்ளவேறுபாட்டைமிகச் சுருக்கமாகவருமாறுகுறிப்பிடுவர்:, ஒருநரம்பிலேபல ஸ்வரங்களைத் தோற்றுவிக்கும் வீணைக் கருவிவட



நாட்டிற்குரியது. ஓரிசைக்குஒருநரம்பாகஅமைந்தயாழ்க்கருவிதென்னாட்டுக்குஉரியதுஎன்றார்.தமிழரது,நரம்புக் கருவிகள் பற்றிஆராய்ந்தமுனைவர் செ. சுப்புலெட்சுமிமோகன் (2012). 'செங்கோட்டுயாழின் அடியொற்றிஅமைக்கப்பட்டஒருநரம்புக் கருவியேவீணைஎன்றும்,யாழ் என்றகருவியே வீணை என்று பெயர் மாற்றம் பெற்றுஅழைக்கப்பட்டதோஎன்றுஎண்ணத் தோன்றுகிறது' எனக் கூறுவதும் நோக்கத்தக்கதே.

மேலும்,தமிழரின் தன்னிகரில்லாத இசைக் கருவியானயாழின் உறுப்புகளைஎல்லாம் உள்ளடக்கிஅயற்புலத்திலிருந்துவந்தோர் வீணைஎன்;கிற பெயரில் கருவியைஉருவாக்கினர். உறுப்புகள்,தொழில்நுட்பம், இயக்கும்முறை,வைத்திருக்கும்முறைஎன எல்லாவற்றிலும் யாழினைஒத்தே வீணைஅமைந்திருக்கிறது. யாழின் வளர்ச்சியில் அடுத்தமைல்கல்லே வீணைஎனமுனைவர் இராசகலைவாணி கூறுவதும் கருத்திற் கொள்ளத் தக்கதே.(9).

திருவாசகத்தில்இன்னிசைவீணையர் யாழினர் ஒருபால்.. எனப் பாடப்பட்டுள்ளமையைநோக்கும்போதுபல்லவர் காலத்தில் யாழும் வீணையும் தனித்தனி இசைக்கருவிகளாக வழங்கினஎனலாம். பல்லவர் காலத்திலேதிருநீலகண்டயாழ்ப்பாணர் திருஞானசம்பந்தருடன் சென்றுஅவர் பாடும் தேவாரப் பதிகங்களையாழில் வாசித்துஅவற்றுக்குமெருகூட்டினார் என்பதுபெரியபுராணச் செய்தியாகும். தமிழ் நாட்டிற் சோழர் காலம்வரையாழ் இசைக்கருவிகள் வழக்கில் இருந்தமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. யாழ்க் கருவிகள் காலந்தோறும் அடைந்தநிலைகள் பற்றிச் சுவாமிவிபுலாநந்தர் வருமாறுசுவையுறக்குறிப்பிடுவர்:

'முன்னாளிலேபாணன் கையிலும் பாடினிகையிலுமிருந்தயாழ்க் கருவியானது இளங்கோவடிகள் காலத்திலே இசையாசிரியன் கையிலும்,நாடகமகள்; கையிலும் போய்ச் சேர்ந்து விட்டது. 'அதற்கேற்பஅக்கருவியும் சித்திரப் படத்துட் புக்குச் செழுங் கோட்டின் மலர் புனைந்து,மைத் தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பெய்திவிளங்கியது. ஆளுடையபிள்ளையாருடைய காலத்திலே,தெய்வமீந்தபொற்பலகைமீதேறிஅன்பருள்ளத்தைஉருக்கிய அருட்கவியாயிற்று.

சரித்திரகாலஎல்லைக்கெட்டாதகா

லத்திலேவில்யாழ்எனப் பெயரிய குழலியாய்உதித்து,மழலைச்சொற் பேசி, இடையர் இடைச்சியரைமகிழ் வித்துச்,'சீறியாழ்'என்னும் பேதைப் பருவச் சிறுமியாகிப்,பாணனொடும் பாடினியொடும் நாடெங்குந் திரிந் துஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொற்கூறிப்,பின்புபேரியாழ் என்னும் பெயரோடுபெதும்மைப் பருவம் எய்தப்,பெரும்பாணரொடு சென்று,குறுநிலமன்னரும்,முடிமன் னரும்,தமிழ்ப் புலவரும்,கொடை வள்;ளல்களும் கேட்டுவியப்பெய்தும் வண்ணம் நயம்படஉரைபகர்ந் து,அதன்பின் மங்கைப் பருவமெய்தி, அப்பருவத்திற்கேற்பப், புதியஆ டையும் அணிகலனும் பூண்டு,நாட கஅரங்கத்திலேதிறமைகாட்டி,மடந் தைப் பருவம் வந்துஎய்துதலும் திருநீலகண்டப்பெரும்பாணரோடும் மதங்கசூளாமணியாரோடும் அம்மை யப்பர் உறைகின்றதிருக்கோவில் கள் பலவற்றைவலம்வந்து,தெய்வ இசையினாலேஅன்பருள்ளத்தினை யுருக்கி,முத்தமிழ் விரகராற் பாராட் டப்பட்டு, அரிவைப் பருவம் வந்து எய்துதலும்,அரசிளங்குமரிகளுக்கு இன்னுயிர்ப் பாங்கியாகி,அவர்கேற்ற தலைவரைஅவர்பாற் சேர்த்திச்,சீரும் சிறப்புமெய்திநின்ற 'யாழ்'எனும் மென்மொழிநங்கை இருந்தவிடந் தெரியாமல் மறைந்துபோயினாள். (10).

சங்ககால இலக்கியங்களில்வில் யாழ்,சீறியாழ்,பேரியாழ் என்ற மூவகையாழ்க்கருவிகள் பற்றி யசெய்திகளேகிடைக்கின்றன. ஏனைய சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், ஆகியனபற்றிச் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெருங் கதை முதலான இலக்கியங் களின் வழி ஆராய்ந்துசுவாமிவிபுலா நந்தர் அவற்றையாழ் நூலிற் பதிவு செய்துள்ளார். இத்தகையயாழ்களில் சகோடயாழ் இலண்டன் மாநகர்ப் பழம்பொருட் சாலையில் கல்லோ வியமாகவும்,சென்னைமாநகர் பழம் பொருட் காட்சிச்சாலையில் யாழ் ஓவியமாகவும்,எகிப்தியபிரமிட் கோபு ரத்தில் இடம்பெற்றஓவியமாவும் காணப்பட்டதமிழர் யாழ்க்கருவிகள் அழிந்துவிட்டனவேஎன்றஏக்கமும்



சுவாமிவிபுலாநந்தரிடம் இருந்தது என்பதையாழ் நூலிற் காணலாம். பண்டைத் தமிழரிடையேவழங்கிய நால்வகை இசைக்கருவிகள்,தமிழருக் கேஉரித்தானயாழிசைக் கருவிகளின் தோற்றம்,வளர்ச்சி,பயன்பாடு,அவற் றின் நுட்பம் என்பவற்றைப் பல்லாண்டுகள் முயன்றுஆராய்ந் து,தனதுகருத்துக்களையாழ் நூலிலும் ஆய்வுக்கட்டுரைகளிலும் பதிவுசெய் துள்ளமைசுவாமிவிபுலாந்தரின் கருத் தாழம் நிறைந்தசெயற்பாடாகும்.

**அடிக்குறிப்புக்கள்:**


1. இ.பாலசுந்தரம்.நாட்டாரிசை இயல்பும் பயன்பாடும். நாட்டார் வழக்கியற் கழகம்,மேக்குரிபிரிண் டர்ஸ்,யாழ்ப்பாணம். 1991, பக்.1-6.

2.சுவாமிவிபுலாநந்தர்,யாழ் நூல் என்னும் இசைத் தமிழ் நூல். திருத்தப் பட்ட மூன்றாம் பதிப்பு,மறுமொழிஊ டகவலையம்,ரொறன்ரோ,கனடா., 2003

3.சுவாமிவிபுலாநந்தர்,பண்டைத் தமிழிசைஆராய்ச்சி (சொற்பொழிவு கள்.) சுவாமிவிபுலாநந்தரின் ஆக்கங் கள்,தொகுதி 2,மட்டக்களப்புசுவாமிவி புலாநந்தர் நூற்றாண்டுவிழாச்சபை, 1995

4. சிலப்பதிகாரம்‡அடியார்க்குநல் லார் வே. சாமிநதையர் பதிப்பு,சென் னை, 2008, பக்.105

5. இராசகலைவாணி,தொல்காப் பியத்தில் இசை- தொன்மையும் தொடர்ச்சியும்,ஏழிசைப்பதிப்ப கம்,மயிலாடுதுறை, 2014.பக்.186

6.இ. பாலசுந்தரம்,விபுலாநந்தஅடி களாரின் யாழ் நூலும் இசைத் தமிழ் ஆய்வும்,தமிழறிஞர் விபுலாநந்தர் வாழ்வும் பணிகளும், நூற்றாண்டுநி னைவுக் கட்டுரைத் தொகுப்பு, இந்து சமய,கலாசாரஅலுவல்கள் திணைக் களம்,1992.

7.**Swami Vipulananda, "The Harp with Thousand strings", Ceylon University Review, 1947: pp. 21-38.**

8. சுவாமிவிபுலாநந்தர்,யாழ் நூல்:2 003 பக். 26

9. .இராசகலைவாணி,தொல்காப் பியத்தில் இசை- தொன்மையும் தொடர்ச்சியும்,2014.பக்.169.

10.சுவாமிவிபுலாநந்தர்,யாழ் நூல், 2003. பக். 37-38



# கருதநின்ற கேதீச்சரம்

> **நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**
> **தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
> **பாடுமின், பாடிப் பணிமின், பணிந்தபின்**
> **கூடிய நெஞ்சத்துள் கோயிலாக் கொள்வனே.**
> **-திருமந்திரம்-**

ஈழத் திருநாட்டை சிவபூமி என திருமூலர் புகழ்ந்து கூறியுள்ளார். உண்மையும் அதுதான். அதாவது விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தில் இடைகலை நாடி ஓடும் தானமாக விளங்கப் பெறுவது இலங்கை. இவ் இலங்கைத் திருநாட்டின் வடமாகாணத்தில் மன்னார் பகுதியில் சூரபன்மன், இராவணன் ஆகியோர் காலத்திற்கு முன்னரேயே பெருமையும், மகிமையும் உடைய சிவத்தலம் மாதோட்டத் திருக்கேதீஸ்வரம் ஆகும்.

இத் தலமானது கௌரி உடனுறை கேதீச்சரநாதரை இறைவன் இறைவியாகவும், கோயிலாக திருக்கேதீஸ்வரமும், பாவம் வினையறுக்கும் பாலாவி தீர்த்தமாகவும், கொண்டு விசேடத் தன்மைகளுடன் தேவாரத் திருப்பதிகங்களும் பாடப்பெற்ற திருத்தலமாக திகழும் திவ்விய சிவத்தலமாகும்.



**சிவத்தமிழ் வித்தகர்**
**சந்திரலிங்கம் றமேஸ்**
**ஆசிரிய ஆலோசகர்**

மேருகைலாசம், இமாசலகைலாசம், மந்தரகைலாசம், உத்தர மகாகைலாசம்என கைலாசங்கள் பல, இவற்றுள் மேரு கைலாசத்தின் மூன்று சிகரங்கள் ஒரு கற்பத்தில் ஒடித்தெறியப்பட்டுத் தென் சமுத்திரத்தில் வீழ்த்தப்பட்டன. அவற்றில் ஒன்று திருக்கேதீச்சர சிகரம், இது விசுவ கர்மாவின் புத்திரனாகிய மகாதுவட்டாவினால் மகா சிவ சேத்திரமாகப் புனையப் பெற்றது. இது மாதோட்டத்தோடு சேர்ந்துள்ளது.

இலங்கை எந்தக் கற்பத்தில் அமைந்ததோ அதே காலத்தில் திருக்கேதீச்சரமும் அமைந்தது. இவ்வாறாக புராண இதிகாசங்களுடன் தொடர்புடையதும், வேதத்தின் உபாங்கங்கள், வேதப் பொருளைத் தெளிவுபடுத்துபவைகள் அவற்றின் தத்துவக்கருத்துக்கள், சூதபௌராணிக மரபில் அறிய வேண்டியவைகள் என திருக்கேதீச்சர மரபின் தொன்மையும், சிறப்பும் கூறப்படுகிறது. மேலும் தேவர்களும் முனிவர்களும் சிவனை வணங்கி இற்று வீழ்ந்த மூன்று கைலைச் சிகரங்களிலும் தேவரீர் தென் கைலாயம் என்று மதித்து அவற்றில் என்றும் எழுந்தருளி இருத்தல் வேண்டும். என பிரார்த்தித்ததன் பயனாக சிவனும் அவ்வாறு செய்வோம்என்றருளிக் கைலைக்கு எழுந்தருளினார்.

இங்கு தென்கைலாயம் என்று மதித்து என இறைவனை வேண்டியதில் இருந்து இறைவன் தென்கைலாயம் எனப்படும் சிகரங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத்தை விரும்பி உறைந்தார். என்பது இங்கு கருதுதற்கு இடமுண்டு.



மேலும் திருக்கேதீச்சரம், பெருந்துறை என்பது திரு என்ற தெய்வ அடைமொழி பெற்று திருப்பெருந்துறை எனவும் திருக்கேதீச்சர திருப்பெருந்துறையீசன் எனவும் பெயர் வழங்கப்பட்டமையும் அறியப்படுகின்றது .

கி.மு 3 ஆம் நூற்றாண்டிலிருந்தே மாதோட்டம் மகா தீர்த்தம் என்ற ஒரு பெயரால் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மிகப் புனிதம்வாய்ந்த ஒரு புண்ணிய சேக்ஷிரம் என்பது பொருளாகும். இதனால் பாவம் வினையறுக்கும் பாலாவி என்பதனை கருத இடமுண்டு.

இம்மாதோட்ட திருக்கேதீச்சர நாதனைத் திருமால், பிரம்மன், இந்திரன், தேவர்கள் , கேதுபகவான், மகாதுவட்டா, பிருகுமுனிவர், அகத்திய முனிவர், இராவணன், அர்ச்சுணன், மாலியவான், மயன் , மண்டோதரி, ஸ்ரீராமர், பாண்டியர், சேரர்கள், இராசேந்திரசோழன், முதலானோர் வழிபட்டு பேறு பெற்றமையினை அறிந்து கேதீச்சரநாதனை கருதி வழிபட இடமுண்டு.

அத்துடன் திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஆகியோர் இராமேஸ்வரத்தில் இருந்து தமது அக கண்ணால் கண்டு தரிசித்துத் தேவாரப்பதிகங்கள் பாடித் துதித்தமையும் குறிப்பிடத்தக்கது.

பின்பொரு காலத்தில் மண்மழை பெய்தும், கடல்கோள் காரணமாகவும் அழிந்து மண்ணுக்கடியில் கிடந்தும் ஆறுமுகநாவலரால் தேவாரப் பாடல்களிலிருந்து அறிந்து, பின் கேதீச்சர நாதருக்கு கோயில் அமைத்து இன்றும் பாதுகாத்து உலக சைவத்தவர்களால் சிவபிரானைப் பற்றி நின்று உறையும் பதியாக அடியவர் எந்நாளும் கருதுகின்ற ஊர் மாதோட்ட த்தில் ஆரவாரிக்கின்ற கடலால் சூழப்பட்ட மணங்கமிழும் பொழில்கள் அணிசெய்யும் கேதீச்சரநாதர் சமேத கௌரியம்பாள் உடனுறையும் மாதோட்டத்தில் பலரும் எம் பெருமானை கருதி வழிபாடு செய்கின்ற கேதீச்சரமாகும்.

''கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினையடையாவே''



# இலங்கைத் துறையை நோக்கிய
# கிராம தரிசனம்

ஞாயிற்றுக்கிழமை 18102020 தென்கயிலை ஆதீனம் முதற் குருமகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் தலைமையில், ஆன்மீகக் குழுவொன்று திரிகோணமலை ஈச்சிலம்பற்று இலங் கைத்துறை என்னும் கிராமத்திற்கு நேரடிப் பயணம் மேற்கொண்டு மக்களினதும் மாணவர்களினதும் அன் றாடம் எதிர்நோக்கும் குறைகளையும், தேவைகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

மேற்படி குழுவில் இளையபட்டம் தவத்திரு திருமூலர் தம்பிரான், ஆதீனத்தின் நிர்வாக உறுப்பினர் இளைப் பாறிய பாடசாலை அதிபர் திருமதி உமா இரத்தினேஸ்வ ரன், திரு. இரத்தினேஸ்வரன் ஆகியோர் இணைந்திருந் தனர். துறவிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய சிறப்பு வரவேற்பாக மாலை அணிவித்து ஆரத்தி எடுத்து மக் கள் உபசரித்த விதம் அக்கிராமத்திற்கே உரிய பண்பை வெளிப்படுத்தியது.

இச்சந்திப்பில் கிராமத்தின் பெரியவர்களும் , கல்வி மான்களும், அறநெறி மற்றும் பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டனர். சமகால சமூக இடைவெளியைக் கருத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட மக்களே பங்கு



கொண்டனர். முக்கிய விடயங்களாக அடிப்படை வரு மானமற்ற குடும்பத்தினரின் சமகால வாழ்வாதார நிலை மைகள் குறித்தும், அறநெறிப் பள்ளிக்குரிய கட்டடம், மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் வெகுதூரம் சென்று கல்வி கற்க முடியாத அவலநிலை ஆகியவற்றை







மக்கள் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தினார்கள்.

இதன் முதற்கட்டமாக மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் வகையில் Thenkailai Education Centre TEC நிறுவனம் கட்டடம் ஒன்றைப் பெற்று , அற நெறிப்பள்ளி , நவீனமுறையிலான நூலகம், கணனி வகுப்பு மற்றும் உயர்தர வகுப்புப் பிள்ளைகளுக்கான மேலதிக வகுப்புக்கள் என்பன உள்ளடங்கலான திட்டமொன்றை ஏற்படுத்தி கிராமமக்களுடன் இணைந்து செயற்படுவதாக முதற் குருமகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் அவர்களால் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. இச் செயற்பாட்டுக்கு பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புக்களும் வழி காட்டல்களும் பெற்றுக் கொள்ளப்படும்.

உயர்தர வகுப்புக்குரிய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை தென்கயிலை ஆதீனம் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் அடிப்படை வசதியற்ற கற்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் 3 மாதகால போசாக்கு உணவு வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த ஆதீனம் முடிவு செய்துள்ளது.

(மேற்படி கற்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்குமான 3 மாதகால போசாக்கு உணவு வழங்கும் திட்டம் ஏனைய பாகங்களுக்கும் முறையே விரிவுபடுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.)

அத்துடன் கவனிப்பாரற்று கிடக்கும் பனம் விதைகளைப் பயிரிடும் ஊக்குவிப்புத் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது







# தென்னாடு

www.thennadu.org

உ
சிவமயம்

# தென்னாடு



## செந்தமிழாகம சிவமடம்- கொக்குவில்

**அருள்மிகு ஐம்பூதநாதர் அருட்கோலம் மற்றும் ஈழத்து சித்தர்கள் தவக்கோலம்**

- சிவமயங்கல நீராட்டு (உருத்திர அபிஷேகம்)
- சிவப்பெருவேள்வி ( உருத்தியர மகாயாகம்)
- பிறைத்தோற்ற வழிபாடு (பிரதோஷம்)
- சித்தர்கள்/ நாயன்மார்கள் குருபூசை
- சிவஞானப் பெருவேள்வி ( திருமுறை முற்றோதல்)
- தென்புலத்தார் வழிபாடுகள்
- நிறைநிலவு ( பௌர்ணமி) வழிபாடு
- மறைநிலவு (அமாவாசை) வழிபாடு
- ஆண்டுப் பிறைநாள் (திதி)
- பிறைநாள் சடங்குகள் (திதி)

**கருமுதல் திருவரை சகல சடங்குகளும் செந்தமிழிலே இயற்றப்படும்**



குளங்கரை ஒழுங்கை.
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொடர்புகளுக்கு :
+94 21 221 2739


சிவ சிவ
தென்னாடு
தென்னாடுடைய சிவனே போற்றி
thennadu.org
தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
தமிழ் கடவுளின் விரதத்தினை
தமிழிலே கொண்டாடுவோம்
கந்தன் கவின் அறுமை (கந்த சஷ்டி)
துலைத்திங்கள் 30ம் நாள் (நவ 15 , 2020) கந்தன்
கவின் அறுமை விரதம் ஆரம்பம்.
இயல் இசையில் உசித வஞ்சிக்கு அயர்வு ஆகி
இரவுபகல் மனது சிந்தித்து உழலாதே
உயர்கருணை புரியும் இன்பக் கடல்மூழ்கி
உனைஎனது உள்அறியும் அன்பைத் தருவாயே
மயில் தகர் கல் இடையர் அந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித்து அணைவோனே
கயிலைமலை அனைய செந்தில் பதிவாழ்வே
கரிமுகவன் இளைய கந்தப் பெருமானே
சூரன் பெருவாழ்வு நிகழ்வு
தமிழர் கடவுளின் இறைத்தன்மை - முருகன் சூரனுக்கு சேவலும்
மயிலுமாக பெருவாழ்வு அளித்த பெருவிழா (சூரன் போர்)
நளித்திங்கள் 5ம் நாள் (நவ 20)
கண்ணுதற் பெருங்கடவுளும்
கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த
இப்பசுந்தமிழ்
www.Thennadu.Org | +94 21 221 2739



# அருளாளர்கள் அறுபத்தி மூவர்

## சிவனடியார் அருள் வரலாறு

### மணிவாசகப் பெருமான்

மணிவாக்குத் தந்த மணிவாசகர் பக்திநெறி அறிவித்து, பலவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கியெனை ஆண்ட அத்த னாம் இறைவன் தான் பெற்றபெரும் பேறாகிய சாயுச்சிய முத்திப் பேறை அழகாகப் பாடியருளியவர் மணிவாசகர்.

அவரது நாமத்திலும் மணி, வாசகத்திலும் மணி,அவரது திருவாசகப்பாடல் களை தனது திருக்கரங்களால் எழுதியருள ஏடும் கையுமாக மணிவாசகரிடம் தில்லைக்கு எழுந்தருளியவர் எம்பெருமான்.

‘‘சிந்தனை நின்தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணினைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்களார
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலிலே மலையே உன்னைத்



கலாபூஷணம் சாஹித்தியமணி
திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்த குரு M.A,
கொழும்பு



தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியேனற்கே.''

என சிவபிரானை மணிவாசகர் பாடியருளியவற்றையும் இன்றே பார்த்து விடுவோமே!

தேன் பிளிற்றும் திருவாசகத்தை எம்பெருமான் மீதுபாடி, எமக்குத் தேனமுதும்,திருவருளும் தந்தருளியவர் மணிவாசகப்பெருமான். அவரது திருவருள் கலந்த திருவாசகத்தின் இனிமையை, சுவையை, பெருமையை, சிறப்பை இராமலிங்க அடிகளார் சொல்லியவற்றை நாம் கேட்டு இன்புறுதல் இங்குசாலப் பொருத்தமாக அமையுமல்லவா?

''வான் கலந்த மணிவாசக! நின் வாசகத்தை
ஞான் கலந்து பாடுங்கால் கந்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்
தீஞ் சுவைகலந்து என்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே..''

இது இராமலிங்க அடிகளாரது மணிவாசகரது திருவாசகம் பற்றிய நோக்கு.

முத்துக் கொழிக்கும் பாண்டிய நாட்டிலே திருவாதவூரிலே சம்புபாதாசிரியருக்குப் புத்திரனாகப் பிறந்தவர் வாதவூரர். திருவாதவூரிலே பிறந்த காரணத்தால் வாதவூரர்என இவர் அழைக்கப் பெற்றார். அந்தண குலத்தில் உதித்த இவர் இளம் வயதிலேயே சகல சாஸ்திரங்களையும் கலைகளையும் கற்றுத்தேறிய ஒரு விற்பன்னராக விளங்கலானார். இவரது கல்வி,அறிவு,ஒழுக்கம்,ஆற்றல், கலையறிவு ஆகியவற்றையும் அவதானித்த பாண்டி நாட்டு மன்னன் அரிமர்த்தன பாண்டியன் இவரை மனம் விரும்பி தன் முதல் அமைச்சராக்கி அவருக்கு தென்னவன் பிரமராயன் என்ற சிறப்பு பட்டம் ஒன்றையும் அளித்து அவரைக் கௌரவித்து மகிழ்ந்தான்.

பாண்டியன் எதிர்பார்த்த வண்ணம் சிறந்த ஒரு முதலமைச்சராக விளங்கினார் வாதவூரர். ஆனால் அவரது மனமெல்லாம் சிவபக்தியிலேயே மூழ்கியிருந்தது. தனக்கு ஞானோபதேசம் செய்ய ஒரு சற்குரு கிடைக்கமாட்டாரோ என ஏங்கியது அவர் மனம்.

## குதிரைவாங்கச் சென்றமை

இந் நிலையிலே பாண்டிய மன்னன் தனது படைகளுக்காக குரிரைகள் வாங்கிவரும் பணி அவருக்கு மன்னனால் இடப்பட்டது. கீழைக் கடற்கரையில் நல்ல ஜாதிக்குதிரைகள் விற்பனைக்கு வந்திருப்பதாகவும் அவற்றில் தேர்ந்தெடுத்து தமது படைகளுக்கு கொண்டு வந்து சேர்க்குமாறு பெருந்தொகைப் பொன்னையும் வாதவூரரிடம் ஒப்படைத்து அவரை அனுப்பி வைத்தான் மன்னன். மன்னவன் பணியை மேற்கொண்டவாதவூரர் தன் பரிவாரத்தோடும் நின்ற பொன்னோடும் திருப்பெருந்துறையைச் சென்றடைந்தார்.

## குரு உபதேசம் பெற்றமை

திருப்பெருந்துறையிலே பலவகை மரங்களும் பொய்கையும் பூம்பொழில்களுமாக நிறைந்திருந்தன. ஆங்கோர் சோலையின் நடுவிலே இலைகள் நிறைந்த குருந்த மரநிழலின் கீழ் எம்பெருமான் தனது சில கணத் தலைவர்களே சி;யர்களாக அமைய வீற்றிருந்தார். அவரது அழகுத் திருமேனியை உருத்திராக்கம் மாலைகள் அழகு செய்தன. அவரது திருக்கரங்களில் சிவஞானபோதம் எனும் திவ்விய நூல் துலங்கியது. வாதவூரர் தூரவரும் போதே அவருடைய செவிகளில் சிவநாமம் ஒலிக்கக் கேட்டது. மிகுந்த ஆர்வத்துடன் அத்திசை நோக்கி விரைந்தார் வாதவூரர். அங்கே அவர் கண்ட குருவடிவக்காட்சி அவர் நெஞ்சை உறையவைத்தது. எந்த ஒன்றை இத்தனை காலமும் அவர் எதிர்பார்த்தாரோ அத்தகையதோர் காட்சியை அங்கு அவர் கண்டார். எம்பெருமானே தன்னை ஆட்கொள்ள அங்கு சிவகுருவாக அருட்குருவாக எழுந்தருளியுள்ளாரோ

என வியந்தார். அவரின் உள்ளம் பாகாய் உருகியது. ஆனந்தக் கண்ணீர் அருவியாய் ஓடியது. அவர் அக் குருவை அணுகி அவர் பாதாரகமலங்களில் வீழ்ந்து வணங்கி மெய்சிலிர்க்க நின்றார். அவரை அந்த அருட்குருவானவர் நின்னை ஆட்கொள்ளவே வந்தோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். அவர் திருக்கரங்களில் வைத்திருந்த நூல் யாதென வாதவூரர் வினாவ, சிவஞான போதம் எனக் குருவிடமிருந்து பதில் கிடைத்தது.

பின்னர் அந்த ஞானகுரு அங்கிருந்த பூங்கோவிலுக்கு எழுந்தருளி அங்கு அமைந்த ஒரு சிறப்பான பெருந்தவிசு ஒன்றில் தென்திசை நோக்கி அமர்ந்தார். வாதவூரரும் தூய நீராடி வெண்ணிறப்புனித ஆடை அணிந்து மெய்யெல்லாம் வெண்ணீறு பூசி குருவின் பாத கமலங்களில் மலரிட்டு வணங்கி, பொற்கலத்தில் திருவமுது ஏந்தி வந்து எம்பெருமானைத் திருவமுது செய்வித்து மகிழ்ந்தார். பின்னர் அவரைப் போற்றித் துதித்தார். இறைவனான குருவானவர் குருந்த மரநிழலில் அமர்ந்த வண்ணம் வாதவூரரை அருகே அழைத்து முப்பொருளின் உண்மையை விளக்கினார். கடவுள், உயிர், உலகம் (பதி,பசு,பாசம்) இவற்றின் உண்மையையும் தத்துவத்தையும் அவருக்கு உபதேசித்தருளினார். வாதவூரரின் பக்குவ நிலையை அறிந்து அவருக்கு திருவடி தீட்சையும் செய்தருளினார் சிவம் என்றால் மெய்ப்பொருள். ஞானம் என்றால் அது பற்றிய அறிவு. போதம் என்றால் அந்த அறிவை விரிவாக உணர்தல் என்று பொருள் கொள்ளலாம்.

இந்த வகையில் எம்பெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற திருவாதவூரடிகளின் நாவில் சரஸ்வதி முகமலர்ந்து, மனமுவர்ந்து குடிகொள்ளலானாள். சிவபுராணமும் பிறந்தது. உலகமும் உயர்ந்தது.

''நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணி தன்தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!''

தொடர்ந்து பல தோத்திரப் பாமாலைகளை எம்பெருமான் மேல் வாதவூரர் சூட்டினார்;. அவையாவும் பொருள் பொதிந்த ஞானம் நிறைந்த மணிமணியான சொற்களால் கோர்க்கப் பெற்று செவிக்கும் சிந்தைக்கும் இனிமையாக பூரணமாக ஒலிக்கலாயின. அருட்குரவரும் அப்பாடல்களை அலங்கரித்து மட்டற்ற மகிழ்ச்சிகொண்டு மணிவாசகர் என்றபட்டத்தை வாதவூரருக்குச் சூட்டி மகிழ்ந்தார். வாதவூரரும் அன்றிலிருந்து மணிவாசகர் ஆனார்.

அகம் மிகமகிழ்ந்தார். தன்னை மறந்தார். தன் அமைச்சர் பதவியை மறந்தார். தான் ஆற்ற வந்த பணியை மறந்தார். துறவுக் கோலம் பூண்டார். அவருக்கு மனதில் நின்றது புரிந்தது. நிறைந்தது யாவுமே தன்னை ஆட்கொண்ட ஞானகுருவின் திருவருட்தோற்றம் ஒன்றேதான். தொடர்ந்து மணிவாசகர் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தன் ஞானகுருவிடம் ஒப்படைத்தார். தன் குருவைவிட்டு நீங்கமனமில்லாது அவருக்கு பணிவிடை செய்தலையே தன் பாக்கியமாக கொண்டார். குதிரைகள் வாங்கிவர பாண்டியன் தந்த பொற்காசுகள் அனைத்தையும் சிவாலயங்களுக்கும் சிவனடியார்களுக்கும் வாரி வழங்கினார்.



அடிகளாருடன் உடன் வந்த அவரது பணியாட்கள் சிலரது தோற்றத்தையும் செயல்களையும் கண்டு செய்வதறியாது திகைத்து நின்றனர். பின்னர் அங்கு நடந்தவற்றை பாண்டிய மன்னனுக்கு அறியத் தந்தனர். மன்னன் சீற்றங்கொண்டான். அடிகளாரை உடனடியாக மதுரைக்குத் திரும்புமாறு ஓலை அனுப்பினான். இறைவன் ஒருவனுக்கே யான் அடிமை என்ற திருப்தியோடு இருந்த மணிவாசகர் பாண்டியன் ஓலைக்கு நான் பணிவதா? பாண்டியன் எவ்வாறு எனக்கு ஓலை அனுப்ப முடியும்?எனத் தன் மனம் கவர்ந்த அருட்குருவிடம் வினாவினார்.

## ஆவணி மாதத்தில் குதிரைகள் வருதல்

எம்பெரமான் மணிவாசகருக்கு வழி காட்டினார்.நீ மதுரைக்குப் போவாயாக ! ஆவணி மாத மூலநட்சத்



திரமன்று குதிரைகள் அங்கு வந்து சேரும். எனப் பகர்வாயாக என்றார்.ஈசன் அத்தோடு பாண்டிய மன்னனுக்குப் பரிசாக விலைமதிப்பற்ற மாணிக்க கல் ஒன்றையும் அடிகளாரிடம் கொடுத்தனுப்பினார். எம் பெருமானான குருவை விட்டுப்பிரிய மனமில்லாவி டினும், குருவின் வார்த்தைகளைச் சிரமேற்கொண்டு மணிவாசகர், மதுரைக்குத் திரும்பினார். அமைச் சர் வடிவம் பூண்ட அடிகளார் அரண்மனையை அடைந்து மன்னனுக்கு எம்பெருமான் கூறிய வார்த் தைகளையும் கூறி , குருவானவர் அளித்த விலையு யர்ந்த மாணிக்க கல்லையும் பரிசாக வழங்கினார். மன்னனும் சினம் தணிந்து மனம் மகிழ்ந்தான்.

ஆனால் காலம் யாரை விட்டு வைத்தது? அரசனது பணியாட்கள் அடிகளார் ,மன்னன் கொடுத்த பொற் காசுகளையெல்லாம் திருப்பெருந்துறையில் எல்லோ ருக்கும் வாரி வழங்கியதைத் தாம் கண்டதாகவும்,அவர் கூறிய அத்தனையும் பொய் வார்த்தைகள் எனவும் எடுத்துரைத்தனர். குதிரைகளைத் திருப்பெருந்தறை யிலோ , அன்றேல் வரும் வழியில் தன்னும் தாம் காணவில்லை எனவும் மன்னருக்குக் கூறினர்.

பாடண்டிய மன்னன் சந்தேகம் கொண்டான். மணிவாசகரைத் தண்டித்து பொன்னையும் பொரு ளையும் மீளப் பெறுமாறும் அவரைக் காவலில் வைக் குமாறும், கட்டளையிட்டான். எம்பெருமானும் திருவி ளையாடல் ஒன்றைப் புரியத் திருவுளங் கொண்டார்.

## நரிகள் பரிகளாதல்

ஆவணி மாதமும் மூல நட்சத்திரமும் வந்தது. சிவபெ ருமான் காட்டிலுள்ள நரிகள் எல்லாவற்றையும் பரிகளாக்கி,வானவரை பரி வீரர்களாக்கி, தானும் ஒரு பரிமேல் அமர்ந்து, அவர்களுக்குத் தலைவனாகி, மதுரை மாநகரை வந்தடைந்தார். பரிகள் வந்த செய்தி பாண்டிய மன்னன் செவிகளை எட்டியது.

மன்னன் பதை பதைத்தான். அடிகளாருக்க அநி யாயமாய்த் தவறு இழைத்து விட்டோமோ என ஒரு கணம் தடுமாறினான். இருப்பினும் குதிரைகளைப் பரிசோதித்து அவற்றின் தரம் அறிந்து, கயிறு மாறச் சம்மதித்தான். பாண்டியனின் வீரர் அத்தனை பரிக ளையும் உள் எடுத்து பந்தியில் சேர்த்தனர். பொழுதும் சாய்ந்தது. இறைவனும் திருவிளையாடலும் ஆரம்ப மானது.

## பரிகள் நரிகளானவை

மன்னன் அரிமர்த்தன பாண்டியனுக்கு இறைவன் பாடம் புகட்ட எண்ணினார். தனது மெய்யன்பன், மணிவாசகரின் பக்திப் பெருமைகளையும் அவர்க ளுக்குப் புரிய வைக்க விரும்பினார் ஈசன்.

இரவோடு இரவாக பரிகளெல்லாம் நரிகளாக மாறி ன. அவைகள் பந்தியை விட்டு வெளியே வந்து நாட் டுக்குள் புகுந்து நகரையே அல்லோல கல்லோலப் படுத்தின. அங்கு பந்தியில் இருந்த அசல் குதிரைக ளையும் கடித்துக் காயப்படுத்தின. நரிகள் ஏற்படுத்திய துன்பங்களால் வாடிய மக்கள் , மன்னனிடம் சென்று முறையிட்டனர். அரசனுக்கு, மீண்டும் வாதவூரர் மீது பெருஞ்சினம் ஏற்பட்டது. அவரைத் தண்டிக்க மீண்டும் எண்ணினான் பாண்டிய மன்னன் தண்டலாளர் அவ ரைத் கொணர்ந்து மன்னன் முன் நிறுத்தினர். வாதவூ ரரை வெயிலில் நிறுத்தி, நெற்றியில் பெருங்கல்லைச் சுமக்க வைத்து பலவாறெல்லாம் தண்டித்தனர். பாதங் களின் அடியில் ஆற்றின் சுடுமணல், நெற்றியின் பெரிய கல், எறிக்கும் சூட்டு வெயில். வாதவூரரால் மன்னன் எதிர் பார்த்தபடி அவன் தந்த பொருட்செல் வங்களை மீளவும் கொடுக்க முடியவில்லை. அவரிடம் இருந்ததெல்லாம் அருட்செல்வம் ஒன்றேதான்.

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின் மேல் வந்தருளிய




பெருமையையும், பின்னர் அரியொடு பிரமாக்க ளுமறிய யொண்ணான் நரியைக் குதிரையாக்கிய தன்மையையும் எண்ணி வியந்தார். மணிவாசகர். இதனைத், தன் பாடல்களிலே பல இடங்களில் மணிவாசகர் சுட்டிப் பாடியுள்ளதை திருவாசகம் படிப் பவர் நன்கறிவர்.

ஆனால் பாண்டியன் இந்த விபரீத நடவடிக்கைக ளைப் பற்றி நிதானமாக, ஆழமாக சிந்தித்தானில்லை. அவனுடைய சீற்றம் அவன் விவேகத்தை மறைத்தது. வாதவூரர் தன்னை ஏமாற்றி விட்டதாகவே மன்னன் விளங்கிக்கொண்டான். அவரை ஒரு மாயவாதியா கவே கருதினான். ஆனால் வாதவூரரோ,

நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

என தன் சித்தத்தை எம்பெருமானிடம் ஒப்படைத்து விட்டு, பாண்டியன் அளித்த தண்டனைகளைச் ச கிக்கலானார். இறைவன் வாதவூரர் மேல் கருணை கொண்டு, அவரது துன்பத்திற்கு ஒரு முடிவு கொணர முற்பட்டார். மதுரை மாநகரமே அழியும் வண்ணம் வைகை நதியைப் பெருக வைத்தார். எங்கும் பெரு வெள்ளம் . நீர், நீர், நீர், நீர் புகமுடியாத இடமும் உண் டோ! ஆற்று வெள்ளத்தில் மக்களும், பொருட்களும் மிதக்கும் அளவுக்கு நீரலைகள் மோதின. மக்கள் அஞ் சினர். வாதவூரருக்கு மன்னன் அளித்த தண்டனைக ளின், விளைவுதான் இந்த ஆற்றுப் பெருக்கோ ? என சிந்திக்கலாயினர். மன்னனும் தான் இழைத்த தவறை உணரலாயினன். அடிகளாரை அணுகினான். தன் பிழை பொறுத்தருள வேண்டினான்.

வாதவூரருக்கு அருளவதோடு, மன்னனுக்கும் பாடம் புகட்ட எண்ணினார் எம்பெருமான். வெள்ளத்தால் அழிய இருந்த பாண்டி நாட்டைக் காப்பாற்றியாக வேண்டும். ஆற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்.அணை கட்டியாக வேண்டும். ஆற்றின் பங்குக் கரைகளுக்கு அணை கட்டும்படி பொதுமக்க ளுக்கு எல்லைகள் அளந்து கொடுக்கப்பட்டன. பொது மக்கள் கூலியாளர்களையும் உடன் கூட்டிய வண் ணம் வைகையாற்றை நோக்கி மண்வெட்டியோடும், கூடைகளோடும் விரைந்தனர்.

**தொடரும்.....**



### அன்பும் பக்தியும்

# மனித நேயம் ஓர் பார்வை

பார்வை:– 01

உலகில் தோன்றி மறையும் உயிர்கள் யாவற்றுள்ளும் மனிதன் மேலான சிறப்பிடம் பெற்று விளங்குகிறான். மனிதப் பிறவி மகத்தானது, பெறுதற்கரியது என்பதை சான்றோர்கள் பலகாலும் வலியுறுத்தியுள்ளனர். அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது'' என்பது ஔவையின் வாக்கு. அம்மானிடப் பிறப்பும் வானமற்றதாய், ஞானமும் கல்வியும் கூடியதாய், தானமும் தவமும் மிக்கதாய் அமைதல் மிகவரிது என்பார். இறைவனின் எடுத்த பொற்பாதங்களை எஞ்ஞான்றும் சிந்தித்திருக்கும் பேறு கிட்டுமானால் தனக்கு மீண்டும் மனிதப்பிறவியே அருளும்படி வேண்டுகிறார் திருநாவுக்கரசர். இங்ஙனம் மானிடப் பிறவியானது போற்றத்தக்கதாய் இருப்பதற்கும் பிற உயிர்களினின்று மேம்பட்டு விளங்குவதற்கும் மனிதம் எனப்படும் உயர் பண்பே காரணமாய் அமைகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாய்க் காடுகளிலும் குகைகளிலும் விலங்கொடு விலங்காய் அலைந்து திரிந்து கொண்டிருந்த ஆதிமனிதன் அந்த விலங்குகளிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ள, சிந்தனையைத் துணையாகக் கொண்டான் . அச்சிந்தனையின் விளைவாய் உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை உருவாக்கிக் கொண்டதோடு சக மனிதர்களோடு கூடி வாழவும் தலைப்பட்டான். அத்தகைய கூட்டு வாழ்க்கையின் பயனாய் சமூகம் தோன்றிற்று. ஒட்டுமொத்த சமூகத்தின் சிந்தனை, நாகரிகமாய் மலர்ந்து காலப்போக்கில் பண்பாடாகவும், கலாச்சாரமாகவும் பரிணமித்தது. அப்பண்பாடானது.மனிதகுலம் தழைப்பதற்கான நெறிகளை, உயர்பண்புகளை இடையறாது வலியுறுத்தும் கடப்பாட்டினைக் கொண்டதாக இயங்கி வருகிறது. அவற்றுள்,




கலாநிதி பொன் ஜெயரூபன்
விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.
PhD, ME.d, BA, PGDE(Merit),National Diploma in Teaching (Merit),Dip.in.Sp.Edu,Dip.in.HR
Lecturer / Project Leader
Department of Religions & Value Education
National Institute of Education
Maharagama

மனிதனை மனிதனாக அடையாளம் காட்டும் தலையாய பண்பாக விளங்குவதே மனிதநேயம் ஆகும்.

மனிதநேயம் மனிதம், மனிதாபிமானம், மனிதத் தன்மை, மாந்தநேயம் என்னும் சொற்களாலும் அழைக்கப்படுகிறது. இலக்கண முறையால் உயர் திணை எனக் குறிக்கப்படும் மக்கள் தங்களுக்குரிய தனிச்சிறப்பான ஆறாம் அறிவை, சிந்திக்கும் திறனை இழக்கும் போது அஃறிணையாகிய மாக்களாகக் கருதப்படுவதைப் போல் மனிதன் தன் அடிப்படை இயல்பாகிய மனிதத்தன்மையை, மனிதநேயத்தை இழப்பானாகில் அவன் மிருகக் கூட்டத்துள் ஒருவனாகவே மதிக்கப்படுகிறான். அவ்வகையில் மனிதனின் அடிப்படை அலகுகளில் ஒன்றாக மனிதநேயம் விளங்குகிறது எனலாம்.

**மனிதநேயம் - சொல்விளக்கம்**

மனிதன், நேயம் என்னும் இரு சொற்களின் புணர்ச்சியால் பிறக்கும் மனிதநேயம் என்ற சொல்லானது, இருவேறு உட்பொருள்களை தன்னகத்தே கொண்டதாய் அமைந்துள்ளது. அவை.

1. மனிதன் தன்னோடொத்த சக மனிதனிடத்துச் செலுத்தும் நேயம்

2. மனிதன் தானல்லாத பிறவுயிர்கள் அனைத்திடமும் செலுத்தும் நேயம்

என்பனவாகும். இவையிரண்டனுள் சிறப்பு நோக்கி, மனிதன் தானல்லாத பிறவுயிர்கள் அனைத்திடமும் செலுத்தும் நேயம் என்பதையே அச்சொல்லின் சரியானதும் நேரடியானதுமான பொருளாகக் கருதலாம். நேயம் என்பதற்குக் கழகத் தமிழகராதி அன்பு, நன்மை, எண்ணெய், நெய், உறவு, பக்திஆகிய பொருள்களைக் குறிக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் லெக்சிகன், நேயம் என்ற சொல்லுக்கு அன்பு, பக்தி என்ற பொருள்களை தருகிறது. ஆங்கிலத் தமிழ் அகராதி,ர்ரஅயணவைல என்ற சொல்லுக்கு மனித இயல்பு, மனிதப் பண்பு. அருளிரக்கம், அன்பு, அறஆர்வச் செய்கை, இயற்கை கடந்த பண்புகளை மறுத்த மனிதநல முன்னேற்றக் கோட்பாடு என்று பரந்துபட்ட பொருள்களை முன்வைக்கிறது. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி மனிதத்தன்மை என்பதற்கு அன்பு. இரக்கம் முதலிய மனிதனுடைய அடிப்படைப் பண்பு என்றும் மனிதநேயம் என்பதற்கு மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பு என்றும் பொருள் தருகிறது. இதேபோல் ர்ரஅயணளைஅ என்பதற்கு 'மனித உலக வாழ்க்கை இயல், மனிதப் பொதுமை நல இயல், மனித இனப் பொதுச் சமய அமைதி, மனித இன இயற் பண்பாய்வுத் துறை என்ற பொருள்கள் குறிப்பிடப்படுகின்றன. அவ்வகையில் மேலை நாட்டு அறிஞர்கள் உருவாக்கிய சிந்தனை



மரபானது. மனிதனை, மனிதநலத்தை மையமாகக் கொண்ட மனிதத் தன்மை வாய்ந்த நோக்கினையே மனிதநேயம் (ர்ரஅயணளைஅ) என்று குறிப்பிடுவதை உணரலாம்.

**அன்பும் பக்தியும்**

அன்பெனப்படுவது ஓர் உன்னத உணர்வு. உலகில் மனிதர்கள் மட்டுமின்றி உயிர்கள் யாவையும் ஒன்றோடொன்று அன்பெனும் உணர்வால் பிணைக்கப் பட்டுள்ளன. அன்பின் வழியது உயிர்நிலை என்பது வள்ளுவம். அன்பு என்ற சொல்லுக்கு 'ஒருவரின் மனம் நெகிழும்படியாக மற்றொருவர் அவர் மேல் வெளிப்படுத்தும் நேசமும் நட்பும் கலந்த உணர்வு' என்று தற்காலத் தமிழகராதி பொருள் கூறுகிறது. அன்பின் பெயர்களை நாமதீப நிகண்டு ,

''ஈரநேயம் புரிவாணம் பாசம் பக்திப்பரிவு
ஆர்வநாரன் பெழுமையன் புலுவல் - போர்மை
கருணை இரக்கந் தயாவே கிருபை
அருளிய னுக்கிரகமாம்''

என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுகிறது. முதற்கண் ஈரநேயம் என்று குறிப்பிடப்படுவதால் நேயம் என்ற சொல் சிறப்பாக அன்பென்ற சொல்லுக்கு இணையாய் நிற்பதை உணரலாம்.

சடப்பொருள்களான கற்களாலும் மண்ணாலும் கட்டப்படும் வீடானது தன்னுள் அன்பால் இணைந்த மனிதர்கள் வாழும் போது தான் இல்லம் என்ற சிறப்பினைப் பெறுகிறது. அதே போன்று, சக மனிதனிடம் அன்பு செலுத்தி நட்பு பாராட்டும் மனிதனே சமுதாயத்தின் சிறந்ததோர் அங்கமாகிறான்.

ஜனசக்தியின் மேலான மேற்பார்வைக்குப் பிரதி மனிதனும் தன்னையும் தன்னிடமுள்ள சக்தியையும் ஒப்புக் கொடுத்து விடுகிறான். அதற்குப் பிரதியாக ஜன சக்தியினின்று பிரிக்க முடியாத ஒரு பாகமாகப்

பிரதி மனிதனையும் தன் துணையாகப் பெறுகிறான்.'

என்று சமுதாய ஒப்பந்தம் என்ற நூலில் ஃபிரெஞ்சு நாட்டறிஞர் ரூஸோ குறிப்பிடுகிறார். எந்தவொரு சமுதாயம் தன் எல்லாச் செயல்களிலும் அன்பை அடிநாதமாகக் கொண்டிருக்கவில்லையோ, எந்தச் சமுகம் தனது பகைவரிடத்தும் அன்பு பாராட்டும் உயர் குணத்தைப் பெற்றிருக்கவில்லையோ அந்தச் சமூகம் விரைவில் அழிந்துபடத் துவங்குகிறது. நீண்ட நெடும் வரலாற்றினைக் கொண்டுள்ள தமிழ்ச் சமுகத்தினுள் இக்கருதுகோளைப் பொருத்தி ஆராய்ந்தால் அச்சமுகத்தினை ஆண்ட புகழ்மிக்க அரசர்களும், மக்களுக்கு



நீதியையும் அறத்தையும் போதித்த ஆன்றோர்களும், சமயம் பரப்பிய அருளாளர்களும் அன்பின் வழி நின்றவர்களே என்பது புலனாகிறது. பலயாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன், பகை நாட்டிற்குள் படை செலுத்தும் முன்பாக அங்குள்ள பசுக்களும், பார்ப்பன மக்களும், பெண்களும், நோய் வாய்ப்பட்ட இயலாதோரும், தங்களுக்கு ஈமக்கடன் இறுக்கும் பொன் போன்ற புதல்வர்களைப் பெறாதவர்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடும்படி முரசறையச் செய்தான். இக்கருணை மரபினை,

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடனிறுக்கும்
பொன்போற் புதல்வரைப் பெறாதீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என.. 12

என்ற பாடல்வழி நெட்டிம்மையார் விளக்குகிறார். முல்லைக்குத் தேர்ந்த பாரியும், மயிலுக்குப் போர்வை தந்த பேகனும், சிறுபுறாவிற்காக தன் தசையை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும் அரசர்களாயினும் பேரன்பின் சின்னங்களாகவே விளங்குகின்றனர்.

அன்பின் முதிர்நிலையே பக்தி எனக் கருதப்படுகிறது. தம்மினும் கீழோர்மாட்டும் தமக்குச் சமமானவரிடத்துங் கொள்ளும் நேயம் அன்பெனில் தம்மினும் உயர்ந்தோர் மாட்டுச் செலுத்தும் நேயம் பக்தியாகும். பக்தி என்பது தம்மினும் மிக்காரிடத்து காட்டும் ஓர் உணர்வு - பாசம் அல்லது பற்று 13 என வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது. வடமொழியில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய நாரத பக்தி சூத்திரம் பக்தி என்பது இறைப் பொருளிடத்துக் கொள்ளப்படும் மிகவுயர்ந்த அன்பாகும்'14 என்று கூறுவதிலிருந்து நேயம் - அன்பு - பக்தி ஆகியன ஒரே பொருளில் முகிழ்த்த சொற்கள் என்பது புலனாகிறது.

உலகில் பக்தி நெறி பரப்பிய அருளாளர்கள் பலரும் இறைவனிடம் செலுத்தும் பக்தியுணர்வின் முதல் படிநிலையாக அன்பையே சுட்டி வலியுறுத்தினர். இறைவன் அன்புருவானவன் என்பது அனைத்து சமயங்களின் ஒருமித்த கருத்தாக அமைந்துள்ளது.

''என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து
அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே'' 15

என்று தன் நிலையைப் புலப்படுத்துகிறார் தாயுமானவர்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே16

என்று திருமூலரும்,

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே
அன்பெனும் காத்தமர் அமுதே....
அன்புருவாம் பரசிவமே 17

என்று வள்ளலாரும் போற்றிப் பரவுவது இறைவடிவாயிருக்கும் அன்பையே என்று உணரலாம்.

### மனிதநேயக் கோட்பாடுகள்

மனிதநேயம், மனிதனின் மனித இனத்தின் அடிப்படைப் பண்பு என்பதை மறுப்பவர் எவருமில்லை. அத்தகைய அடிப்படைப் பண்பினின்று மனிதன் வழுவாதிருக்கும் பொருட்டு உலகெங்கும் மனிதநேயம் குறித்த தீர்க்கமான சிந்தனைகளும் தெளிவான கோட்பாடுகளும் உருவாக்கப் பெற்றன. இக்கோட்பாடுகள் மனிதகுலம் முழுமைக்குமான நன்னெறியாய், வாழ்வியற் சிந்தனையாய் அமைவதால் இவை மனித இன நலக் கோட்பாடெனவும் வழங்கப்படுகின்றன.

மனித இனநலக் கோட்பாடு என்பது மேற்கு ஐரோப்பாவில் மறுபிறவி எடுத்துள்ள குணநலன் என்ற நிலையைக் குறிக்கும். தற்காலிக விருப்பங்கள் மற்றும்

மனிதனுடைய திறமைக்கு முக்கியமளிக்கின்ற மனோ நிலை18

என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. இதன்படி மனிதனை மனிதத்தன்மையோடு அணுகுதலும் அவனது உரிமைகளுக்கு மதிப்பளித்தலுமே மனிதநேயம் அல்லது மனித இன நலக் கோட்பாடு என்று தெளியலாம். இணையத்தில் இயங்கி வரும் கட்டற்ற கலைக் களஞ்சியமான விக்கிபீடியா ,

மனிதரின் தன்மையை இருத்தியலை அடிப்படையாகக் கொண்ட உலக நோக்கு மனிதநேயம் ஆகும்.19

என்ற கோட்பாட்டினை முன்வைக்கிறது. மனிதனை மனிதனாக மதித்தல் என்பது இதன் நேரடிப் பொருளாகும். மனிதனை அவனது நாடு, இனம், மொழி, மதம் என்னும் அடையாளங்களைத் தவிர்த்துவிட்டு அவனது மனிதத் தன்மையை, அவனது இருப்பை மதிப்போடு நோக்குதலே மனிதநேயம் என்று மேற்கண்ட கோட்பாட்டினை விரித்துப் பொருள் கூறலாம். விக்கிப்பீடியாவின் இக்கோட்பாட்டிற்கு அரண் சேர்க்கும் விதமாக ரஷ்ய அறிஞர் ஃபிராலோவின் கருத்து அமைந்துள்ளது.

மனிதநேயம் மனிதனது பெருமையையும் உரிமையையும் மதிக்கும் வகையில் அமைந்த ஒரு கோட்பாடு. மனிதனின் ஆளுமைப் பண்புகளை மதிக்கவும் அவனது நலன்களைப் பேணி வரவும் சமூக வாழ்வின் அனைத்து துறைகளிலும் மனிதன் முழுமையான வளர்ச்சி பெறவும் துணைபுரிவது இக்கோட்பாடு ஆகும்20

என்பது அவர் கூற்றாகும். இங்ஙனம் மேலைநாட்டறிஞர்களின் கோட்பாடுகள் அனைத்தும் மனித இருப்பை மதித்தலே மனிதநேயம் என்ற ஒற்றைப் பொருளை மட்டுமே தந்து கொண்டிருக்க, இந்தியாவில் இலக்கியங்கள், மதங்கள், அறிஞர்களின் கொள்கைகள் யாவும் மனிதநேயம் என்பதை மனிதம், மானுடம், மனிதாபிமானம், அன்பு, கருணை,ஈகை என பலபொருள்களைத் தரும் ஒரு சொல்லாகவே பயன்படுத்தி வருகின்றன.

மனிதனை, அவன் இயல்பினை, அவன் ஆதிக்கத்தினை வரலாறு கலை, இலக்கியம் ஆகியவற்றின் மையக்கருத்தாகக் கொள்ளும் மெய்யியலும் கண்ணோட்டமும் மானுடம் எனப்பெறும்21

என்பதை தனிநாயக அடிகளின் கருத்தாக பேராசிரியர் கா.சிவத்தம்பி எடுத்துக் காட்டுகிறார். தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் குறித்து ஆய்வு மேற்கொண்ட அவர்,

'மானுடம் என்பது மனிதனுக்குரிய கௌரவத்தை, தன் வாழ்க்கைச் சூழலை தானே மாற்றியமைக்கும் திறனுடைய அவனது ஆற்றலை. அந்த ஆற்றலை



அவனுக்கு வழங்கவும் வளர்க்கவும் வேண்டிய அற நன்னெறிப் பெறுமானங்களைப் பற்றி அறிதலும் அவற்றின் தொழிற்பாட்டை விதந்து கூறுதலுமாகும்22

என்கிறார்.

உலகம் போரின்றி வாழவும் உலக மக்களிடையே அன்பு தழைக்கவும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாதொழிந்து ஒப்புரவு நிலைக்கவும் வழிவகுக்கும் ஓர் உயரிய கோட்பாடே மனிதநேயம்23

என்கிறார் பேராசிரியை இரா.சக்குபாய். மேற்கண்ட கோட்பாடுகளினின்று மனிதனுடைய பெருமைகளை உணர்தல், அவன் உரிமைகளுக்கும் திறமைகளுக்கும் மதிப்பளித்தல், யாவரிடத்தும் அன்பாயிருத்தல், எவர்க்கும் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாதிருத்தல் ஆகியன மனிதநேயத்தின் கூறுகளாக பெறப்படுகின்றன. மேலும் உலகு தழுவிய நோக்கில் ஆராயும் போது சமாதானம், போரின்மை, சமதர்மம், பொதுவுடைமை ஆகியனவும் மனிதநேயத்தின் குறிக்கோள்களாக இருப்பதை அறிய முடிகிறது. தொகுத்துக் கூறின் ஒவ்வொரு மனிதனுக்கும் தனது வாழ்வின் பொருளையும் வடிவத்தையும் தானே தீர்மானிக்கும் உரிமையும் கடமையும் உண்டு என்பதை உறுதி செய்யும், ஜனநாயகத்தன்மை வாய்ந்த அறம் சார்ந்த வாழ்க்கையே மனிதநேயம் எனலாம். அது . அறத்தை அடிப்படையாய்க் கொண்ட மனித குணங்களின் வழியாக மேலும் கருணை மிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்குவதையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மனிதநேயத்தின் பன்முகத் தன்மை

கழகத் தமிழ் அகராதி நேயம் என்ற சொல்லுக்கு அன்பு, பக்தி ஆகியவற்றை நேரடிப் பொருள்களாக முன்வைப்பதையும் இம்மூன்று சொற்களும் தம்முள் இயைபுடையவையாய் இருப்பதையும் கண்டோம். இவையன்றி கருணை, அருள், கண்ணோட்டம் , ஒப்புரவு,ஈகை, கொல்லாமை, இன்னா செய்யாமை,

ஆகியனவும் மனிதநேயத்தின் தவிர்க்க முடியாத கூறுகளாக அமைந்துள்ளன. உலகப் பொதுமறையாம் திருக்குறள் இதனை உணர்த்தும் பொருட்டாகவே அன்புடைமை, அருளுடைமை, ஒப்புரவறிதல், கண்ணோட்டம் ,ஈகை, பொறையுடைமை, விருந்தோம்பல் என நேர்மறையானும், இன்னா செய்யாமை, கள்ளாமை, கொடுங்கோன்மை, கொல்லாமை, தீவினையச்சம், புலால் மறுத்தல், வெருவந்த செய்யாமை என்று எதிர்மறையானும் மனிதநேயத்தின் ஏனைய முகங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறது. அவ்வகையில்,

1. மனிதனை மனிதன் மதித்துப் போற்றுதல்
2. முன்பின் அறியாதோரிடத்தும் பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்
3. மனத்தாலும் மொழியாலும் உடலாலும் எவ்வுயிர்க்கும் எவ்வகையாலும் எந்நிலையிலும் ஊறு செய்யாதிருத்தல்
4. துன்பத்தில் உழலும் உயிர் கண்டு கலங்குதல்
5. அத்துன்பத்தை தன்னுடைய துன்பமாய்க் கருதி அதனை விரைந்து தீர்க்க முற்படுதல்
6. எவரிடத்தும் பகைமை பாராட்டாது, எவரையும் வெறுத்து ஒதுக்காதிருத்தல்
7. பசித்தார்க்கு உணவும், இல்லார்க்குப் பொருளும், இயலாதார்க்குக்
1. கரமும் கொடுத்து உதவுதல்
8. எல்லோர்க்கும் எல்லாமும் என்ற பொதுவுடைமைச் சிந்தனை
9. எல்லோரும் ஓர் குலம் , எல்லோரும் ஓர் நிறை என்ற சமத்துவநிலை
10. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சான்றாண்மை

ஆகியனவற்றை மனிதநேயத்தின் பன்முகங்களாகக் கருதலாம். ஒன்று பலவாகத் தோன்றும் இறைக் கொள்கையைப் போன்றே இத்துணை பொருள்களையும் ஒற்றைச் சொல்லில் குறிக்க வேண்டுமெனில் அச்சொல் நிச்சயம் மனிதநேயம் என்பதாகவே இருக்கக் கூடும்.

மனிதநேய வரையறை

‘மனிதன் என்ற சொல் கம்பீரமானது. மனிதனை விடச் சிறந்த கருத்துக்கள் இல்லை. மனிதனுக்குத் தலைவணங்குகிறேன். ஏனென்றால் மனித அறிவுக்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை24 என்று மனிதனின் சிந்திக்கும் ஆற்றலை வியந்து போற்றுகிறார் ரய எழுத்தாளரும் மிகச் சிறந்த மனிதாபிமானியுமான மாக்ஸிம் கார்க்கி. கார்க்கியின் இக்கருத்தினை தனது நூலில் எடுத்துக் காட்டியுள்ள கே.பாலதண்டாயுதம்,

மனிதன் தன்னையொத்த மனிதனிடத்தும் முன்பின் தெரியாத ஒருவரிடத்தும் இந்த சமுதாயத்திடத்தும் கொண்டுள்ள உணர்வுகளையும் உறவுகளையுமே மனிதநேயம் என்று கூறலாம்25

என் என மனிதநேயத்தினை வரையறுத்துக் கூறுகின்றார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் அமைந்த போதிலும், பிற உயிர்களிடம் காணப்பெறாத தனிச்சிறப்பாக மனம் என்னும் ஆறாம் அறிவினை. சிந்திக்கும் ஆற்றலை மேலதிகமாய்ப் பெற்றிருக்கும் மனிதன், தன்னினும் கீழான பிற உயிர்கள் அனைத்தின் பாலும் அன்பு கொண்டு அவற்றைக் காக்கும் கடப்பாட்டினைக் கொண்டவனாகிறான். ஆதலால் மனிதன், பிற மனிதன் மாட்டுக் கொள்ளும் அன்பே மனிதநேயம் என்ற வரையறையானது மிகவும் குறுகிய எல்லைகளைக் கொண்டதாக அமைகின்றது.

உலகில் எங்கோ ஒரு மூலையில் மனித இனம் துன்பத்துள் சிக்கித் தவிக்கிறது என்றால் மற்றொரு மூலை



யில் உள்ளோர் அதற்காக மனம் இரக்கப்படுவது மனிதநேயம்’26

என்கிறார் தெ.முருகசாமி. இவ்வரையறை உலகு தழுவிய மனிதநேயத்தைப் பறைசாற்றுவதாக அமைகின்றது. என்ற போதிலும் பிற மனிதர்களின் துன்பம் கண்டு இரங்குதல் மட்டுமே மனிதநேயச் செயலாகி விடுவதில்லை. துயருறும் மனிதர்களைக் கண்டால் அவர் துன்பத்தை தன் துன்பமாகக் கருதி அவற்றைப் போக்க விழைதலே முழுமையான மனிதநேயச் செயலாகும்.

பா.குழந்தைசாமி என்பவர்,

மனிதனை மனிதன் மதித்து அவனுடைய உரிமைகளைப் பாராட்டி அவனுடைய முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்டு இடரகற்றி அவனை உயர்நிலைக்கு உயர்த்தும் பண்பே மனிதநேயம்’27



என்றும், இந்துமதி நாவல்களில் மனிதநேயம் குறித்து ஆய்வு மேற்கொண்ட கோமதி என்பார் ,

மனிதநேயம் என்பது நாடு , இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது. மனித இனத்தின் நாகரிக பண்பாட்டு வளர்ச்சியோடு பிணைந்து நிற்பது. மனிதநேயம் என்பது ஓர் உயரிய பண்பாடு. இப்பண்பாட்டினால் மக்களிடையே அன்பு வளரும், ஏற்றத் தாழ்வுகள் நீங்கும். ஒப்புரவு நிலைக்கும். மனித ஆற்றல்கள் உயரும். மனித மதிப்புகள் போற்றப் பெறும். மானுடம் போற்றுவதே மனிதநேயம் எனப்படும்' 28

என்றும் மனிதநேயம் குறித்த வரையறைகளை முன்வைக்கின்றனர். இவ்விரண்டு கருத்துக்களும் மேனாட்டவரின் மனிதநேயக் கொள்கைகளை ஒத்ததாய் அமைகின்றன. இவற்றினின்று மனித மதிப்புகளைப் போற்றி வளர்ப்பதே மனிதநேயம் என்ற கருத்து பெறப்படுகிறது.

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடியாய் விளங்கும் தமிழ்க்குடியின் பண்பாட்டு வரலாறானது அளவிட்டறியவியலாத் தொன்மையுடையதாய் அமைந்துள்ளது. தொன்று தொட்டு இம்மண்ணில் தோன்றி மறைந்த சான்றோர்கள், அறிஞர்கள், அருளாளர்கள் மற்றும் தத்துவ ஞானிகள் அனைவரும் அனைத்து உயிர்களையும் சமமாகவே மதித்துப் போற்றியுள்ளனர். மகனின் தேர்க்காலில் சிக்கி உயிரிழந்த கன்றிற்கு ஈடாய் தன் மகனையே தேர்க்காலில் பலியிட்டு தாய்ப்பசுவின் துயரை தானும் அனுபவித்த மனுமன்னன் வாழ்ந்த மண்ணாகையால் இங்கு மனிதநேயம் என்பதற்கு 'மனிதனை மட்டும் நேசித்தல்' என்று பொருள் கொள்வது பொருந்தாக் கொள்கையாகிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது திருக்குறள். உயிர்கள் யாவையும் சமம் எனக் கொள்ளுதலே தமிழ்ப்பண்பாடாய் அமைந்துள்ளது.

இவ்வுயர் நோக்கினைக் கருத்தில் கொண்டு சிந்திக்கும் பொழுது. தானல்லாத பிற உயிர்கள் அனைத்தின் மாட்டும் செலுத்தும் தன்னல மற்ற தூய அன்பே மனிதநேயம் எனக் கொள்ளலாம். இஃது. உயிர்கள் எவற்றுக்கும் எந்நிலையிலும் ஊறு செய்யாமை, பிற உயிர்கள் காணச் சகியாமை, அவ்வாறு காணில் எதிர் நோக்கங்கள் ஏதுமற்று அன்பு, மற்றும் அகிம்சையின் துணை கொண்டு பிற உயிர்களின் துயரை தன் துயராய்க் கருதி அதனைக் களைய முற்படும் கருணை மனப்பான்மை ஆகிய கடப்பாடுகளைத் தன்னுள் கொண்டதாக அமைந்துள்ளது.

அனைத்து உயிர்களிடத்தும் அன்பும், இரக்கமும், கருணையும் கொண்டு சுயநலமற்ற பொதுநலச் சிந்தனையோடு பிறர் நலம் நாடும் பேருள்ளச் சிந்தனையே மனிதநேயம்' 29

என்று முனைவர். சித்ரா கூறியுள்ள கருத்து ஈண்டு ஒப்புநோக்கி சிந்திக்கத் தக்கதாய் அமைந்துள்ளது.

**தொடரும்....**



# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## அறிமுகம் – பின்னணி

ஈழத்தில் 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்குப் பெற்ற காலத்தில் தோன்றிய சைவப் பெரியார்களுள் ஆறுமுக நாவலரும் ஒருவர்.

ஞானப்பிரகாசர் மரபில் வந்த கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக 1822 டிசம்பர் 18 ஆம் திகதி நல்லூரில் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும்.

### கல்வி

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் தேர்ச்சியுடையவரான இவர், நல்லூரர் சுப்பிரமணிய உபாத்தியாயர், வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் குருகுல முறையில் கல்வி பயின்றவர். தனது பன்னிரண்டாவது வயதில் தமிழ் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றார்.

யாழ். வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (யாழ்ப்பாண மத்திய கல்லூரி) கல்வி பயின்று சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றார். அவர் 7 ஆண்டுகள் அக்கல்லூரியிலேயே ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அந்நேரத்தில் அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் பாதிரியார், கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். இதனால் கிறித்தவ விவிலியத்தில் சைவமதச் சார்பான சொற்கள் இடம்பெறுவதற்கும் ஆறுமுகநாவலரே காரணமாக அமைந்துவிட்டார் என்றால் அதை மறுப்பதற்கில்லை.

சைவசமயத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற பேராசையால் வெஸ்லியன் கல்லூரியில் தான் பணிபுரிந்த ஆசிரியர் பணியை நிறுத்தினார்.

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி 'நாவலர்' பட்டத்தைப் பெற்றார்.




**சிவத்திரு. சற்குணலிங்கம் ஹோபிநாத்**
BA Hons (Hindu Civilization), PGDE, MPhil(r)
ஆசிரியர்,
தி/கந்/பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்,
கந்தளாய், திருக்கோணமலை.
ஆன்மீக சொற்பொழிவாளர்,
வரலாற்று ஆய்வாளர், எழுத்தாளர், கவிஞர்
ஸ்தாபகர், "சிவபுத்திரர்கள்"
சைவசமய சமூக அபிவிருத்தி அமையம்.

## பணிகள்

**நாவலரின் பணிகளை**

1. சமயப்பணி
2. கல்விப்பணி
3. பதிப்பாசிரியர் பணி
4. சமூகப்பணி

என தனித்தனியாக நோக்க முடியும்.

**1. சமயப்பணி:**

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கினார். இதன் பொருட்டு,

★ சைவப் பிரசங்கங்களை ஆற்றியமை

சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார். இவரது முதற் பிரசங்கம்



வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசம்பர் 31, 1847 ஆம் நாள் நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.

★ புராணபடனங்கள் நிகழ்த்தியமை

குறிப்பாக யாழ்ப்பாணத்திலே கந்தபுராண கலாசாரம் தோன்றுவதற்குக் காரணமாகினார். நல்லூர்க் கந்தன் திருவிழாக் காலங்களில் கந்தபுராணம் பாடும் மரபைக் கொண்டு வந்தார்.

★ ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை.

குறிப்பாக, 'மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டம் என்னும் நன்நகரில் தேன்பொந்தொன்று உள்ளது. அதனைச் சென்றடையுங்கள் என விஞ்ஞாபனம் செய்து அதன் மூலம் திருக்கேதீச்சரத் திருத்தலம் புனரமைப்புப் பெறுவதற்குக் காரணமாக இருந்தார்.

★ சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டமை.

உதாரணமாக, சைவ வினாவிடை முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம், இலக்கண நூல்கள் பலவற்றை எனப் பலவகை நூல்களை வெளியிட்டு சைவசமய அறிவை மக்களிடையே, குறிப்பாக மாணவர்களிடத்தே வளர்க்கப் பாடுபட்டார்.

## நாவலர் மணி மண்டபம்
## யாழ்ப்பாணம்

★ பண்ணிசையினை வளர்த்தமை.

நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஓதுவித்தமை.

★ பிரமச்சரிய வாழ்வினைச் சீராக வாழ்ந்து காட்டியமை.

★பிறசமய, அகச்சமயக் கண்டனங்களை மேற்கொண்டமை. கண்டனப் பிரசுரங்கள் மூலம் சைவத்தின் மாண்பை நிலைநிறுத்தியமை. குறிப்பாக,

சைவதூஷண பரிகாரம்
நல்லூர் கந்தசுவாமி கோயில்
யாழ்ப்பாணத்துச் சமயநிலை
போன்றவற்றைக் கூறலம்.

**2. கல்விப்பணி**

இந்துக்களின் கல்வி மரபு வளர்ச்சியடைய வேண்டுமென்று பல்வேறு பணிகளை முன்னெடுத்துச் சென்றார், அந்தவகையில் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார். 1848 வண்ணார்பண்ணையிலும், 1864 சிதம்பரத்திலும், 1872 கோப்பாயிலும் என பல வித்தியாசாலைகளை அமைத்தமை குறிப்பிடத் தக்கதாகும்,

சைவச்சிறார்களின் ஆங்கிலக் கல்வி அபிவிருத்திக்கென ஆங்கிலப் பாடசாலைகளையும் அமைத்தார், அந்த வகையில் 1871ஆம் ஆண்டு புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலையை அமைத்தமை குறிப்பிடத் தக்கதாகும்,

1871 இல் வண்ணார்பண்ணையில் ஜோன் கில்னர் என்பவர் நடத்திய வெசுலியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணாக்கர் விபூதி அணிந்து சென்றமைக்காகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதைக் கண்டு மனம்நொந்த நாவலர் அப்பிள்ளைகளின் நன்மை கருதி சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை வண்ணர்பண்ணையில் 1872 தை மாதத்தில் நிறுவி நடத்தினார். நிதி வசதி இன்மையால் இப்பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது.

வித்தியாசாலைகளை அமைத்ததோடு பல வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராகவும் இருந்துள்ளார்.



மேலும் முதியோர் கல்வியில் கவனஞ் செலுத்தினார். பெண்களுக்கான கல்வி முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தினார்.

**3. பதிப்பாசிரியர் பணி**

சென்னையில் சிலகாலம் தங்கியிருந்து சூடாமணி நிகண்டிற்கான உரையையும், சௌந்தரியலங்கரி உரையையும் அச்சிற் பதித்ததன் பின்னர் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

அதுவரையான காலப்பகுதியில் ஈழத்தில் கிறித்தவரது அச்சியந்திர சாலைரயிலேயே ஏனையோரும் அச்சுப்பதித்தலில் ஈடுபட்டு வந்தநிலையில் சைவசமய அபிவிருத்திக்கென ஆறுமுகநாவலரின் இம் முயற்சி பெரு வரப்பிரசாதமாகியது, தமது இல்லத்திலேயே 'வித்தியானுபாலன யந்திரசாலை' என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவினார்.

★ பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதி உரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார்.

★ திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய கிறித்தவ கண்டன நூல்களையும் வெளியிட்டார்.

★ ஈழத்தில் வண்ணார்பண்ணையிலும், தமிழ்நாட்டின் சிதம்பரத்திலும் நாவலர் வித்தியானுபால யந்திர சாலைகளை நிறுவினார். அவற்றின் மூலம் பல்வேறு பணிகளை முன்னெடுத்தார், குறிப்பாக,

அகராதிகள் பதிப்பித்தல் உதாரணமாக சூடாமணி நிகண்டு

இலக்கிய நூல்கள் இலக்கண விளக்கச் சூறாவளி

தருக்க நூல்கள் தருக்கசங்கிரகம்

இலக்கிய நூல்கள் மகாபாரதம்

அறிவியல் சார் நூல்கள் இலங்கை பூமிசாத்திரம்

போன்றவற்றைக் குறிப்பிடலாம், அவ்வாறே.

முதன்முதல் ஏட்டுச்சுவடிகளிலிருந்த நூல்களை அச்சுவாகனம் ஏற்றினார்.

உதாரணம்: தொல்காப்பிய சூத்திரவிருத்தி

★ தொகுத்துப் பதிப்பித்தமை அருட்பா

★ சில நூல்கள், இலக்கணக் குறிப்புக்கள், அருஞ்சொல் அகராதி, சொல்லிலக்கண ஆராய்ச்சிப் பதிப்புக்கள் முதலியவற்றையும் பதிப்பித்துள்ளார்,

சிலவற்றுக்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார். குறிப்பாக ஔவையார் அருளிச் செய்த நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றவற்றைக் குறிப்பிடலாம், அவ்வாறே சில செய்யுள் நூல்களை வசனநடையில் எழுதியும் பதிப்பித்துள்ளார். உதாரணமாக திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் அப்பியாசங்களோடு பாடநூல்கள் சிலவற்றையும் எழுதிப் பதிப்பித்தார். அந்தவகையில் இலக்கணச் சுருக்கம் குறிப்பிடத்தக்க நூலாகும்,

நாவலரின் பதிப்பு தமிழ் உலகில் மிகுந்த பாராட்டுப் பெற்றது, நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு என்று அன்றும் இன்றும் அறிஞர்களால் பாராட்டப்படுகின்றது.

இலங்கையில் சைவ ஊடகத்துறை, பத்திரிகைத் துறை என்பன வளர்ச்சியுற நாவலரே வித்திட்டமை குறிப்பிடத்தக்கது, இலங்கைநேசன் என்னும் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியமை, சைவ உதயபானு என்னும் பத்திரிகையை வெளியிட ஆர்வம் காட்டியமை என்பன குறிப்பிடத்தக்கவை.

## நாவலரின் நூல்கள்

1. அகத்தியர் அருளிய தேவாரத் திரட்டு
2. அன்னம்பட்டியம்
3. இலக்கணக் கொத்து
4. இலக்கணச் சுருக்கம்
5. இலக்கண விளக்கச் சூறாவளி
6. இலக்கண வினா விடை
7. இலங்கை பூமி சாஸ்த்திரம்
8. ஏரெழுபது
9. கந்தபுராண வசனம்
10. கந்தபுராணம் பகுதி 12
11. கொலை மறுத்தல்
12. கோயிற் புராணம் (புதிய உரை)
13. சிதம்பரமான்மியம்
14. சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும்
15. சிவஞானபோத சிற்றுரை
16. சிவராத்திரி புராணம்
17. சிவசேத்திராலய மஹாத்ஸவ உண்மை விளக்கம்
18. சிவாலய தரிசனவிதி
19. சுப்பிரமணிய போதகம்
20. சூடாமணி நிகண்டு மூலம்உரை
21. சேது புராணம்
22. சைவ சமயநெறி
23. சைவ தூஷண பரிகாரம்
24. சைவ வினா விடை
25. சௌந்தர்யலகரி உரை
26. ஞானக்கும்மி
27. தருக்க சங்கிரகம்
28. தருக்க சங்கிரக தீபிகை
29. தனிப்பா மாலை
30. தாயுமானசுவாமிகள் திருப்பாடல் திரட்டு
31. திருக்குறள் மூலம் பரிமேலழகர் உரை
32. திருக்கை வழக்கம்
33. திருக்கோவையார் மூலம்
34. திருக்கோவையார் நச் உரை
35. திருச்செந்தூர் நிரோட்டயமக வந்தாதி
36. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்
37. திருத்தொண்டர் புராணம்
38. திருமுருகாற்றுப்படை
39. திருவாசகம் மூலம்
40. திருவிளையாடற் புராணம் மூலம்
41. திருவிளையாடற் புராணம் வசனம்
42. தெய்வயானையம்மை திருமணப்படலம்




43. தொல்காப்பியம் சூத்திர விருத்தி
44. தொல்காப்பியம் சொல். சேனா. உரை
45. நன்னூல் காண்டிகை உரை
46. நன்னூல் விருத்தி உரை
47. நீதி நூல் திரட்டு மூலமும் உரையும்
48. நைடத உரை
49. பதினோராம் திருமுறை
50. பாலபாடம் 4 தொகுதிகள்
51. பிரபந்தத் திரட்டு
52. பிரயோக விவேகம்
53. புட்ப விதி
54. பெரிய புராண வசனம்
55. போலியருட்பா மறுப்பு
56. மார்க்கண்டேயர்
57. யாழ்ப்பாணச் சமயநிலை
58. வக்கிரதண்டம்
59. வாக்குண்டாம்
60. விநாயக கவசம்

**4. சமூகப் பணி**

நாவலரின் பணிகளில் சமூகப் பணிகளும் குறிப்பி

டத்தக்கன, குறிப்பாக 1876 1877 ஆம் ஆண்டுகளில் கடும் வரட்சியினால் பஞ்சம் ஏற்பட்ட வேளையில் கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டு மக்களின் பசிப்பிணியைப் போக்கினார்,

அவ்வாறே யாழ்ப்பாணத்தில் கரையூர் உள்ளிட்ட இடங்களில் பேதி நோய் பரவியபோது, மக்களுடன் மக்களாக நின்று முதலுதவிகளையும் தக்க பரிகாரங்களையும் மேற்கொண்டமை.

சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்கப் பாடுபட்டார். அவ்வாறே, யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகத்தின் ஊழல்கள் தொடர்பாக 1878 ஆம் ஆண்டு, அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கினார்.

தமிழ் சமூகத்திற்காக தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைச் செம்மைப்படுத்தினார். செய்யுள் நடையிலுள்ள பழங்கால இலக்கியங்களுக்கு உரைசெய்தார். அவ்வாறே பிறரை உரியவேளையில் கௌரவிக்கவும் செய்தார், எடுத்துக்காட்டாக நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பக்திரசம் சொட்டப் பாடிய, கோபாலக்கிருஷ்ண பாரதியாருக்கு சன்மானம் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சுதேசிய எழுச்சிக்காகப் பாடுபட்ட தேசிய வீரராகக் காணப்பட்டார்.

சைவத் தமிழ் மரபிற் புலமை மிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கி, இலங்கையின் சைவ மறுமலர்ச்சிக்குக் காரணமாகினார்.

## தமிழகத்தில் நாவலர்

நாவலரின் பணிகள் ஈழத்தில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன, சென்னையில் திருவாசகம், திருக்கோவையார் ஆகிய நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார், அச்சியந்திரம் ஒன்றை வாங்கி, சென்னை தங்கசாலைத் தெருவில், வித்தியானுபாலன இயந்திரசாலை எனும் பெயரில் அச்சகம் ஒன்றை நிறுவி பல நூல்களையும் வெளியிட்டார்,

சென்னை, திருவாவடுதுறை, திருநாகைக்கோராணம் ஆகிய இடங்களில் தங்கி சைவப்பிரசங்கங்கள் மேற்கொண்டார்,

குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமை ஆதீனத்தில் அவர் செய்த பிரசங்கத்தை மெச்சி நாவலரை பல்லக்கில் ஏற்றித் தம்பிரான்கள், ஓதுவார்கள் சூழ்ந்து வர சகலவி




தமான விருதுகள், மங்கல வாத்தியங்களுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்தார்கள். அங்கிருந்து திருப்பெருந்துறை, திருப்பள்ளிருக்குவேளூர், சீர்காழி ஆகிய தலங்களை வணங்கிச் சிதம்பரம் சேர்ந்தார். அங்கு 1864 ஐப்பசியில் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

1866 மார்கழி மாதம் சென்னை திரும்பிய நாவலர், சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதிலும் ஈடுபட்டார். அவற்றில் போலியருட்பா மறுப்பு நூல் குறிப்பிடத்தக்கது, இராமலிங்கம்பிள்ளை (வள்ளலார்) அவர்கள், தாம் பாடிய பாடல்களைத் திருமுறைகளுடன் ஒப்பிட்டு, சில ஆலய உற்சவங்களிலே திருமுறைகளுக்குப் பதிலாகத் தமது பாடல்களைப் பாடுவதைக் கண்ட நாவலர், போலியருட்பா மறுப்பு எனும் நூலை எழுதி வெளியிட்டார்.

## இறுதி நாட்கள்

நாவலரது கடைசிப் பிரசங்கம் 1879 ஆம் ஆண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளது குருபூசை நாளான ஆடிச்சுவாதி அன்று வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது.

1879ஆம் ஆண்டு (பிரமாதி வருடம்) கார்த்திகை மாதம் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நாவலரது உடல் நலம் குன்றியது. அடுத்த மூன்று தினங்களும் குளிக்க முடியாதிருந்ததால் நாவலரது நித்திய சிவபூசை வேதாரணியத்துச் சைவாசாரியர் ஒருவரால் செய்யப்பட்டது.

21ஆம் நாள் வெள்ளிக்கிழமை (05121879) இரவு தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படிக் கட்டளையிட்டார், அவைகள் ஓதப்படும்போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணியத்தலங்களின் விபூதி அணிந்து, உருத்திராட்சம் பூண்டு, கங்காதீர்த்தம் உட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, இரவு ஒன்பது மணியளவில் இவ்வுலகை விட்டு மறைந்தார் என்று கூறுவர்.

இவ்வாறு பல்வேறு பணிகளை ஆற்றி, இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்த ஆறுமுக நாவலர் அவர்கள் 1879 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆந் திகதி மக நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்.

இவரது குருபூசை நாள் : கார்த்திகை - மகம்

1971.10.29 இலங்கை அரசாங்கம் நாவலர் நினைவு முத்திரையை வெளியிட்டது.



# ஈழம் வந்த கண்ணகி



கலாநிதி
பால. சிவகடாட்சம்

கண்ணகி என்னும் பாண்டி நாட்டுத் தமிழச்சியின் கதையைச் சேரநாட்டுப்புலவரான இளங்கோஅடிகள் சிலப்பதிகாரம் என்னும் காப்பியமாகப்பாடி வைத்தார். இளங்கோவின் சிலப்பதிகாரத்துக்கும் ஈழத்தவர் ஆக்கிய கண்ணகிகதைக்கும் பலவேறுபாடுகள் உள்ளன. சிலப்பதிகாரத்தின் வஞ்சிக்காண்டம் கூறும் செய்திகள் ஈழத்தவரின் கண்ணகி கதையில் முற்றாகத் தவிர்க்கப்படுள்ளன. அதேசமயம் சிலப்பதிகாரத்தில் கூறப்படாத பலவிடயங்கள் ஈழத்தவரின் கண்ணகிஅம்மன் கதையில் பேசப்படுகின்றன.

குணமானகண்ணகையைக்
கோவலனார் தான்செய்
மணமாலைதன்னை
வகுத்துரைப்பக் கணபதிதன்
பாதாரவிந்தம் பலநாளும் நெஞ்சிலுன்னிக்
காதாரக் கைதொளு வோங் காண்.

கோவலர்கதை ஆறாவது மீட்சிக் காண்டம்.
குளிர்ச்சிக் காதை காப்பு வெண்பா. (ஏட்டுச்சுவடி)

மதுரையில் பிறந்து பத்தினிப் பெண்ணாக உருவெடுத்த பெண் தெய்வம் மாமரத்தில் மாம்பழமாகத் தோன்றிய கதை சிங்களமக்கள் மத்தியில் பேசப்படுகின்றது. கனிந்திருந்த மாம்பழங்களை ஒருதுணியினால் முடிப்பொருத்தமான சுபநேரத்தில் புத்தபிரானுக்குச் சமர்ப்பித்த ஒருபெண் அப்புனிதமான தர்மத்தின் பலனாகத்தான் ஒரு தங்கமாம்பழமாகப் பிறக்க வேண்டுமென வேண்டிக்கொண்டதாகப் பத்தினிபதும என்னும் சிங்களக்காவியம் கூறுகின்றது.

பாண்டியன் அரண்மனையில் மாம்பழ வடிவில் கண்ணகி தோன்றியதாகவே ஈழத்தமிழரின் கண்ணகி கதையிலும் பேசப்படுகின்றது. மதுரையில் பிறந்த கண்ணகியின் பெயர் ஈழத்தமிழர் மத்தியில் கண்ண கையாக மாற்றம் பெறுகின்றது

திங்கள் முகவம்பிகை யாந்தேமாங்கனி வடிவாம்
எங்குலக் கண்ணகையைஎண்ணியே துங்கமிகு
பொற்பகலாதே புகலும் பேரோங்கு மிக்கதைக்குக்
கற்பகமே முற்களிறே காப்பு.

கோவலர்கதைஆறாவதுமீட்சிக்காண்டம்
குளிர்ச்சிக்காதை காப்புவெண்பா (ஏட்டுச்சுவடி)

கண்ணகியின் தெய்வத்தன்மையை நிலைநிறுத்தும் வகையில் அவளது கதை ஈழத்தில் மாற்றம் பெறு



கின்றது.மாங்கனிவடிவில் தோன்றிய தனது பெண் குழந்தையினால் மதுரைக்கு ஆபத்துவரும் என்று சோதிடர்கள் கூறியதைக் கேட்ட பாண்டிய மன்னன் அக்குழந்தையை ஒருபெட்டியில்வைத்துக் கடலிலே விட்டுவிட்டான். அப்பெட்டியைக் கண்டெடுத்த கப்பலோட்டிகள் மாநாகன் (மாநாய்கன்) என்னும் கப்பல் வியாபாரிடம் ஒப்படைத்ததாக ஈழத்தின் கண்ணகி கதை கூறுகின்றது.

கண்ணகி செல்வந்த வணிகனின் செல்லப்பிள்ளையாக வளர்ந்த போதும் பிறப்பால் அவள் ஒரு தெய்வப் பெண் என்பது ஈழத்தவரின் வாதம். மானிடப் பெண்ணொருத்தியைத் தெய்வமாக வழிபடுவதை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனவேதான் இங்கு கண்ணகியின் பிறப்பு பற்றிய வித்தியாசமான கதை புனையப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் திரௌபதி அம்மன் யாகத்தீயினில் தோன்றியதாகக் கூறப்படுவதை இவ்விடத்தில் நினைவு கூரலாம்.

கண்ணகியை மணம் முடித்த கோவலன் அவளை நெருங்கும் போதெல்லாம் அவர்கள் இருவரின் நடுவில் ஒரு தீப்பிழம்பு தோன்றி இருவரையும் சேரவிடாது தடுத்ததாக ஈழத்தில் வழக்கில் இருக்கும் கண்ணகி கதை கூறுகின்றது. கண்ணகியைப் புனிதமான ஒரு தெய்வப் பெண்ணாக, அம்மனாக மக்கள் மனதில் பதியவைக்கப் புனையப்பட்டகதையாகவே இதனையும் கருதமுடியும்.

கண்ணகியை உமை அம்மையின் ஒரு அவதாரமாக இலங்கைவாழ் தமிழ்மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டனர். ஈழத்தவரின் கோவலனார் கதையில் வரும் பாடல் ஒன்று கண்ணகியைக் கயிலைநாதரின் தேவியாகவே போற்றி நிற்கின்றது.

சீர்கொண்ட கயிலாயவாசரிடமே மருவுதேவியருள் ஓர்பிறப்பிற்
செப்பரிய பாண்டியன் புத்திரியதான கதை செந்தமிழில் யாம்பாடவே
பேர்கொண்ட முருகேசன் வள்ளிதெய்வானையும் பெருமையுறு வடுகேசனும்
பிரபலம் புரிவீரபத்திரனும் அரிநாதர் பெண் என்னும் இரண்டு திருவும்
கார்கொண்டகுழல் முத்துமாரியும் மகனானகாத்த விராயதேவும்
கருதுங்கறுப்பனாரொடு குருநாதசாமியுங் கன்னிமார் நாச்சிமாரும்
வேர்விண்டதெனு மழைபொழிந் தெம்மை பெட்பினுந் திருப்பாதமே போற்றினேன் .
வருதுயர்கள் தீர்த்து நிதமுங் கருணை பொழியுமுகிலென வருளதே.
(ஏட்டுச்சுவடி)

சிங்கள மக்கள் கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகவும் கூடவே பௌத்தமதத்தினதும் ஈழநாட்டினதும் காவற் தெய்வமாகவும் வழிபடுகின்றனர். இலங்கைவாழ் தமிழ்மக்கள் தொற்று நோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்றும் தெய்வமாகவும் மழையைத் தருவிக்கும் தெய்வமாகவும் கண்ணகை அம்மன் என்னும் பெயரில் வணங்குகின்றனர்.

நாட்டில் மழை குறைந்து வரட்சி ஏற்படும்போதும் தொற்றுநோய்கள் பரவி மக்களையும் பசுக்களையும் வாட்டும்போதும் பாமர மக்கள் கண்ணகையம்மனிடம் தங்கள் குறை தீர்க்க சரணடைந்தனர். அம்மனுக்கு நேர்த்திக் கடனாகப் பொங்கல் பொங்கிப் படையல் இட்டு வணங்கினர்.

நாளடைவில் கண்ணகை அம்மன் மாரியம்ம

னாக வழிபடப்பெற்றாள். மாரி என்பது மழையைக் குறிக்கும். அது மட்டுமல்லாது பெரியம்மை, சின்னம்மை, செங்கமாரி, மங்கமாரி, வயிற்றுமாரி, கோமாரி எனப்படும் தொற்று நோய்கள் அம்மன் பெயரால் அறியப்படுவதையும் கவனத்திற் கொள்ளலாம். வடஇந்தியாவில் சீதளதேவி (குளிர்அம்மன்) அம்மை முதலான தொற்று நோய்களில் இருந்து மக்களைக் காக்கும் தெய்வமாகப் போற்றப்படுவதை இங்கு குறிப்பிடவேண்டும்.

முலையை அறுத்தெறிந்து மதுரையை எரித்துவிட்டு இரத்தம் சொட்டச் சொட்ட வந்த கண்ணகியைக் கண்ட இடையர் குலப் பெண்கள் பசுவெண்ணெயை



எடுத்து அவளது இருமார்பிலும் பூசி அவளது வேதனையைக் குறைக்க முற்பட்டார்கள். அவர்களுக்கு மனம் இரங்கிய கண்ணகி அந்த இடையர் குலமக்களைத் தான்என்றும் காத்துநிற்பதாக உறுதியளித்ததாக இலங்கையில் வழக்கிலிருக்கும் கண்ணகி கதை ஒன்றில் கூறப்படுகின்றது.

பசு மாடுகளுக்கு ஏற்படும் பசுஅம்மை (cowpox) என்னும் வலு குறைந்த அம்மைநோய் முதலிலேயே தொற்றிவிடும் சாத்தியக்கூறு அதிகமிருப்பதால் இடையர்களுக்குச் சின்னம்மை (smallpox) தொற்று ஏற்படுவதில்லை என்றும் இதை அறிந்து கொண்டதன் பலனாகவே எட்வார்ட்ஜென்னர்(Edward Jenner) 1796 ஆம் ஆண்டில் அம்மைக்குத் தடுப்பூசி போடும் நோய்த்தடுப்பு முறையை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தினார் என்றும் கூறப்படும் மருத்துவ வரலாற்றுச் செய்தியை இடையர்களுக்குக் கண்ணகி கொடுத்த வரம் பற்றிய கதை நினைவூட்டுகின்றது.

இடையர்களைத் தவிர தாழ்த்தப்பட்ட மக்களுள் ஒரு சாரார் அம்மன் கொடுத்த வரத்தினால் தமக்குப் பொக்குளிப்பான், சின்னம்மை போன்ற தொற்று நோய்கள் ஏற்படுவதில்லை என்று கூறிக்கொள்வதையும் இவ்விடத்தில் நினைவுகூர வேண்டியுள்ளது.

கண்ணகிக்கு இலங்கையில் கோயில் தோன்றிய வரலாறு ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு விதமாகக் கற்பிக்கப்படுகின்றது.

பாண்டிய நாட்டை விட்டு நீங்கிய கண்ணகி ஐந்து தலைநாகமாக உருமாறி முதலில் நயினாதீவுக்கு வந்தாள் என்றும் பின்னர் சுருவில், வட்டுக்கோட்டை வழியாக நவாலி, களுவோடை, சுதுமலை, சீரணி, அங்கணாமைக்கடவை, அளவெட்டி, வற்றாப்பளை முதலான ஊர்களில் தங்கினாள் என்றும் கூறப்படும் செவிவழிச் செய்திகள் பற்றி சுவாமிஞானப்பிரகாசர் உட்படப் பலரும் குறிப்பிட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட ஊர்களில் எல்லாம் கண்ணகை அம்மனுக்குக் கோயில்கள் கட்டப்பெற்றிருப்பதை அறியமுடியும். இலங்கையில் கண்ணகி வந்துதங்கிய பத்தாவது இடமாகப் பத்தாப்பளை என்னும் இடத்தைச் செவிவழிச் செய்திகள் சில சுட்டுகின்றன. இந்தப் பத்தாப்பளையே பின்னாளில் வற்றாப்பளை என மருவிற்று என்பர்.

சி.கணபதிப்பிள்ளை என்பார் தாம் எழுதிய பத்தினி வழிபாடு என்னும் நூலில் இலங்கையில் கண்ணகிக்குக் கோயில்கள் உருவான வரலாற்றைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் கோயில் கட்டுவித்த சேரன்செங்குட்டுவனின் அழைப்பின் பேரில் சேரநாடு வந்த இலங்கை மன்னன் கயவாகுவிடம் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையொன்றையும் சிலம்பையும் சந்தனமரப்பெட்டியில் வைத்துக் கொடுக்கின்றான் சேரன்செங்குட்டுவன். வெற்றி வேற்செழியன் என்னும் பாண்டியன் கயவாகுவையும் சந்தனப் பெட்டியையும் யானைமேல் ஏற்றி வேதாரணியத்தில் கொண்டு வந்து விடுகின்றான். அங்கிருந்து கப்பலில் புறப்பட்டு காரைதீவுக்கும் கீரிமலைக்கும் இடையிலுள்ள திருவடிநிலையில் வந்திறங்கிய அரசனையும் கண்ணகி சிலைதாங்கிய பெட்டியையும் பொதுமக்கள் வரவேற்று யானைகளில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

கண்ணகி சிலை முதலில் மாகியப்பட்டி வழியாக அங்கணாமைக் கடவைக்குக் கொண்டு வரப்பட்டது. அங்கே முதலாவது வழிபாடு நடத்தப்பெற்றது. பின்னர் நாவற்குழியை அடுத்துள்ள வேலம்பிறையில் வைகாசிப் பூரணைவிழா நடத்தப்பெற்றது. அங்கிருந்து முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கும் சென்றது. கண்ணகி சிலை ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது எதிர்ப்பட்ட ஊர்கள் தோறும் கண்ணகிக்குக் கோயில்கள் கட்டப்பெற்றன. கண்ணகி உருவம் தாங்கிய சந்தனப்பேழை இறுதியில் கதிர்காமம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து கண்டிக்கு



வந்து சேர்ந்தது .அங்கிருக்கும் கோவிலில் பத்தினித் தெய்வத்தின் சந்தனப்பேழை வைக்கப்பட்டது.

ஈழத்தில் கண்ணகியின் கதையை யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையினர் ஆட்சி செய்த காலத்தில் சகவீரன் என்னும் பெயருடைய ஒருவரே முதன் முதலாகப் பாடிவைத்தார் என்பதை அறிய முடிகின்றது.

அவனிபுகழ் குடிநயினாப் பணிக்கனெனுமவன் மிகுந்தோன்
கவளமதக் களிற்றண்யல் காங்கேசன் தேவையர் கோன்
தவமென்ன விளங்குபுகட் சகவீரன் தாரணியிற்
சிவனருளாலிக் கதையைச் செந்தமிழ்ப் பாமாலை செய்தான்

இக் கதை யாழ்ப்பாணத்தில் கோவலனார் கதை என்றும் மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை என்றும் முல்லைத்தீவில் சிலம்புகூறல் என்றும் அறியப்பட்டு வந்துள்ளது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் உள்ள குடாரப்பு என்னும் கிராமத்தைச் சேர்ந்த கந்தர்வெற்றிவேலு என்பவர் ஆக்கிய கோவலன்காதை என்னும் நூலிலும் ஈழத்தில் வழக்கில் இருந்த கண்ணகி கதை கூறப்படுகின்றது.

கண்ணகியின் அடையாளம் சிலம்பு. இளங்கோவடிகள் தமது நூலுக்குச் சிலப்பதிகாரம் என்றே பெயர் வைத்தார். ஈழத்தில் கூறப்படும் கண்ணகி கதையில் கண்ணகி அணிந்திருந்த சிலம்புக்கும் ஈழத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு கற்பிக்கப்படுகின்றது. அதுவே ஒரு தனியானகதையாக வெடிஅரசன் கதை என்னும் பெயரில் வழங்கப்படுகின்றது.

தன் மகள் கண்ணகிக்குச் சீதனமாக விலை உயர்ந்த ஆபரணம் ஒன்றைச் செய்ய விரும்பிய மாநாய்கன் அவளது கால்களுக்குப் பொற்சிலம்பு செய்யத் தீர்மானிக்கின்றான். சிலம்பினுள்ளே வைப்பதற்கு அபூர்வமான நாகமணிக்கற்களை வாங்கிவரும்படி நவரத்தினங்களுக்குப் பெயர்பெற்ற இலங்கைத் தீவிற்குத் தன்கப்பல் தலைவன் மீகாமனை அனுப்புகின்றான். ஒரு கப்பற் படையுடன் இலங்கை புறப்பட்ட மீகாமன் வந்து இறங்கிய இடம் மீகாமன்துறை என அறியப்பட்டது. மீகாமன்துறை நாளடைவில் 'மீகமுவ' என்று மாறியது என்பர். இன்று நீர்கொழும்பு என்று அறியப்படும் இடமே இதுவாகும்.

அக்காலப்பகுதியில் நெடுந்தீவை ஆட்சி புரிந்தவனும் முத்துக்குளிப்போரின் (முக்குவர்) தலைவனுமாகிய வெடியரசனிடம் அபூர்வமான நாகமணிக்கற்கள் இருப்பதாகக் கேள்விப்பட்ட மீகாமன் அவற்றை எப்படியாவது பெற முயற்சிக்கின்றான். வெடியரசனுக்கும் மீகாமனுக்கும் இடையிலான போரில் பெரும் உயிர்ச்சேதம்ஏ ற்படுகின்றது. மீகாமன் வெற்றி பெற்று வெடியரசனிடமிருந்து தான் கைப்பற்றிய மாணிக்கக்கற்களுடன் திரும்புகின்றான். இந்த மாணிக்கக் கற்களே கண்ணகியின் சிலம்புள்ளே வைக்கப்படுகின்றன. அந்தச் சிலம்புக்கு அன்று தொட்டு ஒருதோஷம் இருந்துகொண்டே வந்துள்ளது என்று கூறுகின்றார்கள் இலங்கை மக்களுள் ஒருசாரார்.

மீகாமனால் தோற்கடிக்கப்பட்ட வெடியரசனது குடிமக்களாகிய முக்குவர் நெடுந்தீவைவிட்டு இலங்கையின் தென்கிழக்கே மட்டக்களப்பில் வந்து குடியேறினர் என்றும் இதன் காரணமாகவே பிற்காலத்தில் இவர்கள் மத்தியில் கண்ணகையம்மன் வழிபாடு நிலைத்து நின்றுவிட்டது என்றும் கூறப்படுகின்றது. இவை அனைத்தும் மரபுவழிக் கதைகளாகவே இன்றும் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று நாம் ஈழத்தில் காணக்கூடிய அம்மன் கோயில்களுட் மிகப்பெரும்பாலானவை ஆதியில் கண்ணகையம்மன் கோயில்களாகவே இருந்திருக்க வாய்ப்புண்டு. ஒருகாலத்தில் இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் கண்ணகிக்குக் கோயில்கள் நிறைந்து காணப்பட்டன. பிற்காலத்தில் இவற்றுட் பெரும்பாலானவை சைவர்களால் மாரிஅம்



மன் கோயில்களாகவும் கத்தோலிக்க கிறித்தவர்களால் மாதாகோயில்களாகவும் மாற்றம் பெற்றன. பெண் தெய்வமான பத்தினித் தெய்வத்தை வழிபட்டு வந்த மக்கள் கத்தோலிக்க மதத்துக்கு மாறியபின்னர் அப்பெண் தெய்வத்தை மேரிமாதாவாகக் கண்டு வணங்குவதில் சிரமத்தை எதிர் நோக்கியிருக்கமாட்டர்கள் என்கிறார் கணநா த்ஒபயசேகர என்னும் சிங்கள வரலாற்றா சிரியர்.தென்னிலங்கையில் பௌத்த சிங்களர் மத்தியிலே பத்தினித் தெய்வத்துக்கு உரிய கோயில்களை இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

மட்டக்களப்பில் இன்று ஏறக்குறைய நாற்பத்தாறு கண்ணகை அம்மன் கோயில்கள் உள்ளன. எனினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த பெரும்பாலான கண்ணகி கோயில்கள் பிற்காலத்தில் ராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி, நாகபூஷணி அம்மன் கோயில்களாகவும் முத்துமாரிஅம்மன் கோயில்களாகவும் மாற்றம் பெற்றுவிட்டன. இந்தமாற்றம் பரந்த அளவில் இடம்பெற்றதற்கு ஆறுமுகநாவலர் காரணமாயிருந்தார் என்று கூறப்படுகின்றது.

**உசாத்துணை:**


கணபதிப்பிள்ளை, சி. (தொகுப்பாசிரியர்) பத்தினி வழிபாடு, விபுலாநந்த அச்சகம், யாழ்ப்பாணம் 1978

கனக சபாபதி நாகேஸ்வரன், கண்ணகி வழிபாடும் இராஜரா ஜேஸ்வரி வழிபாடும், கொழும்பு11, இலங்கை 2007.

Gananath Obeyesekare, Between the Portuguese and the Nayakas: the many faces of the Kandyan kingdom, 15911765 https://www.jstor.org/stable/j.ctt 1 qnw8bs.13

GananathObeyesekere, Cult of the Goddess Pattini (Chicago: 1984).


கண்டியில் உள்ளபத்தினி அம்மன் கோயில்.

இன்று இராஜரா ஜேஸ்வரி அம்மன்கோயில் என்றழைக்கப் பெறும்புங்குடு தீவுக்கண்ணகை அம்மன் கோயில்.



# சைவம் வளர்த்த நாயன்மார்களும் சித்தர்களே

சித்தர்கள் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர்கள் என்பது பொருளாகும். சித்என்றால் அறிவு. ஞானம் என்பதும் இதற்கு இணையான பொருளாகும். சித்தர் என்றால் அவர்கள் பலவிதமான சித்துக்களைச் (அற்புதங்களை) செய்பவர்கள், இரசவாதம் செய்து பித்தளையைத் தங்கமாக மாற்றுபவர்கள், கூடு விட்டுக் கூடு பாய்பவர்கள், அட்டமாசித்திகள் செய்ய வல்லவர்கள், எண்வகை யோகங்களைச் செய்பவர்கள், இறை உண்மைகளை மறைத்துச் (பரிபாடி) சொல்பவர்கள் என்றெல்லாம் கூறப்பெற்றுள்ளன. பொதுவாக, சித்தர்கள் சமுக மீறல்கள் கொண்டவர்களாக விளங்கினர். நாம் பின்பற்றும் மரபுகளுக்குள்ளும் அளவு கோல்களிற்குள்ளும் அடங்காதிருந்தனர். இவர்கள் சாத்திரக் குப்பைகளையும் கோத்திரக் கோளாறுகளையும் சாடியவர்கள்.

இந்நிலை நின்றொழுகியவர்களாக நாயன்மார்களையும் அடையாளப்படுத்தலாம். அந்நியமதங்


**ஆறுமுகம் சசீநாத்**
**ஆசிரியர்**
**தென்னாட்டுத் திண்ணை**
**கொக்குவில்**






களின் ஆதிக்கத்திலிருந்து சைவத்தையும் சைவப் பாரம்பரியத்தையும் கட்டிக் காப்பாற்றியவர்களா கவே நாயன்மார்கள் போற்றப்படுகின்றனர். மேலும், நாயன்மார்கள் காலச் சமுதாயத்தில் வாழ்ந்த மக்க ளிடையே இருந்த சாதிஇசமய வேறுபாடுகளைக் களையவும், இறைவன் ஒருவன் என்பதை வலி யுறுத்தவும், வையத்துள் மக்களது வழிகாட்டியா கவும், சமூக முன்னேற்றத்திற்கான அச்சாணியா கவும் திகழ்ந்தனர். இதற்காகப் பல அற்புதங்களைச் செய்தும், சமுதாயத்தில் பேணப்படவேண்டிய வாழ்வியல் கருத்துக்களைத் தம் பாசுரங்கடாகவும் விதைத்துச் சென்றுள்ளனர். இந்தவகையில் இறை நம்பிக்கை உடையவர்களாகத் திகழும் நாயன்மார்க ளைச் சித்தர்கள் என்றவரையறைக்குள் உள்ளடக்க வில்லையாயினும், அவர்களின் சமுகநோக்குகள் மற் றும் செயற்பாடுகள் சித்தர்களோடுவைத்தெண்ணத் தோன்றுவதிலிருந்து நாயன்மார்களையும் சித்தர் களாகக் கொள்ள இடமுண்டு என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

புலவகையான சித்துக்களைச் செய்வதனால் இவர் கள் சித்தர்கள் எனப் பலரும் கருத்துரைத்துள்ள னர். இந்நிலையில் நாயன்மார்களை நோக்கின், பலவகையான அற்புதங்களை நிகழ்த்தி சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தை நிலை நாட்டியவர்களாவர். இதற்குத் திருமுறைப்பாடல்கள் சான்றாக விளங்கு கின்றன.வாசிதீரவேகாசுநல்குவீர். என்றபதிகம் பாடி படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியமைஇபூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி.என்றபதிகம் பாடி ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியமை என் பன சம்பந்தரது அற்புதங்களுக்கு எடுத்துக் காட்டுக் களாகும். நாவுக்கரசரது அற்புதங்களுக்கு எடுத்துக் காட்டாகஇஒன்றுகொலாமவர் சிந்தை.என்றபதிகம் பாடி அப்பூதியடிகளது மகன் மூத்த திருநாவுக்கரசரை உயிர்ப்பித்தமையைக் காட்டலாம். இவ்வகையான அற்புதங்கள் சித்தர்கள் செய்யும் சித்துக்களோடு ஒத் துப் போகின்ற தன்மையில் நாயன்மார்களைச் சித்தர் கள் என ஏற்றுக் கொள்ளல் தவறாகாது.

கூடு விட்டுக் கூடு பாய்தல் என்பது சித்தர்களின் இயல்பு. உயிரானது ஒரு உடலிலிருந்து வேறொரு உடலுக்குள் புகுவதுதான், கூடு விட்டுக் கூடு பாய் தல் என்றில்லை. உயிருடன் இருக்கும் போது அறிவு வடிவாகிய குரு இதன்னை அறிவென்று அறிவித்த சீடனின் உடலுக்குள் காது வழியாக நுழைந்து அவ னையும் அறிவு வடிவமென்று அறிவித்து நீயும் நானும் ஒன்றுதான். எனக்காட்டி அத்து விதமாக் கிக் கூடிக் கலந்துகளித்தலே கூடு விட்டுக் கூடு பாய் தல் என்பதாகும். இதனைத் திருமூலர்இஅறிவுவ டிவு என்று அறியாத என்னை. என்றும் இருந்தார் சிவமாக எங்கும் தாமாகி. என்றும் கூறுகிறார். வள்ள லார்,பிறிவேதி இனியுனைப் பிடித்தனம் உனக்கு நாம், அறிவே வடிவேனும் அருட் பெருஞ்சோதிஎன் கிறார். இத்தகையசித்தர் நிலையினை உணர்ந்தவர் களாக நாயன்மார்களும் திகழ்ந்திருக்கின்றனர். உதா ரணமாக, மாணிக்கவாசகர், சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனைக்கருளிய வாறு யார் பெறுவார் அச்சோவேஎன்றும், நாவுக்க ரசர், கண்டலாதருளுமில்லை கலந்தபின் பிரிவதில் லைஎன்றும் உரைத்திருக்கக் காணலாம்.

பரம்பொருள் நம் உடம்பிற்குள்ளே உள்ள சிற்சபை யில் அமர்ந்து அம்பலத்தில் நடராசராய் நடனமாடி ஒலி செய்து கொண்டிருப்பதைச் சித்தர்கள் தெளி வாக உரைத்துள்ளனர். திருமூலர், உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம். என்றும்.உடம்பார் அழியின் உயிரார் அழிவர்என்றும் ஔவையார்இ உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்: உடம்பி னுள் உத்தமனைக் காண்என்றும் பாடியதிறத்தால் உணரலாம். இச்சிந்தனைப் புலத்தைக் கொண்ட வர்களாகவே நாயன்மார்களையும் நோக்கமுடியும். திருநாவுக்கரசர், காயமேகோயிலாகக் கடிமனம் அடி மையாக. என்றபாடலூடாக உடம்பின் முக்கியத்து வத்தினை உணர்த்தி நிற்கின்றமை நாயன்மார்களும் சித்தர் கொள்கை உடையவர்கள் என்பதை உணர்த்தி நிற்கிறது. மாணிக்கவாசகர்இஊனினை உருக்கி உள் ளொளி பெருக்கிஎன்றுரைப்பதும் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது.

சுணீவாயநம எனப்பெறும் ஐந்தெழுத்துக்களால் ஆன மந்திரமே பஞ்சாட்சரம் எனும் ஐந்தெழுத்து மந்தி



ரம். சைவப் பெருமக்களின உயிராகவும் அவர்களின் கண்மணிபோலவும் விளங்குவது இந்த ஐந்தெழுத்து மந்திரம் ஆகும். இதன் பெருமையை உணர்த்தநமசி வாயப் பதிகம்,பஞ்சாக்கரத் திருப்பதிகம்என இரண்டு பதிகங்களையும் திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந் தருளியுள்ளனர். நாவுக்கரசரும்இகற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவேஎனப் பாடியருளியுள்ளார். இத்தகு பெருமை பொருந்திய பஞ்சாட்சரம் பற்றி, காகபுசுண் டர் என்ற சித்தர், ஆதிஎன்ற மூல மந்திரம் ஐந்தெழுத்து என்கிறார். ஔவையார்இசிவாயநம என்று சிந்தித்தி ருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லைஎன்கிறார். ஆதியாக பரீட்சிக்க ஒண்ணாதவித்தாகஇசிவமயப் பொருளாக, உயிராக, பின்னல் கிரண விந்து நாத மாக சிவசக்தியாக இருக்கும் அப்பொருளே மூலமந் திரம். உலகில் தோன்றியுள்ள அனைத்துச் சமயங் களிலும் உள்ள அனைத்து மூல மந்திரங்களும் அந்த மெய்ப்பொருளாகிய ஆதியையே குறித்து நிற்கின்றன எனும் கருத்துத் தளத்தில் நாயன்மார்களும் சித்தர் களும் ஒரேதன்மை உடையோராய்த் திகழ்தல் ஈண்டு நோக்குதற்குரியது.

உலகிலுள்ள சமயங்கள் அனைத்தும் மனித குல மேம்பாடு எனும் ஒரு இலக்கினையே அடிப்படை யாகக் கொண்டு செயலாற்றுகின்றன என முதலில் சமயங்களுக்குள்ளே சமத்துவத்தைபேணுதல் வேண் டும் என்பதை நாயன்மார்கள் புலப்படுத்தியுள்ளனர். மாணிக்கவாசகர்,தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறடிவா போற்றிஎன்கிறார். சம யங்கள் பலவாக இருப்பினும் அவை கூறும் பரம் பொருள் ஒன்றே. சித்தர்களும் ஓரிறைக் கொள்கை உடையவர்கள் என்பதும் மனங்கொள்ளத்தக்கது. திரு மூலர்இஒன்றே குலம் ஒருவனே தேவன்என்கிறார். சி வவாக்கியர்இஅங்கும் இங்கும் ஆகி நின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோஎன்றும்,அகத்தியர்இசக்தியே பராபரமே ஒன்றே தெய்வம்,தானென்றதானே தானொன்றே தெய்வம்என்றும் சமயப பொதுமையை வலியுறுத்து வது நாயன்மார்களோடு ஒத்துநோக்குதற்குரியது.

உயிர்கள் மீது செலுத்தும் அன்பே உண்மையான வழிபாடாகும். திருமூலர்,அன்பும் சிவமும் இரண்டென் பர் அறிவிலார்என்கிறார். மேலும் பிறர் துன்பம் கண் டபோது அதைத் தன் துன்பமாகக் காணவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் சமுகத்திலே ஏற்றத் தாழ்வுகள் என்பதே இல்லாமற் போய்விடும். இதனை திருமுறை களில் பதிவு செய்துள்ளனர். வண்ணலார், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் பசியினால் இளைத் தேஎன்றுபாடுவதிலிருந்தும், பதிகப் பெருவழி சிறக்க வாழ்ந்த காரைக்காலம்மையார் இறைவனை அடைய ஆண்இபெண் பேதம் இன்றி உள்ளத்தில் கொள்ளும் அன்பே முக்கியம் என நிலைநாட்டுவதிலிருந்தும் அறி யலாம்.

பிறந்து மொழி பயின்ற பின்னாளெல்லாம் காதல் சிறந்து நின் சேவடி சேர்ந்தேன்என்கிறார் அம்மை யார். சமுகத்திலே புரையோடிக் கிடந்த சாதி வேற் றுமைகளுக்கு எதிராகக் கண்டனக்குரல் எழுப் பியவர்களாகச் சித்தர்கள் விளிக்கப்படுகின்றனர். சிவவாக்கியர், பறைச்சியாவதேதடா பணத்திலாவ தேதடா, சாதியாவதேதடா சலந்திரண்டநீரெல்லாம் என்றும், பாம்பாட்டிச் சித்தர், சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்என்றும் கடுவெளிச் சித்தர், ஒவ்வா என்ற பல சாதியாவும் ஒன்றென்று அறிந்தே உணர்ந்து உறவோதி என்றும் திருமூலர், ஒன்றேகு லம்என்றும் கலகக்குரல் எழுப்பி சமுகத்தை மடை மாற்றம் செய்வதில் தீவிரம் காட்டியதைப் போன்று நாயன்மார்களும் சாதி பேதங்களைக் கண்டித்தவர்



களாக விளங்கியிருப்பதைக் காணலாம். ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந் தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரேஎன்று அப்பரடிகளும் சாதி குலம் பிறப்பு என்னும் சுழிபட்டுத் தடுமாறும்என்று மணிவாசகரும் கூறும் கருத்துக்கள் மேற்போந்த கருத்துக்கு வலுச்சே ர்க்கிறது. மேலும், பெரியபுராணம் சிவனடியார் வர லாற்றைக் கூறும் சிறப்புமிக்க நூல். இதில் சேக்கிழார் சாதி சமயங்களை நீக்கி பேசியுள்ளார்.

ஆதிசைவர்,பிராமணர்,இடையர்,சத்திரியர்,குறு நிலமக்கள்,வைசிகர்,வேளாளர், பரதவர், வேடர், சான்றார்,சாலியர், குயவர்,பாணர், புலையர் எனஅ னைத்து அடியவர்களும் இறைவனைச் சேர்ந்தார்கள் என நாயன்மார் வரலாற்றில் தெளிவாக்கியுள்ளார். அந்தணராகிய நமிநந்தியடிகள் சாதி முறை பார்க்கஇ அவர் கனவிலே தோன்றிய கண்ணுதற் பெருமான், ஆன மறையோய் ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம் கணங்கள் ஆன பரிசு காண்பாய் என்று அருளிச் செய்து அங்கு எதிர் அகன்றார் என்று சேக்கிழார் கூறு வது சாதியமைப்புமுறை இல்லை என்பதைக் காட்ட வல்லது.

ஒவ்வொரு சமூகமும் தனக்கான சமூக நடவடிக் கைகளைத் தன் நிலவியல் மற்றும் புறச்சூழலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்கின்றன. சமூகவாழ்வு முரண்பாடின்றி இணக்கமாகத் திகழவேண்டுமெனின் தனிமனிதன் தன்னளவில் செம்மைப்படல் வேண் டும். சித்தர்கள் போதைப் பொருள்களைக் கண்டித்து வந்தனர். வெறிகாட்டி மயங்கிய கள் குடியாதேகஞ்ச ாப் புகை பிடியாதே என்கிறார் கடுவெளிச்சித்தர். ஒல் லையாறி உள்ளம் ஒன்றிக் கள்ளம் ஒழிந்து வெய்ய சொல்லையாறித் தூய்மை செய்து.என்கிறார் திருஞா னசம்பந்தர். இந்நிலையில் சமூகத்தை நல்வழிப்படுத் துவதில் வகுத்த வழிவகைகளில் இரு தரப்பினரையும் நோக்குகின்றபோது ஒற்றுமைத் தன்மை புலப்படுகி றது.

உயிரினங்களில் மனிதன் பெருமளவில் முன்னேறி வியத்தகு சாதனைகள் பல படைத்திருப்பினும் பாலு ணர்வும் பசியுணர்வும் அவைதொடர்பான போராட் டங்களும் அவனைவிட்டு நீங்கியபாடில்லை. இத் தேவைகள் அவனை முடக்கிக் கொண்டிருக்கின்றன. ஆதலின் பெண்ணாசையை ஒழித்தல் என்பது தலை யாய ஒழுக்கமாகிவிடுகிறது. கற்றதேல் ஒன்றுமில்லை காரிகையாரோடாடிப் பெற்றதேற் பெரிதும் துன்பம் என்றும்இகண்டபேச்சினிற் காளையர் தங்கள் பால் மண்டிபேச்சினும் மாதரைச் சேராதேஎன்றும் அப்பர் பெண் வேட்கையினைத் தவிர்த்து வாழ்தல் சிறந் தது என்கிறார். இது எழில் பெண்ணாசைகொண்டு மாளாதே மாய்கைத் தேவடியாள் தனம் பண்ணாதே போன்றசித்தர் கொள்கையினைத் தழுவியிருப்பது, நாயன்மார்களையும் சித்தராக்க இடமளிக்கிறது.

சித்தர்கள் சமய வழிபாடுகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் கண்டித்தவர்களாகவே காணப்ப டுகின்றனர். விக்கிரக வழிபாட்டை முற்றாக வெறுத் தனர். நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுபம் சாத்தியே.இகோயிலாவதேதடா குளங்களாவதேத டா.போன்றசித்தர் பாடல்களை எடுத்துக் காட்டலாம். ஆனால் நாயன்மார்கள் கோயில்களையும் வழிபாடு களையும் முதன்மைப்படுத்தியிருந்தனர். மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்எனச் சம்பந்தரும் நிலை பெறுமாறெண்ணுதியெல் நெஞ்சேநீவா நித்தலுமெம் பிரானுடையகோயில் புக்குஎனஅப்பரும் பாடியிருத் தல் சான்றாகும். ஆயினும் சித்தர்கள் அனைவரும் கோயிலையும் வழிபாடுகளையும் எதிர்த்தவரல்லர். போலிகளையே எதிர்த்தனர். ஈழத்துச் சித்தர்கள் ஆல யங்களை முதன்மைப்படுத்தியமை இங்கு சுட்டிக்காட் டத்தக்கது.

சித்தி பெற்றவர்களாகிய சித்தர்களின் கருத்துக் கள், கொள்கைகள் என்பன ஒரு சமூகத்தை மடை மாற்றம் செய்வதாகவே அமைந்துள்ளன. அத்தகைய நிலையிலே வாழ்ந்தவர்களாகவே நாம் நாயன்மார் களையும் கருதமுடியும். அற்புதங்களைச் செய்தல், கூடு விட்டுக் கூடு பாய்தல், தன்னை-அகத்தை உணர் தல்இ பஞ்சாட்சரத்தின் மகிமை,சமயப்பொதுமை,சாதி பேதங்களைக் களைதல், தனிமனித ஒழுக்கம் போன்ற பல விடயங்களையும் சித்தி-அறிவு பெற்றவர்கள் நிலையில் நின்று உணர்த்தியிருப்பதானது சித்தர் என்று அழைப்பதற்குப் பொருத்தமானதாக அமைகி றது. மேலும் நாயன்மார்களின் செயற்பாடுகளைச் சி த்தர்களோடு ஒப்பிட்டு நோக்குகின்றபோது கொள் கையளவிலும் மனதளவிலும் ஒருவராகத் தோன்றும் பட்சத்தில் நாயன்மார்களும் சித்தர்களே என்பது தெளி வாகிறது.



**வைத்தியக் கலாநிதி
சிவஸ்ரீசான பிரதாபன் தேசிகர்
தலைவர் இலங்கை சைவநெறிக் கழகம்**

# இல்லங்கள் தோறும் சைவசமயம் வளரட்டும்

''ஒப்பில்லாத அவ் இலிங்கத்தை தெரிசித்தோர் உலகத்து
தப்பிலாது பூசித்தவர் தொழுவர் தாமே
எப்பதங்களும் பெறுவர் நினைத்தபேறு எய்தும்
துப்பு நேர் சடை முனிவர்கள் என்றனன் சூதன்''
சிவரகசியம்

**(சிவரகசியம் 3ம் படலம் சிவத்திரு. ஒப்பிலாமணி தேசிகர் என்பாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சிவரகசியம் 3ம் படலத்தில் இருந்து.)**

சிவபெருமானுடைய ஒப்பில்லாத சிவலிங்கத் திருமேனியை கண்டு வணங்கியவர், சைவ ஒழுக்கங்களில் தவறில்லாது நின்று பூசித்தவர், தொழுது வழிபட்டவரனைவரும் இம்மையில் சகல சுகபோகங்களையும் மறுமையில் சிவானந்த வாழ்வையும் பெற்றுய்வர் காரிய சித்திகளின் பொருட்டு வழிபட்டவர்களுக்கு அவர்கள் நினைத்த காரியங்கள் யாவும்



கைகூடும் என்றார் சூதமா முனிவர்.

இன்று சோதிடர் முதலாய பலரும் வீடு வாகனம் வாங்க இவரைக் கும்பிடுக என்றும், கல்யாணம் நடக்க அவரைக் கும்பிடுக என்றும் பல்வேறு வழிகளைச் சொல்கின்றனர்.ஆனால், இவற்றுக்குரிய அருமையான உபாயம் சிவலிங்கத் திருமேனி வழிபாடேயாகும்.

சிவலிங்கமூர்த்தியை குருவிடம் விசேடதீக்கையின்போது பெற்று, ஆன்மார்த்த சிவபூசைகளை ஆகமார்த்தமாகச் செய்துவருதல் சைவர் கடன். அதுபோற் பிறிதொரு புண்ணியம் இல்லை.

பொதுச்சைவர்கள், இல்லங்களிலும் வியாபார நிறுவனங்களிலும் கடைகளிலும் சிவலிங்கத் திருமேனியின் உருவப்படத்தினையேனும் வைத்து வழிபாடற்றிவருதல் வேண்டும்.சிவலிங்கமூர்த்தங்கள் இருப்பின் அன்பு மார்க்கத்தில் வழிபடலாம்.

சிலருக்கு சில சிவாலயங்களில் அதிகமான பிடிப்பு இருக்கும். அவர்கள் அச்சிவாலய மூர்த்திகளின் ஓவியப்படங்களையேனும், அல்லது தூலலிங்கம் எனப்படும் அச்சிவாலயங்களின் கோபுர ஓவியங் களையேனும் வழிபடலாம். ஆலயத்திற்கு அருகிலிருப்போர் நாள்தொறும் தூலலிங்கம் என்று போற்றப்படும் கோபுரத்தினை தரிசித்திடல் புண்ணியம்.

சிவபெருமானின் திருவுருவப்படம் இல்லாத சுவாமி அறைகள்.......சிவமில்லையேல் சவம் என்று பெரியோர் சொன்னதற்கே ஒப்பாகும்.

தக்கன் வேள்வி சீர்கெட்டதும், தாருகாவனத்து முனிவர் தாழ்வுற்றதும் சிவவழிபாட்டினை புறந்தள்ளியதாலேயாம்! இன்று சைவசமயத்தார் வீடுகளில் சிவபெருமானுக்கு திருவுருவப்படங்கள் அரிதாகிவருகின்றன. இலக்குமி இருக்கவேண்டும், சரசுவதி இருக்க வேண்டும் என்று சிந்திக்கும் சைவர்கள் பலர், இலக்குமிக்கும் சரசுவதிக்கும் படியளக்கும், இலக்குமியாகவும் சரசுவதியாகவும் நின்று அருளும் சிவபெருமான் இருக்கவேண்டும் என்று சிந்திக்கின்றாரில்லை.

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே - திருமந்திரம்

பாசத்தில் அம்மாவுக்கு இணையாக எவரேனும் இருக்கமுடியுமோ? அதுபோல், பிள்ளையாராய்,முருகனாய்,நாரணனாய், வைரபராய், வீரபத்திரராய், உமாதேவியராய்,இலக்குமியாய்,சரசுவதியாய் நமக்காக வடிவுதாங்கி அருளும் அம்மையப்பராகிய சிவபெருமானிலும் அருளுவதற்கென்று வேறேதும் தெய்வமுண்டோ? இல்லை. மங்கலகரமான இடமேது என்றால், சிவபெருமானுக்கு வழிபாடு நடைபெறும் இடமேயாம்.

இல்லங்கள் தோறும் எழுந்தருளி செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை திருவாசகம்.

சேவகன் என்பதற்குப் பதிலாக கடவுளென்று பாடியிருக்கலாம்.ஆனால் மாணிக்கவாசகர் சேவகன் என்று பாடுகின்றார்.அதனாற்தான் திருவாசகம், மாணிக்கவாசகர் சிவபெருமானுக்குப் படைத்த சொல்லமுதம் என்று போற்றப்படுகின்றது.

அது வேண்டும்; இது வேண்டும் என்று கேட்கும் உலகியல் நாட்டத்தாருக்கும், ''வேண்டத்தக்கது அறிவாய் நீ,வேண்ட முழுதும் தருவாய் நீ'' என்னும் சிவனடியாருக்கும் சேவகனைப்போல் ஏவல் விண்ணப்பத்திற்கு ஏற்ப அருளுபவன் சிவபெருமான் என்பதாலேயே, இல்லங்கள் தோறும் எழுந்தருளும் சிவபெருமானைச் சேவகன் என்றார் எனலாம்.

ஆழமாக இப்பொருளை நோக்கினால், ஆணவத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஆன்மாக்கள்பால் இரக்கம்கொண்டு, அந்த ஆன்மாக்களுக்கு உடல்,உலகம் அருளிப், பக்குவப்படுத்தி, தன் திருவடிகளில் இன்புறச்செய்யும் இறைவன் என்பதால் சேவகன் என்கின்றார். கைகால் செயலிழந்த வீட்டு எஜமான் இன்புறுமாறு எஜமானுக்கு இயற்கை உபாதைகள் ஏற்படும்போதெல்லாம் வடிவாகக் கழுவி, ஆடைகள் அணிவித்து சௌகரியமாக நடத்தும் வீட்டுச்சேவகன் போல், ஆன்மாக்களின் ஆணவக்கழிவினை அகற்றி, இன்பத்தை அருளும் சிவபெருமான் ஆன்மாக்களின் சேவகனன்றோ!

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை என்பார் சுந்தரமூர்த்தி நாயனார்.



பொன் வேண்டுவோருக்கு பொன்.மெய்ப்பொருள் வேண்டுவோருக்கு மெய்ப்பொருள்.எனினும்,உண்மைச் சைவருக்கு அழகு '' வேண்டத்தக்கது அறிவாய் நீ,வேண்ட முழுதும் தருவாய் நீ'' என்னும் மாணிக்கவாசகர் உணர்த்தியவாறு நிற்பதாகும்.ஆக, இல்லங்கள் தோறும் இருக்கவேண்டிய கடவுள் யாரேனின், தன் அன்பருக்குச் சேவகனாய் இருக்கும் சிவபெருமானேயாவர்.

வியாபாரத் தலங்களில் சிவபெருமானைப்போல் ஒருதெய்வம் அருளுமாறு இருக்குமோ?

இலக்குமிக்கு படியளப்பவன் சிவபெருமானே.குபேரனுக்கு படியளப்பவன் சிவபெருமானே. ஒருகாலத்திற் தமிழ் வணிகரெல்லாம் செல்வச்செழிப்போடு இருந்தனர்.சிவாலயங்கள் பலவற்றை தமது பெருத்த வருமானம் கொண்டு எழுப்பினர்.ஆனால் இன்று, நம் வணிகர்களெல்லாம் சிவவழிபாட்டினை மறந்தேபோயினர். சைவசமயத்தை,சிவாலயங்களை தாம்தான் பலப்படுத்த வேண்டுமென்பதை உணர்தாரில்லை.பல்வேறு மதத்தவரும் வணிகத்தில் கொடிகட்டிப் பறக்க, நம்மவர் வாடிக்கையாளரை மதிக்கத் தெரியாத திமிர் பிடித்தவர்களாய்; வணிகத்தைத் தொலைத்து நிற்கின்றனர்.

வருகின்ற சிறப்பை கைவிட்டு நிற்கும் இழிநிலையில் நம்மவர் உளர்.

சைவசமயம் நன்றே வளர, இல்லங்கள் சைவ இல்லங்களாக ஒவ்வொரு வாடிக்கையாளனையும் சிவபெருமான் அருளிய வாய்ப்பென்று போற்றி, வாடிக்கையாளர்களை மதித்து, வணிகத்தைப் பெருக்கத்தெரியாது இடர்பட்டு நிற்கின்றனர்.தமது வணிகக் கடைகளில் சிவவழிபாட்டினை பலர் கைவிட்டுவிட்டனர். சிலர் பத்தோடு பதினொன்றாக சிவபெருமானை ஒரு சாட்டுக்காக வழிபடுகின்றனர்.

சிவபத்தியோடான வணிக,வியாபார முயற்சி தவம் செய்தலுக்கேற்ற பலனுடையதென்பதை உணர்ந்தாரில்லை.வருமானமும் தவமும் ஒன்றாய் அமையும் முதலில் மாறவேண்டும்.

அன்பே சிவம் என்கின்றார் திருமூலர் பெருமான். அன்பே என்பதிலுள்ள ஏகாரம் விரிந்தபொருளுடையது.பல்வேறு சமயங்கள் தம்தம் தெய்வங்கள் அன்புடையவர் என்றன.ஆனால், சைவசமயம் அன்புதான் கடவுள் என்றது.கடவுள் அன்புடையவர் என்பதற்கும், அன்பே கடவுள் என்பதற்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

அன்பே சிவம் என்ற இந்த திருமந்திர வசனம், சைவசமயத்தின் இதயம் எனலாம். சுருக்கமாகச் சொன்னால், ஏனைய தெய்வங்கள் அன்புகாட்டலாம்.ஆனால் அந்த அன்பாய் இருப்பவரே சிவபெருமான் என்பதுதான் சைவசமயம்.

அன்பென்பது அருளின் வடிவமேயாம். சிவபெருமானின் அன்பென்பது ''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி மாதொருபாகனாரே வருவர்'' என்னும் அன்பு. நாம் எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும், அந்தத்தெய்வமாக நின்று அருளுகின்ற அன்புடையவர் சிவபெருமான்.அந்தந்தத் தெய்வங்களின் அன்பாய் (அருளாய்) இருப்பவரும் சிவபெருமானேயாவர்.

பன்றிக்குட்டிகள் தாய்ப்பன்றியை இழந்துதவித்த போது, தாய்ப்பன்றியாய்ச் சென்று பாலூட்டியவர் அவர். பாலுக்காய் அழுத உபமன்யு முனிவருக்கு பாற்கடலை அருளியவர். திருஞானசம்பந்தருக்கு பாலினை பொற்கிண்ணத்தில் அருளியவர்.ஆனால், பன்றிக்குட்டிகளுக்காக தாய்ப்பன்றியாகவே சென்று பாலூட்டினார் என்னும்போது சிவபெருமானின் பெருங்கருணையை என்னென்று விதந்தோதுவது?

கண்ணப்பர் நாயனாரின் ஊன் உணவை ஏற்றுக்கொண்டவர் என்பது, சிவபெருமானுக்கு எந்தச் சிறப்பையும் கொடுக்காது.மாடன்,காடன் முதலிய சிறுதெய்வங்களும் ஊன் உணவை ஏற்பவையே. ஆனால், கண்ணப்பநாயனார் தம் செருப்பணிந்த திருவடியை எம்பெருமானின் கண்மேல் வைத்தார்.சிவபெருமானோ அதனை இன்பமாய் ஏற்றார். இதுபோல் பொறுமையோடு அருளும் தெய்வம் எங்கேனும் உண்டோ?

ஏதேனும் ஒரு சமயத்தில் உண்டோ?

கல்லெடுத்து எறிந்தார் சாக்கிய நாயனார்.அதனைப் பூவாக ஏற்றார் சிவபெருமான். ஏதேனும் ஒரு சமயத்தில் இப்படி கல்லை எடுத்து அத்தெய்வத்தின்பால் எறிந்தவருக்கு அருளியதாக கதையேதும் உண்டோ?

பிழைபொறுத்து அருளுவதில் சிவபெருமானுக்கு

இணையான தெய்வம் எங்கேனும் உண்டோ?

சுந்தரர்பெருமான் சிவபெருமானைப் பைத்தியக் காரன் என்றார்.அதனைக்கூட இன்சொல்லாக ஏற் றருளியவர் அல்லவா சிவபெருமான்.பித்தா என்று சாடியவருக்கு 'பித்தா' என்றே பாடுமாறு அருளியவர் சிவபெருமான்.ஏதேனும் ஒருசமயத்தில் அச்சமய அடி யவர் அச்சமயக்கடவுளைப் பைத்தியக்காரன் என்று சாடியதாக கதையேதும் உண்டோ?

அர்ச்சுனன் வில்லால் அடித்தான்;சிவபெருமான்
தமக்கு வில்லால் விழுந்த அடியைக்கூட
அன்பாக ஏற்றருளியவர் அன்றோ!

அர்ச்சுனன் வில்லால் அடித்தான் என்றால்,நம் செந் தமிழ் நாட்டின் காவலனான பாண்டியனோ பிரம் பால் சிவபெருமானுக்கு வெளுத்தானே......இந்த உல கில் ஏதேனும் ஒருசமயத்தில் அச்சமயக்கடவுளுக்கு



அந்நாட்டு மன்னன் பிரம்பால் அடித்ததாக செய்தி யுண்டோ? அப்படியொரு செய்தியிருந்தால் அம்மன் னனின் தலை அறுத்தெறியப்பட்டிருக்கும்.ஆனால், நம்பாண்டியனுக்கு அருளல்லவா கிடைத்தது. பிழை பொறுத்தருளும் ஒரே தெய்வம் சிவபெருமான் ஒரு வனே என்பதை இத்தனை புராணங்கள் கற்றும் நம் மவர் மறந்ததேனோ?

''வில்லால் அடிக்க செருப்பால் உதைக்க வெகுண்டு ஒருவன்
கல்லால் எறியப்பிரம்பால் அடிக்க இக்காசினியில்
அல்லார் பொழில் தில்லை அம்பலவாணற்கு ஓர் அன் னைபிதா
இல்லாத தாழ்வுஅல்லவோ இங்ஙனேஎளிது ஆனது வே''

காளமேகப்புலவர்.

ஒருவன் வில்லால் அடிக்கின்றான். இன்னொரு வன் செருப்பால் உதைக்கின்றான். இன்னொரு வன் கல்லால் எறிகின்றான். இன்னொருவன் பிரம் பால் அடிக்கின்றான். சிவபெருமானுக்கு என்று ஒரு அம்மா அப்பா இருந்தால் இப்படி கண்டவரும் அடிக் க;உதைக்க விட்டிட்டு இருந்திருப்பார்களோ? என்று காளமேகப்புலவர் சிவபெருமானின் பிழை பொறுத் தருளும் இயல்பை நகைச்சுவையாக பாடியிருக் கின்றார்.உலகனைத்துக்கும் அம்மையும் பிதாவுமாக விளங்கும் சிவபெருமானுக்கு அப்பா, அப்பா ஏது? சிவபெருமானின் முழுமுதற்தன்மையையும் புலவர் மறைமுகமாக உணர்த்தியுள்ளார்.

இதனை உள்வாங்கி இசைவிருந்தாக கோபால கிருஷ்ண பாரதியவர்கள் எழுதியதாகவும்,பொன் னையாப்பிள்ளை எழுதிய தாகவும் சிலசில வேறுபா டுகளுடன் , வரி நீக்கங்களும் மாற்றங் களுடனும் பாட்டொன்றுண்டு.அப்பாடல்களில் ஒருவகை இசை விருந்தாக்கப்பட்டு பிரபல்யமாகவுண்டு.

இப்படி, பிழைபொறுத்து குணம் நாடி அருளுவதில் சிவபெருமானுக்கு இணையான தெய்வம் தேடினும் இல்லை என்னும்போது, 'சிவபெருமான் பிழைபொ றுக்க மாட்டாரென்று' சில சடங்கள் உருவாக்கிய கட் டுக்கதையை நம்பி, நம்சைவப்பெருமக்களெல்லாம் தம் இல்லங்களில் சிவபெருமானை வழிபட அஞ்சும் நிலை எய்தினரே.......என்னே இழிநிலை.

''பின்னை என் பிழையைப் பொறுப்பானை, பிழை எலாம் தவிரப் பணிப்பானை''என்கின்றார் சுந்தர மூர்த்தி நாயனார்.

ஆகா.....இதைவிட வேறேதும் பிரமாணம் வேண் டுமோ? தாயைப்போல் பிழைபொறுக்கும் உறவு இல்லை.தாயிற் சிறந்த தயாவான தத்துவனாகிய சிவபெருமான், பிழைபொறுத்து அருள்வதையே தன் னியல்பாய்க் கொண்டவர். அதனாற்றான்,

''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே''

என்று மாணிக்கவாசகப்பெருமானும் பாடுகின்றார்.

சைவசமயத்தவர்கள் தம் இல்லங்களில் சிக்கனப் பிடித் திருக்கவேண்டிய தெய்வம், சிவபெருமானே யாவர்.ஆனால், விதிவசத்தால் சைவசமயத்தாருக்கு சைவசமயமும் மறந்து போயிற்று.சிக்கனப் பிடிக்க வேண்டிய தெய்வம் எதுவென்ற அறிவும் மங்கிப்போ யிற்று.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் என்பது பொதுமறை. அன்பே சிவமாய் விளங்கும் சிவபெரு மானின் அருளை அடைக்கும் தாழ் எதுவும் இல்லை. இல்லங்களில் தாயைப்போல் பிழைபொறுத்தருளும் தாயினிற் சிறந்த சிவபெருமானை எழுந்தருளச் செய்யுங்கள்.திருமுறைகளை நாள்தோறும் பாடுங் கள்.பூவும் நீரும் கொண்டு பூசியுங்கள்.இல்லத்தில் சைவசமயம் வளரட்டும்.சைவர்களே.....நீங்கள் வளர் வதற்கு அதுவொன்றே உபாயம்.

# சிவ ஒளி மின்னிதழ்
# ஆடி- ஆவணி 2020 ஒளி-6




'ஆன்மீகத்தின் மூலமே நாம் வாழ்வின் அனைத்து விழுமியங்களையும் வெற்றிகொண்டு செல்லலாம் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றின்' வழியில் பயணிக்கும் ஆடி - ஆவணி-2020 சிவஒளி ஆன்மீக மின்னிதழ் வாசித்தேன். வரலாறு ,சமயம், பண்பாடு, இலக்கியம்,தேசியம்,சித்த மருத்துவம் ஆகிய ஆய்வுத் தளங்களில் இருபது ஆய்வுக்கட்டுரைகளை இலங்கை, கனடா, சென்னை, நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து, வருவித்துத் தொகுத்து, அவ்வக்கட்டுரைகளுக்குப் பொருத்தமான படங்களையும் தேடித் திரட்டி,'சிவ ஒளி' மின்னிதழை உருவாக்கியுள்ள அதன் பிரதம ஆசிரியர், உதவி ஆசிரியர் ஆகியோரின் பாரிய அர்ப்பணிப்பை பாராட்டுகின்றேன். அத்துடன் சிறப்பான முறையில் வடிவமைப்புச் செய்யும் வடிவமைப்பாளருக்கும் பாராட்டுக்கள்.

அண்மைக்காலமாகத் தமிழகத்திலே தமிழரின் தொன்மையை நிறுவும் வகையில் கீழடி வரையிலான ஆய்வுகள் நடை பெற்று வருவதையும், அதன் மூலம் உலகில் வாழும் தமிழர், தம் தொன்மை வரலாற்று விழிப்புணர்வு பெற்று வருவதையும் தமிழ் உணர்வாளர் நன்கறிவர். இப்பின்னணியில் 'சிவ ஒளி' மின்னிதழில் இடம்பெற்றுள்ள ஈழத்தமிழரின் தொன்மை வரலாறு சார்ந்த 'அருள்மிகு கோணேஸ்வரம்', அனுராதபுரத்தில் அபயகிரிவிகாரை கட்டப்படுவதற்கு முன்பு அங்கிருந்த சிவன் கோவிலும் அதுபற்றிய முக்கிய ஆதாரமும்', 'இலிங்கபூமி', மானிடகுல இராவணனின் சமாதியை மனிதகுல சித்தர்காலாங்கிநாதர் தரிசித்துள்ளார்' 'பொலநறுவையிலுள்ள கற்சிலை யாருடையது? பராக்கிரமபாகு மன்னனுடையதா?, இராவணனின் பாட்டன் புலதியருடையதா? ஆகிய ஆறு கட்டுரைகளும் பண்டைய ஈழ வரலாற்றுத் தரவுகள் கொண்டவையாகும். இக்கட்டுரைகளில் தரப்பட்டுள்ள பன்முக வரலாற்றுத் தரவுகள் ஈழத்தமிழரைத் தமது பூர்வீகம் பற்றிச் சிந்திக்க வைப்பனவாக அமைந்துள்ளன. இவ்வரிய கட்டுரைகளை எழுதிய கட்டுரையாளர்கள் பெரிதும் பாராட்டுக்குரியவர்களாவர்.




பேராசிரியர்
பாலசுந்தரம் இளையதம்பி
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலை கனடா வளாகம்.
ரொறன்ரோ.


சமயம் சார்ந்து எழுதப்பட்டுள்ள 'இறையும் இசையும', 'முக்தியை ஆற்றுப்படுத்தும் திருவாசகம்', 'சைவசித்தாந்தம் கற்றதும் பெற்றதும்', 'மன்னாரில் சைவ மாநாடு', 'ஆலய வழிபாடு', 'மன்னாரில் இந்து எழுச்சி மாநாடு', 'வேல் நடைப் பவனி' முதலான கட்




டுரைகள் சமய அறிவூட்டுவனவாகவும்,அதேவேளை ஈழத்தின் பல பாகங்களிலும் சைவசமய எழுச்சியும்., தமிழால் சமய வழிபாடு நடைபெற வேண்டியதன் தேவையையும்,செயலில் நடைமுறைப்படுத்திக் காட்டும் நிகழ்வுகளையும் வாசகர்கள் அறிந்து கொள்வார்கள் என நம்புகின்றேன். இளையோர் சமயத்துறையில் அதீத ஈடுபாடு கொண்டு செயற்படுவதை வாசகர் அறியும் வகையில் தரப்பட்டுள்ள புகைப்படங்களும் மிகவும் பயனுடையவையாக அமைதல் இம் மின்னிதழின் தனிச் சிறப்பாகின்றது.

இலக்கியக் கட்டுரைகள் பொதுவான வாசகருக்கு இன்பந்தருவனவாகும். அவ்வகையில் அமைந்த கட்டுரைகளில், 'இலக்கிய ஆய்வு நோக்கில் திருக்குறள்', 'இறையும் இசையும்','திருமந்திரம் காட்டும் நிலையாமை' முதலான கட்டுரைகள் இலக்கிய புலமையை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

பண்பாட்டு நோக்கில்'சுவாமி விபுலாநந்தரின் தேசியம் நோக்கிய சாதனைகள்', 'இலங்கையில் சித்தமருத்துவம்', 'பழந்தமிழர் வாழ்வில் மனித உரிமைகள்', 'இந்துக்கல்விப் பாரம்பரியம்', 'உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவோம் உண்மை இறைஞானம் நாம் பெறுவோம்', 'தென்புலத்தார் வழிபாடு','முதலான கட்டுரைகள் தமிழர் வாழ்வியல், பண்பாடு,கல்வி, மருத்துவம் சார்ந்த அறிவியல் விடயங்களைப் புகட்டுவனவாக உள்ளன.

கல்வியே தமிழரின் அழியாத பெருஞ் செல்வமாகும். தாய் நாட்டில் ஏற்பட்ட கல்வித் தடைகளே இன்று பாரெல்லவலாம் தமிழர் கல்வியிற் சிறந்து விளங்குவதற்கு முன்னோடி என்பதும் வரலாறாகும். 'வீழ்ச்சி அடையும் தமிழரின் கல்வி', 'குழந்தைகள் வளர்ப்பு', 'இதுபேய் கதை அல்ல, ஒரு பெண்ணின் கதை' முதலான கட்டுரைகள் சமூக விளிப்புணர்வூட்டும் தன்மையனவாகவும், கல்வியில் கருத்தூன்ற வேண்டும் என்ற சிந்தனையும் தருவனவாக அமைந்துள்ளன. இச்சிறப்புக்கள் கொண்டு விளம்பரங்கள் எதுவுமின்றி வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விதழ் வளர்ச்சிக்கு நாமும் உதவிக்கரமாக அமைவோம்.

கொறோனா கோவிட்-19 பெருந் தொற்றுக்காலத்திலும் கருமமே கண்ணாகச் செயற்படும் தென்கயிலை அன்பர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துகளும் உரித்தாகுக.

சைவநெறிக்கூடம்

# அருள்ஞானமிகு உச்சி முருகன் திருக்கோயில்

## ARULGANAMIGU UCHIMURUGAN KOYIL (TEMPLE)


Bridge Street , High Wycombe , Bucks HP11 2EL

Mobile: 07841 522514 – 07970 727348 – 07884 455516 – 07535 000959

www.uchimurugankoyil.com – email: info@uchimurugankoyil.com - https://.www.facebook.com/Uchi-Murugan-Koyil-Temple


## கந்தன் கவின் அறுமை (கந்தசட்டி)

15-11-2020 ஞாயிற்றுக்கிழமை



15-11-2020 ஞாயிற்றுக்கிழமை முதல் கந்தசட்டி நோன்பு தொடங்கப் பெற்று 20-11-2020 வெள்ளிக்கிழமை வரை நோன்பு நோற்கப்படும். 21-11-2020 சனிக்கிழமை காலை 05:00 மணி முதல் பாறணையுடன் நோன்பு நிறைக்கப்படும்.

கோயில் திறக்கும் நேரம் 08:30 - 13:00 மற்றும் 17:00 - 21:30